2

பன்னிரு திருமுறை மன்றம்

மதுரை.

வெள்ளி விழா மலர்

1953-1978



உ

திருச்சிற்றம்பலம்

பன்னிரு திருமுறை மன்றம்

தெற்காடி வீதி, ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர் கோயில்,
மதுரை - 625 001.

★

வெள்ளி விழா மலர்

(1953 - 1978)

★

கோயிலூராதீனம்

ஸ்ரீலஸ்ரீ இராமநாத ஞான தேசிக சுவாமிகள்
அவர்களால் வெளியிடப்பெற்று

முதல் பிரதி

அருள்மொழி அரசு

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்
அவர்களுக்கு வழங்கப்பட்டது.

மன்ற வெளியீடு எண் 27.

30 - 11 - 1978

மன்றப் புரவலர்கள்

"சிவதர்மசீலர்"

திரு. RM. முத்துப்பழநியப்பச் செட்டியார்,
ஸ்ரீ கிருஷ்ணு கார்பரேஷன், மதுரை.

திரு. கருமுத்து. சு. சொக்கலிங்கம் செட்டியார்,
அதிபர், சிவகாமி ஆலே, தேனூர்.

திரு. பெரி பஞ்சநதம் செட்டியார்,
தன வணிகர், மதுரை.

திரு. கா. சுப்பிரமணியம்,
காத்தான் நாடார் கம்பெனி, மதுரை.

தலைவர் :
திரு. S. நரிஞக்கண்பட்டர்,
ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர் கோயில்.

துணைத் தலைவர் :
திரு. A. K. சுப்பிரமணியபிள்ளை M.A.,
ஓய்வுபெற்ற வருமானவரி அதிகாரி.

பொருளாளர் :
திரு. K. வாலசுப்பிரமணிய பிள்ளை,
நிலக்கிழார், அவனியாபுரம்.


செயலாளர் :
திரு. N. S. சீனிவாச பிள்ளை.

துணைச்செயலாளர்கள் :
திரு. மு. இராமசாமி நாடார்.
மீனுட்சி கார்பரேஷன்.

திரு. S. சொக்கலிங்கம் பிள்ளை,
துணைத்தாசில்தார்

புலவர் திரு. நீ. சீ. சுந்தரராமன்,

மலர் பதிப்பாசிரியர் :
திரு. N. S. சீனிவாச பிள்ளை,



மதுரையில் கோயில் கொண்டருளிய
ஸ்ரீ மீனாட்சியம்மை

நன்றியுரை

பன்னிரு திருமுறை மன்றத்தின் வெள்ளி விழாச் சிறப்புற நிகழவும், மலர் நன்கு வெளிவரவும் திருவருள்புரிந்த ஸ்ரீமீனுட்சி சுந்தரேசுவரர் திருவடிகளில் வணங்கி வாழ்த்தி இப்பணிகளில் உறுதுணையாக இருந்த பெரியோர்களுக்கெல்லாம் உளம்நிறைந்த நன்றியோடு கூடிய வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். விழாவில் பங்குபற்றிய ஆதீனகர்த்தர்கள், அறிஞர்கள், பெருமக்கள் அனைவர்க்கும் நன்றி, வணக்கம். மலருக்குக் கட்டுரைகள் உதவியவர்களுக்கும், ஆசிச்செய்திகள் அருளிய பெரியோர்க்கும், விளம்பரம் தந்த வணிகப் பெருமக்களுக்கும் பணிவான வணக்கங்கள். பெருஞ் செலவுடைய இம்மலரை வெளிவரச் செய்வதற்கு விளம்பரம் முதலியன சேகரித்துப் பலவகையிலும் உதவிய மன்றப்புரவலர்கள், தலைவர், துணைத் தலைவர், துணைச் செயலாளர்கள் மற்றும் திருவாளர்கள். O. M. S. S. சுந்தரமகாலிங்கம், A. T. மாதவன், M. L. சங்கர், K. O. S. நாகராஜன், P. திருநாவுக்கரசு (D. P. O.) மெ. கருப்பன் செட்டியார் (தேனி) S. கிருஷ்ணமூர்த்தி (திண்டுக்கல்) A. சோமசுந்தரம் (சென்னை) சுந்தரராஜன் (தேனி) S. நமச்சிவாயம், முத்திருளப்பன், N. சங்கரன், A. கந்தசாமி, A. கதிரேசன் P. பரமசிவம், ஞா. பத்மநாபன் ஆகிய அன்பர்களுக்கும் நன்றி. மலரில் வெளியிடப் புகைப்படம் எடுத்துதவிய திரு. K. ஜோஸப், திரு. D. சாயிரம், பிளாக்குகள் செய்த மணீஸ் கம்பெனியார், மலரை அழகுற அச்சிட்டுக் குறுகிய காலத்தில் வெளிவரத் துணைபுரிந்த ஸ்ரீ சக்தி விநாயகர் அச்சக உரிமையாளர்கள், தொழிலாளர்கள் அனைவர்க்கும் எம் நன்றி.

மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினுலும் மன்ற வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள பெரியோர்களுக்கும் எங்கள் வணக்கமும் நன்றியும், என்றும் உரியன. அவசரத்தில் நேர்ந்த அச்சுப்பிழைகளுக்குப் பொறுத்தருள்க.

மலரை வெளியிட்டருளிய கோயிலூராதீனம் ஸ்ரீலஸ்ரீ குருபகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளில் வணங்குகின்றோம்.

நன்றி.

''ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே''.

இங்ஙனம்,
மன்றத்தார்.

உள்ளுறை

			பக்கம்
1.	வெள்ளி விழா அழைப்பிதழ்		
2.	வாழ்த்துச் செய்திகள்		
3.	மன்றம் - தோற்றமும் வளர்ச்சியும்		
4.	காட்சி	- திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்	1
5.	திருஞானசம்பந்தர்	- திரு. ஆ. ஆனந்தராசன் M. A. B. T.	3
6.	திருநாவுக்கரசு நாயனர்	,,	7
7.	சுந்தரமூர்த்தி நாயனர்	,,	11
8.	மாணிக்கவாசகர்	,,	18
9.	திருமுறைகளின் பெருமை	- திரு. G. கலியாணம் M. A.,	22
10.	திருஞான சம்பந்தர் அருளிய முதல் திருமுறை	- ,,	26
11.	,, இரண்டாம் திருமுறை	- ,,	29
12:	,, மூன்றும் திருமுறை	- ,,	33
13.	திருநாவுக்கரசர் அருளிய நான்காம் திருமுறை	- ,,	36
14.	,, ஐந்தாம் திருமுறை	- ,,	40
15.	,, ஆறும் திருமுறை	- ,,	41
16.	திருமுறைத்தேன்	- திரு. பூ. சாம்பசிவம் M. A.	47
17.	சுந்தரர் அருளிய ஏழாம் திருமுறை	- திரு. யாழ். சுந்தரம் B. A. B. T.	52
18.	தோழமைநெறி	- திரு. வி. சா. குருசாமிதேசிகர் M. A.	55
19.	மாணிக்கவாசகர் அருளிய எட்டாம் திருமுறை	- திரு. M. R. யாழ்கீத சுந்தரம்பிள்ளை	59
20.	ஒன்பதாம் திருமுறை —		
	திருவிசைப்பா	- திரு. V. துரைசாமி M. A.	64
	திருப்பல்லாண்டின் மாட்சி	- திரு. செ. வைத்தியலிங்கம் M. A, M. Litt	69
21.	திருமூலர் அருளிய பத்தாம் திருமுறை	- மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர்	76
22.	பதினேராம் திருமுறை —		
	காரைக்காலம்மையார் பிரபந்தங்கள்	- வித்துவான் திரு. செ. வேங்கடராமச்செட்டியார்	80
23.	,, பா நலங்கள்	- வித்துவான் திரு. அ. கி. செல்வக்கணபதி B. Litt	89
24.	பன்னிரண்டாம் திருமுறை —		
	சேக்கிழார் திருமொழிச்சுவை	- மகாவித்துவான் திரு. சி. அருணவடிவேலு முதலியார்	97
25.	பன்னிரண்டாம் திருமுறை	- திரு. அ. உத்தண்டராமபிள்ளை I.A.S.	105
26.	பன்னிரு திருமுறை ஓதும் கால அட்டவணை	- திரு. சு. கோவிந்தசாமி	118
27.	திருப்புகழில் திருமுறைக் கருத்துக்கள்	- திரு. K.V. தியாகராஜ ஐயர்	122
28.	திருமுறை நெறி பரவுக!	- திரு. தா. குருசாமி	123
29.	பழநி சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார்	- திரு. தி. சு. கோவிந்தசாமி	125
30.	சிவஸ்ரீ ம. க. சுந்தரேசபட்டர்	- திரு. S. நயினுக்கண் பட்டர்	128
31.	திரு. S. தருமலிங்க முதலியார்	- திரு. D. ஆறுமுகம் பிள்ளை	129
32.	சிவபாதசேகரர்	- திரு. A. K. சுப்பிரமணிய பிள்ளை M. A.	133
33.	திரு. S. S. சுப்பையா பிள்ளை	- திரு. K. வாலசுப்பிரமணிய பிள்ளை	134
34.	பண்ணிசை ஆசான்	- திரு. A. கதிரேசன் B.A ,	135
35.	நாயகன் பார்வையில் நால்வர்	- திரு. சொ. சொ. மீ. சுந்தரம் M. Com	136
36.	உறுதுணைவர்கள் -		

உ
திருச்சிற்றம்பலம்

பன்னிரு திருமுறை மன்றம்,
ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்,
தெற்காடி வீதி, மதுரை.

★

இருபத்தைந்து ஆண்டு நிறைவுத் திருமுறைப் பெருவிழா
வெள்ளி விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

அங்கயற்கண்ணி பங்கராம் ஆலவாயண்ணல் திருவருளால் பன்னிரு திருமுறை மன்றம் திருமுறை நெறி பரவ சென்ற இருபத்தைந்து ஆண்டுகள் ஒல்லும் வகை எல்லாம் பணி செய்துள்ளது. இம்மன்றத்தின் வெள்ளி விழாவைத் திருமுறையைப் பெருவிழாவாகக் கொண்டாடத் திருவருள் கூட்டியுள்ளது.

காளயுத்தி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 14ஆம் நாள் (30—11—1978) முதல் 25ஆம் நாள் (11—12—1978) முடிய பன்னிரு நாட்கள் திருமுறைப் பெருவிழா நிகழ்ச்சி நிரலில் குறித்தவாறு நிகழவுள்ளது.

விழாவில், திருமுறை அகண்ட பாராயணம், திருமுறை திருவுலாக்காட்சி, திருமுறைகள் பற்றிய விரிவுரைகள், அன்பர்களுக்குச் சிவதீட்சை செய்வித்தல் முதலியன நிகழவுள்ளன.

தாங்கள் விழாவில் கலந்துகொண்டு மன்றப் பணிகள் சிறக்கும் வகை ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம், மன்றப் புலவர்கள்.

RM. முத்துப்பழநியப்பச் செட்டியார்,
கருமுத்து S. சொக்கலிங்கஞ் செட்டியார்,
பெரி. பஞ்சநதம் செட்டியார்,
கா. சுப்பிரமணியம்.

S. நயினுக்கண் பட்டர், தலைவர்.
A. K. சுப்பிரமணிய பிள்ளை, துணைத்தலைவர்.
K. வாலசுப்பிரமணிய பிள்ளை, பொருளாளர்,
N. S. சீனிவாசபிள்ளை, செயலாளர்,

மு. இராமசாமி நாடார்,
S. சொக்கலிங்கம் பிள்ளை,
புலவர் நீ. சீ. சுந்தரராமன்,
துணைச்செயலாளர்கள்.

மதுரை
14—11—1978

30–11–78 வியாழக்கிழமை

காலை 5 மணி திருமுறை ஓதி ஆடிவீதி வலம் வருதல். மன்றத்தில் அகண்ட பாராயணம்.

தொடக்கி வைப்பவர்	:	திரு. கருமுத்து S. சொக்கலிங்கஞ் செட்டியார் அவர்கள், சிவகாமி ஆலை.
மாலை 5 மணி	:	திருமுறை உலாச்காட்சி.
		மங்கல இசை. திருமுறை ஓதல்.
வரவேற்புரை	:	திருமுறைப்புரவலர் திரு. R. M. முத்துப் பழநியப்ப செட்டியார் அவர்கள்.
விழாத் தொடக்கம்	:	காரைக்குடி திரு. அ. சொ. அண்ணாமலைச்செட்டியார் அவர்கள், இயக்குநர், பாங்க் ஆப் மதுரை.
விழாத் தலைமை	:	திரு. S. இராமநாத சேதுபதி அவர்கள், இராமநாதபுரம் அரசர்.
திருமுறைத் தொகுப்பு நூல் வெளியீடு	:	திரு. K. சிதம்பரம் B. A. அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர், மதுரை.
முதல் பிரதி பெறுபவர்	:	திரு. T. வேணுகோபால், B. A , அவர்கள், உதவி ஆணையர் / நிர்வாக அதிகாரி, ஸ்ரீ மீனாட்சி கோயில்.
சிறப்புரை	:	''முதல் திருமுறை'' ''அருள்மொழியரசு'' திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்கள்.
நன்றியுரை	:	திரு. A. K. சுப்பிரமணியபிள்ளை M. A., அவர்கள், மன்றத் துணைத்தலைவர்.

1–12–78 வெள்ளிக்கிழமை

தலைமை	:	திரு. V. P. R. கங்காராம் துரைராஜ் அவர்கள், மதுரை.
வாழ்த்துரை	:	திரு. லெட்சுமி, M. சிங்காரம் செட்டியார் அவர்கள், லெட்சுமி பேப்பர்ஸ், மதுரை.
சிறப்புரைகள்	:	திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L. அவர்கள் ஆசிரியர். ''திருக்கோயில்''
		திருமதி. தி. சுந்தராம்பாள் M. A., M. Fil. மகளிர் கல்லூரி, விருதுநகர்.

2–12–78 சனிக்கிழமை

தலைமை	:	மதுரை ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்,
சிறப்புரை	:	''மூன்றாந் திருமுறையில் சில உள்ளுறைகள்'' திரு. அ. அறிவொளி, M. A., அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

3–12–78 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி

கவியரங்கம்

தலைவர் : பேராசிரியர் திரு. அ. சங்கரநாராயணன், M. A. M. Litt., B. T.,

கவிபாடுவோர் :	தலைப்பு :
புலவர் திரு. ம. வே. பசுபதி அவர்கள், ...	"மங்கையர்க்கரசி பார்வையில் சம்பந்தர்"
திருப்பனந்தாள் திரு. ஆ. ஆனந்தராசன், M. A., B. T., அவர்கள் ...	"அப்பூதியடிகள் பார்வையில் அப்பர்"
திரு. இராகவன் முத்து B. Sc., அவர்கள், ...	"சேரமான் பார்வையில் சுந்தரர்"
திரு. V. துரைசாமி, M. A., அவர்கள், ...	"பாண்டியன் பார்வையில் மணிவாசகர்"
திரு. சொ. சொ. மீ. சுந்தரம், M.Com., அவர்கள், ...	"நாயகன் பார்வையில் நால்வர்"

மாலை 6–30 மணி

தலைமை : திரு. L. அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள்,
அதிபர், மகாலட்சுமி ஆலை.

சிறப்புரை : 1. "திருநேரிசைத் திருநெறி"
'செஞ்சொற்கொண்டல்'
டாக்டர் சொ. சிங்காரவேலன், M. A., Ph. D. அவர்கள்,
A. V. C. கல்லூரி, மாயூரம்.

2. "திருமுறைத் தேன்"
திரு. பூ. சாம்பசிவன், M. A., B. T., அவர்கள்,
அமைச்சர், சைவ சித்தாந்த சபை, தூத்துக்குடி.

4–12–78 திங்கட்கிழமை

தலைமை : டாக்டர் திரு. S. சண்முகம் அவர்கள்.

சிறப்புரைகள் : 1. "குறுந்தொகைப் பெரும் பொருள்"
"சித்தாந்த நன்மணி" திரு. கு. சுந்தரமூர்த்தி M. A., அவர்கள்,
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

2. "திருக்குறுந்தொகைத் தெள்ளமுதம்"
திரு. தொண்டர் சீர்பரவுவார் அவர்கள்,
திருமுறைக்கழகம், ஈரோடு.

3. "அப்பரும் அற்புதங்களும்"
திரு. பழ. முருகேசன் B. Litt, B. E., M. I. E.,
உதவிக் கோட்ட மின் பொறியாளர், ஈரோடு.

5–12–78 செவ்வாய்க்கிழமை

தலைமை	:	திரு. அ. சக்கரை சேர்வை B. A., B. L., அவர்கள், ஒய்வு பெற்ற அறநிலைய ஆட்சித்துறை துணைஆணையர்.
வாழ்த்துரை	:	தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள். திருவண்ணாமலை ஆதீனம்.
சிறப்புரைகள்	:	1. ''திருத்தாண்டகச் சீர்மை'' டாக்டர், திரு. சுப. அண்ணாமலை, M. A., M. Litt., Ph. D. அவர்கள், முதல்வர், தியாகராசர் கல்லூரி, மதுரை, 2. ''பூவணத்துப் புனிதன்'' வித்துவான் திருமதி ப. நீலா M. A., அவர்கள், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

6–12–78 புதன்கிழமை

தலைமை	:	திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்கள், அதிபர், விசாலாட்சி ஆலை,
வாழ்த்துரை	:	தவத்திரு. சுந்தரசுவாமிகள் அவர்கள், கௌமாரமடம், சின்னவேடம்பட்டி.
சிறப்புரைகள்	;	1. ''சுந்தரர் செந்தமிழ்'' பெரும்புலவர், பேராசிரியர், திரு. பா. நமசிவாயம் M. A. அவர்கள், தமிழ்த்துறைத் தலைவர், ஆறுமுகம்பிள்ளை சீதையம்மாள் கல்லூரி, திருப்பத்தூர். 2. ''தோழமைநெறி'' நல்லிசைப்புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர், M. A., அவர்கள், முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

7–12–78 வியாழக்கிழமை

தலைமை	:	திரு. அ. சோமசுந்தரம், B. Sc., B. L. அவர்கள், மதுரை மாவட்ட நீதிபதி.
வாழ்த்துரை	:	தவத்திரு, சாந்தலிங்க இராமசாமி அடிகள் அவர்கள், பேரூர் ஆதீனம், கோவை.
சிறப்புரைகள்	:	1. ''எட்டும் எட்டும்'' முதுபெரும் புலவர். திரு. அ. நடேச முதலியார் அவர்கள், வண்டிப்பாளையம், கடலூர். 2. ''மாணிக்கவாசகரும் பெண்களும்'' 'சிவநெறிச்செயிழை'' திருமதி, C. E. N. ஈசுவரவடிவு அம்மாள் அவர்கள், தூத்துக்குடி.

8–12–78 வெள்ளிக்கிழமை

தலைமை : திரு. அ. உத்தண்டராம பிள்ளை I. A. S., அவர்கள்,
முன்னாள் அறநிலைய ஆட்சித்துறை ஆணையர்.

சிறப்புரைகள் : 1. ''திருவிசைப்பா நலம்''
திரு. கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L., அவர்கள்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

2. ''திருப்பல்லாண்டு''
திரு. செ. வைத்தியலிங்கம் M. A., M. Litt., அவர்கள்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

9–12–78 சனிக்கிழமை

தலைமை ; திரு. C. M. V. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள்,
சாரி அண்ட் ராம் கம்பெனி, மதுரை.

சிறப்புரைகள் : 1. ''மூலர் மொழி''
மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்,
திருக்குறள் ஆராய்ச்சி, மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்.

2. ''திருமந்திரப் பெருநெறி''
கவிஞர். திரு. சொ. சொ. மீ. சுந்தரம் M. Com, அவர்கள்,
சௌராஷ்டிராக் கல்லூரி, மதுரை.

10–12–78 ஞாயிற்றுக்கிழமை

தலைமை : திரு. வெ. சந்தானம் அவர்கள், பொறுப்பாசிரியர், ''தினமணி''

சிறப்புரைகள் : 1. ''காரைக்காலம்மையார் பிரபந்தங்கள்''
''தமிழாகரர்'' திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

2. ''நம்பியாண்டார் நம்பி பிரபந்தங்கள்''
திரு. க. கலியாணம், M. A., Dip. Econ. அவர்கள்,
முன்னாள் ஆசிரியர், ''திருக்கோயில்''

11–12–78 திங்கட்கிழமை

தலைமை : திரு. M. A. முருகேசன், B. A., B. L. அவர்கள்,
மதுரை மாவட்டக் கூடுதல் நீதிபதி.

வாழ்த்துரை : சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்,
தொண்டை மண்டல ஆதீனம், காஞ்சிபுரம்.

சிறப்புரைகள் : 1. திருத்தொண்டர் புராணமும் வேதாகமங்களும்''
திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T., அவர்சள்,
சைவ சித்தாந்தத்துறை, மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்.

2. ''பெரியபுராணப் பெருமை''
''சைவ சித்தாந்த மாமணி''
பேராசிரியர். திரு. அ. சங்கரநாரரயணன், M. A. M. Litt.,
அவர்கள்,
தியாகராசர் கல்லூரி.

நன்றியுரை :

வாழ்த்து :

இசைக்கதை நிகழ்ச்சிகள்

நிகழ்த்துபவர் :

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

யாழ்ப்பாணம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்


(நாள்தோறும் இரவு 8–30 மணி அளவில்)

8—12—78 வெள்ளி **" நர்பாந்தம் அறுக்க வந்த சம்பந்தர் "**

9—12—78 சனி **" மருணீக்கியார் "**

10—12—78 ஞாயிறு **" கண் தந்த பண் "**


11—12—78 திங்கள் **" வந்தியும் நந்தியும் "**



மதுரையில் கோயில் கொண்டருளிய
ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான்

உ

மதுரைக் கோயில்
ஆயிரங்கால் மண்டபத்தில்
எழுந்தருளியுள்ள



ஸ்ரீ சிவகாமி அம்மை உடனுய நடராஜப் பெருமான்

B. D. Jatti

VICE - PRESIDENT
INDIA
NEWDELHI

October 24, 1978.

It is gratifying to know that the Panniru Thirumurai Manram, Madurai, will celebrate its Silver Jubilee from the 30th November, 1978. I send my best wishes for the success of the celebrations. I wish the Manram continued success in its endeavours to propagate the twelve Thirumuraigal.

B. D. JATTI

Prabhudas **B. PATWARI**
GOVERNOR OF TAMIL NADU

RAJ BHAVAN
MADRAS-600 022

October 23, 1978.

Message

I am glad to know that the Silver Jubilee of the Panniru Thirumurai Manram, will be celebrated on the 30th November, 1978. I wish the celebrations every success.

Prabhudas B. PATWARI

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26-ஆவது குருமகா சந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள்**

த ரு ம பு ர ம்,
மாயூரம் (அஞ்சல்) 609001.

9—10—1978

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

சீவகரணங்கள் சிவகரணங்களாகப் பெற்ற அருளாளர்களால் அருளிச் செய்யப்பெற்றவை திருமுறைகள். அவை பிறவிக்கடல் கடக்கும் பத்தித்தனித்தெப்பமாக விளங்குவன. அன்றுமுதல் இன்றுவரை ஒருநெறிய மனம் வைத்து அன்போடு ஓதுபவர்களுக்கு விரும்பிய பலனைத் தந்து கொண்டிருப்பன.

சிறப்பாகச் சமய வரலாற்றில் திருமுறைகளோடு மிக்க தொடர் புடையது மதுரையம்பதி. அது நமது ஆதீன முதற்பெருங் குரவராக விளங்கிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் விளக்கம் பெற்ற தலம். திருமுறைகளை ஓதுவதே மனம் படைத்த மனிதன் செய்யவேண்டுவது என்பதை, 'திருமுறைகள் ஓதாய் மனமே உனக்கென்ன வாய்' என்ற அவர்களது அருள்வாக்கு, தெளிவு பெறப் புலப்படுத்தும். அத்தகைய அருள் நலம் கனிந்த திருமுறைகளின் சிறப்பினை மக்கள் அறிந்து ஓதி உய்ய மதுரை பன்னிரு திருமுறை மன்றம் விழாக்கள்-விரிவுரைகள்-இசை வகுப்புகள்-வெளியீடுகள் முதலிய பலநெறிகளில் இருபத்தைந்து ஆண்டுகளாகப் பணியாற்றி வளர்ந்து இன்று வெள்ளி விழாக்காணும் நிலையில் விளங்குவது பாராட்டுதற்குரியது.

விழாவில் திருநெறிய தெய்வத்தமிழ் நலம் சான்ற பல அறிஞர்கள் விரிவுரைகள் நிகழ்த்த இருப்பதும் விழா மலர் வெளியிடுவதும் மகிழ்ச்சிக் குரியன.

விழா மலர் நன்கு மலர்ந்து அன்பர்கள் மனத்தில் தெய்வ மணம் பரப்பிச் சிறக்கவும், இத்தகைய சமயப்பணிகளில் ஈடுபட்டு மன்றம் சிறந்து விளங்க ஆவன செய்துவரும் அன்பர்கள் பொன்னும் மெய்ப்பொருளும் போகமும் திருவும் பெற்று நலம்பெறவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

His Holiness Thiruvarul Thavayoga
Sri-la-Sri Somasundara
Sri Gnanasambanda Desika
Paramachariya Swamigal.
Madurai Aadheenam

70, South Avani Moola Street,
MADURAI-625001.
S. India.

8—11—1978

வாழ்த்து

எல்லாம் வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங்களும் எய்துக.

6ந் தேதி எழுதிய கடிதம் கிடைத்து, பன்னிரு திருமுறை மன்றத்தின் வெள்ளி விழா 30-11-78 தொடங்கி 11-12-78 வரை 12 நாட்கள் நிகழத் திருவருள் பாலித்திருப்பதை அறிந்து மகிழ்கிறோம். தங்களுடைய மன்றம் கடந்த 25 ஆண்டுகளாக நமது சமயத்திற்காக ஆற்றி வரும் தொண்டுகளை நாம் நேரே அறிவோம். ஆதலினால், அதனைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

மன்றத்தின் வெள்ளி விழா யாதொரு விக்கினமுமின்றிச் சிறப்பாக நடந்தேறவும், அதில் பங்கு கொள்கிற பக்தர்கள் அனைவரும் எல்லா நலங்களும் பெற்றுத் திகழுமாறு, எல்லாம் வல்ல அங்கயற்கண்ணி பங்கனும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறோம்.

எல்லோருக்கும் ஆசீர்வாதம்.

உ
சிவ சிவ

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமார சுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்-612504.
(தஞ்சை ஜில்லா)

7—11—1978

வாழ்த்து

திரு .என். எஸ். சீனுவாச பிள்ளை அவர்கட்குச் செந்திலாண்டவன் திருவருள் முன்னிற்க.

பன்னிரு திருமுறை மன்றம் வெள்ளிவிழாக் கொண்டாட இருப்ப தறிந்து மகிழ்ச்சி.

செயல்வல்ல இளமை வயதை இம்மன்றம் எய்தியிருப்பதால், இனி யும் நம் உயிர்ச் சைவத் திருமுறைகளின் திருமறைத் தன்மைகளை உலகுணரச் செய்யும் பணியைப் பல்வேறு உத்திகளால் மேற்கொள்ள வேண்டும். தியானம், பாராயணம், நல்லொழுக்கம் ஆகிய மேன்மைகளை மக்களுக்குப் பரப்பும் திருப்பணியை இம்மன்ற உறுப்பினர்கள் நாட்கடமைகளுள் இணைத்துக் கொள்ளவேண்டும்.

பன்னிரு திருமுறை மன்றம் ஓங்கி வளர்ந்து செழிக்கவும், வெள்ளி விழா மலர் திருமுறைகளுக்கொத்த கீர்த்திபெறத் தகும் ஆய்வுச் செய்திகள் தாங்கி ஒளிரவும், மன்ற அன்பர்கள் நலங்களும் வளங்களும் நனிதழைக்க சிறக்கவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்

சிவ சிவ

உ

குருவே துணை.

தவத்திரு சுந்தரசுவாமிகள்
கௌமாரமடாலயம்

சின்னவாடம்பட்டி (அஞ்சல்)
கோயமுத்தூர்-641006.

14—10—1978

வாழ்த்து

வெண்பாக்கள்

திருவால வாயாம் திருமதுரை தன்னில்
வருநற் றிருமுறையின் மன்றம்-அரும்பணிகள்
ஆற்றியுள பத்திரண்டைந் தாண்டாக, நல்லவிழா
ஏற்றநல மாயமைய வே.

மீனாட்சி சுந்தரர்தம் மேயதிருக் கோயிலிடை
வானாட்டார் போற்றும் வகையாகத்-தேனூட்டும்
மன்னு திருமுறையை மாண்புடனே போற்றிவரும்
நன்மன்றம் வாழ்க நயந்து.

சீர்ப்பன் னிரண்டு திருமுறையை போற்றுமியல்
ஏராரும் மன்றம்விழா எய்தியது-நீராரும்
செஞ்சடிலப் பெம்மான் திருவருளால் பல்லாண்டு
மிஞ்சுபுக ழோடுயர்க வே.

பாட்டுக் குருகும் பதிமதுரைச் சொக்கேசர்
கேட்டுக் களிகூரும் கீர்த்திநிலை-நாட்டும்
திருமுறையின் மன்றம் திருச்சுற்றில் வாய்த்த
பெருமைமது ரைக்காம்நற் பேறு.

வெள்ளிவிழாக் காணும் வியன்திருமு றைமன்றம்
உள்ளியன்பர் போற்றி உவப்படைய—தெள்ளியநற்
றெண்டுபல ஆண்டியற்றித் தூயமுறை வாழியவே!
அண்டர்பணி வேலனரு ளால்.

கோவிலூர் ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ இராமநாத
ஞான தேசிக சுவாமிகள்

முகாம் : வாரணாசி.

2—11—1978

பாராட்டுரை

மக்கள் பண்புள்ளவர்களாக வாழ்வதற்கும், மனித வாழ்வின் இலட்சியமான பேரின்பப் பெரும் பேற்றை அடைவதற்கும் வழிகாட்டு வததே சமய சாத்திரங்களின் அடிப்படையான கோட்பாடு.

பொறி புலன்களுக்கு அப்பாற்பட்டதும், நித்தியமானதும் சத்தி யமானதும் ஆன பேரின்பப் பெரு நிலேயே மனித வாழ்வின் தலேயாய குறிக்கோள். பொறி புலன்களால் உணரப்பெறும் இன்பம் அனேத்தும் சிற்றின்பம் எனப்பெறுகிறது. இவை நிலேயற்றவை; மேன்மேலும் ஆசை யை வளர்த்து அல்லல் அளிப்பவை.

''ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பம்''

என்பர் திருமூலதேவர்.

சித்தத்தைச் சிவன்பால் வைத்த தீர்க்க தரிசிகளான ஞானிக ளாலும், தெய்வத் திருவருள் பெற்ற அடியார்களாலும், பெறுதற்குரிய பேரின்ப நிலே அடையப் பெற்று உலகம் உய்யும் பொருட்டாக அதன் விளக்கங்கள் அருளிச் செய்யப்பெற்றுள்ளன.

நிகரிலாப் பேரின்ப நிலேயினே எய்வதற்கு இந்து சமய சாத்திரங் களில் நால்வகைச் சாதனங்கள் கூறப் பெற்றுள்ளன.

1. விதி பூர்வகமான சத் கருமங்களேச் செய்து அதன் பயனே இறை வனுக்கே அர்ப்பணம் செய்துவிடுதல் ''கரும மார்க்கம்' எனப்பெறுகிறது.

2. இறைவன்பால் உண்மையான பக்தியுடன் ''எல்லாம் அவன் செயல்'' எனத்துணிந்து ''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற முறையில் பணி செய்து வாழ்தல் ''பக்தி மார்க்கம்'' எனப்பெறுகிறது.

3. பொறி புலன்களே அடக்கி, மன மாசு அகற்றி, சித்தத்தை ஒரு முனேப் படுத்துதல் வாயிலாக இறை உணர்வு பெறுதல் ''யோக மார்க்கம்'' எனப்பெறுகிறது.

4. விசார (ஆய்தல்) வாயிலாக அநாத்ம தத்துவங்களை நீக்கி உண்மையான ஆத்ம சொரூபத்தை உணர்தல் ஞானமார்க்கம் எனப்பெறுகிறது. இந்நால்வகை மார்க்கங்களில் பக்தி மார்க்கமே இற்றை நாளில் எல்லோருக்கும் ஏற்ற எளிய மார்க்கம் என்பதில் ஐயமில்லை.

''முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்

பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்.

சித்தமலம் அறுவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட அத்தன்''

என்பார் மணிவாசகப் பெருமான்.

பக்தி நெறி நின்று பரமனை அடைந்த அருட்பெரும் சைவ சமய ஆச்சாரியார்களால் அருளிச் செய்யப் பெற்ற தமிழ் வேதம் ஆகிய தோத்திரப் பாமாலைகள், திருமுறைகள் எனப் போற்றப் பெறுகின்றன. அவை பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்று பெரிதும் சிறப்பிக்கப் பெறுகின்றன. திருமுறைகள் இருக்கும் இடம் திருமுறைக் கோயில் எனவே மதித்து வணங்கப் பெறுகிறது. தெய்விகத் தன்மை பொருந்திய திருமுறைகளைப் புனிதமாக வைத்துப் போற்றுவதோடு அவைகளில் சில பாக்களை யேனும் தினம் பாராயணம் செய்துவருதல் பெரும் பயன் தருவதாகும்.

செந்தமிழ்ச் சொக்கர் திருவிளையாடல் புரிந்த திருஆலவாய்ப் பதியில் சென்ற கால் நூறு ஆண்டுகளாக மிக்க சிறப்பான வகையில் சமயப் பணி புரிந்து வரும் ''பன்னிரு திருமுறை மன்றம்'' இற்றை நாள் வெள்ளி விழாக் கொண்டாட விருப்பது பெரிதும் மகிழ்ச்சிக்கு உரியது.

இத்திருமுறை மன்றத்தினை கண்ணின் இமை எனக் காத்துவரும் சிவத் தொண்டர். உயர் திரு. சீனிவாசம் பிள்ளை அவர்களின் தளர்விலா வளர்ச்சிப் பணி மிகமிகப் பாராட்டத்தக்கது.

இம்மன்றத்தின் புரவலர்களில் முதன்மையுடன் விளங்கும் ''திருமுறைப் புரவலர்'' உயர் திரு இராம. முத்துப்பழனியப்ப செட்டியார் அவர்களின் அமைதியான-ஆடம்பரம் அற்ற ஆக்கபூர்வ திருமுறைப் பணி சிறப்பாகப் போற்றத்தக்கது.

மன்றத்தின் வளர்ச்சியில் பங்கு ஏற்று சிறப்பான முறையில் பணி ஆற்றிவரும் புரவலர்கள், உயர் திருவாளர்கள். கருமுத்து சு. சொக்கலிங்கம் செட்டியார், பெரி. பஞ்சநதம் செட்டியார், கா. சுப்பிரமணியம், மன்றத்தின் தலைவர். நயினுக்கண் பட்டர், துணைத்தலைவர். A.K. சுப்பிரமணிபிள்ளை பொருளாளர், K. வாலசுப்பிரமணியபிள்ளை, துணைச் செயலாளர்கள், மு. இராமசாமி நாடார், S. சொக்கலிங்கம் பிள்ளை, புலவர் நீ. சீ. சுந்தரராமன் ஆகியோர் பெரிதும் பாராட்டுக்கு உரியராவர்.

அருள்மிகு அங்கயற்கண்ணி உடனமர் அருட்பெரும் ஆலவாய் அண்ணல் திருவருளால் பன்னிரு திருமுறை மன்றம் பல்லாண்டு சிறப்புடன் ஓங்குவதாக!

மன்றத்தின் மேலான பணிகள் மக்களிடையே நற்பயன் விளைப்பதாக!

இராமநாத ஞான தேசிகர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீனம்
சிலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

59, நிமந்தக்காரத் தெரு,
காஞ்சிபுரம்-2.

22—10—1978

சைவ தெய்வத்திருமுறைகள் பன்னிரண்டு. இவைகளை அருளிச் செய்த ஆசிரியர்கள் இருபத்தேழுபேர். இவர்களுள் முடிசார்ந்த மன்னர் குறுநிலமன்னர், இல்லறத்திலே நின்றவர், முற்றத்துறந்தமுனிவர், பால் மணம் மாறாதபாலர் எனப்பலதிறத்தினரும் உண்டு. இவர்கள் அனைவரும் ஒரு காலத்தில் வாழ்ந்தவர்களும் அல்லர்.

பல்வேறு காலத்தில் வாழ்ந்திருந்த பல்வேறு பெருமக்களால் இத்திருமுறைகள் அருளப் பெற்றவை என்றாலும் இவையனைத்தும் ஒரே நிலையை அடைந்த பெருமக்களால் அருளப்பெற்றவை ஆகும். இவைகளை அருளியஞானாசிரியர்களின் கருவிகரணங்கள் உயிர் அறிவு என்பதை இழந்து இறைவன் அறிவு மயமாக நின்றநிலையில் வெளிப் போந்தவை. இவ்வாறு இறையுணர்வே தம்முணர்வாகப் பெற்ற பெருமக்களால் இவை அருளப் பெற்றவை யாதலின் இறைவன் வாக்கு எதை எதைச் செய்யுமோ அவை அனைத்தையும் செய்யவல்லவை இத்திருமுறைகள்.

திருமுறைகளின் தெய்வத்தன்மையைத்தம் அனுபவத்தில் உணர்ந்த பெரு மக்களால் நிறுவப் பெற்றது மதுரைப் பன்னிரு திருமுறை மன்றம். இம் மன்றம் நிறுவப் பெற்றநாளிலிருந்து இதன் செயலராகத் தொடர்ந்து பணி யாற்றி வரும் திருவாளர். நீ. சா. சீனிவாசம்பிள்ளை அவர்களின் திருத் தொண்டு போற்றுதற்குரிய தொன்று. நாள்தோறும் தேவாரத் திரு முறைகளைப் பண்ணோடு மாணமாணவிகளுக்குப் பயிற்று வித்தல் அறு பான் மும்மை நாயன்மார்களின் திருநாட்களைக் கொண்டாடுதல், புராண படனம் செய்வித்தல், சமயசாரியர்கள் திரு நாட்களைச் சிறப்பான முறையில் கொண்டாடுதல், அவ்வப்போது தக்கவர்களைக் கொண்டு சமய சொற் பொழிவு செய்வித்தல். சைவசித்தாந்த சீலர்களாய், சைவ ஒழுக்கம் குன்றாதவர்களாய் முறையாகச் சிவதீட்சைப் பெற்றுச் சிவ பூசை செய் பவர்கள் யாத்திரையாக வந்தால் அவர்களுக்குத் தங்கவசதி செய்தல், மார்கழி மாதம் முழுமையும் ஆடிவீதியில் திருமுறைப் பாராயணம் செய்தல் முதலிய சிவசமயத் திருத்தொண்டுகளை இம்மன்றம் நிறுவிய நாளிலிருந்து இடையறாது தொடர்ந்து செய்துவருவது யாவரும் அறிந்த ஒன்று. இவ்வாறு சமயநெறியில் நின்று பணியாற்றி வரும் இம்மன்றம் 30-11-78 முதல் 11-12-78 முடிய வெள்ளி விழாக் கொண்டாட இருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம்.

வெள்ளி விழா இனிது நிகழ்ந்து அருளொளி சிறக்கவும், விழா மலர் நன்கு மலர்ந்து சிவாநந்தத் தேன் பிலிற்றிச் செம்மை நலம் பயக் கவும் ஸ்ரீ காமாட்சியம்மாள் பங்குடைய ஸ்ரீ ஏகாம்பர நாதர் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி துணை.

ஸ்ரீ திருச்சி சுவாமிகள்
''ஸ்ரீகைலாஸ ஆஸ்ரமம்''

கெஞ்சேனஹள்ளி
பெங்களூர்-*560 039*.

1—11—1978

காளயுக்தி இ ஐப்பசி மீ 15உ, 1-11-78உ.

ஸ்ரீ பேரன்பு நிறைந்த ஸ்ரீநிவாசபிள்ளை அவர்களுக்கு சத்குரு மஹாசுவாமிகள் அவர்களுடைய ஆசீர்வாதம் கொண்டு சிவபுரிசுவாமிகள் யெழுயதிப்பவும்.

தாங்கள் யெழுதிய லெட்டரும் பன்னிருதிருமுறை மன்றத்தின் வெள்ளிவிழா அழைப்பு மடலும் வந்து சேர்ந்தது.

ஸ்ரீல ஸ்ரீசத்குரு மஹாசுவாமிகள் ஷெ இரண்டையும் பார்வையிட்டு பன்னிரு திருமுறை மன்றத்தின் வெள்ளிவிழா ஸ்ரீ அம்பாள் திருவருள் துணைகொண்டு சிறப்புற நடைபெறவும் விழாமலர் சிறப்பாக அமையவும் பூரண ஆசீர்வாதம் அளித்துள்ளார்கள்.

இந்துமத வளர்ச்சிக்கு பன்னிருதிருமுறை ஆணிவேர் போன்றது என்றும், பெரும்புலமை பெற்ற அருளாளர்களால் படைக்கப் பெற்றது என்றும் அதற்கு மன்றம் அமைத்து அதன் புகழ் பரப்பும் மன்றநிறுவனர் களுக்கும், உறுப்பினர்களுக்கும் ஸ்ரீ அம்பாள் திருவருள் கிடைக்க சிந்திப் பதாகவும் ஸ்ரீலஸ்ரீசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

ஸ்ரீ அம்பாள் பிரசாதமும் இத்துடன் அனுப்பியிருக்கிறது.

வேணும்
சத்குருநாதன் துணை
ஸ்ரீ சிவபுரி சுவாமிகள்
ஸ்ரீ கைலாஸ ஆஸ்ரமமஹாசமஸ்தானம்

உ

சிவமயம்

வித்துவான்
சாந்தலிங்க இராமசாமியடிகள்,
பேரூராதீனம்.

பேரூர் (அஞ்சல்,)
கோயமுத்தூர்-641010.

22—11—1978

1. செந்தமிழ்ச் சமயத் திருநெறி வளரத் திருவா லயவாய்த் திருநகரில்
சிந்தனைத் திறலோர் அருமைசேர் பாடல் திகழும் பன்னிரு திருமுறையை
வந்தனை செய்து போற்றிடும் சங்கம் வளர்த்தனர் இருபத்தைந்தின்மேல்
வந்திடும் ஆண்டு வெள்ளி விழாவை மகிழ்வுற நடத்தியே வாழி.

2. நால்வராம் நமது சமயநற் குரவர் நற்றிருப்பாடல்; திருவிசைப் பாக்கள்;
மேல்வழி காட்டும் மூலர் தம்வாக்கு; வியன்பொழி யாலவாயண்ணல்
போல் வலார் பாடல்; மாக்கதை; யென்னும் முறைகளை முறைமையாய் உணர்ந்து
ஆல் வளர் பெருமான் அருள்வழி வாழ்க அடியவர் அன்பர் பல்லாண்டு.

௳

சிவமயம்

மதுரை ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுரர் கோயில், தெற்காடி வீதியிலுள்ள பன்னிரு திருமுறை மன்றத்தின் இருபத்தைந்து ஆண்டு நிறைவு வெள்ளி விழாவின் போது, இராமநாதபுரம் ராஜா. S. இராமநாத சேதுபதியவர்கள் மனமுவந்தனுப்பிய

வாழ்த்துரை

''சிவனேடொக்குந் தெய்வம் தேடினும் இல்லை அவனேடொப் பார் இங்குயாவரும் இல்லை'' (திருமந்திரம்)

எந்நாட்டவர்க்கும் இறைவனுகவும் தென்னுடுடைய சிவனுகவும் விளங்குகின்ற பரமபதியாகிய சிவபெருமானது திருவருள் வடிவமாகித் தென்னுடு செய்த பெருந்தவப்பயனுகத் திருவவதாரம் செய்தவர்கள் சைவத்தெய்வத் திருமுறை ஆசிரியர்களாகிய அருளாளர்கள். திருஞான சம்பந்தர் முதல் தெய்வச் சேக்கிழார்சுவாமிகள் ஈருக இருபத்தேழு ஆசிரியர்களால் திருவாய் மலர்ந்தருளப் பெற்ற தேவாரம் முதல் திருத் தொண்டர் புராணம் 'வரையுள்ள பன்னிரண்டு திருமுறைகளும் சைவப் பெருமக்களின் சேமவைப்பாய் விளங்கி இன்பம் வழங்கிக் கொண்டிருக் கின்றன.

மந்திரங்களே திருமுறைகளென்று சைவசம்பிரதாயம் சொல்லும். 'மந்திரம்' என்னும் சொல் நினைப்பவர்களைக் காப்பது என்னும் பொருளை யுடையது. திருமுறைகள் மந்திர ஆற்றலையுடையன என்பது ''கண்ட பெரு மந்திரமே மூவர்பாடல்'' என்ற உமாபதி சிவத்தின் திருவாக்கால் உணரப்பெறும்.

உயிர்களின் உய்தியைத் திருவுள்ளத்தடைத்த சிவபெருமான், சதாசிவ மூர்த்தியாக எழுந்தருளியிருந்து, 'நான்கு வேதங்களாகவும் இருபத்தெட்டு ஆகமங்களாகவும் மந்திரத்தை அருளிச் செய்தார். அச்சிவ பெருமானே திருஞானசம்பந்தர் முதலிய அருளாசிரியர்களை அதிட்டித்து நின்று தேவாரம் முதலிய அருள்முறைகளை அருளித் தந்தாராதலின், அத்திரு முறைகளும் வேத சிவாகமங்களோடு ஒப்ப மந்திரங்களாக விளங்கிப் பயன் வழங்கி வருகின்றன. திருமுறைகளும் சிவவாக்கே என்பதை ''எனதுரை தனதுரையாக நீறணிந்தேறுகந் தேறியநிமலன்'' என ஆளுடைய பிள்ளையும், ''வன்ருெண்டன் வண்டமிழ் மாலை வல்லார் போய், ஏழுமாப் பிறப்பற்று எம்மையும் ஆளுடையாரே'' என ஆளுடைய நம்பியும் அருளிய வற்ருல் அறியலாம்.

மந்திரம் சிவபெருமானுக்குத் தூலசரீரம் என்று சொல்லப்பெறும். அந்தமந்திர வடிவமாகியவேத சிவாகமங்களிடத்திலும் திருமுறைகளிடத் திலும் சிவபெருமான் நித்தியமாகவும் விசேடமாகவும் சாந்நித்திய முற்றி ருப்பார். அதனுலேயே வேத சிவாகமங்களைப் போலத் திருமுறைகளும் ஆன்மார்த்த சிவபூசையில் மூர்த்தியாகக் கொள்ளப் பெற்று வழிபாடு செய்யப் பெறுகின்றன. திருமுறைப் பாடல்கள் ஆக்கல், அளித்தல், அழித்

தலாகிய முத்தொழில்களையும் செய்தமையாலும், ஓதினவர்களுக்குத்' துன்பநீக்கம், இன்பஆக்கம், சிவஞானப் பேறு ஆகியவற்றை வழங்கி வருகின்றமையாலும் அவை சிவசரீரமே என்பது தெற்றென விளங்கும்.

திருமுறைகள், வேண்டுவார் வேண்டும் எல்லாப் பயன்களையும் கொடுக்கும் சிறப்பு வாய்ந்தவை. திருமுறைகளை ஓதிப்பயன் பெறக்கருதுவோர் சிவபெருமானுக்கு ஒப்பாக வேறொரு தெய்வத்தை எண்ணினாலும் திருமுறைப் பாடல்களுக்கு இணையாக வேறு பாடல்களைக் கொண்டாலும் குறித்தபயனைப் பெருதுகுளிக்கப்போய்ச் சேறுபூசிக் கொண்டவராவர்.

திருமுறைகளிடத்துச் சிவபெருமானுக்கு அளவில்லாத விருப்பமுண்டு. இதனை ஆளுடையபிள்ளையாருக்கு வாசியுள்ள காசு கொடுத்த வேளையிலும், ஆளுடையஅரசரைக் கயிலைக்காட்சி காணஐயாற்றுக்கு ஆண்டவன்அனுப்பிய வேளையிலும், ஆளுடைய நம்பிக்கு மணிமுத்தாற்றிலிட்ட பொன்னைக் கமலாலயக் குளத்தில் வருவியாதிருந்த வேளையிலும் சேக்கிழார் பெருமான் தெளிவு படுத்துவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். மேலும் தாயுமான அடிகள் பாடிய

''தேவரெலாம் தொழச்சிவந்த செந்தாள் முக்கட்
செங்கரும்பே! மொழிக்கு மொழிதித்திப்பாக
மூவர் சொலும் தமிழ் கேட்கும் திருச் செவிக்கே
மூடனேன் புலம்பிய சொல் முற்றுமோதான்''

என்ற பாடலில், மூவர் சொலும் தமிழ்கேட்கும் திருச்செவி என்று சிறப்பித்துக் கூறுதலானும் சிவபெருமானுக்கு மூவர்தமிழ் கேட்க எத்துணை விருப்பம் என்பதை அறிந்து கொள்ளலாம்.

சைவத்தின் மேற் சமயம் வேறில்லை எனவும் அதிற் சார்சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லை எனவும் உறைப்புற்று நிற்கும் உள்ளத் தெளிவு முன்னைத்தவம் முற்றியவர்களுக்கே உண்டாகும். அவர்களே தீக்ஷைகளைப் பெற்று சரியை கிரியை யோக நெறிகளில் நின்று ஞானம் கைவரப் பெற்றுச் சிவப்பேற்றுக்குரியவர்களாவார்கள். அங்ஙனம் சமயநெறியில் நின்றொழுகும் மெய்த் தொண்டர்க்களுக்கு எளிமையில் பயன் வழங்குவன திருமுறைகள்.

மேற்கூறிய, பெருமைகளும் சிறப்பும் பொருந்திய பன்னிரு திருமுறைகளையும், மக்கட்குப் பயன்படும் வகையில், அருந்தொண்டாற்றி வரும் பன்னிரு திருமுறை மன்றத்தைப் பாராட்டுகிறேன். இருபத்தைந்து ஆண்டு நிறைவு வெள்ளிவிழா எடுப்பித்தலும் சாலப் பொருத்தமுடையதேயாகும்.

அங்கயற்கண்ணி சமேதராய் விளங்கும் ஆலவாய்ச் சொக்கேசப் பெருமான் திருவருளால், பன்னிரு திருமுறை மன்றம், பல்லாண்டு, பல்லாண்டு தொடர்ந்து பணியாற்ற அப்பெருமானின் திருவடிகளை வணங்கி வாழ்த்துகிறேன்.

வாழ்க திருநெறியதமிழ்! வளர்க நம் சமயம்!

இங்ஙனம்,

S. இராமநாத சேதுபதி,

இராமநாதபுரம் ராஜா.

உ

மதுரை ஸ்ரீ மீனுட்சிசுந்தரேசுரர் கோவில் தெற்காடி வீதி, பன்னிரு திருமுறை மன்ற வெள்ளிவிழா

வாழ்த்துப்பா

இமயகிரி கைலாயத்து இறைவனேயே
எதிர்நோக்கித் தடாதகை தான் நாணுறவே
தமதுடம்பில் மிகுந்துள்ள தனம் மறைய
தங்கணவன் இவரென்றே தாமுணர்ந்தார்!
உமையவளாம் மீனுட்சி சுந்தரர்தன்
உடனமர்ந்து அரசோச்சி உவகையோடு
இமைகொட்டா தெவ்வுயிர்க்கும் அருள்வழங்கும்
இன்பதியாம் இப்புவியில் **மாமதுரை!**

மாமதுரை நடுவினிலே கோவிலேயும்
மற்ருங்கு அடுத்தடுத்து வீதியையும்
தாமமரத் தோற்றுவித்தே சொக்கேசர்
தரணிதனில் மக்கள்தமை வாழ்வித்தார்!
பூமகள்தன் மாயோனும் அந்நகரைப்
பொற்புடனே எப்பொழுதும் காணவேண்ட
நான்முகனும் மதுரையன்ன தாமரையை
நாரணன்றன் கொப்பூழில் நாட்டினரோ!

நாட்டிலுள்ள சமயங்கள் அத்தனேக்கும்
நாயகமாய் விளங்கிடுமே நமதுசைவம்;
ஏட்டிலுள்ள வேதமதன் வித்தெனவே
எழுதிவைத்தார் ஈராறு திருமுறையை;
பாட்டினிலே நற்றமிழில் கனிந்துருகும்
பன்னிரண்டு திருமுறையை மன்றத்தார்
நாட்டமொடு ஓதிடுவார்; நம்சிவன்தன்
நலம்பேசிப் பணிசெய்வார் நாடோறும்!

நாடோறும் மன்றத்தில் திருமுறைப்பண்
நாதஒலி கேட்கும்; தெற்காடி வீதியில்
ஈடேறும் வழிகாட்ட இடைஇடையே
எண்ணரிய சாத்திர போதங் கேட்கும்;
பீடேறும் பிரான் தன்னடியார் பெருமை
பேசுங்கீதங் கேட்கும் அவர் நாளில்;
வீடேறும் மார்க்கம் கேட்கும், கேட்கும்,
விமரிசையாய் நால்வர்தம் விழாமன்றில்!

மன்றத்தின் வெள்ளிவிழா சிறப்புறவே
மலர்கின்ற இந்நாள்தான் பொன்னுளே!
நன்றேதான் பணிசெயுமிப் பெருமன்றம்
நானிலத்தில் உயர்ந்திடவே வாழ்த்திடுவம்!
குன்றேறித் தமிழ்முழக்கி நம்சமயம்
குவலயத்தில் பரவிடவே, அம்பலத்தில்
நின்ருடும் கயற்கண்ணி சொக்கேசர்
திருவடியைத் தினம்வணங்கி ஏற்றுவாமே!

இங்ஙனம்,

A. சண்முக சுந்தரம்பிள்ளே,

ஓய்வு பெற்ற டெப்டி கலெக்டர், திருநெல்வேலி.

உ
சிவமயம்

சீர்வளரும் : மாமதுரைச், சொக்கேசன், தன்னருளால்
திருமுறையின் பயிர்வளர
ஆர்வமுடன், பணியாற்றும், அடியார்கள் பல்லோரும்,
அன்பென்னும், புணைபிடித்துப்
பேர்வளரும், மன்றமது, பெருமைபெறும், பாங்குடனே
புண்ணியத்தைத் தேக்கியுண்ணக்
கார்வளரும், கடம்பவனக், கயற்கன்னி, திருநோக்கால்,
கருணைமழை, பொழியுமாறே

திருமுறைகள், பன்னிரண்டும், சீர்பரவிச், செப்புகின்ற
தவமுடையார், சிறந்த அன்பால்
வருமரபுத், தழைத்தோங்க, வந்தனையே, சிந்தனையாய்
வரம்பென்னும், வழிவகுத்து
தெருள்மருவும், தேவாரம், தித்திக்கச், செவியமுதம்
தெருவெல்லாம், இசைமுழங்கநற்
பொருள்பெருகி, மதுரைநகர், புனிதமுற, மன்றமது
புகழ்மணக்க, வாழியவே

தித்தித் திருக்கும் திருமுறைக்கே நற்பணிசெய்
முத்துப் பழனியப்பச் செட்டியார்—பத்தியுடன்
செய்யும் செயலெல்லாம், கீர்த்தியுற்றே, எந்நாளும்
கைமேல், பலன்காணக் காண்

மு. ஆ. அருணாசல முதலியார்,
உறையூர்.

கலைமகள் காரியாலயம் உ மயிலாப்பூர், சென்னை-600004.

22—11—1978

திருமுறைப் பெருவிழா அழைப்பிதழ் சேர்ந்தது
பெருந்தமிழ்ப் புலவர்கள் பீடார் திருமுறை
அருமையைப் பெருமையை அகல விரிக்கும்
திருவுரு நிகழ்ச்சிகள் செறிவுற லுணர்ந்தனன்
ஆலவா யப்பன் அருளால்
சாலவே நிறைவுறச் சாற்றினேன் வாழ்த்து

அன்பன்,

கி. வா. ஜகந்நாதன்

உ திருச்சி-8.

22—11—1978

அன்புள்ள ஐயா,

வணக்கம்.

அழைப்பு வரப்பெற்று பெரிதும் மகிழ்ந்தேன்

25ம் ஆண்டு நிறைவுத் திருமுறைப் பெருவிழா இனிது நடைபெற வேண்டுமென இறைவனை வணங்கி வாழ்த்துகிறேன்.

விழாவில் பங்கு பெறும் அன்பர்களுக் கெல்லாம் என்வணக்கம் கூறவேண்டிக் கொள்கிறேன்.

அன்புள்ள,

கி ஆ. பெ. விசுவநாதம்

V. நடராஜன், B.E., உ திருச்சி.
Superintending Engineer, P.W.D. 23—10—1978

ஆல வாயான் நாமம் கேட்டு அவரது வண்ணம் கேட்டு, அவருக்கே பிச்சியாகும் பரிபக்குவம் எளிதிலும், விரைவிலும், அன்பர் எல்லோருக்கும் கிட்டும்படி பிரார்த்திக்கும் பன்னிரு திருமுறை மன்றத்திற்கு, பல்லாண்டு, பலபல்லாண்டு கூறுவோம்.

நமச்சிவாய வாழ்க

அன்பன்,

V. நடராஜன்

இராம. வீரப்பன்
செய்தி-அறநிலையத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009.

7—12—1978

அழகிய தமிழ், நுட்பமான உணர்வு வெளிப்பாடு, தமிழிசைப் பண், ஆன்மீகச் சிறப்பு இவற்றால் பன்னிரு திருமுறைகள் இறவாத்தன்மை பெற்றுள்ளன. இவற்றைப் படிப்பதும், பாடக் கேட்பதும், சைவ நெறியைத் தழைக்கச் செய்வதோடு, இலக்கிய அறிவையும் வளர்க்கிறது.

மதுரை பன்னிரு திருமுறை மன்றத்தினரின் நீண்டகாலப் பணி பாராட்டத்தக்கது. மன்றத்தின் வெள்ளிவிழா இனிது நடந்தேற எனது வாழ்த்துக்கள்.

இராம. வீரப்பன்

Dr. RAJAH
SIR MUTHIAH CHETTIAR
OF CHETTINAD

Chettinad House, Adyar,
Rajah Annamalaipuram P.O.
Madras-28.

1—12—1978

அன்புடையீர்,

தங்கள் மன்றத்தின் வெள்ளிவிழாவைத் திருமுறைப் பெருவிழா வாக 30-11-78 முதல் 11-12-78வரை கொண்டாடவிருக்கும் அழைப்பு கிடைத்தது. நன்றி. மகிழ்ச்சி, பெருமதிப்பிற்குரிய திரு. எல். அழகு சுந்தரம் செட்டியார் அவர்கள் போன்ற பல ஆலை அதிபர்கள், மதுரை ஆதீன குரு மகா சந்நிதானம், திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி அடிகளார், பல கல்லூரி முதல்வர்கள், தவத்திரு. சுந்தரசுவாமிகள், தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகள், தொண்டை மண்டல ஆதீனம், காஞ்சிபுரம், அண்ணாமலைப்பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இசைக்கதை நிகழ்ச்சிகளில் யாழ்ப்பாணம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் முதலியோர் பங்கேற்கவிருக்கும் இப்பெருவிழாவும் சிறப்பாக நடைபெறப்பிரார்த்திக் கின்றேன்.

தங்கள் அன்புள்ள,
மு. அ. முத்தய்யா செட்டியார்

உ

ம. அ. முருகேசன், பி. ஏ. பி. எல்., மதுரை,
கூடுதல் மாவட்ட நீதிபதி 11-12-1978

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.''

''தமிழும், சைவமும், தமிழரின் இரு கண்கள். அவைகளைத் தங்களிடத்தே அடக்கியவை நம்முடைய சைவத் திருமுறைகள். அத்திருமுறைகளைப் போற்றிப் பாதுகாப்பது அருகி வரும் இந்நாளில், அத்தொண்டைச் செவ்வனே செய்துவருகின்றனர் மதுரைத் தெற்கு ஆடி வீதியிலுள்ள பன்னிரு திருமுறை மன்றத்தினர். ஒரு மன்றத்தை சில ஆண்டுகள் தொடர்ந்து நடத்துவது எளிது அல்ல. அதிலும், பொது மக்கள் ஆதரவுடன் நடந்து வரும் மன்றங்களுக்கு வளர்ச்சியில் தளர்ச்சியும், இடர்ப்பாடுகளுமே அதிகம். அதிலும், சமய அடிப்படையில் தோன்றியுள்ள மன்றங்கள் தொடர்ந்து வளர்ச்சி அடைவது என்பது மிக மிக அருமையானது. அப்படியிருந்தும் சைவத்தையும், தமிழையும் உள்ளிட்ட நம் திருமுறைகளை ஓதி, உணர்ந்து, உணர்த்தி இந்த மன்றம் 25 ஆண்டுகள் வளர்ந்து இருப்பதைப் பார்க்கும்பொழுது, அது ஆலவாய் அண்ணலின் கருணை என்று தான் படுகிறது. அதை நிர்வகித்து வரும் மன்றத்தினரை எவ்வளவு போற்றினாலும் தகும்.

இந்த 'வெள்ளி விழா' ஆண்டில், 12 நாட்கள் திருமுறை வேள்வி நடத்துகிறார்கள். இரண்டு மூன்று நாட்கள் எடுப்பதே, எவ்வளவோ சிறப்பு உடையது. 12 என்ற எண்ணுக்கும் மேலான சிறப்பையே அதற்குக் கூறலாம். இந்த மன்றம் இந்தச் சீரிய திருத் தொண்டைத் தொடர்ந்து செய்ய அங்கயற் கண்ணியுடனாகிய ஆலவாய் அண்ணலை இறைஞ்சுகிறேன்

இந்த மன்றப் புரவலர் 'சிவ தர்ம சீலர்' 'திருமுறைப் புரவலர்' திரு. ஆர் எம். முத்துப் பழனியப்பச் செட்டியார் அவர்களுக்கும், மன்றச் செயலாளர் ''தொண்டு'' கிழவர் திரு. சீனிவாசம் பிள்ளை அவர்களுக்கும், இளவல் - திரு. நீ. சீ. சுந்தரராமன் அவர்களுக்கும் இறைவன் தொடர்ந்து அருள் பாலிப்பானாக!

உ
சிவ சிவ

25-ம் ஆண்டு வெள்ளி விழா

வாழ்த்துப் பத்திரம்

வாழ்த்துப் பெறுபவர்:- **பன்னிரு திருமுறை மன்றம்**
தெற்காடி வீதி, ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரேஸ்வரர் திருக்கோவில், மதுரை.

வாழ்த்து அளிப்பவர் :- **ஆதி சைவ சிவாச்சார்ய சங்கம்**
வடக்காடி வீதி, ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரேஸ்வரர் திருக்கோவில், மதுரை.

★

''அண்ணல் ஆலவாய் நண்ணினுன் தனை
எண்ணியே தொழத் திண்ணம் இன்பமே''

ஆண்டவனின் அருளால் அறிவு பெற்று பிற உயிரினங்களில் இருந்து உயர்வு பெற்று நிற்பவன் மனிதன்.

அவன் அறிவு வளர்ச்சியால் அகம்பாவம் அடைந்து, அழிவு வழியில் சென்றுவிடாமல் அவனையே காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்ருல் அதற்கு ஆண்டவன்தான் அருள்செய்ய வேண்டும்.

இந்த உண்மையை உணர்ந்து ஆண்டவனை வழிபட்டு, அவன் அருளால் முக்காலமும் உணர்ந்த சமயக் குரவர்களான ஸ்ரீ அப்பர் பெருமான், ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமான், ஸ்ரீ சுந்தரமூர்த்திப் பெருமான், ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான் முதலான பக்த பெருமக்களால் அருள் வழி காட்டும பாக்களாக பாடப்பெற்ற தெய்வத்திருப் பாடல்களின் களஞ்சியம்தான் பன்னிருதிருமுறைகளாகும்.

மக்களின் அகம் அழிந்து ஆண்டவன் அருள் அடையும் வண்ணம் தெய்வீகத் திருப்பெரியார்களால் பாடப்பெற்ற பன்னிருதிருமுறைக் களஞ்சியத்திலுள்ள தெய்வீகத் திருப்பாடல்களை எல்லா மக்களும் அறிந்து அதன்வழி நடந்து வாழ்வில் நல்வளமும், தெய்வீக உணர்வோடு கூடிய; ஆக்கமும், ஊக்கமும் நற்பண்பும், நிம்மதியும் அடைந்து தன் வாழ்வை அமைதியாக வெற்றிப் பாதையில் நடத்திச் செல்ல வழிகாட்டி வருகின்றது இந்தப் பன்னிருதிருமுறைமன்றம்.

இந்தப் பன்னிருதிருமுறைமன்றம் துவங்கி, நாள்தோறும் பன்னிருதிருமுறை பாராயணங்களும் வாரந்தோறும் பன்னிருதிருமுறை விளக்கச் சொற்பொழிவுகளும் நடத்தி வருவதுடன் திருமுறை பாடிய பெரியார்கள் ஜன்மதினத்தன்று உலா வரும் சமயம், பாராயணங்கள் செய்துகொண்டு, திருவீதி வலம் வந்தும் அன்னவர்களின் உயர்வையும், அவர்தம் பாடல்கள் காட்டும் பக்தி வழியையும் மக்கள் உணர்ந்து செயல்படும் வண்ணம் எடுத்தியம்பி வருகின்றது இந்த மாமன்றம்.


மக்களுக்கு ''அறன் நெறியை'' அன்பு வழியோடும், அருள் வழியோடும் அறிவு வழியோடும் பன்னிருதிருமுறையின் வாயிலாகக் காட்டி அரும் பணியாற்றி வரும் இந்தப் பன்னிருதிருமுறைமன்றம் துவங்கி ஆண்டுகள் இருபத்தைந்து ஆகின்றன எனும்போது அடையும் ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

இந்த பன்னிருதிருமுறைமன்றம் துவங்கி செயல்பட, பொருள் உதவி, உழைப்புதவி, செயல் உதவி ஆகியன ஈந்து இப்பன்னிருதிருமுறைமன்ற வளர்ச்சிக்கு உதவிய உத்தமோத்தமர்கள் நல்வாழ்வடையவும், இப்பன்னிருதிருமுறை மன்றப் பணி செழித்தோங்கி இதுபோன்ற பன்னிருதிருமுறைமன்ற கிளையகங்கள் உலகெல்லாம் அமைத்துச் செயல்பட ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அருள வேண்டுமாய் எல்லாம் வல்ல அங்கயற்கண்ணம்மையைத் தன்னொரு பாகம் கொண்ட சொக்கேசப் பெருமானை மன, மொழி, மெய்களால் வேண்டி எங்கள் வாழ்த்துக்களைக் கூறுகின்ரோம்.

வாழ்க! பன்னிருதிருமுறைமன்றம். வளர்க! பன்னிருதிருமுறைமன்றப் பணி.

இங்ஙனம்,

ஆதி சைவ சிவாச்சாரிய சங்கத்தார், மதுரை.



மன்றத்தில் வழிபடப்பெறும் நால்வர் திருவுருவப் படம்.

உ

திருச்சிற்றம்பலம்

பன்னிரு திருமுறை மன்றம்

தோற்றமும் வளர்ச்சியும்

சிவராஜ தானியாகிய மதுரை மாநகரிலே அங்கயற்கண்ணம்மையும் ஆலவாயண்ணலும் அவர் தம் குமாரனும், முறையே செங்கோலோச்சிய மூதூரிலே, எங்கள் சோணாட்டுச் சண்பையர் கோன் எழுந்தருளி வந்து சைவத்தாபனம் செய்த மாபெரும் புனித தீட்சா மண்டபமாகிய இப்பதியிலே, எதனெதன் பொருட்டோ தனித்தனி நிறுவனங்கள் செயற்பட்டு வரும்போது சைவத்திருமுறைகள் பொருட்டு ஒரு இயக்கம் இல்லாதது கண்டு மனங்கவன்றார் ஓர் அயலூர் அன்பர். அவர்தாம் இப்பன்னிரு திருமுறை மன்றத்திற்குப் பிள்ளையார் சுழியிட்டசுழியல் கோவிந்தசாமி பிள்ளை. கோவிந்தரல்லாது, எம்பெருமான் பெருமையை உணர்த்த வல்லார் யாரே!

மதுரை ஸ்ரீ திருப்புகழ் சபையிலே சந்தித்தேன் அன்பர் திரு. கோவிந்தசாமி பிள்ளை அவர்களை. அடியேனும், அடியேனின் இளவல் காலஞ்சென்ற கோபாலசாமி பிள்ளையும், ''திருப்புகழ் சபை'' என்ற உயர்நிலைப் பள்ளியில் 1923ம் ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மாதம் மாணவர்களாகப் புகுந்தோம். அதற்கு முன்பே எங்கள் பிறந்த ஊரிலே, ஆரம்ப பாடமாக திருவருட்பா, தாயுமான சுவாமிகள் பாடல்கள், முதலியவற்றில் சிறிது பயிற்சி பெற்றிருந்தோம். திருப்புகழ் சபையிலே எங்கள் பயிற்சி வேண்டிய அளவிற்கு இருந்ததன் காரணமாகவோ, என்னவோ, அடியேனுக்கு கல்லூரிஅதற்கும் மேல்நிலையாகிய பல்கலைக் கழகம் போன்ற பன்னிரு திருமுறை பயிற்சி பெறப் பணித்தது, ஆலவாய்ச் சொக்கேசனுடைய ஆணை! அந்தக்கருணைக் கட்டளையை நண்பர் திரு. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் மூலமாகப் பெற்றுக்கொண்டேன் என்று கருதுகிறேன். அக்கட்டளையைச் சிரமேற் கொண்டு, இன்று வரை பணிசெய்து கிடக்கிறேன்.

அடியார் இணக்கத்தையும், திருவருட்துணையையும் சும்மாடாக வைத்து மன்றப் பணியை என் தலையில் ஏற்றிவிட்டு, சற்றே புறம் போந்தார் திரு. கோவிந்தசாமியவர்கள். சுமையின் பாரம் தெரியாமலேயே காலமெனும் சாலையில், இருபத்தைந்து கல்தூரம் நடந்து வந்து விட்டேன். தலைச்சுமையை மாற்றி ஏற்றுக் கொள்ள இன்று அன்பர்கள் பலர் என்னைச் சூழ்ந்திருக்கின்றனர். இனிக்கவலை ஏன்?

30-8-1953 (விஜய ஆண்டு ஆவணி திங்கள் 14ம் நாள்) ஞாயிறன்று, மதுரை வடக்கு மாசி வீதியில் அப்போது விவசாயத்துறை துணை இயக்குநராயிருந்து, ஓய்வு பெற்

றிருந்த உயர்சைவத் திரு. S. தருமலிங்க முதலியார் அவர்கள் இல்லத்தில், அடியிற்கண்ட 12 அன்பர்கள் கூடினர்கள். பன்னிரு திருமுறை மன்றம் உருவாயிற்று, அங்கயற்கண்ணம்மை உடனுய ஆலவாயண்ணல் அருளால்.

1.	சிவஸ்ரீ. ம. க.		சுந்தரேசபட்டர் அவர்கள், தலைவர்
2.	சிவத்திரு. S.		தருமலிங்க முதலியார்
3.	,,	S. S.	சுப்பையா பிள்ளை
4.	,,	N. S.	ஸ்ரீனிவாசபிள்ளை
5.	,,	T. S.	கோவிந்தசாமிபிள்ளை
6.	,,	தெ.	கற்பூரசுந்தர பட்டர்
7.	,,		தமிழிசை S. சைலப்ப ஓதுவா மூர்த்திகள்
8.	,,	M. R.	யாழ்கீத சுந்தரம் பிள்ளை
9.	,,	K. V.	தியாகராாச ஐயர்
10.	,,	Dr.	நடேச அய்யர்
11.	,,	கி.	பழநியப்ப பிள்ளை
12.	,,	A. K.	சுப்பிரமணிய பிள்ளை

இவர்களில் முதல் ஐவரை, தலைவர், உபதலைவர், பொருளாளர், செயலாளர், துணைச், செயலாளர் ஆகவும், ஏனைய எழுவரும் செயற்குழு உறுப்பினர் ஆகவும் அமைக்கப்பட்டு, மன்றம் செயற்பட, அடிப்படையான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அவைகளை, ''தினமணி'' நாள் இதழ் பொறுப்பாசிரியர் திரு. V. சந்தானம் அவர்களும், ''தமிழ் நாடு'' நாள் இதழ் துணை ஆசிரியர், திரு. M.S.P. சண்முகம் அவர்களும் வரவேற்று, அது முதல் மன்ற நிகழ்ச்சிகளுக்குத் தக்க விளம்பரம் தந்து வந்தார்கள்.

தேவாரத் திருமுறைகளைப் பண்ணுென்றப் பாடப்பயிலுதல், பயிலுவித்தல், மன்றத்தின் முதற் குறிக்கோளாகும். அதன்படி முதற் பயிற்சியினை உபதலைவராகிய திரு. தர்மலிங்க முதலியார் அவர்கள் இல்லத்தில் ஞாயிறு தோறும் திரு. சைலப்ப ஓதுவா மூர்த்திகளை ஆசிரியராகக் கொண்டு பயின்று வந்தோம். இரண்டாம் தீர்மானமாகிய சிவசம்பந்தமான புராணங்களை தக்கார்களைக் கொண்டு சொல்லச் செய்வதற்குத் தகுதியான இடம் தேவைப் பட்டது. அடுத்தடுத்து, அப்போதிருந்த அறநிலையத்துறை அலுவலர்களுக்கு விண்ணப்பம் செய்தும் பயனில்லாது போக, சிவனை மனத்தால் நினைந்து, அவன் பெயர்களை வாயாற் கூறி கையால் அவனைத் தொழுது கொண்டு, ஒரு சிறு முயற்சியைக் கையாண்டபோது அது உடனே கோரிய பலனைத் தந்தது. அப்போது அறநிலையத்துறை ஆணையராயிருந்த, சிவச்சார்பும், திருமுறைப்பற்றும் மிகவும் உடையவராகிய திரு. T. K. சங்கர வடிவேலுப் பிள்ளை, I. A. S., அவர்கள் மன்றத்திற்கு, தக்க இடம் ஒன்று உடனே கொடுக்கும்படி, கோவில் அதிகாரிகளுக்கு உத்திரவிட்டார்கள். கோவில், நிர்வாக அதிகாரி திரு. T. H. விவேகாநந்தம் பிள்ளை அவர்கள் ஆணையரைப்போலவே, சிவநேசராய்த் திகழ்ந்தபடியால், கூடற்குமாரன் சந்நிதியின் பக்கத்தில் தற்காலிகமாக ஒரு அறை தந்தார்கள்.

அதில் திருமுறைப் புத்தகங்கள், வைத்திருந்த ஒரு சிறுபெட்டியும், சுருதிப்பெட்டி, தபால்கள் முதலியவற்றையும் வைத்துக்கொள்ள அனுமதித்தார்கள். குமரன் சந்நிதியில் மன்றத்தினர் கூடித் திருமுறை பயின்று வந்தார்கள். இப்படி ஓர் ஆறு மாதம் எங்கள் திருமுறைப் பாராயணத்தை கேட்டுகந்து வந்த குமரன் தாதையிடம் சொல்லி தமயன் இருக்கும் ஒரு விசாலமான இடத்திற்கு எங்களை அனுப்பி வைத்தார். அதுதான் திருக்கல்யாண மண்டபத்தையடுத்து உள்ள திரு. மணி அய்யர் அவர்கள் மண்டபம். 28-11-54 அன்று அங்கே எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமானை, திருமுறைகண்டவரும், கொண்டவருமாகப் பாவித்து, வழிபட்டு மன்றப்பணி கொஞ்சம் விரிவாக நடக்கத் தொடங்கியது. அந்தத் தொடக்க விழாவிற்கு மீனுட்சி அம்மன் கோவில் ஆலோசனைக் குழுத் தலைவர் திரு. K. M. S. லக்ஷ்மண அய்யர் அவர்கள் தலைமை வகித்து திருமுறைகளைத் தொட்டுத்துவக்கி வைத்தார். திருமுறை வாணர்கள் திரு. சைலப்ப ஓதுவா மூர்த்திகளும், பழநி சுப்பையா முதலியாரும் திருமுறை ஓதினுர்கள். நிர்வாக அதிகாரி திரு. T. H. விவேகானந்தம் பிள்ளை அவர்கள், சைவத்தையும், தமிழையும், வளர்க்கவே, தேவஸ்தானங்கள் பணிபுரியும் என்றும் மன்றம், சிறந்த முறையில், பணியாற்றவேண்டும் என்றும் வாழ்த்தினுர்கள். அடுத்து வந்த மார்கழி மாதம் (15-12-54 முதல் 13-1-55 வரை) பாராயணத்தை முதல் முதலாகத் தொடங்கி நடத்தினேம். இப்படி விநாயகப் பெருமான்கீழ் அமர்ந்து மன்றம் தொண்டுபல புரியலாயிற்று. இந்த இடத்தில் முதல் முதலாக, இராமனுதபுரம் சமஸ்தான வித்துவான் திரு. சிவஞானம் பிள்ளை அவர்களைக்கொண்டு திருவிளையாடற் புராண விரிவுரை நிகழ்த்தப் பட்டது. பழநி சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் சுவாமிகள் அவர்களது சமயச் சொற்பொழிவுகளும், சில இங்கே நடைபெற்றன.

நிர்வாக அதிகாரி T. H. விவேகாநந்தம் பிள்ளை அவர்கள் மன்றத்திற்குத் தகுந்த இடம் நிரந்தரமான ஒன்று அளித்துவிடவேண்டும் என்ற தீவிரமான எண்ணங்கொண்டிருந் தமையால் இந்த சிவபுண்ணியத்தைச் செய்யத்தக்க வாய்ப்பை எதிர்பார்த்திருந்தார்கள். அவ்வண்ணமே, இப்போது மன்றம் இருந்து பணிசெய்து வரும் இடத்தில், அடுத்து வந்த கார்த்திகை கடைசி சோமவாரத்தன்று, 12-12-55 புகுமாறும் செய்தார்கள். மன்றம் உள்ளளவும். அவர்களது அரிய செயலை மறக்க முடியாது.

12-12-55 அன்று எங்களது தீக்ஷாகுருவான பழநி ஈசான சிவாச்சாரியார் சுவாமிகள் எழுந்தருளி, சிறந்த சொற்பொழிவு ஆற்றி சமய அறிவும் அதில் நமக்கு இருக்க வேண்டிய செறிவும் மிகும்படி செய்து, ஆசி கூறியது இன்றும் எம்காதினிற் ஒலித்துக்கொண்டிருக் கிறது.

மன்றம் தொடங்கப்பெற்று ஈராண்டாகி இருந்தாலும் முதன் முதலாக ஆண்டு விழா நிகழ்த்துவதற்கு உரியகாலம் 31-12-55 அன்று வந்ததுபோலும்! அதுவரையும், அதற்குப் பின்னுலும், அடியேனுடன் தோளுக்கு தோள் ஒன்ற நின்று பணியாற்றியவர்களை இத்தருணத்தில் நினைவு கூர்தல் கடன். திண்டுக்கல் ரோடு, திரு. நாராயண பிள்ளை, திரு. கோவிந்தசாமி அவர்களின் முன்பிறந்தோராகிய சுந்தரமகாலிங்கம் பிள்ளை, கீழச்சித்திரை வீதி திரு. அப்பாவு பிள்ளை, செல்லத்தம்மன் கோவில் திரு. நடராஜ பிள்ளை முதலியோர் மார்கழிப் பாராயணத்தில் தவருது பணி புரிந்தார்கள்.

திருக்கலியாண மண்டபத்தில் முதல் ஆண்டு விழா மூன்று நாட்கள் காலையிலும், இரவிலுமாகச் சிறப்பாக நடந்தேறியது. பெரும் புலவர்கள் ஐயாறு, இராம. கோவிந்தசாமி பிள்ளை, முத்து. சு. மாணிக்கவாசகமுதலியார், (பின்னுள் தொண்டைமண்டல ஆதீன கர்த்தர் அவர்கள்) நாகர்கோவில். ஆறுமுகநாவலர், எம்பார் விஜயராகவாச்சாரியார் முதலிய தலையாய புலவர்களும், இசை வல்லார்களும், கலந்துகொண்டு சிறப்புச் செய்தனர்.

1957ம் ஆண்டு மன்றத்தில், மற்றொரு சிறப்பு நிகழ்ச்சி. திருமுறைகளுக்கு ஒரு கோவில் அமைக்கப்பெற மதுரை மால்வடம் போக்கித்தெரு பெரும் ஜவுளி வியாபாரியாகிய காலஞ்சென்ற திரு. தண்டபாணி முதலியார் அவர்கள் நன்கொடையால் திருப்பணி செய்யப் பட்டு ஹேவிளம்பியாண்டு ஆனிதிருவோணம் (எங்கள் குருநாதர் பழநிசிவாச்சாரியார் சுவாமிகள் ஜன்மநட்சத்திரம்) 30ம் நாளில்(14 - 7 - 1957) குடமுழுக்கு நிகழ்ந்தது. அடுத்து வந்த ஆடி சுவாதியில் ஆரூரர் விழாவின் போது 2 - 8 1957 புதிதாகச் சமைக்கப்பட்ட திருவம்பலக் கூரை போன்ற சிகரம் அமைத்த செப்புப் பெட்டகத்தில் திருமுறைகளை எழுந்தருளச் செய்தார்கள் மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடாதிபதி. இப்பெட்டகம் அமைக்கப் படுவதற்கு ஆன செலவில் முதல் நன்கொடை அளித்தவர் அடியேனுடைய நண்பரும் மதுரைக் கல்லூரி நிர்வாகக் குழு அலுவலருமான திரு B. லட்சுமண அய்யர் ஆவார்.

1958ல் அவனியாபுரம் பெருநிலக்கிழார் திரு கே. வாலசுப்பிரமணிய பிள்ளை அவர் களின் நன்கொடையால் நால்வர் படம் ஒன்று எழுதப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு வந்து மன்றத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

அடுத்து என். வி. சி. நாராயணன் செட்டியார் அவர்கள் உபயமாக மாணிக்கவாசகர் நடராசர் படங்களும் எழுதிவைத்து அவைகள் தமிழவேள் திரு. P. T. ராசன் அவர்களைக் கொண்டு திறந்து வைக்கப்பட்டன. சிவசக்தி பவான் உரிமையாளரான சதாசிவம் அவர்களால் ஒரு பெரிய ஐந்து முகக் குத்து விளக்கு வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஏழுமுக குத்துவிளக்கு ஒன்றும் திரு. என். வி. சி. நாராயணன் செட்டியார் அவர்களால் வாங்கி வைக்கப்பட்டது.

மன்றப் பணிகள்

1956ம் ஆண்டு முதல் நாயன்மார்களுடைய நாட்களைச் சிறிதும் இடையீடு இல்லாமல் கொண்டாடி வருகிறது. திரு. அ. உத்தண்டராமபிள்ளை I. A. S. (முன்னுள் அறநிலைய ஆட்சிதுறையினர்) அவர்கள் இங்கே மன்றத்திற்கு எழுந்தருளிய போது மங்கையர்க்கரசியார் தினம் ஆனபடியால் அந்த அம்மையாரைப் பற்றி நமது மன்ற உபதலைவர் திரு எஸ். தர்மலிங்க முதலியார் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அதைக் கேட்ட ஆணையர் அவர்கள் நாயன்மார்களுடைய திருஉருவங்களை எழுந்தருளச் செய்ய வேண்டும் என்று சொல்லி அதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்தார்கள். அன்றுமுதல் நம்முடைய மன்றத்தில் நாயன் மார்களுடைய நாட்கள் தவறுமல் கொண்டாடப்பட்டு வருகின்றன. அதுபோல அந்தந்த நாயன்மார்களின் திருஉலா ஆடிவீதிகளில் நடைபெற்று வருகின்றது.

நம்முடைய சமய சம்பந்தமான விழாக்கள் ஒவ்வொன்றையும் மன்றத்தில் கொண்டாடி வருகிறோம். கந்தபுராண, திருவிளையாடல் புராண விரிவுரைகள் அநேகமுறைநடந்திருக்கின்றன. மார்கழி மாதத்தில் நாள்தோறும் அதிகாலையில் மன்றத்தினர் திருமுறைப் பாராயணம் செய்துகொண்டு ஆடி வீதி வலம் வருகிறார்கள். அதில் மன்றத்து அன்பர்களும் சிவநேயச் செல்வர்களும் பங்கு கொண்டு சிறப்பாக நடத்திவருகிறார்கள். திருவெம்பாவை காலத்தில் பத்து நாளும் இரவில் திருவெம்பாவையினுடைய விரிவுரைகள் மன்றத்தில் நடத்தப் படுகின்றன. நம்முடைய சமயாசாரியர் நால்வர்களுடைய குருபூசை விழாவும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. இந்தச் சிறப்பு விழாக்களுக்கு வேண்டிய செலவுகள் செய்து உறுதுணையாக இருந்து உதவியவர்கள்:

1. அவனியாபுரம் நிலக்கிழார் திரு. வாலசுப்பிரமணியபிள்ளை
2. தண்டபாணி அன்கோ நூல் வியாபாரம், மதுரை
3. கோபாலகிருஷ்ண செட்டியார், மதுரை
4. திரு. எஸ். எஸ். பிள்ளை, நூல் வியாபாரம் மதுரை
5. திரு. ஜி. வெற்றிவேல் மற்றும் ரவி பெயின்ட்ஸ், சென்னை
6. திரு. அவனியாபுரம் நிலக்கிழார் திரு. சுப்பிரமணிய பிள்ளை
7. திரு. எஸ். வி. சேவுகஞ் செட்டியார்
8. திருமதி. ராதாதியாகராசன்
9. திரு. மா. அழகப்பன்
10. திரு. மு. ராமசாமி நாடார்
11. திரு. முத்துச்சாமி பிள்ளை I. A. S. (Rtd)
12. **திரு. V. முத்துக்காமாட்சி பிள்ளை, B. A., B. T.**

பின்னால் மேற்படி நால்வருடைய விழாக்களை மிகச் சிறப்பாகச் செய்வதற்கு உதவிய வர்கள்:

1. திரு. ராம. முத்துப்பழநியப்ப செட்டியார்
2. திரு. கருமுத்து. சு. சொக்கலிங்கஞ் செட்டியார்
3. திரு. பெரி. பஞ்சநதம் செட்டியார்
4. திரு. கா. சுப்பிரமண்யம்
5. திரு. கற்பூர நாடார் மகன் செல்வராசு
   தண்டாயுதபாணி அன் கோ.
6. திரு. கோபாலகிருஷ்ணன் செட்டியார் எழுகடல்தெரு, அவர்களுக்குப் பின்னால்
   குமரார் தண்டாயுதபாணி செட்டியார்
7. திரு. மு. இராமசாமி நாடார்

வாராந்திர நிகழ்ச்சிகள்

ஒவ்வொரு வாரமும் சோமவாரந்தோறும் சாஸ்திர பாடமும், புதன்தோறும் பெரிய புராண விரிவுரையும் செவ்வாய்க்கிழமைதோறும் திருமந்திர விரிவுரையும் நிகழ்கின்றன. இந்த விரிவுரைகளுக்குப் பெருந்துணையாக மன்றத்துப் புலவர்களாக இருப்பவர்கள் சித்தாந்த மாமணி பேராசிரியர் அ. சங்கரநாராயணன், கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள்.

மன்ற வெளியீடுகள்

இந்த வெள்ளிவிழாவிலே திருமுறைப் பாராயணத் தொகுப்பு 26வது வெளியீடாகும். முதலாண்டு விழாவிலேயே (1955) பன்னிருதிருமுறை விளக்கம் என்னும் நூலும், தொடர்ந்து அவ்வப்போது ஏற்படுகின்ற நிகழ்ச்சிகளுக்குரிய திருமுறை பற்றிய நூல்களும் பிரசுரிக்கப் பட்டுள்ளன. தவிர 1959ல் விஷக் காய்ச்சல் வந்து மக்களை வாட்டியபோது மன்றத்தில் சம்பந்தர் அருளிய திருநீலகண்டப் பதிகத்தை வெளியிட்டு இலவசமாக வழங்கியும் ஆடிவீதியில் அன்றுடம் வலம் வரும் பொழுது அப்பதிகத்தை ஓதியும் உய்ந்தோம்.

அடுத்து 1962ல் எட்டு கிரகங்கள் ஒன்றுகச் சேர்ந்து உலக மக்களை அச்சுறுத்தியபோது சம்பந்த சுவாமிகள் அருளிய கோளறுபதிகத்தை ஓதவேண்டுமென்று காஞ்சிப் பெரியவர்கள் சொல்லி ஆயிரக்கணக்கான பிரதிகளை அவர்கள் இலவசமாக மக்களுக்குக் கொடுத்தார்கள். ஆனால் அவைகளை முறையாகக் கற்றுப் பாராயணம் செய்ய மன்றத்தினர் உதவினுர்கள். மேலும் அந்தக் கோளறு பதிகம் உள்ளிட்ட ஏழு முக்கியமான பதிகங்களைத் தொகுத்து ஆயிரம் பிரதிகள் வெளியிட்டோம். இதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் அவனியாபுரம் நிலக்கிழார் திரு. வாலசுப்பிரமணிய பிள்ளை அவர்கள். அவ்வப்போது நடக்கும் கும்பாபிஷேகங்கள் விழாக்கள் சம்பந்தமான வெளியீடுகளையும் உதவி திருமுறைகளைப்பரப்பி வருகின்ருேம். சென்ற 20 ஆம் ஆண்டு விழாவிலே திருமுறை பயின்று வரும் அன்பர்கள் பாராயணம் செய்வதற்கான முறையில் திருநெறிய தமிழ் நூல் வெளியிட்டோம். இதற்கு உதவி செய்த K. O. S. ஒண்டிப்பிலி சர்பத் கம்பெனியார்களை (நாகராஜன்) நாம் மிகவும் பாராட்டுகிருேம். பின்னர் மன்றம் மூலமாகப் பல வெளியீடுகளுக்குப் பொருளுதவி செய்த எல்லா சிவநேயச் செல்வர்களையும் முக்கியமாக R. M. முத்துப்பழநியப்பச் செட்டியார் அவர்களையும் இங்கே குறிப்பிட வேண்டும். அவர்கள் திருமுறை வித்யா பீடத்திற்கும் திருப்பணி செய்தவர்கள். 1977ல் நால்வர் குருபூஜைகளின் போது அவரவர்களுடைய அர்ச்சனை நூல்களைவெளியிட்டோம்.

நடப்பு ஆண்டில் நால்வர் குருபூஜைகளின்போதும் அவரவர்கள் அருளிய திருமுறைகளைச் சிறு நூல்களாக வெளியிட்டோம். இந்த ஆண்டின் மற்ருெரு குறிப்பிடத்தக்க பணியானது மன்றத்தினர் ஞாயிறுதோறும் அன்பர்கள் இல்லங்களுக்குச் சென்று திருமுறைகளைப் பாராயணம் செய்து ஆங்காங்கு கூடியிருக்கும்மக்களிடையே திருமுறைகளைப் பரப்பிவருவதாகும். இந்தத் தொண்டு அன்பர்களுடைய பாராட்டுகளையும் ஆதரவையும் பெற்று வளர்கிறது. இரு இடங்களில் இந்தப் பாராயணங்களின் நினைவாகத் திருமுறைத் தொகுப்புச்சிறு நூல்களையும் மன்றத்தின் சார்பாக இலவசமாக வெளியிட்டார்கள். இந்த வெள்ளிவிழா நினைவாகவும் நானூறு பாடல்களடங்கிய தொகுப்பு நூலொன்றை அன்றுடப் பாராயணத்துக்குரிய ஏழு மாலைகளாக மன்றப்புரவலர் சைவத்திரு R. M. முத்துப்பழநியப்பச் செட்டியாரவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

சிறிதும் ஆடம்பரத்தை விரும்பாமலும், எவ்விதப் பாராட்டுதலையும் எதிர்பார்க்காமலும், எளியமுறையில், அங்கயற்கண்ணி பங்களும் ஆலவாயண்ணலின் அருந்துணை கொண்டு திருமுறைகளை மக்களிடம் பரவச்செய்ய வேண்டு மென்ற ஒரே நோக்கத்தோடு பணிசெய்து வருகின்ருேம்.


''என் கடன் பணிசெய்து கிடப்பதே''


இங்ஙனம்,

N. S. சீனிவாச பிள்ளை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளிவிழாக் காட்சிகள்











வெள்ளிவிழாக் காட்சிகள்













வெள்ளி விழாக் காட்சிகள்











வெள்ளி விழாக் காட்சிகள்












வெள்ளி விழாக் காட்சிகள்








வெள்ளி விழாக் காட்சிகள்












12-1-1978 அன்று நடைபெற்ற இசைக்கதை நிகழ்ச்சிக்கு
சிவகாமி ஆலை அதிபர் திரு. கருமுத்து
சு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமை வகித்தல்.



21-12-1959ல் நடைபெற்ற திருமுறை விழாவில்
முன்னுள் அறநிலயத்துறை ஆணையர்
திரு. அ. உத்தண்டராமபிள்ளை அவர்கள் பேசுதல்.



27-4-1962ல் நிகழ்ந்த அப்பர் சுவாமிகள் விழாவில் தலைமை வகித்த
ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான்
சுவாமிகளுடன் பிரமுகர்கள்.



4-5-1964ல் நடைபெற்ற அப்பர் சுவாமிகள் குருபூசை விழா -
மகாவித்துவான் திரு. ஆறுமுக நாவலரை மன்றப் பொருளாளர்
திரு. K. வாலசுப்பிரமணியபிள்ளை வரவேற்றல்.

காட்சி

திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

காட்சி என்பது எது? அக்காட்சி எவ்வாறு அமையவேண்டும்? என்று சிந்திக்க வேண்டும். சிலர் பொருட்காட்சி கண்காட்சி, விலங்குக்காட்சி முதலியவைகளைக் கண்டு களிக்கின்றார்கள். இவைகள் யாவும் நற்காட்சியாகா.

எல்லாவற்றையும் ஒன்றுபோல் காண்பதுவே சிறந்த காட்சியாகும். 'ஒன்றாகக் காண்பதுவே காட்சி' என்று அருளிச் செய்கின்றார் ஒளவையார்.

ஏழையையும் தனவந்தனையும் ஒன்றாகக் காணவேண்டும். இன்பத்தையும் துன்பத்தையும் இகழையும், புகழையும், ஏற்றத்தையும் தாழ்வையும் போக்கையும், வரவையும் வந்தனையையும், நிந்தனையையும் ஒன்றாகக் காண்பதுவே காட்சி. பளிங்குபோல் தூய மனமுள்ளவர்க்கே இது அமையும்.

இன்ப துன்பத்திற்குக் காரணம் நாம் செய்த வினைகளேயாகும். ஒருவன் நம்மை நிந்திப்பானாயின் முற்பிறப்பில் நாம் ஒருவனை நிந்தித்திருப்போம்; அவ்வினை இப்போது அத்தியான் மிகமாக வருகின்றது. நம் வினையை நினைத்து அமைதியடைய வேண்டும். ஆவாரை யாரே அழிப்பார்? சாவாரை யாரே தவிப்பார்? ஒருவராலும் ஆகாது. ஆவதும் சாவதும் நாம் செய்த வினையாலேதான் என்று உள்ளூர உணர்ந்து உய்ய வேண்டும்.

அப்படி நாம் அறிவோமாயின் சம நோக்கம் வரும். யார் மீதும் காய்தல் உவத்தல் உண்டாகாது கண்ணபிரான் உயர்ந்த வெண்ணெய்யையும் தாழ்ந்த மண்ணையும் உண்டார்.

ஜனகர் வெப்பத்தையும் தட்பத்தையும் ஒன்றாக நோக்கினார்.

தருமர் இகழையும் புகழையும் ஒன்றாகப் பார்த்தார்.

இராமர் காட்டையும் நாட்டையும் ஒன்றென மதித்தார்.

அப்பரடிகள் பொன்னையும் மண்ணையும் ஒன்றெனப் பார்த்து உழவாரப் படையால் படையால் பேர்த்து எறிந்தார், அவ்வாறு காண்கின்ற காட்சி அருட்காட்சியெனப்படும். அக்காட்சியை காண்போர் மனம், அலையற்ற கடல்போல், காற்றில்லாத இடத்தில் எரியும் விளக்கைப்போல், சலனமற்று இருக்கும். அவர்கள் அவர்களின் உள்ளம் குளிர்ந்திருக்கும். அவர்கள் முகம் மலர்ந்திருச்கும். கண்களில் கருணைவழியும் அத்தகைய ஆன்றோரைக் காண்பது ஒரு இனிய காட்சியாகத் திகழும். கண்ட கண் குளிரும்.

ஒரு கணவனும் மனைவியும் நல்லறமாகிய இல்லறத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தார்கள். பின்னர் இருவரும் துறவு பூண்டார்கள். கணவன் மனைவியென்ற எண்ணம் நீங்கியது. உண்மையான துறவுபூண்ட அவர்கள் இன்றிருந்த ஊர் நாளையிராமல் மூர்த்தி தலந்தீர்த்தம் முறையாய்த் தொடங்கி யாத்திரை செய்து வந்தார்கள்.

திருச்செந்தூர் கற்கரை வழியே ஆண் துறவி முன்னும், பெண் துறவி சற்றுப் பின்னு-மாக நடந்து கொண்டிருந்தார்கள், ஒரு தனவந்தன் தன் மனைவியுடன் முன்னொரு நாள் கடலில் நீராடியபோது ஒரு வைர வளையல் கழன்றுவிட்டது. அவன் தேடிப்பார்த்து கிடைக்கப்பெறுமல் மனம்வருந்திச் சென்றான். அவ்வளையல் இப்போது வெளிப்பட்டு கதிரவன் வெயில்பட்டு விளக்குபோல் ஒளி செய்து கொண்டிருந்து. ஆண் துறவி கண்டார். அவர் உண்மையாகத் துறந்தவர். அதில் அவருக்குப் பற்று வரவில்லை. ஒருவேளை பின்னே வரு-கின்ற அம்மாளுக்கு இதைக்கண்டவுடனே தனக்கு என்ன விருப்பம் வராதானுலும் தன் தங்கை தமக்கை முதலியோர்க்கு எடுத்துத் தரலாம் என்ற எண்ணம் வரக்கூடுமே? அவ்வாறு எண்ணினுல் துறவின் தூய்மை கெடுமே என்று கருதி வைர வளையலை மணலைப்போட்டு மூடினார்.

அதற்குள் அங்கு பெண் துறவி வந்தார். ''சுவாமி'' என்ன அது? ஏன் மணலை யிட்டு மறைக்கின்றீர்? என்று வினவினார்.

''ஒன்றுமில்லை,'' ''சுவாமி துறவிகள் விளையாட்டுக்கும் பொய் சொல்லக்கூடாது; உள்ளத்தை உரையும்.''

''...வைர வளையல்'' ''இதை ஏன் மணலால் மறைத்தீர்?''

''ஒரு வேளை நீங்கள் பார்த்தால் உமது உடன் பிறந்தாருக்குத் தரலாம் என்ற எண்ணம் வந்தால் துறவுக்கு பங்கம் வருமே என்று மறைத்தேன்''.

''நீர் துறவிதானே? துறவுக்கும் உமக்கும் எத்தனைத் தூரம்? இனி நான் உம்முடன் சேர்ந்து யாத்திரை செய்ய மாட்டேன்; நீர் உண்மைத் துறவியாகமாட்டீர். ஆ! ஆ! என்ன விந்தை. இது வைரம், இது மணல் என்ற வேற்றுமைக் காட்சி துறவிக்கு வரலாமா? அவ்வாறு வந்தால் துறவு ஆகாதே. சிவனே' அதுவும் ஒரு மணல், இதுவும் ஒரு மணல். மணலை மணலால் மூடுவானேன் ஆகவே மனதில் வைரம் உயர்ந்தது என்ற எண்ணம் வந்து விட்டபடியால் துறவின் தூய்மை சற்று குன்றிவிட்டது என்று கூறிப் பிரிந்து வேகமாக நடந்து மறைந்துவிட்டார்.

ஆகவே ஒன்ருகக் காண்பதுவே காட்சி.

> ''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
> ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்''—பெரியபுராணம்

★

தாண்டவ சிறப்புத் தலங்கள்

1. தில்லைச்சித்திரகூடம், பேரூர் — ஆனந்த தாண்டவம்
2. திருவாரூர் — அசபா தாண்டவம்
3. மதுரை — ஞான சுந்தர தாண்டவம்
4. திருப்புக்கொளியூர் — ஊர்த்துவ தாண்டவம்
5. திருமுருகன்பூண்டி — பிரம தாண்டவம்

திருஞான சம்பந்தர்

திரு. ஆ. ஆனந்தராசன், M. A., B. T.,

''புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்த ரூர்தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென்ற திருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே
பழைய என்பு பொற் பாவைய தாக்குமே
சினவ ராவிடம் தீரெனத் தீருமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.''

மெய்ச் சைவநெறி மேலோங்க பொய்யாயினவெல்லாம் போயகல வந்தருளியவர் ஞானசம்பந்த சுவாமிகள். இவர் காலத்திற்கு முன்பும் இவர் காலத்தும் மக்கள் சமணம் பௌத்தம் ஆகிய புறச்சமயங்களின் மயக்கின் வலைப்பட்டு உண்மை நெறி யறியாது உழன்றனர். இந் நிலை நீங்கிப் பரசமயத் தருக்கு ஒழியவும், திருநீற்று நெறி தழைக்கவும். தமிழ் செய்த தவம் நிரம்பித் ததும்பவும் தோன்றினர் ஞானசம்பந்தர்.

சோழநாட்டில் சீகாழிப் பதியில் அந்தணர் மரபில் கவுணிய கோத்திரத்தில் சிவபாத இருதயரும் பகவதியம்மையாரும் செய்த தவப்பயனால் ஓர் ஆதிரை நன்னாளில் அவதரித்தார். மூன்று வயது நிரம்பியது. ஒரு நாள் தந்தையார் திருகுளத்திற்கு நீராடப் புறப்பட்டார். குழந்தையும் அழுது பிடிவாதம் செய்து அவரைத் தொடர்ந்து சென்றது.

பிள்ளையைக் கரையில் இருத்திவிட்டுச் சிவபாதஇருதயர் குளத்தில் இறங்கினர். மந்திரம் ஓதியபடியே நீரில் மூழ்கியிருந்தார். தந்தையைக் காணாத குழந்தை தோணியப்பர் திருக்-கோயிலின் சிகரத்தைப் பார்த்து 'அம்மே அப்பா' என அழைத்து அழுதது. உடனே தோணியப்பர் அம்மையாருடன் இடப வாகனத்தில் எழுந்தருளி வந்து, 'திருமுலைப் பாலுடன் சிவஞானத்தின்ன முதையும் குழைத்துப் பொற்கிண்ணத்தில் ஊட்டுக என்று பணிக்க, அம்மையாரும் அவ்வாறே செய்து பிள்ளையின் அழுகையைத் தீர்த்தருளினர்.

பாலுண்டபாலகர் உணர்வரிய மெய்ஞ்ஞானம் எய்தப் பெற்றுப் பேருணர்வோடு பொலிந்து நின்றார். கரையேறிய தந்தையார் பாலரு வாயரைக் கண்டார். உனக்கு இதனை இட்டவரைக் காட்டு' என்று அச்சுறுத்திக் கேட்டார். உடனே சிறிய பெருந்தகையார் ஆனந்தக் கண்ணீர் பெருக, உச்சியில் எழுந்தருளிய ஒரு திருக்கை விரலினால் சுட்டிக் காட்டி, ''தோடுடைய செவியன்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளினர். சிவபாத இருதயர் தம் தவப்பயன் என்று விம்மிதமுற்றுக் கைகுவித்து வணங்கினர். அம்மையப்ப ரால் ஆட்கொள்ளப்பட்டமையின் ஆளுடைய பிள்ளையார் எனவும், சிவஞான சம்பந்தம் எய்தியமையால் திருஞான சம்பந்தர் எனவும் அழைக்கப் பெற்றார்.

பிள்ளையார் சீகாழிக்கு அருகிலுள்ள திருகோலக்கா என்னும் தலத்தை அடைந்து கையினுல் தாளமிட்டுத் தமிழ்ப் பாட்டிசைத்தார். கைத்தாளம் இடுவதனுல் பிள்ளையாரின் பூவிரல்கள் நோகுமே என்ற ஆதரவால், அருட்கடலாகிய பெருமான் அவருக்குப் பொற்ருளம் ஒன்றை வழங்கியருளினுர்.

பிள்ளையார் சோழநாட்டு மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கத் தமது தலயாத்திரையை மேறகொண்டார். முதற்கண் தமது தாயார் பிறந்த ஊராகிய திருநனி பள்ளியைத் தரிசித்தார். சிதம்பரம் முதலிய தலங்கள் பலவற்றையும் வழிபாடு செய்துகொண்டு திருநெல்வாயிலரத்துறையைத் தரிசிக்க விரும்பிப் புறப்பட்டார். தந்தையார் தோளினின்றும் இறங்கிப் பாத தாமரை நோவ நடக்கலுற்ருர். வழிநடை வருத்தத்தால் மாறன்பாடி என்னுமிடத்தில் அடியாரோடு தங்கினுர். அன்றிரவு சிவபெருமான் அரத்துறை வாசிகளின் கனவில் தோன்றித் திருக்கோயிலில் முத்துச் சிவிகை, குடை சின்னங்கள் வைத்திருப்பதாகவும், அவற்றைக் கொண்டு சென்று பிள்ளையாரிடம் சேர்க்குமாறும் ஆணையிட்டு மறைந்தருளினுர். அவ்வாறே, விடிந்தவுடன் ஊரார் சிவிகை, குடை முதலியவற்றை எடுத்துச் சென்று ஞானசம்பந்தரை வணங்கி அவர் பால் சேர்ப்பித்தனர். பிள்ளையார் அஞ்செழுத்தோதி, சிவிகையில் உலகுய்ய அமர்ந்து, அரத்துறை அடிகளை வழிபாடு செய்து சீகாழியை அடைந்தார்.

பிள்ளையாரது பெருமையைக் கேள்வியுற்ற திருநாவுக்கரசர் அவரைக் காண விரும்பிச் சீகாழிக்கு வந்தார். பிள்ளையார் அவரை எதிர்கொண்டு வரவேற்ருர். இருவரும் திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டனர். பின் திருநாவுக்கரசர் விடை பெற்றுச் சென்ருர்.

ஞானசம்பந்தர் அடியார்களோடு பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருப்பாச்சிலாச் சிராமத்தை அடைந்தார். ஆங்கே கொல்லிமழவன் என்னும் சிற்றரசனின் அரும்புதல்வி முயலகன் என்னும் நோயினுல் துன்புற்றுத் திருக்கோயில் சந்நிதானத்தில் உணர்விழந்து சோர்ந்து கிடப்பதைக் கண்டு, அவள்மேல் இரக்கங் கொண்டார்; பரம்பொருளைப் பணிந்து பதிகம்பாடி அவளது நோயை நீக்கினுர்.

ஆளுடைய பிள்ளையார் திருப்பட்டீச்சரத்தை அடைந்தபோது வெயிலின் வெம்மை கடுமையாக இருந்தது. அதனைத் தணிக்கும் பொருட்டு சிவபெருமான் முத்துப்பந்தர் ஒன்றை வழங்க, அடியார்கள் அதனைத்தாங்கிக் கொண்டனர்.

பிள்ளையார் திருவாவடு துறையை அடைந்தார். அப்போது சிவபாத இருதயர் வேள்வி செய்யப் பொருள் வேண்டும் என்று சுவாமிகளிடம் விண்ணப்பித்தார். பிள்ளையார் அந்தமில் பொருளாவன ஆவடுதுறையுள் எந்தையார் அடித்தலங்களன்ருே?'' என்று திருக்கோயிலுக்குச் சென்று 'இடரினும் தளரினும்' என்ற திருப்பதிகத்தைப் பாடினுர். பெருமான் அருளால் ஒரு பூதம் தோன்றி ஆயிரம் பொன் அடங்கிய உலவாக் கிழியைப் பலி பீடத்தில் வைத்து அகன்றது. அதனைத் தந்தையாரிடம் கொடுத்து வேள்வி செய்ய அவரை அனுப்பினுர்.

பின்னர் ஞான சம்பந்தர் திருமருகலை அடைந்தார். அங்கு ஒரு வணிகன் ஒரு கன்னிப் பெண்ணுடன் வந்து திருக்கோயிற் புறத்திலுள்ள மடத்தில் இரவில் துயில் கொண்டிருந்த-போது நச்சரவு தீண்டி மாண்டான். தமியளாய் ஆவி சோர்ந்து அரற்றுகிற அப்பெண்ணின் அழுகுரல் கேட்ட ஆளுடைய பிள்ளையார் அவளது வரலாற்றைக் கேட்டு இரக்கமுற்ருர்: திருமருகற் பெருமானை வேண்டி அவ்வணிகனை உயிர் பெற்றெழச் செய்து அவ்விருவர்க்கும் திருமணம் முடித்து வைத்தார்.

பிள்ளையார் திருநாவுக்கரசருடன் திருவீழிமிழலையை அடைந்தார். அங்கு தங்கியிருந்த போது மழையின்மையால் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அடியார்கள் பசிப் பிணியால் நைந்தனர். இருவரும் படிக்காசு பெற்று அடியார்களுக்குத் திருவமுது அளித்து வந்தனர்.

பின்னர் இருவரும் திருமறைக்காடு போந்தனர். வேதங்களால் அடைக்கப்பட்டிருந்த கதவுகளைத் திருநாவுக்கரசர் திருப்பதிகம் பாடித் திறக்கச் செய்தார். இருவரும் நேர்வாயில் வழிச்சென்று இறைவனைத் தரிசித்து இன்புற்றனர். பின்பு பிள்ளையார் 'சதுரம் மறை' என்னும் பதிகம் பாடி அடைக்கச் செய்தார்.

புகலி மன்னரும் வாக்கின் வேந்தரும் இவ்வாறு இங்கே எழுந்தருளியிந்த போது, பாண்டி நாட்டில் புன்னெறியாகிய சமண் நெறி புகுந்து செல்வாக்குப் பெற்றது. மன்னனுன கூன் பாண்டியனும் சமண நெறியைச் சார்ந்து ஒழுகியமையால், சைவ நன்னெறி சாம்பித் தளர்ந்தது, இந்நிலைகண்டு வருந்திய பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் ஞானசம்பந்தரின் பெருமைகளைக் கேள்வியுற்று அவர்பால் சில அடியார்களை அனுப்பினர். அவர்கள் சென்று பிள்ளையாரைப் பணிந்து முறையிட்டனர். பிள்ளையார் மதுரை செல்ல உறுதி கொண்டார். அப்பர் பெருமான் பிள்ளையாரிடம் சமணர்களது வஞ்சனைகளை எடுத்துக்கூறி நாளும் கோளும் அப்பொழுது நன்ருயில்லை என்பதையும் தெரிவித்தார், பிள்ளையார் நல்லடியார்களை நாளும் கோளும் நலிவு செய்யா என்று கூறிக் கோளறு பதிகம் பாடி, நாவரசரிடம் விடை பெற்றுப் பாண்டி நாட்டை வந்தடைந்தார்.

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் ஞானசம்பந்தரை வரவேற்றுத் திருவடிகளில் விழுந்து வணங்கி அவர் ஆசி பெற்றனர். பின்னர் பிள்ளையார் ஆலவாய்ப் பெருமானைத் தரிசித்து ஒரு திருமடத்தில் அடியார்களுடன் எழுந்தருளியிருந்தார்.

அன்றிரவு சமணர்கள் அரசனேடு சூழ்ந்து முடிவில் ஞானசம்பந்தர் தங்கியிருந்த திருமடத்தில் தீயிட்டனர். இதனையறிந்த சுவாமிகள், ''பொய்யராம் அமணர் கொளுவும் சுடர் பையவே சென்று பாண்டியர்க்காக'' எனப் பாடினர். திருமடத்தில் வைத்த தீ வெப்பு நோயாக மாறிப் பாண்டியனைச் சென்று பற்றியது,

வெப்பு நோயால் வெந்து நொந்த பாண்டியன் சமணர்களது மருந்துகளால் முன்னையினும் நோய் மிகுதலையுணர்ந்து, அரசியாரும் அமைச்சரும் வேண்டிக் கொண்ட-தற்கு இணங்கி ஞானசம்பந்தரை அழைத்து வரச் சொன்னன். ஆளுடைய பிள்ளையார் அரண்மனைக்கு எழுந்தருளி அரசனது முடியின் பக்கமாக ஒரு பீடத்தில் அமர்ந்தார். மங்கையர்க்கரசியார் சமணர்களால் சுவாமிகளுக்கு ஏதேனும் ஊறு நேருமோ என்று அஞ்சி

மருண்டு நிற்க, அதனைக் குறிப்பாலுணர்ந்த பிள்ளையார் 'மானினேர்விழி மாதராய்' என்னும் திருப்பதிகத்தை ஓதி, ஆலவாய் அரன் நிற்பதால் தாம் எளியர் அல்லர் என்பதை உணர்த்தினர்.

பின்னர் பாண்டியன், ''எனக்குற்ற வெப்புநோயை ஒழித்து நீங்கள் தேறிய தெய்வத் தன்மையை நிலைநாட்டுவீர்களாக'' என்றான். சமணர்கள் நோயை நீக்க முயன்று தோல்வி கண்டனர். பிள்ளையார் ஆலவாய் அரனை நினைந்து திருநீற்றுப் பதிகம் பாடித் தமது திருக்-கரத்தால் திருநீறு பூச வெப்புநோய் முற்றிலும் தீர்ந்தது. பிறகு சமணர்கள் சுவாமிகளோடு கனல்வாதமும் புனல் வாதமும் நிகழ்த்தி இறுதியில் தோற்றொழிந்தனர்.

பரசமய கோளரியாகிய பிள்ளையார் பாண்டியனுக்குத் திருநீறு வழங்கினர்; மன்னவனைப் பின்பற்றி மக்களனைவரும் நீறணிந்தனர். பாண்டி நாடு திருநீற்றின் ஒளியால் விளக்கமுற்றது.

ஞான சம்பந்தர் பாண்டி நாட்டுப் பதிகள் பலவற்றையும் தரிசித்துவிட்டுத் திரும்பினர். சோழநாட்டுத் தலங்களையும் நடுநாட்டுத் தலங்களையும் தரிசித்துக்கொண்டு தொண்டை நாட்டையடைந்தார். திருவோத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கினர். திருமயிலாப் பூரில் தமக்கென்றிருந்து பாம்பு கடித்திறந்த பூம்பாவையின் எலும்பைக்கொண்டு திருப் பதிகம் பாடி உருப்பெற்றெழச் செய்தார்.

திருஞான சம்பந்தர் அங்கிருந்து புறப்பட்டுச் சீகாழியை அடைந்தார். பெற்றோரும் உற்றோரும் அவரைத் திருமணத்திற்கு இசையவேண்டினர். பிள்ளையாரும் ஒருவாறு இசைந் தார். திருநல்லூர்ப் பெருமணத்தில் வாழும் நம்பாண்டார் நம்பி என்பாரின் திருமகளை மணம் பேசி முடித்தனர். அவ்வூரிலேயே திருமணச்சடங்குகள் நடந்தன. சுவாமிகள் மண மகள் கையைப்பற்றிக்கொண்டு இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே என்று எண்ணிச் சுற்றம் சூழத் திருக்கோயிலையடைந்து முத்தி விண்ணப்பமாக, ''கல்லூர்ப் பெருமணம்'' என்ற திருப்பதிகம் பாடினர். அப்பொழுது திருக்கோயிலே ஒரு சோதியாகத் தோன்றியது. பிள்ளையார் கைபிடித்த பாவையுடனும் அடியார் கூட்டத்துடனும் அப்பெருஞ்சோதியை மும்முறை வலம் வந்து ''காதலாகிக் கசிந்து'' என்னும் திருப்பதிகம்பாடி அனைவரையும் அச் சோதியுள் புகுமாறு கூறித் தாமும் காதலியைக் கைப்பற்றிக்கொண்டு அச்சோதியிற் கலந் தருளினர். திருஞானசம்பந்தர் சிவசோதியுள் புகுந்த நாள் வைகாசி மூலமாகும்.

★

ஆலய விசேடங்கள்.

1. ஐங்கரனாலயம் — திருவலஞ்சுழி
2. குமரனாலயம் — திருவேரகம்
3. சண்டேசுரனாலயம் — சேய்ஞலூர்
4. விடையினாலயம் — திருவாவடுதுறை
5. வடுகனாலயம் — சீர்காழி
6. சபாபதி ஆலயம் — சிதம்பரம்
7. தியாகேசர் ஆலயம் — திருவாரூர்

திருநாவுக்கரசு நாயனுர்

"இடையருப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும் உழவாரத்திண்
படையருத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையருப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையருச் செவ்வாயும் திருவேடப்
பொலிவழகும் துதித்து வாழ்வாம்!"

தெய்வம் மணக்கும் திருமுனைப்பாடி நாட்டில் சிவம்பெருக்கும் ஊர் திருவாமூர் அவ்வூரில் வேளாண் மரபில் புகழனுர் மாதினியார் இருவரும் மிக்க மனையறம் புரிந்து உளரானுர். மாதினியார் மணி வயிற்றில் 'திலகவதியார் என்ற திருமகளார் பிறந்தார். ஆண்டு சில அகன்றபின் அலகில் கலைத்துறை தழைப்ப, அருந்தவத்தோர் நெறிவாழ அவதாரம் செய்தார் மருணீக்கியார். பெற்றேர் உரிய நாளில் கலை பயிலச் செய்தனர்' முந்தை முறைமையிற் பயின்று தேர்ந்தார் மைந்தனுர்.

திலகவதியார் மணப் பருவம் எய்தினுர். அவ்வேளையில், ஆண்மையும் அடலும் அரன் பால் அன்பும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற கலிப்பகையார் புகழனுர் பால் மகட் கொள்ள வேண்டி மேலோர் சிலரை அனுப்பினுர். கலிப்பகையாரின் பண்புகளையறிந்து பெற்றேரும் மணம் நேர்ந்தார்.

வதுவைவினை முடிப்பதற்குள், வடபுலத்து மன்னர் படையெடுத்து வந்தவராக, அரசன் கலிப்பகையாரைச் சேனைத் தலைவராக்கிப் படைகளுடன் வடபுலம் நோக்கி டுத்தனன். நெடு நாட்கள் நிறை வெம்போர் நடந்தது. இவ்வாறு கலிப்பகையார் போரில் ஈடுபட்டிருக்குங் காலத்தில்' புகழனுர் விண்ணுலகடைந்தார். மாதினியாரும் சுற்றமுடன் மக்களையும் துகளாவே நீத்துக் கற்பு நெறி தவருமல் கணவனுருடன் சென்ருர். திலகவதியாரும் மருணீக்கியாரும் பெருந்துயரில் அழுந்தினர். இந்நிலையில், கலிப்பகையாரும் போர்க்களத்தில் உயிர் கொடுத்துப் புகழ் கொண்டார். இச்செய்தியைத் திலகவதியார் கேட்டார். "எந்தையும் எம் அன்னையும் அவர்க்கு எனைக்கொடுக்க இசைந்தார்கள். அந்த முறையால் அவர்க்கே நான் உரியவள். ஆதலினுல் இந்தவுயிரை அவர் உயிரோடு இசைவிப்பேன்." என்று துணிந்தார். மருணீக்கியார் தமக்கையாரின் அடியிணைமேல்விழுந்து புலம்பினுர். "அன்னையும் தந்தையும் அகன்றபின்னர் தங்களை வணங்கப் பெறுதலினுல் யான் உயிர் தரித்தேன். என்னை இனிக் கைவிட்டுப் பிரிவீராயின் தங்களுக்கு முன் நான் உயிர் நீப்பேன்" என்று உறுதியாக உரைத்தார்.

தம்பியின் சொற் கேட்டுத் திலகவதியார் உருகினர். ''தம்பியார் உளராக வேண்டும் என்ற தனிப்பெருங் கருணையினல் தம்முடிவை மாற்றிக்கொண்டார். அம்பொன் மணிநூல் தாங்காது. அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி மாதவம் புரிந்து திலகவதியார் இருந்தார்.

மருணீக்கியார் மனத்துயர் நீங்கினர். பல அறப்பணிகளை மேற்கொண்டார். வந்தோர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தார். விருந்தளித்தார்; நில்லா உலகியல்புகண்டு அறத்துறந்தார்; சமயங்களின் நன்னெறியினைத்தெரிந்துணர எண்ணினர். சிவபெருமான் அருள் செய்யாமையால் சமண சமயத்தைச் சார்ந்திட நினைந்தார்; பாடலிபுத்திரம் போந்து சமணரின் பள்ளியைச் சார்ந்து அம்மத நூல்களைப் பயின்று வல்லவரானர். அது கண்டு மகிழ்ந்த சமணரும் 'தருமசேனர்' என்னும் பெயர் கொடுத்து அவரைப் பாராட்டினர்.

மனையிலிருந்து மாதவம் புரிந்த திலகவதியார் தம்பி புறச்சமயம் சார்ந்ததைக் கேட்டுப் பெருந்துயர் அடைந்தார். திருவதிகை வீரட்டானம் அடைந்து சிவ சின்னம் தாங்கித் திருவலகிடுதல் திருமெழுக்கிடுதல் மாலை தொடுத்தல் முதலான திருப்பணிகளைச் செய்து வந்தார். அதிகைப் பெருமானைத் தொழுது, ''என்னை ஆண்டருளுனீராகில் அடியேன் பின் வந்தவனைப் பரசமயக்குழி நின்றும் எடுத்தாள வேண்டும்'' என்று பலமுறையும் விண்ணப்பம் செய்தார். பெருமான் அம்மையார் கனவிடையே தோன்றி, ''உன் மனக்கவலை ஒழிக; அவனைச் சூலை நோய் தந்து ஆட்கொள்வோம்'' என்று அருளிமறைந்தனன், அவ்வண்ணமே சூலைநோய் தரும சேனர் வயிற்றைப் பற்றி வருத்தலுற்றது.

தருமசேனர் நோயின் கடுமை தாங்காது தளர்ந்து மயங்கினர். சமணர் பீலி கொண்டு தடவினர்; இன்னபிற செய்தும் நோய் மிகுந்ததே ஒழியக் குறையவில்லை. இறுதியில் சமணர் அனைவரும் கைவிட்டு அகன்றனர்.

தருமசேனருக்குத் தம் தமக்கையாரின் நினைவு வந்தது. ஓர் நள்ளரவில் பணியாளன் ஒருவனைத் துணைக்கொண்டு திருவதிகையையடைந்து திலகவதியாரின் திருவடிகளில் வீழ்ந்து, ''யான் உய்ந்து கரையேறும் நெறியைக் காட்டியருள வேண்டும்'' என வேண்டினர். திலகவதியார் திருவைந்தெழுத்தோதித் திருவெண்ணீறு அளித்தனர். பெருவாழ்வு வந்ததென மகிழ்ந்து மருணீக்கியாரும் வாங்கித் தரித்துக்கொண்டு தமக்கையாரின் பின் தாமும் புறப் பட்டார். அம்மையாருடன் திருப்பள்ளியெழுச்சி வேளையில் திருக்கோயிலினுட் சென்று வழி பட்டார். திருவருளால் தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு உண்டாயிற்று. ''கூற்றாயினவாறு விலக்ககிலீர்'' என்னும் திருப்பதிகத்தை அருளிச் செய்தார். திருப்பதிகம் பாடும் போதே சூலை நோய் நீங்கியது, திருவருள் இன்பத்தில் மூழ்கித் திளைத்தார், அவ்வேளையில் ''நாவுக்கரசு'' என்று உலகு ஏழினும் நின்னமம் நயப்புற மன்னுக'' என்று வானிலே இறைவன் திருவாக்கு எழுந்தது.

இவ்வாறு மருணீக்கியார் திருநாவுக்கரசராகத் திருமேனியிலே சிவ சின்னங்கள் தாங்கிக் கைத்தலத்தில் உழவாரப் படை ஏந்தித் திருத்தொண்டு செய்து கொண்டிருந்தார்.

இச்செய்தியறிந்த சமணர்கள் பொருமை கொண்டனர். பல்லவ அரசனிடம். ''நமது சமயப் பழிப்பும் தெய்வ நிந்தனையும் செய்தார்'' என்று சொன்னுர்கள். அரசன் இட்ட ஆணைப்படி அமைச்சர்களும் படைத் தலைவர்களும் திருவதிகைக்கு வந்து நாவுக்கரசரை அழைத்தனர்' சுவாமிகள் ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்று தொடங்கும் திருத் தாண்டகத்தைப்பாடி உடன் செல்ல மறுத்தார். பின்பு அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி உடன் சென்றுர்.

மன்னன் விதித்தபடியே அடிகள் நீற்றறையில் அடைக்கப்பட்டார். வெய்ய அந்நீற்றறை சுவாமிகளுக்கு இளவேனிற் காலத்து மாலை நேரம்போல இன்பமாக இருந்தது. பின்பு சமணர்கள் நஞ்சு கலந்த பாற்சோற்றை அவருக்கு ஊட்ட, ''நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு'' என்று சொல்லி அதனை உண்டு ஊறு அடையாமல் விளங்கினர். அடுத்து, சினமிக்க மதயானையைத் திருநாவுக்கரசர்பேரில் ஏவினர்சமணர். அடிகள் ''அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை'' என்று நெஞ்சுறுதியோடு பாடி நின்றுர். வந்த மதயானை அவரை வலம் வந்து வணங்கியது.

பின்பு சமணர்கள் திருநாவுக்கரசரைக் கல்லொடு பிணைத்துக் கடலில் பாய்ச்சினர். இருவினைக் கயிறுகளால் மும்மலக் கல்லில் கட்டிப் பிறவிப் பெருங்கடலில் போடப் பட்ட உயிர்களைக் கரையேற்ற வல்ல திருவைந்தெழுத்தின் பெருமையால் கல் தெப்பமாகமாறி மிதந்தது. திருப்பாதிரிப் புலியூருக்கு அருகில் கரையேறினர். அடியார் கூட்டத்தோடு சென்று திருப்பாதிரிப் புலியூர்ப் பெருமானைப் பாடிப் பரவினர்.

ஆளுடைய அரசரது பெருமையை உணர்ந்த பல்லவ மன்னன் அவரை வந்தடைந்து பணிந்தான். சமணத்தை விட்டுச் சைவனுக மாறினன்.

திருநாவுக்கரசர் தலயாத்திரையை மேற்கொண்டார். திருப் பெண்ணுகடத்தில் எழுந்தருளியுள்ள பெருமானைப் பணிந்து, ''புன்னெறியாகிய சமண் சமயத் தொடக்குண்ட இவ்வுடம்புடன் யான் உயிர்வாழத் தரியேன். இவ்வுடல் தூய்மைபெற உனது இலச்சினையைப் பொறித்தருள வேண்டும்'' என்று திருவடிக்கு விண்ணப்பம் செய்தார். திருவருளால் ஒரு சிவபூதம் தோன்றி அவருடைய தோள்களில் சூல, இடப இலச்சினைகளைப் பொறித்தது.

நாவுக்கரசர், ஞானசம்பந்தரின் பெருமைகளை அடியார் சொல்லக் கேட்டு அவரைக் காணும் ஆர்வத்தினுல் சீகாழிக்கு வந்தார். ஞானசம்பந்தரும் அவரை எதிர்கொண்டு வர வேற்க, சுவாமிகள் பிள்ளையாரது பாதங்களில் பணிந்தனர். சிறிய பெருந்தகையாரும் சுவாமி களின் கைகளைப் பற்றிக்கொண்டு 'அப்பரே' என அழைக்க, நாவுக்கரசரும் 'அடியேன்' என்றுர். சைவநெறி பெற்ற புண்ணியக் கண்களாகிய இவ்விருவரும் பின்பு திருக்கோயிலுக் குச் சென்று வழிபட்டனர்.

ஒருமுறை திருஞான சம்பந்தப் பிள்ளையாருடன் அடியார்களுடனும் சுவாமிகள் திருவீழி மிழலையில் வந்து தங்கினர். அந்நாளில் மழையின்மையால் பஞ்சம் உண்டாயிற்று. வீழி நாதர் நாடோறும் படிக்காசுகள் வைத்து இருவர் திருமடங்களிலும் சிவனடியார்களுக்குத் திருவமுது அளித்துவருமாறு செய்தார்.

பின்னர் ஆளுடைய அரசுகளும் பிள்ளையாரும் திருமறைக் காட்டுக்கு வந்தனர். அங்கு வேதங்கள் அடைத்த கதவைத் திருநாவுக்கரசர் திறக்கப் பாடினர். ஒன்பது திருப்பாடல்களைப் பாடியும் கதவு திறக்கப்பெறவில்லை. பத்தாவது திருப்பாடலில் 'இரக்கம் ஒன்றிலீர் எம் பெருமானீரே' என்று பாடியதும் கதவுகள் திறந்தன. இருவரும் உட்சென்று வழிபட்டனர். பின்பு அப்பர் வேண்டப் பிள்ளையார் பாடித் திருக்கதவம் அடைக்குமாறு செய்தார்.

திருமறைக்காட்டில் தங்கியிருந்த காலை, பாண்டிமா தேவியாரின் விருப்பத்தை ஏற்று பாண்டிய நாட்டில் சமணக் காரிருளைப் போக்கிச் சைவப் பேரொளியைப் பரப்பத் திருஞானசம்பந்தர் புறப்பட்டுச் சென்றார். திருநாவுக்கரசரும் திருமறைக்காட்டினின்று புறப்பட்டுப் பழையாறை வடதளி என்னும் தலத்தை அடைந்தார். அங்குள்ள திருக்கோயிலைச் சமணர்கள் மறைத்து வைத்தமை கண்டு மனம் வருந்தி ''வண்ணம் கண்டுநான் உம்மை வணங்கியன்றிப் போகேன்', என்று உண்ணு நோன்பு இருந்தார். சிவபெருமான் அரசனது கனவில் தோன்றிஉணர்த்த, அரசனும் சமணர் மறைத்திருந்த சிவலிங்கத்தை வெளிப்படுத்தி நாவுக்கரசரை வணங்கினன்.

சுவாமிகள் திருக்கயிலாயம் சென்று வணங்கும் விருப்பத்துடன் புறப்பட்டார். யாரும் செல்ல முடியாத வழியில் தனியே இரவு பகலாய் உணவு உறக்கமின்றி நடந்து சென்றார். பின், மார்பினல் உந்திச் சென்றார். உடலுறுப்புக்கள் முழுதும் தேய்ந்து ஓரிடத்தில் செயலற்றுத் தங்கினர்.

பெருமான் அந்த இடத்தில் ஓர் தடாகத்தை உண்டாக்கித் தாம் ஒரு முனிவர் வேடம் கொண்டு சுவாமிகள் முன் தோன்றி அவரது செலவைத் தடுத்தார். சுவாமிகள், ''ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால், மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்' என்று மறுத்தார். அந்நிலையில் பெருமான் உருக்கரந்து மறைந்து, ''இந்தப் பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் காண்க'' என்று கூற, அவ்வாறே அப்பரும் அந்தப் பொய்கையில் மூழ்கித் திருவையாற்றுத் திருக்குளத்தில் எழுந்து ஐயாறப்பனைப் பணிந்தார். அங்குள்ள உயிர்கள் அனைத்தும் சக்தியும் சிவமுமாகத் தோன்றக் கண்டு 'மாதர்ப்பிறைக் கண்ணியானை' என்னும் பதிகத்தைப் பாடித்தொழுதார்.

பல பதிகளையும் தரிசித்துக்கொண்டு திருநாவுக்கரசர் திருப்புகலூரை அடைந்தார். அவரது பற்றற்ற நிலையை உலகிற்குக் காட்டத் திருவுளம் கொண்டான் இறைவன். அவர் உழவாரப் பணி செய்யும் இடங்களில் பொன்னும் நவமணிகளும் பொலிந்திலங்கும்படி செய்தான். அடிகளோ அவற்றைக் கல்லோடும் மண்ணோடும் சேர்த்து வாரி எறிந்தார். வான அரம்பையர் தோன்றி ஆடல் பாடல்களால் அவரை மயக்க முற்பட்டனர். ஒன்றாலும் மனம் திரியாமல் நின்ற நாவுக்கரசர் பெருமான் ஒரு சித்திரைத் திங்கள் சதய நன்னாளில் அண்ணலார் சேவடிக்கீழ் இன்புற்று அமர்ந்தருளினர்.

★

பஞ்ச நாதம்

1. விஸ்வனாதம் 2. சோமநாதம் 3. ஜகந்நாதம் 4. இராமநாதம். 5. வைத்தியநாதம்

சுந்தரமூர்த்தி நாயனர்

''தேசம் உய்யத் திருத் தொண்டத்
தொகை முன் பணித்த திருவாளன்
வாச மலர் மென் கழல் வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்.''

திருக்கயிலை மலையில் சிவபெருமானுக்கு நெருங்கிய தொண்டராக விளங்கியவர் ஆலால சுந்தரர். அவர் ஒரு நாள் மலர் கொய்துவரத் திருநந்தவனத்தை அடைந்தார். அங்கே உமையம்மையாரின் சேடியர் இருவர் அநிந்திதை, கமலினி என்போர், அம்மையார் சூடுதற்குரிய மலர்களைக் கொய்து கொண்டிருந்தனர், ஆலால சுந்தரர் அம்மாதர் பேரழகில் ஈடுபட்டு நின்பர். அவர்களும் அவர் மேல் விருப்பம் கொண்டனர். மையலில் தாழ்ந்த தன் மனத்தை மீளச் செய்தார் சுந்தரர். பின், பறித்த மலர்களுடன் பெருமான் திருமுன்பை அடைந்தார்.

உயிர்க்குயிராய்த் தழைத்து நின்று தண்ணருள் புரிகின்ற சிவபெருமான் ஆலால சுந்தரர் மனக்குறிப்பை உணர்ந்தார். ''நீ மாதர் மேல் மனம் போக்கினய், ஆதலால் தென் புவி மீது பிறந்து அம் மெல்லியலாருடன் காதலின்பம் துய்த்து எம்மை வந்து அடைவாய்'' என்று பணித்தார், அதனைக் கேட்ட சுந்தரர் மனங்கலங்கினர். பெருமானை வணங்கி, ''ஐயனே, உமது திருவடிகளைப் பிரிந்து மானிடப் பிறவியெடுத்து மயங்கி நிற்கும் வேளையில் அடியேனைத் தாங்கள் தடுத்தாட்கொள்ளவேண்டும்'' என வேண்டினர், இறைவனும் அதற்கு இசைந்தார்.

அவ்வண்ணமே, ஆலால சுந்தரர் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூரில், ஆதி சைவர் மரபில் சடையனர் என்பவருக்கு அவர் தம் மனைவியார் இசைஞானியார் பால் அருமை மகவாக அவதரித்தார். அக்குழந்தைக்கு 'நம்பி ஆரூரர்' என்று பெயரிட்டு வளர்த்தனர். அக்குழந்தை தெருவில் விளையாடிக் கொண்டிருந்தபோது அந்நாட்டு அரசர் நரசிங்க முனையரையர் அவ்வழியே வந்தார். குழந்தையின் முகப் பொலிவையும் அறிவொளியையும் நோக்கி மகிழ்ந்தார்: பெற்றோரிடம் அனுமதி பெற்று நம்பி ஆரூரரைத் தம் குமரனைப் போலவே வளர்த்து வரலானர்.

நம்பி ஆரூரர் அரசிளங் குமரராய் வளர்ந்து திருமணப் பருவத்தை அடைந்தார். சடையனர் தம் புதல்வருக்குத் திருமணம் செய்ய எண்ணினர். புத்தூர் சடங்கவி சிவாசாரியார் மகளை மணம் பேசி முடித்தார். குறித்த மணநாளில் நப்பி ஆரூரர் மணக்கோலம் பூண்டு திருவெண்ணீறு அணிந்து குதிரைமீது இவர்ந்து புத்தூரை அடைந்தார்; திருமணப் பந்தரில் அமர்ந்தார்.

சிவபெருமான் அவரைத் தடுத்தாட்கொள்ள விரும்பி ஒரு கிழ வேதியராகித் திருமணப் பந்தருள் நுழைந்தார். நம்பி ஆரூரரை நோக்கி, ''உனக்கும் எனக்கும் ஒரு வழக்கு உளது. அதனை முடித்த பின்னரே உன் மணவினையைத் தொடங்க வேண்டும்'' என்றார். நம்பி ஆரூரர் அதற்கு இசைந்தார்.

முதியவர் 'இந்த நாவலூரன் எனக்கு அடிமை' என்றார், இதைக் கேட்ட நம்பியாரூரர் ,இவ்வேதியர் சொல் நன்று' என்று இகழ்ச்சியாக நகைத்தார். கிழவர், ''அக்காலத்தில் உன் பாட்டன் எழுதிக்கொடுத்த அடிமை ஓலை இதோ என்னிடம் இருக்கிறது. நீ நகைப்பது எதற்கு?'' என்று கேட்டார். நம்பி ஆரூரர் ''அந்தணர் வேறோர் அந்தணருக்கு அடிமையாதல் யாண்டும் இல்லை, இன்றுதான் புதிதாக இவ்வாறு நீர் சொல்லக் கேட்டோம். நீ பித்தனோ?'' என்றார். அது கேட்ட கிழவர், ''யான் பித்தன் ஆகுக, அன்றிப் பேயனே ஆகுக. நீ எவ்வளவு இகழ்ந்துரைத்தாலும் அதற்கு நான் நாணமடையேன் நீ என்னை அறியவில்லை, வித்தகம் பேச வேண்டாம், எனக்குப் பணி செய்ய வேண்டும்''. என்றார்,

நம்பி ஆரூரர் அடிமை ஓலையைக் காட்டுமாறு வேதியரிடம் வேண்டினர். அவர் காட்ட மறுத்தார், ஆரூரர் அவ்வோலையைப் பறிக்கச் சென்றார். வேதியர் விரைந்து ஓடலானர். ஆரூரர் வெகுண்டு பின்தொடர்ந்து ஓலையைப் பற்றிக் கிழித்தெறிந்தார், முதியவர் 'இது முறையோ' என்று ஓலமிட்டார்.

அங்கு நின்றவர்கள் அவ்விருவரையும் விலக்கினர். முதியவர் 'உமது ஊர் எது'' என வினவினர். நான் இருப்பது திருவெண்ணெய்நல்லூர், என் கையிலுள்ள ஓலையை வலியக் கிழித்தமை ஒன்றே, இவன் எனக்கு அடிமை என்பதை உறுதிப்படுத்தும்'' என்று கிழவர் மொழிந்தார். இம்முதியவர் வழக்காடுவதில் கைதேர்ந்தவர் போலும் என்று மனதிற்குள் எண்ணிக்கொண்ட ஆரூரர் அவரை நோக்கி, ''உமது ஊராகிய திருவெண்ணெய் நல்லூருக்கே சென்று வழக்கைப் பேசித் தீர்த்துக்கொள்வோம், வாரும்'' என்றார். கிழவர் தண்டு ஊன்றி முன்னே செல்லானர். நம்பி ஆரூரரும் சுற்றத்தாரும் அவரைப் பின் தொடர்ந்தனர்.

திருவெண்ணெய் நல்லூரை யடைந்து அங்குள்ள அவையோரிடம் இருவரும் தத்தம் வழக்கை உரைத்தனர். வேதியர், ''முன்கிழிக்கப்பட்டதுபடி ஓலை; மூல ஓலைஇதோஇருக்கிறது'' என்றுசொல்லிஅதனை எடுத்துக்காண்பித்தார். அவ்வோலையில் நம்பியாரூரருடைய பாட்டனர் தானும் தனது வழிமுறையில் வரும் மரபினரும் வெண்ணெய் நல்லூரில் வாழும் பித்தருக்கு அடித்தொண்டு செய்ய இசைவதாக எழுதிக் கையெழுத்திட்டிருந்தார். ஓலையின் எழுத்தும் பாட்டனரது வேறு கையெழுத்தும் ஒன்ருக இருந்தன். எனவே அவையோர் ஆரூரர் மறையவருக்கு அடிமை செய்தலே முறை என முடிவு கூறினர். ஆரூரரும் தீர்ப்பை ஏற்றுக் கொண்டார். பின் அவையத்தார் கிழவரைப் பார்த்து, 'இங்கு உமது வீடு எங்கு உளது?' எனக் கேட்டனர். மறையவர் ஆரூரரையும் அவையோரையும் அழைத்துக் கொண்டு சென்றார்; திருஅருட்டுறை என்னும் ஆலயத்தினுள் புகுந்து மறைந்தார். யாவரும் திகைத்து நின்றனர். நம்பியாரூரர் உள்ளே தொடர்ந்து சென்று கூவி அழைத்தார். சிவபெருமான் உமையம்மை யாருடன் இடப வாகனத்தில் காட்சியளித்து உண்மையை உணர்த்தியருளினர்.

நாவலூரர் தாய்ப் பசுவின் கனைப்பைக் கேட்ட கன்று போல் கதறி, உடல் சிலிர்க்கக் கைகளைத் தலைமேற் குவித்து வணங்கித் துதித்தார். பெருமான் ஆரூரரை நோக்கி,

''மற்று நீ வன்மை பேசி வன் தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு'' கென்றார் தூமறை பாடும் வாயார்.

ஆரூரர் பெருமானை நோக்கி, ''கோதிலா அமுதே, உன்னை என் சொல்லிப் பாடுகேன்?'' என உருகி நின்றார். ''அன்பனே, முன்பு என்னைப் பித்தன் என்று கூறினாய். ஆதலால் என் பெயர் பித்தன் என்றே பாடுவாய்'' என இறைவன் அருளினார். நம்பி ஆரூரர் 'பித்தா பிறைசூடி' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிப் பரவினார். அன்று முதல் பாடும் பணியே பணியாகக் கொண்டு, தலந்தோறும் சென்று செந்தமிழ்ப் பாமாலைகளால் இறைவனைப் போற்றி வரலானார்.

நாவலூரர் தில்லையில் பெருமான் இயற்றும் திருக்கூத்தைக் காண விழைந்து புறப்பட்டார். வழியில் திருவதிகை என்னும் தலத்தின் எல்லையைச் சார்ந்தார். அது, திருநாவுக்கரசு சுவாமிகள் வாழ்ந்து உழவாரப் பணி செய்த இடம். அத்தலத்தை மிதிக்க அஞ்சிப் புறத்தேயுள்ள ஒரு மடத்தில் அடியாரோடும் தங்கினார். வீரட்டானேசுவரரைச் சிந்தித்த வண்ணம் துயின்றார். அப்பொழுது இறைவன் கிழவேதியராய் வந்து சுந்தரர் தலையின் மேல் தம் திருவடி படும்படியாகப் படுத்துறங்குவார் போலிருந்தார். சுந்தரர் கண் விழித்து, ''மறையவனே, உன் அடி என் முடி மீது பட்டது'' என்றார். அதற்குக் கிழவர், ''என் முதுமை காரணமாக அறியாது செய்துவிட்டேன்'' என்று கூறினார். ஆரூரர் வேறொரு பக்கமாகத் தலைவைத்துப் படுத்துக்கொண்டார். முதியவர் மீண்டும் காலை நீட்டிச் சுந்தரர் தலையில் படுமாறு செய்தார். சுந்தரர் சினந்து, ''இங்கென்னைப் பலகாலும் மிதிக்கும் நீர் யார்?'' என்று கேட்டார். உடனே பெருமான், ''என்னை அறிந்திலையோ?'' என்று கூறி மறைந்தார். தம் முடிமேல் திருவடி வைத்தருளியவர் சிவபெருமானே என்று தெளிந்த சுந்தரர், அவரது எளிவந்த தன்மையை நினைந்து உருகினார்.

மறுநாள் அங்கிருந்து புறப்பட்டுப் பல தலங்களையும் வணங்கிக் கொண்டு தில்லைப் பதியை வந்தடைந்தார். அடியார் எதிர் கொள்ளத் திருக் கோயிலுக்குள் சென்று, அருட் கூத்தாடும் ஐயனைக் கண்டு வீழ்ந்து வணங்கினார். பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார். அப்பொழுது 'நீ திருவாரூருக்கு வருக' என்ற ஒலி கேட்டது. அவ்வாணையை ஏற்றுத் திருவாரூரை நோக்கிப் புறப்பட்டார் சுந்தரர்.

திருவாரூர் மக்கள் நகரை அலங்கரித்து மங்கல முழக்கங்களுடன் வன்தொண்டரை எதிர் கொண்டழைத்தனர். நம்பியாரூரர் உள்ளக் களிப்போடு 'எந்தையிருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்' என்னும் சந்த இசைப் பதிகங்கள் பாடித் திருக்கோயிலை நண்ணினார்; பூங்கோயிற் பெருமானை வணங்கி இன்புற்றார். அப்பொழுது, ''நம்பியாரூரனே, தோழமையாக உனக்கு நம்மைத் தந்தோம் எம்மால் தடுத்தாட்கொள்ளப்

பெற்ற அன்று நீ புனைந்த திருமணக் கோலத்தையே எப்பொழுதும் கொண்டு இனிது வாழ்வாயாக'' என்ற அருள்மொழி வானிடை எழுந்தது. அன்று முதல் சுந்தரர் 'தம்பிரான் தோழர்' என அழைக்கப் பெற்றார்.

திருக் கயிலையில் ஆலாலசுந்தரர் உள்ளம் கவர்ந்த மகளிர் இருவருள் ஒருவரான கமலினி என்பார் திருவாரூரில் உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்து பரவையார் என்ற பெயரோடு வளர்ந்து மங்கைப் பருவத்தை உற்றார். நாள்தோறும் தன் தோழியருடன் சென்று பூங்கோயிற் பெருமானை வழிபட்டு வந்தார். ஒரு நாள் நம்பியாரூரர் இறைவனை வழிபட்டு மீளும்போது எதிரே வந்துகொண்டிருந்த பரவையாரைத் திருவருள் கூட்டக் கண்டார்; எல்லையற்ற காதல் கொண்டார். பரவையாரும் நம்பியாரூரர் பால் மனம் ஈடுபட்டு, அவரையே நினைந்து நின்றார். திருவாரூர்ப் பெருமான் அடியார்கள் கனவில் தோன்றி இருவருக்கும் மணம் செய்து வைக்குமாறு கூறினார். மறுநாட் காலையில் அடியார்கள் நம்பியாரூரரையும பரவையாரையும் திருமணத்தில் கூட்டி மகிழ்ந்தனர்.

ஒருநாள் நம்பியாரூரர் பூங்கோயிலை அடைந்து தேவாசிரிய மண்டபத்தில் சிவனடியார் பலர் கூடியிருக்கக்கண்டார். ''இவர்களுக்கெல்லாம் நான் அடியவன் ஆகும் நாள் எந்நாளோ?'' என்று எண்ணிக் கொண்டே உள்ளே புகுந்தார். தியாகராசப் பெருமான் அவர் முன் காட்சி வழங்கி 'அடியார் பெருமையைப் பாடுக' என்று பணித்தார். நம்பியாரூரர், 'அவ்வாறு பாடும் திறத்தை எளியேனுக்குத் தந்தருள வேண்டும்' என வேண்டினார். சிவபெருமான் 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தார். வன்தொண்டரும் அவ்வடியை முதலாகக் கொண்டு திருத்தொண்டத் தொகையைப் பாடியருளினார்.

குண்டையூரில் வாழ்ந்த வேளாண்குடி முதல்வர் ஒருவர் சுந்தரரிடம் பேரன்பு கொண்டு அவரது இல்லத்திற்குச் செந்நெல், பருப்பு முதலிய பொருள்களைத் தவறாமல் அனுப்பி வரும் திருத்தொண்டு செய்து வந்தார். ஒருசமயம் மழையின்மையால் நெல் அனுப்ப இயலவில்லை. குண்டையூர்க் கிழார் மனம் வருந்தி உணவு கொள்ளாது உறங்கலானார். அவர் கனவில் சிவபெருமான் தோன்றி, 'ஆரூரனுக்காக உனக்கு நெல் தந்தோம்' என்று அருளி மறைந்தார்! குண்டையூர்க் கிழார் எழுந்து பார்த்தார். என்ன வியப்பு! எங்கும் நெல்மலை! இச்செய்தியை ஆரூரரிடம் அறிவித்தார். நம்பியாரூரர் இந்நெல் முழுவதையும் திருவாரூர்க்குக் கொண்டு செல்ல ஆள் தரவேண்டும் என்று திருக்கோளிலி என்னும் தலத்திலுள்ள பெருமானை வேண்டினார். அன்றிரவே சிவபெருமானுடைய பூதகணங்கள் அந்நெற்குவையைப் பரவையார் மாளிகையில் பரப்பின.

ஒருசமயம் நம்பியாரூர் திருநாட்டியத்தான் குடிக்கு எழுந்தருளினார். அங்கு வாழும் கோட்புலிநாயனார் சுந்தரரை வரவேற்றுத் தம் மாளிகைக்கு அழைத்துச் சென்று உபசரித்தார்; தமது அருமைப் புதல்வியரான சிங்கடி, வனப்பகை என்ற இருவரையும் அழைத்து வணங்கச் செய்து ''இவர்களை அடிமைகளாக ஏற்றுக் கருணை புரிய வேண்டும்' என வேண்டினார். அதுகேட்ட பரவைக் கொழுநனார் 'இவர்கள் என் குழந்தைகள்' எனச்சொல்லி மகிழ்ந்தார்.

திருவாரூரில் பங்குனி உத்திரத் திருவிழா நெருங்கியது. பரவையார் செலவிற்குப் பொன்வேண்டித் திருப்புகலூரை அடைந்தார். புகலூர்ப் பெருமானைப் பாடி கோயில் வாயிலில் சற்று இளைப்பாறினர். திருவருளால் அவருக்குத் தூக்கம் வந்தது. திருப்பணிக்காக அங்கே வைத்திருந்த செங்கற்களைத் தலைக்கு அணையாகப் பரப்பி அதன்மேல் தன் மேலாடையை விரித்துத் தூங்கினர். கண்விழித்து எழுந்தபோது செங்கற்களெல்லாம் பொன் கற்களாக மாறியிருப்பதைக் கண்டு வியந்தார்; திருவருளைத் துதித்தார்.

ஓரமயம் இறைவனே மறையவராக வந்து வழிகாட்டத் திருமுது குன்றை அடைந்தார். திருமுது குன்றத்துப் பெருமானிடம் பெற்ற பன்னிராயிரம் பொன்னைச் சுந்தரர் மணிமுத் தாற்றில் புகவிட்டார். பின் திருவாரூர் சென்று பரவையார் காணத் திருக்குளத்தில் மூழ்கி அவற்றை எடுத்தார்.

உமையம்மையாரின் சேடியருள் பிறிதொருவராகிய அநிந்திதையார் ஞாயிறு என்னும் ஊரில் வேளாளர் குடியில் பிறந்தார். சங்கிலியார் என்னும் பெயருடன் வளர்ந்து மணப் பருவமுற்றுர். அவரது விருப்பப்படியே பெற்றோர் திருவொற்றியூரில் கன்னிமாடம் அமைத்து அதிலே இருக்கச் செய்தனர். சங்கிலியார் காலந் தவறுது பெருமானுக்கு மாலை தொடுத்துச் சார்த்தும் திருத்தொண்டு செய்து வந்தார்.

ஒருநாள் நம்பியாரூரர் மின்னெனத் தோன்றி மறைந்த சங்கிலியாரைக் கண்டார்; காதலாகிக் கனிந்தார்; சங்கிலியைத் தந்து துயர்தீர்த்தருளுமாறு ஒற்றியூர்ப் பெருமானை இறைஞ்சினர். சிவபெருமான் வன்தொண்டரிடம் சென்று ''நீ சங்கிலியாரிடம் 'நான் உன்னைப் பிரியேன்' என்று சபதம் செய்துதர வேண்டும்'' என்றுர். தலங்கள் பலவற்றையும் தரிசிக்க இவ்வுறுதி மொழி தடையாகும் என்று எண்ணிய சுந்தரர், ''நான் சபதம் செய்து கொடுக்கச் சந்நிதிக்கு வரும்பொழுது தேவரீர் அவ்விடத்தை விட்டு மகிழ மரத்தின் கீழ் இருக்க வேண்டும்'' என வேண்டினர். இறைவனும் அதற்கு உடன்பட்டார். பின் சங்கிலியார் கனவில் தோன்றி, ''சுந்தரன் நம் திருமுன்பு சபதம் செய்ய வரும்போது நீ அதற்கு உடன்படாமல் மகிழ மரத்தின் கீழ் சபதம் செய்யும்படி சொல்'' என்று கூறி மறைந்தார்.

மறுநாள் வைகறைப் போதில் சங்கிலியார் தன் தோழியருடன் திருக்கோயிலை யடைந்தார். இறைவனது திருவிளையாடலை யறியாத சுந்தரர் சங்கிலியாரை சந்நிதிக்கு வருமாறு அழைத்தார். தோழிமார்கள், ''மகிழ மரத்தின் கீழ் சபதம் செய்து தந்தால் போதும்' என்றனர். வேறு வழியின்றிச் சுந்தரர் மகிழமரத்தை மும்முறை வலம்வந்து 'உன்னைப்பிரியேன்' என்று உறுதிமொழியளித்தார். பின்னர் இறைவன் கட்டளைப்படி அடியார்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைத்தனர்.

ஒருநாள் சுந்தரருக்குத் திருவாரூரில் நிகழும் வசந்த விழாவும், தியாகேசப் பெருமானது உலாக் காட்சியும் நினைவில் தோன்றின. உடனே அங்கு செல்ல எழுந்தார். ஒற்றியூர்ப் பெருமானை வணங்கி ஊர் எல்லையைக் கடந்தவுடன் அவர்க்குக் கண்ணொளி மறைந்தது, எனினும் உறுதியோடு நடந்தார். உடன் வருவோர் வழிகாட்டத் திருவெண்பாக்கம் என்னும் ஊரை அடைந்தார். கோயிலுக்குச் சென்று, ''பெருமானே, நீ கோயிலில் இருக்கின்றுயோ?''

என்று கேட்டார். இறைவன் ஓர் ஊன்றுக்கோலைத் தந்து 'உளோம்; போகீர்' என்றார் பின்னர்க் காஞ்சீபுரம் அடைந்து பெருமானைப் பணிய, இறைவன் அவர்க்கு இடது கண் பார்வையை வழங்கினார்.

திருவாரூரை அடைந்த சுந்தரர் பெருமானைக் கண்ணாரக் காண ஒற்றைக் கண் போதாமையால் மற்றைக் கண்ணையும் தந்தருளுமாறு உருக்கமாகப் பாடினார். ஆரூர்ப் பெருமான் அருள் சுரந்து வலக்கண்ணை அளித்தருளினார். அம்மட்டோ! சுந்தரருக்காகப் பரவையாரின் ஊடல் தீர்க்க வேண்டித் திருவாரூர் வீதியில் ஒருமுறைக்கு இருமுறை தூது நடந்து தனது எளிவந்த கருணையைப் புலப்படுத்தினார்.

அதனால் ஏயர்கோன் கலிக்காமர் என்ற அடியவர் சுந்தரர்பால் கோபம் கொண்டார். அவருக்கு இறைவன் சூலைநோயைத் தந்து சுந்தரரை அதை நீக்குமாறு அனுப்பி வைத்தார். அவர் வருகையைக் கேள்விப்பட்டு வாளால் வயிற்றைக் கீறி ஏயர்கோன் உயிர் துறந்தார். சுந்தரரும் உடன் மாள முயன்றபோது இறைவன் கலிக்காமரை உயிர்பித்து நட்புக் கொள்ளச் செய்தார்.

மலைநாட்டை ஆண்ட சேரமான் பெருமாள் நாயனார் நம்பியாரூரைக் காணும் ஆர்வத்துடன் புறப்பட்டுத் திருவாரூரை அடைந்தார். சுந்தரர் அவரை எதிர்கொண்டு வரவேற்றார். இருவரும் நட்புப்பூண்டு திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டனர். நம்பியாரூரர் சேரமானுடன் பாண்டி நாட்டுத் தலங்களையெல்லாம் தரிசித்தார்.

பல நாட்களுக்குப் பின் சேரமான் பெருமாள் சுந்தரரைத் தம்மோடு சேர நாட்டுக்கு அழைத்தார். அழைப்புக்கு இணங்கி உடன் புறப்பட்டார் சுந்தரர். இருவரும் பல தலங்களை வணங்கிக் கொண்டு சேர நாடடைந்தனர். சேரமான் தம் தோழரைச் சிறந்த முறையில் உபசரித்து மகிழ்வித்தார்.

சுந்தரருக்குத் திருவாரூர்ப் பெருமானுடைய நினைவு வந்தது. வரவர மீதூர்ந்து பொங்கியது. 'ஆரூரானை மறக்கலும் ஆமே' என்று பாடிச் சேரமானிடம் விடை பெற்றுப் புறப்பட்டார். சேரமான் பெரும் பொருள்களை ஆட்கள் மீது ஏற்றி ஆரூரரைத் தழுவி விடை கொடுத்தார், வன்தொண்டர் திருமுருகன்பூண்டி வழியாகச் செல்லும்போது சிவபெருமான் கட்டளைப்படி சிவபூதங்கள் வேடர்களாக வந்து பொருளையொல்லாம் கவர்ந்து சென்றன. ஆரூரர் திருமுருகன் பூண்டிக் கோவிலுக்குச் சென்று பெருமானை நோக்கி 'எற்றுக்கு இங்கிருந்தீர்' என வினவிப் பதிகம் பாடிய அளவில், பறித்த பொருளெல்லாம் திருமுன்றிலில் வந்து குவிந்தன. அவற்றை ஏவலர் எடுத்து வரச் சுந்தரர் திருவாரூரை அடைந்தார்.


வன்தொண்டர் மீட்டும் ஒருமுறை சேரர்பிரானைக் காண மலைநாட்டுக்குப் புறப்பட்டார். கொங்கு நாட்டிலுள்ள திருப்புக்கொளியூரில் ஒரு வீதி வழியாகச் செல்லும்போது ஒரு வீட்டில் மங்கல ஒலியும் அதன் எதிர் வீட்டில் அழுகையொலியும் கேட்டு அவற்றின் காரணத்தை வினவினார். அருகிலிருந்த மறையோர்' ''ஐந்து வயதுள்ள சிறுவர் இருவர் மடுவில் குளித்தனர். ஒருவனை முதலை விழுங்கிவிட்டது. பிழைத்த பிள்ளைக்கு இவ்வீட்டில்

உபநயனம் நிகழ்கிறது. அவ்வீட்டில் இறந்த மகனை எண்ணி அழுகிறார்கள்'' என்று உரைத்தனர். சுந்தரர் வேதனை யடைந்தார். மடுவின் கரையை யடைந்து முதலை விழுங்கிய பிள்ளையை உயிருடன் தரும்படி இறைவனை வேண்டிப் பதிகம் பாடினார். முதலை கரைக்கு வந்து தான் விழுங்கிய புதல்வனை உமிழ்ந்தது. பெற்றோர் பிள்ளையைத் தழுவி மகிழ்ந்தனர்; சுந்தரரை வீழ்ந்து வணங்கினர். சுந்தரர் அப்பிள்ளைக்கு உபநயனம் செய்வித்து மலைநாட்டை அடைந்தார்.

சேரமான் பெருமாள் சுந்தரரை வரவேற்று அரியணையில் இருத்தி வணங்கினார். இருவரும் மலைநாட்டுத் தலங்களை வழிபட்டனர்.

ஒருநாள் சுந்தரர் திருவஞ்சைக் களத்து இறைவனை வழிபட்டு 'இவ்வுலக வாழ்க்கையை நீத்து நின்திருவடிகளைச் சேர்தல் வேண்டும்' என விண்ணப்பித்தார். சிவபெருமான் கட்டளைப் படி தேவர்கள் வெள்ளை யானையுடன் வந்து சுந்தரரை வலம் வந்து அவரை ஏற்றிச் சென்றனர், சேரமானும் தம் தோழர் செயலையறிந்து அருகிலிருந்த ஒரு குதிரையின் மேலேறி அதன் செவியில் திருவைந்தெழுத்தை ஓத, குதிரை வானிலே பாய்ந்து வெள்ளை யானையை வலம் வந்து அதன் முன்னே சென்றது. கயிலை அண்ணலார் சுந்தரரையும் அவர் தோழரையும் சிவகணங்களுக்குத் தலைவராக இருக்கும்படி திருவருள் புரிந்தார். சுந்தரர் முத்திபெற்றது ஆடிச் சுவாதி நாள்.

★



சுந்தரர் வெள்ளை யானையின் மீது சேரமானுடன் கயிலை ஏகுதல்.

மாணிக்கவாசகர்

''எழுதரு மறைகள் தேரு இறைவனை எல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுத கை தலைமீ தேறத் துளும்பு கண்ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க் கடிமை செய்வாம்.''

''அறிவாற் சிவனே'' என்று போற்றப் பெறும் பெருநிலைக்கு உரியவர் மாணிக்கவாசக சுவாமிகள். இவருக்குத் திருவாதவூரர், பெருந்துறைப் பிள்ளை, ஆளுடைய அடிகள் என்ற வேறு பெயர்களும் உண்டு. எனினும் மாணிக்கவாசகர் என்ற பெயரே பெருவழக்குப் பெற்று மக்களிடையே நிலவியும் உலவியும் வருகிறது. சிவபெருமான் குருமணியாக எழுந்தருளி வந்து இவரை ஆட்கொண்டபோது மாணிக்கவாசகர் என்ற பெயரை இவருக்குச் சூட்டியருளினர் என்பதைப் பரஞ்சோதி முனிவர் வாக்கால் அறிகிறோம்.

''பழுதிலாத சொல் மணியினைப் பத்திசெய்து அன்பு
முழுதும் ஆகிய வடத்தினுல் முறை தொடுத்து அலங்கல்
அழுது சாத்தும் மெய் அன்பருக்கு அகமகிழ்ந்து ஐயர்
வழுவிலாத பேர் மாணிக்க வாசகன் என்றார்.

(திருவிளையாடற் புராணம்)

மாணிக்கவாசகர் தமிழ் வளம் கொழிக்கும் தண் பாண்டி நாட்டில், மதுரையம்பதிக்கு அண்மையில் உள்ள திருவாதவூரில், ஆதிசைவ அந்தணர் மரபில் அவதரித்தார். இவர் பதினாறு வயது நிரம்புமுன்பே தென்மொழி, வட மொழிகளில் நிரம்பிய புலமையும், சைவ நூற் பயிற்சியும் சமய உணர்வும் கைவரப்பெற்று மேம்பட்டு விளங்கினர். இவரது அருமை பெருமைகளைக் கேள்வியுற்ற அரிமர்த்தன பாண்டியன் இவரை ஆதரித்து அழைத்தான்; முதலமைச்சராக்கினன்; ''தென்னவன் பிரமராயன்'' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்புக்கள் பல செய்தான். திருவாதவூரர் அமைச்சுக் கட்டிலில் அமர்ந்து ஆணை செலுத்தி வந்தாராயினும், தாமரையிலைத் துளிபோல உலக வாழ்வில் ஒட்டாமல் இருந்து பேரின்பப் பெருவாழ்வை நாடி நின்றார். உண்மையை உணர்த்தித் தன்னை உய்விக்க வல்ல ஞானசிரியன் எப்பொழுது வருவான் என்று உள்ளூற ஏங்கிக்கொண்டேயிருந்தார்.

சோழநாட்டுக் கடற்கரையில் நல்ல குதிரைகள் வந்திறங்கியுள்ளன என்று கேள்வியுற்றான் பாண்டியன்; அமைச்சர் வாதவூரரை அழைத்தான்; தக்க விலைகொடுத்து அவற்றை வாங்கி வருமாறு பணித்தான்; பெரும்பொருளைக் கொடுத்துப் பரிவாரங்களுடன் அனுப்பினன். புறப்படுமுன் திருவாதவூரர் ஆலயத்தை அடைந்து மீனாட்சி அம்மையை வணங்கினர்.

''என்ருர் வரைமயிலே! ஏழ்பொழில் வாழ் கோகிலமே!
ஒன்ருய வேதா கமவாவி ஓதிமமே!
பொன்ருத எண் எண் கலைபேசும் பூவையே!
மன்ருர் கடம்பவன மானே! அடிபோற்றி!''

என்று அம்மையைப் போற்றி, சொக்கலிங்கப்பெருமான் திருமுன்னர் பணிந்தெழுந்து விடைபெற்றுப் புறப்பட்டார்.

குதிரைகள் இறங்கியுள்ள துறையை நோக்கிச் செல்லும் வழியில் திருப்பெருந் துறையை அடைந்தார். ஆங்கே, ஒரு சோலையில் ''அர அர'' என்ற ஒலி கேட்டது. அச்சிவநாம முழக்கம் திருவாதவூரரின் சிந்தையை உருக்கியது. சிவிகையினின்றும் இறங்கிச் சோலையின் உள்ளே சென்ருர். அங்கு, ஒரு குருந்த மரத்தின் நிழலில் அடியவர் சூழக் குருமூர்த்தியின் கோலத்தோடு எழுந்தருளியிருந்த சிவபெருமானைக் கண்டார்; மெய் மறந்தார்; கண்ணீர் வார குருபரனின் திருவடிகளில் விழுந்து வணங்கினுர்; தம்மை ஆட்கொண்டருளவேண்டும் என விண்ணப்பம் செய்து நின்ருர். அவரது ஞான முதிர்ச்சியைக்கண்டு கருணைகூர்ந்த பெருமான் அவர்க்கு உண்மைப்பொருளை உபதேசித்தருளினுர்; அவரது தலைமேல் தம் திருவடிகளை வைத்தருளினுர். அந்நிலையில் திருவாதவூரர் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கித்திளைத்தார். தம் உடல், பொருள். ஆவி மூன்றையும் பெருமான் திருவடிகளில் ஒப்படைத்தார். தொழுத கையினராய், அழுத கண்ணினராய், தழுதழுத்த அன்போடு தம்மை இழந்து மாணிக்கம் போன்று மாசற்றுத் திகழும் வாசகங்களை அமைத்துப் பாடினுர். அதற்கு மகிழ்ந்த குருநாதர் அவர்க்கு ''மாணிக்கவாசகர்'' என்ற சிறப்புப் பெயரைச் சூட்டிச் ''சின்னுள் இங்கே இருப்பாயாக'' என்று கூறி அடியாரோடு மறைந்தருளினுர்.

படைகள் புடைசூழப் பட்டும் பணியும் அணிந்து அரசரைப்போல வந்த திருவாதவூரர், இப்பொழுது மெய்த்துறவியாகி, வெண்ணீறணிந்து விழிநீர் பெருக்கி, இரவும் பகலும் எம்பெருமான் நினைவாகவேயிருந்தார்; தாம் கொண்டுவந்த பொருளையெல்லாம் திருக் கோயிற் பணிகளுக்கே செலவிட்டார். வாதவூரர் செயலை அறிந்தான் பாண்டியன்; வருத்தமும் சினமும் கொண்டான்; உடனே குதிரையுடன் வருமாறு ஓலை அனுப்பினுன். இதுவரை உலக நடைமுறையை மறந்திருந்த திருவாதவூரர் பாண்டியனது திருமுகத்தைக் கண்டதும் உலகஞானம் வரப்பெற்ருர்; பெருந்துறைப்பெருமானிடம் சென்று யாதுசெய்வது என இறைஞ்சினுர். இறைவன், ''ஆவணி மூலத்தன்று நாமே குதிரைகளுடன் வருவோம்; நீ முன்னே செல்க, சென்று, இந்த விலையுயர்ந்த மாணிக்கக் கல்லை அரசனுக்குக் கையுறையாகக் கொடு'' என்று கூறி, ஒரு மாணிக்கக் கல்லைத் தந்தருளினுர்.

மணிவாசகர் மறுநாள் புறப்பட்டுச் சென்ருர். முன்போல அமைச்சர் கோலத்துடன் மதுரையை அடைந்தார்; பாண்டியனைக் கண்டார் மாணிக்கமணியை மன்னனுக்குக் கொடுத்து மகிழ்வித்தார். பாண்டியன் வாதவூரர்க்கு வரிசைகள் பல வழங்கிச் சிறப்புச் செய்தான்.

ஆவணி மூலத்திற்கு முன்னுள் வரை குதிரைகள் வந்து சேரவில்லை. பாண்டியன், ஒற்றர் மூலம் வாதவூரர் சொல்லியவை யெல்லாம் பொய்யென்று அறிந்தான்; சீற்றங் கொண்டான்; வாதவூரரை ஒறுத்து அவர் கொண்டு சென்ற பொருளையெல்லாம் திரும்பப் பெறுமாறு ஏவலருக்கு ஆணையிட்டான். அவ்வாறே ஏவலாளர் அமைச்சர் பெருந்தகையை அருஞ் சிறையிற் பூட்டிக் கொடுமையாக வருத்தினர். வாதவூரர் தம்மை ஆண்டு கொண்டருளிய பெருமானை நினைந்து, ''ஐயனே, உனக்கு ஆளான நான் இவ்வாறு அல்லலுறுவது தகுமோ? இந்த நிலையில் என்னைக் கைவிடுதல் உனக்கு அழகோ?'' என்று கூறி வருந்தி நின்முர்.

திருவாதவூரர் துயர் தீர்க்கத் திருவுளங் கொண்ட சிவபெருமான் நரிகளை யெல்லாம் பரிகளாக்கி, தேவர்களைக் குதிரைப் பாகர்களாக்கித் தாமும் குதிரைச் சேவகன் கோலம் கொண்டு, வேதமாகிய குதிரையில் அமர்ந்து மதுரைக்கு வந்தார். கடலில் அலைகள் அடுக்கடுக்காக வருவது போலக் குதிரைகள் அணியணியாக வருவதைக் கண்ட பாண்டியன் அகமகிழ்ந்தான்; வாதவூரரை விடுவித்து அவரைப் போற்றினுன். குதிரைச் சேவகராக வந்த சிவபெருமான் அரசன் முன்னிலையில் குதிரைகளை நடத்திக் காட்டினுர். முடிவில் குதிரைகளை யெல்லாம் கயிறு மாற்றிக்கொடுத்து ஒப்படைத்து விடைபெற்று மறைந்தார்.

அன்றிரவே குதிரைகளெல்லாம் நரிகளாக மாறி ஊளையிட்டன; பழைய குதிரை களையும் கொன்று, ஊறு பல செய்து ஓடி மறைந்தன. குதிரைக் காவலர் அரசனிடம் சென்று நடந்ததைக் கூறினர். பாண்டியன் கடுஞ்சினம் கொண்டான்; நடுப் பகலில் கொடு வெயிலில் நிறுத்தி முதுகிலும் தலையிலும் கற்களை யேற்றித் துன்புறுத்துமாறு செய்தான். வாதவூரர் திருவருளை நினைந்து திருவாசகப் பாடல்களைப் பாடிப் பரவினுர்.

அன்பர் படும் துயர் கண்டு தரியாத சிவபெருமான் வைகையாற்றில் பெருவெள்ளம் வரச்செய்தார். வெள்ளம் மதுரை நகர்க்குள் புகுந்து அழிவு செய்யத் தொடங்கியது. பாண்டியன் கட்டளைப்படி நகர மக்கள் அனைவரும் அணைபோடும் முயற்சியில் ஈடுபட்டனர். அந்நகரின் ஒருபால், வந்தி என்னும் நரை மூதாட்டி பிட்டு விற்று வாழ்க்கை நடத்தி வந்தாள். அவள் தனக்கு அளந்து விட்ட பங்கை அடைக்க ஆள் இல்லாமல் வருந்தி, ஆலவாய் அண்ணலின் திரு முன்பு சென்று தன் நிலையை எடுத்துரைத்து முறையிட்டாள்.

சிவபெருமான் ஒரு கூலியாளின் கோலத்தோடு வந்தியின் எதிரே வந்து பிட்டுக்கு மண் சுமக்க இசைந்தார், அவள் அன்போடு கொடுத்த பிட்டை வாங்கி யுண்டு வைகைக் கரையை யடைந்தார், அங்கே மண்ணை வெட்டுவதும், வெட்டிய இடத்திலே கொட்டுவதும், சும்மாட்டை அவிழ்த்துத் தட்டுவதும், அதனைத் தலையிலே படியக் கட்டுவதுமாக இவ்வாறு, பொழுது போக்கிவிட்டு, வேலை செய்து களைத்தவர் போல ஒரு மரத்தடியில் உறங்கலானுர்.

பார்வையிட வந்த பாண்டியன் வந்தியின் பங்கு அடைபடாமையைக் கண்டு வெகுண்டான்; கூலியாளாக வந்த பெருமானைப் பிரம்பால் அடித்தான். அடித்த அளவில் இறைவன் கரையை அடைத்து மறைந்தருளினுர். அந்த அடி அரசன் முதுகிலும்பட்டது. எல்லா உயிர்கள் மேலும் பட்டது. திருவாதவூரர் இறைவனது பெருங்கருணையை நினைந்து,

"நீறுபடும் பொன்மேனி நின்மலனே ! நெடுங்கங்கை
ஆறுபடும் சடைமுடியாய் !அடியவர்கட்கு எளியானே !
மாறுபடும் புரம் எரித்தாய் ! மாறுபடும் போது உடலில்
கூறுபடும் சிவஞானக் கொம்பின் உளம் குழையாதோ ?"

என்று உளம் வருந்தினர். பாண்டியன் வாதவூரரை வணங்கிப் பிழை பொறுக்குமாறு வேண்டினன்.

மாணிக்கவாசகர் தம் அமைச்சர் பதவியைத் துறந்து தவவேடம் தாங்கினர்; தல யாத்திரையை மேற்கொண்டு புறப்பட்டார். திருப்பெருந்துறை, உத்தரகோசமங்கை முதலாகிய தலங்களை வணங்கித் தில்லையை அடைந்தார். அங்கே தில்லைவாழ் அந்தணர்களோடு வாதிட வந்த புத்த குருவை வாதில்வென்றார். ஊமைப்பெண்ணைப் பேசவைத்தார்.

திருவாசகத்தைத் தமிழ்நாட்டில் பரவச் செய்யவேண்டும் எனத் திருவுளங்கொண்ட தில்லைப்பெருமான் ஒருநாள் அந்தண வடிவங்கொண்டு மணிவாசகரிடம் சென்று திருவாசகத்தை முழுமையும் ஓதச்செய்து எழுதிக்கொண்டார். பின் திருக்கோவையாரையும் பாடச்செய்து அதனையும் சுவடியில் எழுதிக்கொண்டு இறுதியில் "திருவாதவூரன் சொல்லத் திருச்சிற்றம் பலமுடையான் எழுதியது" எனக் கைச்சாத்திட்டுக் கனக சபையில் வைத்து விட்டு மறைந்தார். தில்லைவாழ் அந்தணர்கள் சுவடியைக்கண்டு வியந்தனர்; மணிவாசகரிடம் சென்று பாடல்களின் பொருளை விளக்கியருள வேண்டுமென வேண்டினர். சுவாமிகள் அம்பலவாணனைச் சுட்டிக்காட்டி இவரே இத்திருவாசகத்திற்குப் பொருளாவார்' என்று கூறிப் பெருமானது திருவடிகளில் நீக்கமறக் கலந்தருளினர். ஆனி மகத்தன்று முத்தியடைந்தார்.

★★

அட்ட வீரட்டானங்கள்.

1. திருக்கண்டியூர் — பிரமன்சிரம் கொய்தது
2. திருக்கோவலூர் — அந்தகாசுரனை சங்கரித்தது
3. திரு அதிகை — திரிபுரத்தை எரித்தது
4. திருப்பறியலூர் — தக்கன் சிரம் கொய்தது
5. திருவிற்குடி — சலந்தராசுரனை சங்கரித்தது
6. வழுவூர் — யானையை உரித்தது
7. திருக்குறுக்கை — காமனை எரித்தது
8. திருக்கடவூர் — யமனை உதைத்தது

திருமுறைகளின் பெருமை

திரு. G. கலியாணம் M. A.,

சைவ சமயம் மிகப்பழைய சமயம். உலக முழுமைக்கும் பரவியிருந்தது. பழங்காலத்தில் சைவம் சமயம் என்று வழங்கப்படவில்லை. திருநெறி, மெய்ந்நெறி, சிவமாநெறி என்றுற் போல நெறி எனவே வழங்கப்பெற்று வந்தது. சமயம்வேறு, நெறிவேறு; சமயம் நியமிக்கப் பெற்றது. அறிவுகொண்டு நூல், தருக்கம், தத்துவக்கோட்பாடு, வீடு முதலியவைகளை ஆராய்ந்து நிறுவிப் பரவச் செய்தது சமயம். அப்படிச் செய்தவர்கள் சமயக்கணக்கர் அல்லது மதவாதிகள் எனப்படுவர். மணிமேகலையில் 'சமயக்கணக்கர் தன்திறம் கேட்ட காதை' என்பது ஒரு பகுதி. கல்லாடனுர் திருவள்ளுவ மாலையில் ஒரு பாட்டில் 'சமயக் கணக்கர் மதி வழி கூருது உலகியல் கூறிப் பொருள் இது என்ற வள்ளுவன்' என்று கூறி யிருக்கிருர். ஆகவே சிவநெறி முற்காலத்தில் சமயம், மதம் என்ற பெயர்களால் அழைக்கப்படவில்லை.

திருஞானசம்பந்தர் 'திருநெறிய தமிழ்' என்கிருர். மாணிக்கவாசகர், 'முத்தி நெறி யறியாத'' 'நெறியல்லா நெறி தன்னை நெறியாக நினைவேனை' என்று கூறுகிருர். சேக்கிழார் மிகவும் விளக்கமாக,

''உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும்
நிலவு **மெய்ந்நெறி, சிவநெறி,** என்பதும்
பலர் புகழ்தென்னவன் உணரும் பான்மையால்''
''ஓங்கும் பொருட் சமயமுதற் சைவநெறி
தான்பெற்ற புண்ணியக்கண் இரண்டு''
''வேதநெறி தழைத்தோங்கமிகுசைவத்துறைவிளங்க''
''திருநாவுகரசுவளர் திருத்தொண்டின்நெறி''

என்றெல்லாம் அருளிச்செய்கிருர்.

இந்தச்சிவநெறியை விதந்தோதுவன பன்னிரு திருமுறைகளும் பதினுன்கு சாத்திரங் களுமாகும். திருமுறைகளைத் தோத்திரங்கள் என்பர். சாத்திரங்கள் 'அறிவு நூல்கள்; தோத்திரங்கள் அன்பு நூல்கள். இலக்கணமும் இலக்கியமுமாகவும் அமைந்தவை. டாக்டர் பார்னெட் என்பவர் ''பக்திப் பாடல்கள் தமிழ்மொழியிலுள்ள அளவு வேறு எந்த மொழி யிலும் இல்லை'' என்று கூறியிருக்கிருர். காலஞ்சென்ற K. V. கிருஷ்ணசாமி அய்யர் ''முத்தினைப் பவளத்தை மணி தன்னை'' என்பன போன்ற அன்புச்சொற்களால் இறைவனை அழைப்பது தமிழ்மறையில்தான் இருக்கிறது'' என்று அறுதியிட்டு உறுதி கூறுகிருர்.

திருமுறைகளாவன எல்லா மக்களும் ஓதியுணர்ந்து முக்தி பெற்றுய் தற்பொருட்டுச் சீவன்முத்தர் வாயிலாக அவ்வக்காலங்களில் வெளிப்பட்ட சிவவாக்குகளாம்; உயிர்க்குறுதி பயக்கத்தக்க தெய்வத்தன்மை பொருந்திய அருள் நூல்களாம். 'எனதுரை தனதுரையாக''

என்ற சம்பந்தர் திருவாக்கு நோக்கத் தக்கது. நம் வாழ்வை ஒழுங்குபடுத்தும் நிலையில் அமைந்துள்ளதால் திருமுறைகள் எனப்படும். திரு என்றால் கண்டாரால் விரும்பப்படும் தன்மை, திருமகள் எனப்பொருள். இன்பதுன்பம் இரண்டையும் ஒப்பக்கருதும் தன்மை. 'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்' என்பர் சேக்கிழார். 'இதுவே திருநின்றசெம்மை. முறை என்பதற்கு நூல், பழைமை, ஊழ், கூட்டு, கட்டு, குணம், தரம், ஒழுக்கம், ஒழுங்கு, கிராமம், வரிசை, முறைமை, முறையீடு என்று பல பொருள்கள் உண்டு. முறைப்பட வகுக்கப் பெற்றதால் முறை என்று நூலுக்குப் பெயராயிற்று. 'பாடுந்திருமுறை' என்றார் திருமூலர். 'பாலகன்முறை வரைவேன், என்பர் கச்சியப்ப சிவாசாரியார். தொல்காப்பியம் மரபியலில் விதித்தபடி அப்பொருளுக்கு அதுவே பொருள். திருமுறை என்ற சொல்வேறு எதற்கும் பொருந்தாது.

திருஞான சம்பந்தர் அருளிய தேவாரப்பாடல்கள் முதல் சேக்கிழார் பெருமானின் பெரிய புராணம் முடிய பன்னிரு திருமுறைகளாகும். உமாபதி சிவாசாரியார் திருமுறை கண்டபுராணத்தில் பதினோராந்திருமுறை வரை நம்பியாண்டார் நம்பிகள், இராசராச அபயகுலசேகரன் வேண்ட, வகுத்தருளினர் என்று கூறுகிறார் அநபாயன் (இரண்டாங் குலோத்துங்கன்) பெரிய புராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாக்கிச் செப்பேடு செய்வித்தான். நம்பியாண்டார் நம்பிகள் தம்மை ஆதரித்தவன் **ஆதித்தன்** என்ற சோழ மன்னன் என்று திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறுகிறார். ஆதித்தன் என்ற பெயர் உடையவர் இருசோழமன்னர் இருந்தனர். பராந்தகன் தந்தை முதல் ஆதித்தன் (கி. பி. 870 – 907) முதல் இராசராசன் தமையன் இரண்டாம் ஆதித்தன் (ஆதித்தகரிகாலன் – கி.பி. 759 – 69). ஆராய்ச்சியாளர்களில் சிலர் முதல் ஆதித்தன் காலத்தேதான் திருமுறை வகுக்கப்பட்டதென்பர்; வேறு சிலர் இரண்டாம் ஆதித்தன் கலாத்தேதான் என்பர்; முதல் இராசராசன் திருமுறை கண்ட சோழன் அல்ல என்பதும் ஒரு சாரார் கூற்று.

மந்திரங்கள் ஏழு வரம்பிணையுடையனவும் பதினொன்றும் ஆதலால், தேவாரத்திரு முறைகள் ஏழாகவும், கோவை திருவாசகம் எட்டாம் திருமுறையாகவும், திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூலர் திருமந்திரம் பத்தாம் திருமுறை யாகவும், திருமுகப்பாசுரம் முதல் நாற்பது பிரபந்தங்கள் பதினோராந் திருமுறையாகவும் பெரியபுராணம் பன்னிரண்டாம்திருமுறையகவும் சைவத்திருமுறைகளைப் பன்னிரண்டாகப் பிரித்தமைக்குக் காரணம் கூறுவர். இதை உமாபதிசிவனார்

''மந்திரங்களெழுகோடி ஆதலினல் மன்னுமவர்
இந்த வகை திருமுறைகளேழாக எடுத்தமைத்துப்
பந்தமுறுமந்திரங்கள் பதினொன்றும்மாதலினல்
அந்தமு றைநான்கினேடு முறைபதினொன்றாக்கினர்''

என்று கூறியுள்ளார்.

பன்னிரு திருமுறைகளையும் இயற்றிய ஆசிரியர்கள் 27 பேர்கள்: அவர்கள் காலம் இரண்டாம் நூற்றுண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றுண்டு வரை. திருமுகப்பாசுரம் அருளிய திருவாலவாயுடையார் மட்டும் காலம் கடந்தவர். திருமுறைகளின் விவரங்களைக் கீழே காண்க:-

திருமுறை	ஆசிரியர்	பதிகங்கள்	பாடல்கள்
1, 2, 3,	திருஞானசம்பந்தர்	384	4159
4, 5, 6,	திருநாவுக்கரசர்	313	3044
7	சுந்தரர்	100	1026
8	மாணிக்கவாசகர்		
	திருவாசகம்	51-656	1056
	திருக்கோவையார்	400	
9	திருமாளிகைத் தேவர்	4—45	301
	சேந்தனர்	4—47	
	கருவூர்த் தேவர்	10—103	
	பூந்துருத்திநம்பி காடநம்பி	2— 12	
	கண்டராதித்தர்	1— 10	
	வேணுட்டடிகள்	1— 10	
	திருவாலியமுதனர்	4— 42	
	புருடோத்தமநம்பி	2— 22	
	சேதிராயர்	1— 10	
		29 301	
10	திருமூலர்		3050
11	திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம்		1
	காரைக்காலம்மையார் 4 பிரபந்தங்கள்		143
	ஐயடிகள்காடவர்கோன் 1 ,,		24
	சேரமான் பெருமாள் நாயனர்	3 ,,	132
	நக்கீர தேவர்	10 ,,	293
	கல்லாட தேவர்	1 ,,	21
	கபில தேவர்	3 ,,	57
	பரண தேவர்	1 ,,	101
	இளம் பெருமானடிகள்	1 ,,	30
	அதிராவடிகள்	1 ,,	32
	பட்டினத்துப்பிள்ளையார்	5 ,,	192
	நம்பியாண்டார்நம்பிகள்	10 ,,	383
12	சேக்கிழார்		4253
		ஆக	18,289

பன்னிரண்டு திருமுறைகளும் பன்னிரண்டு மந்திரங்களின் நிறைப்பொருளாக அமைந்தவை. ஆதலால் சிவபூசைக்கு ஏற்ற முறையில் நீராடி, திருநீறு அக்கமணியணிந்து நியமமாக இத்துணைப் பாடல்களைப் பாடவேண்டும் என்று வரையறை செய்துகொண்டு நாள்தோறும் ஓதவேண்டும். திருச்சிற்றம்பலம் என்று தொடங்கி, திருச்சிற்றம்பலம் என்று முடிக்கவேண்டும். நாள் ஒன்றுக்கு 50 பாடல்களை ஓதினால் ஒரு ஆண்டில் 18300 பாடல்களும் நிறைவுறும். சைவப் பெரியார் கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் அவர்கள் பன்னிருதிரு முறைகளையும் 12 மாதங்களில் ஓதும் பழக்கமுடையவராக இருந்தார் என்று நாம் கேள்விப் படுகிறோம்.

இவ்வாறு ஓதுவதால் பயன் உண்டா? உண்டு, தேவார ஆசிரியர்கள் நிகழ்த்திய அற்புதங்களே போதிய சான்றாகுமே. பாம்பு கடித்தால் 'சடையாய் எனுமால்' 'ஒன்று கொலாம்' என்பவற்றையும், சுரம் நீங்க—'மந்திரமாவது நீறு' 'அவ்வினைக்கிவ்வினை' என்பவற்றையும், வயிற்றுவலி நீங்க — 'கூற்றாயினவாறு' என்பதையும்' பஞ்சம்தீர 'வாசி தீரவே' என்பதையும், பொன் வேண்டுமானால் - 'தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்' என்பதையும் துன்பத்தை இன்பமாக மாற்றி அனுபவிக்கவேண்டுமானால் - 'மாசில் வீணையும்' என்ற பதிகத்தையும் பாடிப்பயன் பெறலாம். எவர் எதுவேண்டுமானாலும் அதற்குரிய உபாயம் உரைக்கும் பதிகங்கள் திருமுறைகளில் நிறைய இருக்கின்றன. ஓதினால் போதும்: கைம்மேற் பலன் கிடைக்கும். திருப்பெண்ணாகடத்து அச்சுதகளப்பாளர் மகப்பேறு வேண்டி தன் குலகுரு அருணந்தி சிவாசாரியாரிடம் குறையிரந்து நிற்ப அவர் திருமுறைகளில் கயிறு சார்த்திப் பார்க்க, 'பேயடையாப் பிரிவெய்தும்' என்ற திருவெண்காட்டுத் தேவாரம் கிடைக்க அதன்படி முக்குள நீர் ஆடி 'மெய்கண்டார்' என்ற அருந்தவப்புதல்வரைப் பெற்றது நாடறிந்ததொன்று. சேலம் சுப்பிராய பிள்ளையென்பார் கால்முறிந்து மருத்துவர் கைவிட்டும், தேவாரத்தில் கயிறு சார்த்திப்பார்த்து திருபாகறல் தேவாரம் கிடைக்க அத்தலம் சென்று வழிபட்டு கால் கூடப்பெற்றது அண்மையில் நடந்த அற்புத நிகழ்ச்சி. ஆகவே நாம் நாள் தோறும் நியமமாகத் திருமுறைகளை ஓதவேண்டும். ஓதினால் திருவருள் பெறலாம். இதுகாறும் ஒருவாறாக திருமுறைகளின் பெருமையைப்பற்றிக் கூறினோம். இனி, ஒவ்வொரு திருமுறையின் சிறப்பைப்பற்றி ஆராய்வோமாக.

★

சப்த ஸ்தான க்ஷேத்திரங்கள்.

1. திருவையாறு
2. திருப்பழனம்
3. திருச்சோற்றுத்துறை
4. திருவேதிகுடி
5. திருக்கண்டியூர்
6. திருப்பூந்துருத்தி
7. திருநெய்த்தானம்

திருஞான சம்பந்தர் அருளிய முதல் திருமுறை

சைவத்திருமுறைகள் பன்னிரண்டென்று இப்போது வழங்கி வருகிறது. ஆனுல் முற்காலத்தில் மூவர் முதலிகள் அருளிய ஏழு திருமுறைகளையுமே ஆன்ருேர் போற்றினர் என்று தெரிகிறது. சைவ எல்லப்ப நாவலர் போன்ருேர் இக்கருத்துடையவர். மூவர் அருளிய எல்லாவற்றையும் தேவாரம் என்று வழங்கி வருகின்ருேம். அவற்றுள் அப்பர் அருளியனவே தேவாரம் என்றும், திருஞானசம்பந்தர் அருளியவை திருக்கடைக் காப்பு என்றும், நம்பியாரூரர் அருளியவை ''திருப்பாட்டு'' என்றும் வழங்கப்பட்டன. வைராக்கிய தீபம் என்ற நூலின் உரையாசிரியர் மூவர் அருளிச் செயல்களையும் உணர்த்தும்போதெல்லாம் இப்பெயர் வேறுபாட்டினை மேற்கொண்டதைக் காண்கிருேம்.

தேவாரம் என்ற பெயர் சேக்கிழாரின் பெரியபுராணத்திலேனும், அதற்கு முற்பட்ட பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பிகள் இவர்களின் நூல்களிலேனும் காணப்படவில்லை. சேக்கிழார் காலத்துக்குப் பின் நெடுநாள் வரை ''தேவாரம்'' என்ற சொல் கல்வெட்டுக்களில் காணப்படவில்லை. இதற்குப்பதிலாக, திருப்பதியம், திருப்பாட்டு, பெரிய திருப்பாட்டும், திருஞானம் என்ற சொற்களே மிகுதியும் காணப்படுகின்றன. கோயில்களில் திருமுறைகள் ஓதுவதற்கென்று பல்லவ, சோழ, பாண்டிய, விஜயநகர மன்னர்கள் பலநிவந்தங்கள் ஏற்படுத்தினர் என்பதைக் கல்லெழுத்துக்கள் மூலம் காண்கிருேம். மிகப்பழைய கல்வெட்டு மூன்ரும் நந்திவர்மன் (கி.பி.825-850) காலத்தது ''சிவனை முழுதும் மறவாத சிந்தையன்'' என்று நந்திக்கலம்பகமும், ''சிவனது திருஅடையாளம் (திருநீறு) நெற்றியிற் கொண்ட நந்திவர்மன்'' என்று வேலூர்ப்பாளையச் செப்பேடும் இவனைப் போற்றிப் புகழ்கின்றன. இவனே கழற்சிங்கநாயனுர் என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவன் திருவல்லம் கோயிலில் திருப்பதியம் பாடுவார்க்கு நெல் கொடுக்க நிலதானம் செய்தான். கீழ்க்காணும் சோழ மன்னர்களும் திருப்பதியம் விண்ணப்பிக்க நிவந்தங்கள் ஏற்படுத்தினர்.

ஆதித்தன்1	— திருஎறும்பியூர், திருப்பழுவூர்(கி. பி. 873)
பராந்தகன்1	— திருவாவடுதுறை (கி. பி. 910) அல்லூர் (கி, பி. 911)
	— திருத்தவத்துறை (கி. பி. 944)
சுந்தர சோழன்	— திருத்தவத்துறை (கி. பி. 959)
உத்தம சோழன்	— திருநல்லம் (கி. பி. 977) அந்துவநல்லூர் (கி. பி. 984)

இவை எல்லாம் திருமுறைகண்ட சோழன் எனப்படும் முதலாம் இராஜராஜ சோழன் காலத்துக்கு முற்பட்டவை. முதல் இராஜராஜன் தஞ்சைப்பெருவுடையார் திருக்கோவிலில் திருப்பதியம் விண்ணப்பிக்க நாற்பத்தெட்டு பிடாரர் (ஓதுவார்) களுக்கு நிவந்தங்கள் வழங்கினுன். இன்னும் முதல் இராஜாதிராஜன் அல்லூர் வடகுடி மகாதேவர் கோயிலில் 'தேவாரத்துக்கு திருப்பதியம்'' விண்ணப்பிக்க கி.பி. 1066-ல் நிலம்விட்டான். இரண்டாங்

குலோத்துங்கன் (கி. பி. 1133 — 1150) திருவாமாத்தூர்க் கோயிலில் திருப்பதியம் விண்ணப்பித்த குருடர்களுக்கு நிலம் வழங்கினன். விஜயநகர சாளுவ இம்மடி நரசிம்மன் என்ற வேந்தன் தேவிகாபுரத்தில் திருப்பாட்டு ஓதுவார்க்கு நிவந்தம் அளித்தான். விஜயநகரப்பேரரசர் கிருஷ்ணதேவராயர் திருவண்ணு மலைக்கோயிலில் பெரிய திருப்பாட்டு ஓதுவாரை நியமித்தான். திருவாலீசுவரம் கோயிலில் திருஞானம் விண்ணப்பம் செய்ய ஜடாவர்மன் வீரபாண்டியன் நிலம் அளித்தான். இதேபோன்று சுந்தரபாண்டியன் காலத்தில் திருஞானம் ஓத நிவந்தங்கள் ஏற்படுத்தியதைத் திருநெல்வேலி, ஆற்றூர் கல்வெட்டுக்கள் மூலமாக அறிகிறோம்.

தேவாரம் என்பதற்குப் பல பொருள் கூறுகின்றனர். தே+வாரம்=கடவுளுக்கு அன்பு. தே+ஆரம்=கடவுகளுக்கு மாலை. முதல் இராசாதிராசன் கல்வெட்டில் 'தேவாரத்துக்குத் திருப்பதியம்' என்பதைக் காண, கடவுகளுக்கு அன்பைச் செலுத்த திருப்பதிகம் பாடினர் என்ற பொருள்பட நிற்கின்றது. 'வாரமாகித் திருவடிக்குப் பணி செய்தொண்டர் பெறுவதென்னே' என்ற சுந்தரர் திருவாக்கு இறைவன்பால் மெய்யடியார் வைத்த பேரன்பையே குறிக்கின்றது. இத்துடன் தேவாரம் என்ற பெயர் ஆராய்ச்சியை நிறுத்தி ஆளுடைய பிள்ளையார் அருளிச்செய்த முதல் திருமுறையில் கூறப்பெற்றுள்ள சில செம்பொருள்களைக் காணலாம்.

முதல் திருமுறையில் 136 திருப்பதிகங்களும், 1469 திருப்பாடல்களும் உள்ளன. இவை எட்டுப் பண்களாக வகுக்கப்பட்டுள்ளன. அவை யாவன :-

நட்டபாடை-22, தக்கராகம்-24, பழந்தக்க ராகம்-16, தக்கேசி-13 குறிஞ்சி-28. வியாழக் குறிஞ்சி-25, மேகஇராகக்குறிஞ்சி-7, யாழ்மூரி-1 ஆக 136 திருப்பதிகங்கள். பாடப்பெற்ற திருத்தலங்கள் 90. 'தோடுடைய செவியன்' என்ற இறைவனைச் சுட்டிக் காட்டும் திருப்பாடலில் தொடங்கி, திருத்தருமபுரத் திருப்பதிகத்தின் கடைசிப்பாடலில் 'இறைவன் பிணைதுணை கழல்கள் பேணுதலுரியார் இன்னெடு நன்னுல கெய்துவரெய்திய போகமும் உறுவர்கள் இடர்பிணி துயரணைவ்விலரே' என்று பயன்கூறி முதல் திருமுறையை முடித்தருளுகிறார். ''தம்பாடல் பரமர் பால் செல்லுமுறை பெறுவதற்குத் திருச் செவியைச் சிறப்பித்து, தோடுடைய செவியன் என்னும் மெய்ம்மை மொழித் திருப்பதிகம்'' பாடியருளினர் என்று சேக்கிழார் கூறியிருப்பது நமக்குப் பேருவகை தருகின்றது. முதற்றிருப்பாசுரத்தில் இறைவன் இயற்றும் ஐந்தொழில்களையும் காணலாம். ''ஏர்பரந்தஇனவெள்வளை சோர என துள்ளங்கவர்கள்வன்'' என்ற அகத்துறைப்பாடல் அழகையும் இப்பதிகத்தில் கண்டுகளிக்கலாம். தோடு என்பதில் தகரம் தகராலயத்தையும், ஓகாரம் ஓங்காரத்தையும் குறிக்கின்றன. பன்னிரண்டாம் திருமுறைக் கடைசிப் பாடலில் ''உலகெலாம்'' என்று 'ம்' மில் முடிவது பிரணவத்துள் பன்னிருதிருமுறைகளும் அடங்கியுள்ளன என்பதைக் குறிப்பது போன்று அமைந்துள்ளது. இன்னும் முதற்பதிக்கத்தின் திருக்கடைக் காப்புச் செய்யுளில் ''சம்பந்தன் உரை செய்த திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே'' என்று அருளியிருப்பது பன்னிருதிரு முறைகளையும் திருநெறிய தமிழ் என்று கூறும் வழக்கத்துக்கு சிறந்த ஆதாரம். இவ்விதழுக்கும் '**திருநெறிய தமிழ்**' என்று பெயரிட்டிருப்பது மிகவும் பொருத்தமானதே.

இயற்கையழகு, மக்கள் வாழ்க்கை, இறைவன் திருக்கோலம், புராணக் கதைகள், வரலாற்றுக் குறிப்புக்கள், பௌத்த சமணரைப் பற்றிய செய்திகள் எல்லாம் இத்திரு முறையின்கண்ணே (மற்ற இரு திருமுறைகளிலும் கூட) இடம் பெற்றுள்ளன. ஊன்றி நோக்குவார்க்குப் பல சைவசித்தாந்தக் கருத்துக்கள் பொதிந்து கிடப்பது புலனுகும். திரு எழு கூற்றிருக்கை என்ற பதிகம் சிவஞான போதசாரம் என்றே சொல்லிவிடலாம். திருவீழிமிழலைப் பதிகத்தில்

''ஈறுய்முதல் ஒன்றுய் இருபெண் ஆண்குண மூன்றுய்
மாறுமறை நான்காய் வருபூதம் அவைஐந்தாய்
ஆறுர்சுவை ஏழோசை யொடெட்டுத்திசை தானுய்
வேறுய்உடன் ஆனுன்இடம் வீழிம்மிழலையே''

என்று கூறியிருப்பதில் கடவுளின் சொரூப தடத்தலக்கணங்கள். உலகெலாமாகி வேறுய் உடனுய் நிற்கும்நிலை, ஒன்றுய்ப் பலவாய் அந்தமாய் ஆதியாய் நிற்றல், வியாபக வியாப்பியம் முதலிய பல நுண்பொருள்கள் புதைந்து கிடக்கின்றன. இப்பாடலில் ஒன்று முதல் எட்டுவரை சொல்லப்பட்டிருக்கும் எண் அலங்காரத்துடன் இறைவனின் அட்ட மூர்த்தத்தைக் குறிப்பது போன்று அமைந்திருப்பது கண்டின்புறற்பாலது. ''சிறையாரும் மடக்கிளியே'' என்று தொடங்கும் பாடலில் அகத்துறை அழகுசிறந்து விளங்குகிறது. மந்தி கடுவன்னெடுங்கூடி வணங்கும் வலிதாயம்'' என்றும், ''வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழை என்றஞ்சிச் சில மந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே', என்றும், இன்னும் இவை போன்ற பலவும் இயற்கையழகைக் குறிப்பன. ''சூடகம் முன்கை மடந்தைமார்கள் துணைவரொடுந் தொழுதேத்தி வாழ் ஆடகமாடம் நெருங்குகூடல் ஆலவா யின்கண் அமர்ந்தவாறே'' என்று கூறியிருப்பதை இன்றும் மதுரைக்கோயிலில் காண்கிறோம். ஒவ்வொரு பதிகத்தின் 8-ஆம்பாடலில் இராவணனின் ஆணவத்தையடக்கியதையும் 9-ஆம் பாடலில் மால் அயன் இவர்கள் இறைவன் அடிமுடி தேடியதையும், 10-ஆம் பாடலில் சமண பௌத்தர்களின் அக்கால நிலையினையும், 11-ம் பாடலான திருக்கடைக் காப்பில் தேவாரம் ஓதும் பயனையும் கூறப்பெற்றிருக்கிறது. பத்தும் பாடவேண்டும் என்று பதினேராம் பாடலில் கூறுகிறுர். பதிகத்தின் ஒன்றிரண்டு பாடல்களை மட்டும் பாடுதல் கூடாது என்பது இதனுல் பெறப்படுகிறது.

முதல் திருமுறையில் எட்டு அற்புதத் திருப்பதிகங்கள் உள்ளன, ''தோடுடைய செவியின்'' என்பது சீகாழியில் ஞானப்பால் உண்டதையும், 'மடையில் வாளை'' என்பது திருக்கோலக்காவில் பொற்றுளம் பெற்றதையும். ',துணி வளர் திங்கள்,' என்பது முயலகன் நோய் தீர்த்ததையும், ''அவ்வினைக் கிவ்வினை'' என்பது விஷசுரம் தீர்த்ததையும், 'வாசி தீரவே'' என்பது வாசி தீரக்காசு பெற்றதையும் ''போகமார்த்த'' என்பது அனல் வாதத்திலிட்ட ஏடுபச்சென்றிருந்ததையும், '' பூத்தேர்ந்தாயன '' என்பது ஆண்பனை பெண்பனையானதையும் ''மாதர் மடப்பிடி'' என்பது யாழ்முரி பாடியதையும் குறிக்கும் அற்புதத் திருப்பதிகங்களாகும். ஆளுடைய பிள்ளையாரின் பாடல்களை அறியாதார் வெம் பிறவிக் கடலினின்றும் மீளமுடியாதார் என்று நம்பியாண்டார் நம்பிகள் கூறுகின்றுர். ஆகவே நாம் அவற்றை ஓதுவது தலையாய கடமையாகும். இனி இரண்டாம் திருமுறையைப் பற்றிச் சிந்திக்க முயற்சிப்போமாக.

திருஞான சம்பந்தர் அருளிய இரண்டாம் திருமுறை

முன் இரண்டு இதழ்களில் பன்னிரு திருமுறைகளின் பெருமையைப் பொதுவாகவும், முதல் திருமுறையின் சிறப்புப் பற்றியும் கண்டோம். ஈண்டு இரண்டாம் திருமுறை பற்றிச் சிறிது சிந்திப்போம். இதில் 122 திருப்பதிகங்களும், 1310 திருப்பாடல்களும் உள்ளன. இந்தளப் பண்ணில் 39 பதிகங்களும், சீகாமரத்தில் 16 பதிகங்களும், காந்தாரத்தில் 29பதிகங்களும், பியந்தைக் காந்தாரத்தில் 14 பதிகங்களும், நட்டராகத்தில் 16 பதிகங்களும், செவ்வழியில் 10 பதிகங்களும் ஆக ஆறு பண்களில் 122 பதிகங்கள் அமைந்துள்ளன. காரைக்காலம்மையாரின் மூத்த திருப்பதிகங்களில் இரண்டாம் திருப்பதிகம் இந்தளப் பண்ணில் அமைந்திருப்பதுபோல இவ்விரண்டாம் திருமுறையிலும் இந்தளப்பண் அமைந் திருப்பது கண்டின் புறத்தக்கது. இத்திருமுறையில் ஒவ்வொரு பண்ணிலும் சீகாழிக்குரிய பதிகமே முதலிடம் பெற்றிருக்கிறது. இதில் 88 திருத்தலங்கள் பாடல் பெற்றிருக்கின்றன.

திருமருகலில் அரவு தீண்டி யிறந்த வணிகனை உயிர்பெறப் பாடியருளிய ''சடையாய்'' என்று தொடங்கும் திருப்பதிகமும், திருமறைக்காட்டில் திருக்கதவம் அடைக்கப் பாடிய ''சதுரம் மறைதான்'' என்ற திருப்பதிகமும், திருமயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணுக்கப் பாடியருளிய ''மட்டிட்ட'' என்று தொடங்கும் பூம்பாவைத் திருப்பதிகமும், திருஆலவாயில் பாண்டிய மன்னனின் வெப்பு நோய் தீரப் பாடிய ''மந்திரமாவது நீறு'' என்ற திருநீற்றுப் பதிகமும், திருநெல் வாயிலரத் துறையில் முத்துச்சிவிகை முதலியன பெற்றபோது பாடி யருளிய ''எந்தை ஈசன்'' என்ற தொடக்கத் திருப்பதிகமும். நாளும் கோளும் தீயன என்று சொல்லிய அப்பர் பெருமானுக்கு திருமறைக்காட்டில் பாடியருளிய ''வேயுறுதோளிபங்கன்'' என்ற கோளறு பதிகமும், தம் தாயார் பிறந்த திருநனிபள்ளியில் பாலை நெய்தலாகப் பாடியருளிய ''காரைகள் கூகை முல்லை'' என்று தொடங்கும் திருப்பதிகமும் ஆக ஏழும் இத்திருமுறையில் காணப்பெறும் அற்புதத் திருப்பதிங்களாகும். மேலும் ''செந்நெலங் கழனிப் பழனத்தயலே'' என்று இத்திருமுறையில் தொடங்கும் முதல் பாடலில் மக்களுக் கின்றியமையாத நெல் உணவினையும் இறைவனுக்குகந்த மணமலரினையும் கூறி, இத்திரு முறையின் இறுதிப் பாசுரத்தில் இறைவழிபாட்டினுல் பெறுப் பயனை ''சிவலோகத்தில் எய்தி நல்ல இமையோர்கள் ஏத்த இருப்பார்களே'' என்று முடித்திருப்பது குறிக்கத்தக்கது.

சில தலங்களின் வரலாற்றுக் குறிப்புக்களான அகச்சான்றுகள் அமைந்த பாடல்களைக் காணலாம். திருவானைக்காவில் யானை வழிப்பட்டதை ''விறல்மிக்க கரிக்கருள் செய்தவனே'' என்றும், திருமறைக்காட்டில் கதவம் சாத்த ''கதவம் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே'' என்றும், திருப்புள்ளிருக்கும் வேளூரில் சம்பாதி சடாயு பூசனை புரிந்ததை ''தள்ளாய சம்பாதி சடா யென்பார் தாமிருவர் புள்ளானூர்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே'' யென்றும், திருவெண்காட்டில் ஐராவதம் வழிப்பட்டதை ''வெள்ளானை தவம் செய்யும் மேதகு வெண்காட்டான்'' என்றும், திருமருகலில் வணிகன் அரவு தீண்டி யிறக்கவும் பெருந்

துயருக்காளான வணிக மகளைப் பற்றி ''மருகல் உடையாய் தகுமோ இவள் உள் மெலிவே.'' ''புலருந்தனையுந் துயிலாள் புடைபோந்து அலரும் படுமோ அடியாளிவளே'' என்றும், பஞ்சம் வந்த காலத்திலும் சிவபூசைக்குதவியாக நாள்தோறும் இறைவனால் காசு அருளப் பெற்ற புகழ்த்துணை நாயனாரின் தொண்டைப் பாராட்டி ''அலந்த அடியான் அற்றைக் கற்றோர் கா செய்தி புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே'' என்றும், திருப்புகலூரில் பூத்தொண்டு புரிந்த முருக நாயனாரைப் பற்றி ''மூசுவண்டறை கொன்றை முருகன் முப்போதும் செய் முடிமேல் வாசமா மலர் உடையார் வர்த்தமானீச் சரத்தாரே'' யென்றும், தம் தந்தையார் தோள்மேல் தலயாத்திரை சென்று பாடல்கள் அருளியதைத் தம் தாயார் பிறந்த பதியான திருநனிபள்ளிப் பதிகத்தில் ''அத்தர் பியன் மேலிருந்து இன்னிசையால் உரைத்த பனுவல்'' என்றும், மதுரையில் பாண்டிய மன்னனின் வெப்பு நோய் தீர்த்ததை, ''தேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணியாயின தீரச் சாற்றிய பாடல்கள்'' என்றும், சனி பகவானால் இடர்ப்பட்டு திருநள்ளாற்றில் நளன் வழிபட்டுய்ந்ததை ''வளங்கொழுவு தீபமொடு தூபம் மலர் தூவி நளன் கெழுவி நாளும் வழிபாடு செய் நள்ளாறே'' யென்றும் கூறப் பெற்றிருக் கிறது.

இயற்கை எழில் நலம் பற்றிப் பாடப்பெற்ற பகுதிகள் பல. ''பண்மொழியால் அவன் நாமம் பல வோதப் பசுங்கிள்ளை வெண் முகில் சேர் கரும்பெணை மேல் வீற்றிக்கும் வெண்காடே''. ''கரவின் மாமணி பொன்கொழித் திழி சந்து காரகில் தந்து பம்பைநீர் அருவி வந்தலைக்கும் ஆமாத்தூர் அம்மானே'', ''நின்று மேய்ந்து நினைந்து மாகரி நீரோடும் மலர் வேண்டி வான் மழை குன்றின் நேர்ந்து குத்திப் பணி செயுங் கோட்டாறு'', ''மந்தியேறியின மாமலர்கள் பல கொண்டு முந்தித் தொழுது வணங்குங் கோயில் முதுகுன்றே'', ''ஏழை வெண் குருகு அயலே இளம் பெடை தனதெனக் கருதித்தாழை வெண் மடல் புல்குந் தண்மறைக்காடு'' என்று இன்னோரன்ன பிற.

இறைமைக் குணங்களை இயம்புவதில் இணையற்றவர் எங்கள் வெங்குரு மன்னர்' ''பிறவாதவனே பிணியில்லவனே'', ''சோதியாய் நிறைந்தான்சுடர்ச் சோதியுட் சோதியான்'' ''உலகெல்லாம் பயந்தவன் நினைப்பரிய பண்பன்'', ''எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடி யார்க்கு இங்கே யென்றருள் புரியும் எம்பெருமான்'', ''தொன்மையான் தோன்றும் கேடில்லாதான்'', செடியாய உடல் தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்'','' பருவத்தில் வந்து பயனுற்ற பண்பன்'' ''தாயுமாயினர் பல்லுயிர்க்கும்'' என்பனபோலப் பல.

''வீடும் ஞானமும் வேண்டு திரேல் விரதங்களால் வாடி ஞானம் என்னுவதும்'', ''புண்ணியன் உறையும் புகலியை நண்ணுமின் நலமான வேண்டிலே'' ''பாவியா, தெழுவாரைத் தம் வினை கோவியா வருங் கொல்லுங் கூற்றமே'' ''பிறவியால் வருவன கேடுள ஆதலால் பெரிய இன்பத் துறவியார்க் கல்லது துன்ப நீங்காதெனத் தூங்கினாயே'' ''வாழ்ந்த நாளும் இனிவாழும் நாளும் இவை அறிதிரேல் வீழ்ந்த நாளெம் பெருமானை யேத்தா. விதியில்லிர்காள்'' ''கண்ணினாற் காணவல்லாரவர் கண்ணுடையார்களே'' என்பன போன்ற பல அறிவுரைகளை இத்திருமுறையில் காணலாம். நெஞ்சுக்கு அறிவுறுத்து வதாகவுள்ள கீழ்க்காணும் பாசுரம் சிந்திக்கற் பாலது;-

நீநாளும்நன் னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே''

''நல்நெஞ்சே! சாம்நாளும் வாழ்நாளும் யார் அறிவார்? சாய்க்காட்டு எம்பெருமாற்கே பூநாளும் தலைசுமப்ப, புகழ்நாமம் செவி கேட்ப, நா நாளும் நவின் றேத்த நல்வினை பெறலாம் நினைகண்டாய்'' என்று உரைநடை செய்துகொண்டால் பொருள் தெளிவாக விளங்கும்.

ஒரு தெய்வ வழிபாட்டை உறுதியாகக் கொண்டவர் ஞானசம்பந்தப் பெருந்தகையார் என்பது ''திரு ஏகம்பத்துறைவானை யல்லதுள் காதெனதுள்ளமே'' என்ற திருவாக்கினுல் அறிந்து கொள்ளலாம். இறைவனை அடியார்கள் வழிபட்ட முறைகளைக் கீழ்க்காணும் பாடற் பகுதிகளால் தெரிந்துகொள்ளலாம்

''சந்துயர்ந் தெழுகாரகில் தண்புனல் கொண்டுதம்
சிந்தை செய்தடியார் பரவுந் திருவான்மியூர்''

''பண்ணிய நடத்தொடிசை பாடும் அடியார்கள்
நண்ணிய மனத்தின் வழிபாடு செய் நள்ளாறே''

''தெரிந்த அடியார் சிவனே யென்று திசைதோறும்
குருந்த மலரும் குரவின் அலரும் கொண்டேந்தி
இருந்து நின்றும் இரவும் பகலும் ஏத்தும்''

''கள்ளநெஞ்ச வஞ்சகக் கருத்தை விட்டருத்தியோடு
உள்ளமொன்றி யுள்குவார் உளத்துளான்''

''முடிகள் சாய்த்தடி வீழ்தரும் அடியரை முன்
வினை மூடாவே''

''சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களோடு கூடும் அடியார்கள்''

''பூசை செய்த அடியார் நின்று புகழ்ந்தேத்த
மூசிவண்டு பாடுஞ் சோலை முதுகுன்றே''

கணபதி, முருகன் இவர்களுக்குத் தந்தை சிவபெருமான் என்பதை, ''கரியின் மாமுக முடைய கணபதி தாதை'', ''மாயச்சூர் அன்றறுத்த மைந்தன் தாதை'', ''இளங்குமரன் தன்னைப் பெற்று இமையவர் தம் பகை யெறிவித்த இறைவன்'', ''மடமயில் ஊர்தி தாதையென நின்று தொண்டர் மன நின்ற மைந்தன்'' என்றெல்லாம் குறிக்கப்பட்டிருக்கிறது.

''மேவி லொன்றர் விரிவுற்ற இரண்டினர் மூன்றுமாய்
நாவின் நாலர் உடலஞ்சினர் ஆறர் ஏழோசையர்
தேவில் எட்டர் திருவாஞ்சியம் மேவிய செல்வனுர்
பாவந்தீர்ப்பர் பழிபோக்குவர் தம் அடியார் கட்கே''

என்ற திருப்பாசுரம் இத்திருமுறையில் திருவாஞ்சியத்தலத் திருப்பதிகத்திலுள்ளது இந்த எண் சொல்லழகைச் சற்று விரிவாக முதல் திருமுறையில் வரும் கீழ்வரும் பாடலால் அறிந்தின் புறலாம்.

''எண்ணிடையொன்றினர் இரண்டினர் உருவம் எரியிடை
மூன்றினர் நான்மறையாளர்,
மண்ணிடை ஐந்தினர் ஆறினர் அங்கம் வகுத்தனர் ஏழிசை
யெட்டிருங் கலைசேர்
பண்ணிடை யொன்பதும் உணர்ந்தவர் பத்தர் பாடிநின்
றடிதொழ மதனனை வெகுண்ட
கண்ணிடைக் கனலினர் கருதிய கோயில் கழுமலம்
நினைய நம வினை கரி சறுமே''.

திருக்குறளில் வரும் ''ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல் தாமுடைமை வைத் திழக்கும் வன்கணவர்'' என்பதின் கருத்தை ''இன்மையால் சென்றிரந்தார்க்கில்லை யென்னது ஈத்துவக்குந் தன்மையார் ஆக்கூரில் தான் தோன்றி மாடமே'' என்ற பாடற் பகுதியில் காணலாம்.


கோளறு பதிகத்தில் ''வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும் வினையான வந்து நலியா'' என்றும், ''புத்தரொட மணைவாதில் அழிவிக்கும் அண்ணல் திருநீறு செம்மைதிடமே'' என்ற திருவாக்குகள் பின்னர் மதுரையில் மன்னன் வெப்பு நோய்தீர்த்து, அமணரை வென்று. திருநீற்று ஒளிவிளங்கச் செய்த நிகழ்ச்சிகளைக் குறிப்பன போன்றிருப் பவை தீர்க்கதரிசியின் திருவுளப் பாங்கு என்று கூறுவது மிகையாகாது.

திருமயிலாப்பூரில் பாடியருளிய பூம்பாவைத் திருப்பதிகத்தில் ஐப்பசி ஓணவிழா, கார்த்திகைநாள் விளக்கீடு, மார்கழி ஆதிரைநாள், தைப்பூசம், மாசிக் கடலாட்டு, பங்குனி உத்திரநாள் முதலிய திருவிழாக்களைப் பற்றிக் குறிக்கப் பெற்றிருக்கிறது.

''நீநாளும் நன்னெஞ்சே'' என்ற திருச்சாய்க் காட்டுப் பாடல், ''தந்தையார் போயினர்'', ''என்பினல் கழிநிரைத்து'' என்ற திருவாரூர்த் தேவாரப் பாசுரங்கள், ''நம்பொருள்'' ''சோறு கூறை யின்றியே'', ''நச்சி நீர் பிறன் கடை'', ''கண்கள் காண் பொழிந்து'' என்ற சீகாழித்தலப் பாடல்கள், ''என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே'' என்ற திருவலஞ்சுழித் தேவாரம் முதலியவை சிறந்த பாடல்கள். இவைகளை மனனம் செய்து நாள்தோறும் பாடிவருவது மிக்க பயனுடைத்தாம்.

இறைவழிபாட்டின் பயனைக் கீழ்க்காணும் கூற்றுக்களால் தெரிந்துகொள்ளலாம் ;-
''வாரமாகி நினைவார் வினையாயின மாயுமே''
''சொல்வார்க்கும் கேட்பார்க்கும் துயரமில்லையே''
''பேராயிரமும் பிதற்றத் தீரும் பிணி தானே''
''வெப்பொடு குளிரும் வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா''

''மண் பொலிய வாழ்ந்தவர் போய் வான் பொலியப் புகுவாரே'' இக்கடைசித் தொடரை திருக்குறளில் வரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்பதோடு ஒப்ப நோக்கி மகிழத்தக்கது.



12-12-1973ல் இருபதாம் ஆண்டுத் திருமுறைப் பெரு விழாவில்
திருமுறைத் திருவுலாக் காட்சி.



12-12-1973-இருபதாம் ஆண்டுத் திருமுறைப் பெருவிழாவில் திருமுறைப்
பாராயண நூலை மதுரை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்கள்
வெளியிட்டு "ஒண்டிப்பிலி சர்பத்" உரிமையாளர்
திரு. K. O. S. நாகராஜன் அவர்களிடம் வழங்கல்.

திருஞான சம்பந்தர் அருளிய மூன்றும் திருமுறை

முன் இதழ்களில் முதல் இரு திருமுறைகளைப் பற்றியும் சிந்தித்தோம். ஈண்டு மூன்றாந் திருமுறை பற்றி ஆராய்வோம். இத்திருமுறையில் 125 திருப்பதிகங்கள் உள்ளன. தஞ்சை மாவட்டம் நீடாமங்கலத்துக்கு அருகில் திருவிடைவாய் என்ற தலத்திலுள்ள கோயிலில் கண்டு பிடிக்கப்பெற்ற கல்வெட்டுப் பதிகம் ஒன்றையும் சேர்த்துப் பதிகங்கள் 126 ஆகும். இப்பதிகங்களின் பாடற்றொகை 1350. திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பாடல்களின் கடைசிப் பகுதியே மூன்றாந் திருமுறை. 85 பதிகளைப் பற்றிப் பாடியருளியுள்ளார். திருவிடைவாய்ப்பதிகம் நீங்கலாக 125 பதிகங்களும் ஒன்பது பண்களில் அமைந்துள்ளன. அவையாவன: காந்தார பஞ்சமம்-23, கொல்லி-18 கொல்லிக் கௌவாணம்-1 கௌசிகம்-14, பஞ்சமம்-11, சாதாரி-33, பழம் பஞ்சுரம்-17, புறநீர்மை-6, அந்தாளிக் குறிஞ்சி-2. இத்திருமுறை, கோயில் என்ற சிதம்பரத்தைப் பற்றிய பதிகத்தில் தொடங்கி திருநல்லூர்ப் பெருமணத் திருப் பதிகத்துடன் முடிவு பெறுகின்றது.

புகலிவேந்தருக்கு பூணூல் அணி விழா நடக்கும் போது ''மறை நான்கும் தந்தோம்'' என்ற அந்தணர்க்கு ''அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே'' எனப் பாடியருளிய பஞ்சாக்கரப் பதிகமும், தந்தையார் வேள்விக்குப் பொருள் வேண்டி திருவாவடுதுறைப் பெருமானைத் துதித்த ''இடரினும் தளரினும்'' என்ற பதிகமும், மதுரையில் அடியார்கள் தங்கியிருந்த திருமடத்தில் சமணர் இட்ட தீ ''பையவே சென்று பாண்டியற்காகவே'' என்ற குறிப்புடைய ''செய்யனே'' என்று தொடங்கும் பதிகமும், சமணரை வாதில் வெல்ல வேண்டி ''காட்டுமாவது'', ''வேத வேள்வியை'' என்று பாடிய பதிகங்களும், அனல் வாதத்தில் திருநள்ளாற்றுப் பெருமானைப் பாடியருளிய ''தளரிளவளர்'' என்ற பதிகமும், புனல் வாதில் ''வாழ்க அந்தணர்'' என்று திருவாய் மலர்ந்த திருப்பாசுரமும், திருக்கொள்ளம்பூதூரில் ஓடத்தை அக்கரை செலுத்தப் பாடிய ''கொட்டமே கமழும்'' என்ற பதிகமும், திருஞானசம்பந்தர் திருமணம் காணவந்தோர் அனைவரும் சோதியில் கலக்க வேண்டும் என்ற குறிப்புடைய ''காதலாகி'' என்று தொடங்கும் நமச்சிவாயப்பதிகமும், ஈறில் பெருஞ்சோதியில் புகும்போது பாடியருளிய ''கல்லூர்ப் பெரு மணம்'' என்று தொடங்கும் திருநல்லூர்ப்பெருமணத் திருப்பதிகமும் இம்மூன்றாந் திருமுறையில் காணப்பெறும் அற்புதத் திருப்பதிகங்களாகும். இத்திருமுறையின் முதல் பாடலில் ''அருளாய் சுருங்க எமதொல்வினையே'' என்று தில்லைப் பெருமானை வேண்டி' கடைசிப் பாடலில் ''அறும் பழி பாவம் அவலமிலரே'' என்று பேரின்ப வாழ்வடையும் பயன் கூறி முடிவு பெற்றிருப்பது நினைவில் நிறுத்துவதற்குரியது.

பொதுவாக, 1முதல் 7 பாடல்கள் வரை திருத்தல வர்ணனையும் 8-ஆம் பாடலில் இலங்கை வேந்தன் தவறுணர்ந்ததற்கு இறைவன் அருள் புரிந்ததும், 9-ஆம் பாடலில் மாலும்

அயனும் யான் பிரமம் என்று மாறுபட்டு திருவைந்தெழுத்தோதி உய்ந்ததும், 10-ஆவது பாசுரத்தில் வேதநெறி, சைவநெறி இவைகளைப் பழி கூறுவதைக் குற்றம் என்று சொல்வதும் 11-ஆம் பாடலில் பயன் (திருக்கடைக் காப்பு) கூறுவதுமாக பதிகம் அமைந்துள்ளது.

இயற்கையெழில் நலம் இயம்புவதில் இணையற்றவர் சம்பந்தப் பெருந்தகையார். ''ஆன புகழ் வேதியர்கள் ஆகுதியின்மீது புகை போகியழார் வானமுறு சோலை மிசை மாசு பட மூசு மயிலாடு துறையே'', ''தேங்கொள் பூங்கமுகு தெங்கிளங் கொடிமாச் செண்பகம் வண்பலா இலுப்பை வேங்கைபூ மகிழால் வெயில் புகா வீழிமிழலை'', ''வாரதர் இருங் குறவர் சேவலின் மடுத்தவர் எரித்த விறகில் காரகில்இரும்புகை விசும்பு கமழ் காளத்தி மலையே'' என்பன ஒன்றிரண்டு எடுத்துக்காட்டாவன. திருக்கானப்பேர் (காளையார் கோயில்) தேவா ரத்தில் ''பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர் தழீஇ விடியலே தடமூழ்கி விதி யினால் வழிபடும்'' என்று கூறியதற்கு சான்று பகர ''ஆனைமடு'' என்ற ஒன்று கோயிலுக் கயலே இருக்கின்றது. ''கந்தமார் தருபொழில் மந்திகள் பாய்தர மதுத்திவலை சிந்து பூந் துறை கமழ் திருநெல்வேலி யுறை செல்வர் தாமே'' என்பதை வைத்து திருநெல்வேலி நகரின் ஒரு பகுதியை சிந்து பூந்துறை என்றே அழைக்கின்றனர்.

இறைவன் திருமேனிக் காட்சியைப் பலபடப் புகழ்ந்து பாடியிருப்பது நாம் மகிழ்ந்து போற்றற்குரியது. மங்கை கூறனர், வெண்பொடி யாடிய மெய்யனர். செஞ்சடைக் கொன்றையந்தாரினர், மைகொள் கண்டத்தர், வான்மதிச் சென்னியர், வாளரவாட்டும் படிறனர், மான் மறிக்கையனர், பேயுடன் ஆடுவர், மலையான் மகள் பாட ஆடுவர், பண்ணும் ஏத்திசை பாடிய வேடத்தர், கண்ணும் மூன்றுடையார், திலகஞ்சேர் நெற்றியினர் என்று இன்னோரன்ன பல.

அடியார்கள் இறைவனை எவ்வகையாற் பாடினும் அருள் புரிவான் என்பதை ''கோழை மிடருக கவிகோளுமிலவாக இசை கூடும் வகையால் ஏழை யடியாரவர்கள் யாவை சொன சொல் மகிழும் ஈசன்'' என்று திருவைகாவூர்த் தேவாரத்திலும் ''கோழையா அழைப்பினும் கூடுவார் நீடுவானுலகினூடே'' என்று வடகுரங்காடு துறைத் தேவாரத்திலும் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. தம் பாடலைப் பாடிப் பெருமானை வழிபடுபவர் வீடு பேறடைவது திண்ணம் என்பதை ''அந்த உலகெய்தி அரசாளும் அதுவே சரதம் ஆணை நமதே'' என்று திருக்கழுமலத் தேவாரத்திலும் உறுதி கூறப்பெற்றிருக்கிறது. கடவுள் உள்நின்று உணர்த்தத் தாம் பாடியருளியதை ''எனதுரை தனதுரையாக'' என்று முதல் திருமுறையில் திருஇலம் பயங்கோட்டூர்த் தேவாரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இதையே இம்மூன்றாந் திருமுறையில் திருப்பிரமபுரத் தேவாரத்தில் ''பழுதிலிறை யெழுது மொழி தமிழ்விரகன் வழிமொழிகள் மொழி தகையவே'' என்று கூறியிருக்கிறார். ''நானுரைக்கும் வார்த்தை யெல்லாம் நாயகன் தன் வார்த்தை நம்புமினோ நமரங்காள்'' என்ற வடலூர் வள்ளலார் வாக்கு ஈண்டு நினைவு கூர்தற்குரியது,

அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கு அவர் பாடல்களில் அகச்சான்றுகள் உள்ளன. ஆள் இல்லாத ஓரிடத்தில் அக்கரை சேரப் பாடியதை ஓடம் வந்தணையும் கொள்ளம்பூதூர்'' என்றும், இறைவி தந்த ஞானப் பாலை உண்டபோது தந்தையார் சினங் கொண்டதை ''போதையார் பொற் கிண்ணத்தடிசில் பொல்லாதெனத் தாதையார் முனிவுறுத்தான்

னையாண்டவன்'' என்றும்; புனல் வாதத்தில் வையையில் இட்ட ஏடு எதிர் சென்று நின்றதை ''ஏடு சென்று அணைதரும் ஏடகத் தொருவனை'' என்றும் கூறியிருப்பது காண்க.

வரலாற்றுக் குறிப்புக்களும் அவருடைய பாடல்களில் பல இடங்களில் காணலாம். கோச்செங்கட் சோழன் யானை புகாவாறு மாடக்கோயில்கள் கட்டியதை ''செம்பியன் கோச் செங்கணான் செய்கோயிலே'', செங்கண் நல்இறை செய்த கோயில் சேர்வரே'' என்று மாடக் கோயில்களுள்ள திருவைகல் மாடக்கோயில், திருவம்பர் பெருந்திருக் கோயில் தேவாரங்களில் குறிப்பிட்டுள்ளார். ''வாய் கலசமாக வழிபாடு செயும் வேடன் மலராகு நயனம் காய்கணை யினாலிடந் தீசனடி கூடு காளத்தி மலையே'' என்று கண்ணப்ப நாயனாரையும், ''சென்று தாதை உகுத்தனன் பாலையே சீறியன்பு செகுத்தனன் பாலையே, வென்றி சேர் மழுக் கொண்டு முன் காலையே வெட்டிடக்கண்டு முன் காலையே'' என்று சண்டேசுர நாயனாரையும், ''நிறையினார் நீலநக்கன் நெடுமா நகரென்று தொண்டர் அறையுமூர் சாத்தமங்கை'' என்று திருநீலநக்க நாயனாரையும் போற்றிப் புகழ்ந்திருக்கிறார். இராமபிரான் இலங்கைக்கு அணைகட்டிச் சென்று, இராவணனைக் கொன்று, அந்தப் பழிநீங்க இராமநாதரை வழிபட்ட செய்திகளை திருஇராமேச்சுரத் தேவாரத்தில் கூறியிருக்கிறார். திருஆலவாய் முதல் திருப்பதி கத்தில் மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் இவர்களை ஒன்று விட்டு ஒன்று பாசுரத்தில் கூறி கடைசியில் 11.ஆம் பாடலில் இருவரையும் சிறப்பித்திருப்பது நாம் மனமகிழ்ந்து போற்றற்குரியது.

இறைவன் பெருமையை ''பெய்யு மாமழையானவன்'', ''நீடினாருலகுக்கு உயிராய் நின்றான்'', ''இகழும் காலன் இதயத்தும் என்னுளும் திகழும் ஈசன்'', ''ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான்புகில் அளவில்லை கிளக்க வேண்டா'', ஏதுக் களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி'' ''தொகுத்தவன் அருமறையங்கம் ஆகமம் வகுத்தவன்'' என்றெல்லாம் விதந்து கூறி யுள்ளார். ''ஞாலம் நின் புகழே மிகவேணடும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே'' என்பதை ''தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்ற மணிவாசகப் பெருமான் திருவாக்குடன் ஒப்ப நோக்கி இன்புறற் பாலது.

அகப் பொருட்டுறைப் பாடல்களையும் நாம் காணலாம். பறவைகள், அன்னங்கள், நாரைகள் முதலியவற்றைத் தூதுவிடும் பான்மையிலுள்ள பாடல்கள் திருச்செங் காட்டங்குடிப் பதிகத்திலுள்ளன. ''நனவினும் கனவினும் நம்பா உன்னை மனவினும் வழிபடல் மறவேன்'', ''வெப்பொடு விரவியோர் வினைவரினும் அப்பா உன அடியலால் அரற்றாது என் நா'', இடரினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்'' என்று மனம் வாக்கு காயங்களால் செய்யும் வழிபாட்டை வலியுறுத்தியிருக்கிறார்.

தேவாரம் ஓதும் பயனை ''மண்ணினல்ல வண்ணம்'' என்ற திருப்பாசுரத்தும் ''காதலாகி'' என்று தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகத்திலும். ''நரை திரையின்றியே நன்னெறி சேர்வரே'' ''முன்னை நோய் தொடருமாறில்லை காண் நெஞ்சமே அஞ்சல் நீயே'' ''மண்மதி யாது போய் வான்புகுவர் வானோர் எதிர்கொளவே'' ''நடலையின்றிப் போய் நண்ணுவர் சிவனுலகம் இடராயின இன்றித் தாம் எய்துவர் தவநெறியே'' என்று நாமெல்லாம் உளங்கொளக் கூறியிருக்கிறார்

திருநாவுக்கரசர் அருளிய நான்காம் திருமுறை

ஆளுடைய பிள்ளையாரின் அருள் வாக்கில் எழுந்த முதல் மூன்று திருமுறைகளைப் பற்றி சென்ற இதழ்களில் கண்டோம். இனி, திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரசர் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய மூன்று திருமுறைகளைப் பற்றிச் சிந்திக்க இருக்கின்றோம். ஈண்டு அவர் அருளிய முதல் திருமுறையான நான்காந் திருமுறைபற்றி ஒருவாறு நினைவு கூர்வோமாக.

வாக்கின் மன்னர் பாடியருளியவை 4900 பதிகங்கள் என்பதை ''பதிகம் ஏழெழு நூறு பகருமா கவியோகி'' என்று திருஏகாதசமாலை கூறுகின்றது. ஆனால் நமக்குக் கிடைத்துள்ளவை 313 பதிகங்களில் 3044 பாடல்களேயாம். நான்காந்திரு திருமுறையில் 113 பதிகங்களுக்கு 1070 பாசுரங்கள் உள்ளன. அவை 51 திருத்தலங்களைப் பற்றியன. பொதுவாக பதிகம் ஒன்றுக்கு 10 பாடல்களே இருக்கின்றன. ஒரு சில பதிகங் களில் 11 பாடல்களும், திருவங்க மாலையில் 12 பாடல்களும், திருவையாற்றுப் பதிகமொன்றில் 20 பரசுரங்களும் உள்ளன. 1, 2, 3, 4, 5 பாடல்கள் மட்டுமேயுள்ள பதிகங்களும் உண்டு. திருவொற்றியூர்ப் பதிகம் ஒன்றில் ''ஓம்பினேன் கூட்டை வாளா'', ''மனம் எனும் தோணி பற்றி'' என்ற சிறந்த பாடல்கள் இரண்டு மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளன. திருத்தூங், கானை மாடத் திருப்பதிகத்தில் ''பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு'' என்று தொடங்கி மூன்று பரசுரங்களே காணப்பெறுகின்றன. இப்பாடல்களின் அருமை பெருமைகளை நோக்கும்போது எஞ்சிய பாடல்கள் கிடைக்கவில்லையே என்று மனம் புழுங்குகிறது: என் செய்வது? எல்லாப் பதிகங்களிலும் கடைசிப் பாடல் இராவணனைப் பற்றியது. ஆணவத்திற்குத் தண்டனையுண்டென்றும், குற்றம் உணர்ந்து வேண்டினால் இறைவன் மன்னித்தருளுவான் என்பதும் இப்பாட்டின் குறிப்பாகும்.

இத்திருமுறை ''கூற்றாயினவாறு'' என்று தொடங்கி ''காலன் அறிந்தான் அறிதற்கரி யான் கழலடியே'' என்று இனிது முடிகிறது. ''கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைபட்டவர்க்கு'' என்ற திருக்குறள் ஈண்டு நினைவு கூர்தற்குரியது. கொல்லி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், சாதாரி, காந்தாரபஞ்சமம், பழந்தக் கராகம், பழம் பஞ்சுரம், இந்தளம், சீகாமரம், குறிஞ்சி என்ற பத்து பண்களில் அமைந்த முதல் 21 பதிகங்களும், 22 முதல் 79 முடிய திருநேரிசைத் திருப்பதிகங்களும், 80 முதல் 113 முடிய திருவிருத்தப் பதிகங்களும் காணப்பெறுகின்றன.

சமண சமயத்தைச் சார்ந்த மருள் நீக்கியார் சூலை நோய்வாய்ப்பட்டுத் துன்பமெய்தி திருவதிகையடைந்து தமக்கையார் திலகவதியாரால் திருநீறளிக்கப் பெற்று முதலில் பாடிய

''கூற்ருயினவாறு'' என்ற பதிகமும், சமணர் சூழ்ச்சியால் பல்லவ மன்னன் ஏவிய யானையைக் கண்டு அஞ்சாது பாடிய ''சுண்ண வெண் சந்தனச் சாந்தும்'' என்ற திருப்பதிகமும், கல்லில் கட்டிக் கடலில் பாய்ச்சியபோது அதே தெப்பமாக மிதக்கப் பாடிய ''சொற்றுணை வேதியன்'' என்ற நமச்சிவாயப் பதிகமும், கடலிலிருந்து கரையேறித் திருப்பாதிரிப்புலி யூரடைந்து ''ஈன்ருளுமாய்'' என்று அருளிய பதிகமும். சமண் சமயத் தொடக்குடைய உடலைத் தூய்மையாக்க இடபக்குறி, சூலக்குறி பொறிக்க இறைவனை வேண்டி ''பொன்னுர் திருவடிக்கு'' என்ற திருத்தூங்கானை மாடப் பதிகமும், அப்பூதியடிகளாரின் தலைமகன் பாம்பு கடித்து இறந்ததை மறைத்த அப்பெற்ருேர்களின் இன்னல்தீர ''ஒன்று கொலாம்'' என்று பாடி அப்பிள்ளையை எழுப்பிய பதிகமும், திருக்கயிலை செல்லும் வழியில் ஒரு குளத்தில் மூழ்கி திருவையாற்றில் எழுந்து கண்ட தெய்வக் காட்சியை வடித்து ஓதிய ''மாதர்ப் பிறைக் கண்ணியானை'' என்ற பதிகமும், திருச்சத்தி முற்றத்து இறைவனை வேண்டி திருவடி இலச்சினை பெறப் பாடிய ''கோவாய் முடுகி'' என்று தொடங்கும் திருப்பதிகமும் இத்திருமுறையிலுள்ள அற்புதத் திருப்பதிகங்களாகும்.

அவர் வாழ்க்கை வரலாற்றைக் குறிக்கும் அகச்சான்றுகள் இத்திருமுறையில் காணப் பெறுகின்றன. ''உயர்ந்தேன் மனைவாழ்க்கையும் ஒண்பொருளும்'', ''மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான் தாள் தொழதே உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி யுழிதந்து என்னுள்ளம் விட்டு'', ''பண்டெலாம் குண்டர் தம் சொல்லே கேட்டு'', கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்'', ' வஞ்சனைப்பால் சோருக்கி வழக்கிலா அமணர் தந்த நஞ்சமுதாக்கு வித்தார் நனிபள்ளி அடிகளாரே'' என்பன சில. சண்டீசப்பதம் தந்ததை ''தாதை தாளை எறிந்த மாணிக்கப்போதே எழில் கொள்சண்டீசனென்னச் சிறந்த பேர் அளித்தார்'' என்றும், அப்பூதியடிகளாரைச் சிறப்பித்து திருப்பழனத் தேவாரத்தில். ''அஞ்சிப்போய் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி'' என்றும், திருஞானசம்பந்தர் தந்தையார் வேள்விச் செலவுக்காக வேண்டி இறைவனை வேண்டி ஆயிரம் பொன் பெற்றதை ''கழுமலவூரர்க் கம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனுரே'' என்றும், நமிநந்தியடிகள் நீரால் விளக்கிட்டதை ''ஆரூர் நறுமலர் நாதனடித் தொண்டன் நம்பி நந்தி நீரால் திருவிளக்கிட்டமை நீளுடறியுமன்றே'' என்றும் கூறப்பெற்ற பிற சான்று களாவன. திருக்கயிலை நோக்கிச் செல்லு நெறிக்கண் இறைவன் ஒரு முனிவராய்த் தோன்றி ஒரு குளத்தைக் காட்டி அதில் மூழ்கி, திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் காணப் பணித்ததை ''யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்றபோது'' என்ற குறிப்பு உணர்த்து கிறது,

பல பழமொழி ஆட்சிகளையும் இத்திருமுறையில் காணலாம். ''நரிவரால் கவ்வச் சென்று நற்றசை இழந்த தொப்ப'' ''கனியிருப்பக் காய்வர்ந்த கள்வனேன்'', ''முயல் விட்டுக் காக்கை பின்போனவாறே'', அறமிருக்க மறம் விலைக்கு கொண்டவாறே'', இருட் டறையில் மலடு கறந்து எய்த்தவாறே'', விளக்கிருக்க மின்மினித் தீக் காய்ந்தவாறே'', பாழூரில் பயிக்கம்புக் கெய்த்தவாறே'', கரும்பிருக்க இரும்பு கடித்தெய்த்தவாறே'' என்பவை அவை.

''உடம்பெனும் மனையகத்து'' என்று தொடங்கும் பாடலில் உடலை வீடாகவும், உள்ளத்தைத் தகழியாகவும், உணர்வை நெய்யாகவும், உயிரைத் திரியாகவும், ஞானத் தீயால் விளக்கு எரித்ததாக உவமித்துப் பாடியிருக்கிறார்.
இப்பாடலுடன்

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா- நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்

என்ற பூதத்தாழ்வாரின் பாசுரத்தோடு ஒப்ப நோக்கி மகிழத்தக்கது. நமச்சிவாயப் பதிகத்தில் ''ஓடினேன் ஓடிச்சென்று உருவங் காண்டலும் நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே'' என்பதனோடு திருமங்கையாழ்வார் அருளிய ''ஓடினேன் ஓடிஉய்வதோர் பொருளால் உணர் வெனும் பெரும்பதம் தெரிந்து நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன் நாராயண வென்னும் நாமம்'' என்ற பாசுரப் பகுதியை வைத்து நோக்கி இன்புறற்பாலது.
நகைச்சுவைப் பாடலுக்கு ஒரு எடுத்துக்காட்டு:-

கிடந்த பாம் பருகு கண்டறிவை பேதுறக்
கிடந்த பாம் பவளையோர் மயிலென்றையுறக்
கிடந்த நீர்ச்சடைமிசைப் பிறையுமேங்கவே
கிடந்து தான் நகுதலைக் கெடில வானரே.

சைவ சமயத்தின் சமரசத் தன்மையை,

''விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்து
எரிவினால் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்
பரிவினால் பெரியோரேத்தும் பெருவேளூர் பற்றினானை
மருவி நான் வாழ்த்தி உய்யும் வகையது நினைக்கின்றேனே''

என விளக்கியுள்ளார் எங்கள் வாகீசப் பெருந்தகையார்.

திருப்புகலூர்த் தேவாரத்தில் ''தொல்லை நீர்ப்புகலூர்க்கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடு வினையே'' என்று பாடியிருப்பது அங்குள்ள சிவலிங்கப் பெருமான் சிறிது திருமுடி சாய்ந்திருப்பதைக் குறிக்கும். ''கோணப்பிரான்'' என்ற சொல்லை அவ்வூர்க் கோயில் கல்வெட்டுக்களில் ஆளப்பெற்றிருப்பதைக் கொண்டு மக்கள் தேவாரத்தில் எவ்வளவு ஈடுபட்டிருந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றது.

பொய் பேசி உடல் வளர்த்தலை ''வேம்பினைப் பேசி விடக்கினை ஓம்பி'' என்று கண்டிக் கிறார். ''பிண்டத்தைக் கழிக்க வேண்டில் பிரானையே பிதற்றுமின்கள்'' என்று அறி வுறுத்துகிறார். தில்லையம்பலவனின் திருக்கூத்தைக் காணப் பெறுவதற்காகவாவது மனிதப் பிறவி வேண்டுமென்கிறார். அப்பெருமானை வழிபடச் சென்றால் ''என்று வந்தாய்'' என்ற திருக்குறிப்பு தோன்றுமாம். அவருக்கு மண்டையே ஓடன்றி வேறில்லை, காளையன்றி

ஊர்தியில்லை,சுடுகாட்டுச் சாம்பலையன்றி சாந்து வேறில்லை என்று சொல்லி "துன்பிலாத் தொண்டர் கூடித் தொழுதழு தாடிப் பாடும் அன்பலாற் பொருளுமில்லை ஐயனை யாறனூர்க்கே'' என்று கூறுகிறார். எப்போதும் இறைவனை வணங்கவேண்டும் என்பதை ''இச்சையால் மலர்கள் தூவி இரவொடு பகலும் தம்மை நச்சுவார்க் கினியர் போலும் நாகவீச்சரவனாரே'' என்று பாடுகிறார்.

இராவணன் வானரதத்தில் ஊர்ந்து செல்கிறான். அவனுடைய தேர்ப்பாகன் திருக் கயிலை மீது செல்லாது என்று சொல்லியும் அவனைச் சினந்து தேரோட்டச் சொல்கிறான். தேர் போகாமல் தடைப்படவே கயிலையைப் பெயர்க்க முற்படுகிறான். அவன் மலையின்கீழ் அகப்படுமாறு இறைவன் பெருவிரலைஊன்றுகிறார். இதை நாடகக் காட்சியாக நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்.

''கடுகியதேர் செலாது கயிலாயமீது கருதேல் உன்வீரம் ஒழிநீ
முடுகுவதன்று தன்மம் எனநின்று பாகன் மொழிவானை நன்று முனியா
விடுவிடு என்று சென்று விரைவுற்று அரக்கன் வரையுற் றெடுக்க முடிதோள்
நெடுநெடு இற்றுவீழ விரலுற்ற பாதம் நினைவுற்ற தென்றன் மனனே''

மலையை ஊன்றிய விரலையுடைய திருப்பாதத்தை என் மனம் நினைந்தது என்ற நயம் நோக்கி இன்புறத்தக்கது.

★

வேதம்

வித் என்ற வடமொழி தாதுவினடியாகப் பிறந்து "அறிவு நூல்'' எனப் பொருள்படும். அது அதிகாரியல்லார்க்கு மறைக்கப்பட்டபடியால் மறை என்ற பெயரையும் கொண்டது. "நான் மறை'' என்பது வழக்கு. அதன் உட்பொருள் "நான் என்ற அகங்காரம் மறையும் இடமே வேதம் என்ற ஞானம் என்பதாகும். இது ருக், யஜுர், சாமம், அதர்வனம் என்ற நான்கு. அவற்றிற்கு உப வேதங்கள் நான்கு. ஆயுர் வேதம், தனுர் வேதம், காந்தர்வ வேதம், அர்த்தசாஸ்த்ரம். அங்கங்கள் ஆறு. சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருத்தம், ஜோதிஷம், கல்பம் என்பன. இவ் வங்கங்கள் வேதத்தைப் பயில் வதற்கும் அறிவதற்கும் சாதனமாக அமைக்கப்பட்டன. உபாகமங்கள் நான்கு. புராணம், தரும சாஸ்த்ரம், மீமாம்ஸை, நியாயம். இவை வேதக் கருத்தை மக்கள் நடை முறையில் பயன்படுத்த வேண்டிய முறைகளைக் கூறுவன.

வேதம் உபாஸனா காண்டம் அல்லது தோத்திரப்பகுதி, கர்ம காண்டம் அல்லது கிரியைப் பகுதி, ஞான காண்டம் அல்லது உபநிஷத்துக்கள் என்று மூன்று பிரிவாய் இருக்கின்றது.

திருநாவுக்கரசர் அருளிய ஐந்தாம் திருமுறை

''சைவப் பெருநெறிக்கே அணியன நாவுக்கரையர்பிரான் தன் அருந்தமிழ்'' என்று போற்றப்பெற்ற அப்பர் பெருமான் அருளிய நான்காம் திருமுறை பற்றி முன்னர் கண்டோம். இப்போது ஐந்தாந் திருமுறைபற்றிச் சிந்திப்போம். இத்திருமுறையில் 100 திருப்பதிகங்களும், 1015 திருப்பாசுரங்களும் அடங்கியுள்ளன. 75 திருத்தலங்களைப் பாடியுள்ளனர். பெரும்பாலும் பதிகம் ஒன்றுக்கு 10 அல்லது 11 பாடல்கள் இருக்கின்றன. சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை என்ற பதிகத்தில் மாத்திரம் 30 பாடல்கள் உள்ளன. ''அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலம்'' என்று தொடங்கும் கோயில் திருப்பதிகம் முதல் ''வேத நாயகன் என்று வரும் ஆதிபுராணக் குறுந்தொகையுடன் இத்திருமுறை அமைந்திருக்கிறது. குறுந்தொகை யாப்பில், நாற்சீர் நாலடியாய் அமைந்த பாடல்கள் ஒற்றுநீக்கி 11, 12ம் ஆகக் குறைந்த எழுத்துக்களையுடைமையால் குறுந்தொகை, ஒரு தலம்விட்டுந் தலம் செல்லும் போதும், உழவாரத் திருப்பணி செய்யும்போதும், இறைவனை முன்னிலையாக்கிப் போற்றும்போதும், இறைவன் திருப்புகழை மக்களுக்கு அறிவுறுத்தும் நிலையிலும் பாடிப் பரவுதற்கேற்ற சந்தமாக குறுந்தொகை அமைந்துள்ளது. ஒவ்வொரு பண்ணிலும் உள்ள திருப்பதிகங்களின் யாப்பு வகையினைக் கட்டளை யென்பர். அது ஓசைக் கூறுபாடே. யாப்பருங்கலம் ''அளவடி நான்கின கலிவிருத்தமாமே'' என்றதையொட்டி குறுந்தொகையைக் கலிவிருத்தம் என்ற பாவினத்துள் அடக்குவாருமுண்டு. ''குறுந்தொகைக்கோர் கட்டளையா விரித்துரைத்தார்'' என்பது திருமுறை கண்ட புராணம். இத்துறையில் நீற்றறையிலிட்டபோது பாடிய ''மாசில் வீணையும்'' என்ற பதிகமும், திருமறைக் காட்டில் திருக்கதவம் திறக்கப் பாடிய ''பண்ணினேர் மொழியாள்'' என்ற பதிகமும் அற்புதத் திருப்பதிகங்களாவன.

இத்திருமுறையில், சமணர் சூழலில் வீணே காலம் கழித்தது, சமணரின் பயனற்ற வாழ்க்கையை வெறுத்துக் கூறல், இறைவனைக் குறையிரந்து வேண்டல், இடைவிடாது மனத்தில் நினைத்தல், குற்றம்நீக்கி ஆட்கொள்ள வேண்டல், இறைவன் திருக்கோலப் பொலிவு, இறைவன் ஊர் தோறும் கோயில் கொண்டிருப்பது, இறைவன் அடியார்க்கு அருட்செய்தல், ஐம்பொறிக் கட்டினின்றும் நீங்க வேண்டல், இறைவனையடையும் வழியை மக்களுக்குக் கூறல், உலக மக்களுக்கு உய்தி கூறல், யாக்கை, இளமை, செல்வம் நிலையாமை, இறைவனே உயிர்களுக்குத்துணை, அஞ்செழுத்தின் பெருமை, பிரவணத்தின் மகிமை போன்றவை இத்திருமுறையின்கண் காணப்படுபவை.

''எங்கே யென்னை இருந்திடந் தேடிக்கொண்டங்கே வந்து அடையாளம் அருளினர்'', ''பாடிப்பெற்ற பரிசில் பழங்காசு'', ''கல்லினோடெனைப் பூட்டி யமண்கையர் ஒல்லை நீர்புக நூக்க'' என்பன அகச் சான்றுகளாவன. ''எந்த மாதவஞ் செய்தனை நெஞ்சமே...

அந்தமில் புகழ் ஆரூராநெறி சிந்தையுஞ் சிரத்துளுந்தங்கவே'', உள்ளமே யொன்றுறுதி யுரைப்பன் நான்... வள்ளல் சேவடி வாழ்த்தி வணங்கிடே'', "அஞ்சியாகிலும் அன்பு பட்டாகிலும் நெஞ்சம் வாழி நினை நின்றியூரை நீ'', ''பூணியாய்ப் பணிசெய் மடநெஞ்சமே'' என்பனவெல்லாம் நெஞ்சறிவுறுத்தலாக அமைந்தவை.

''குழலை யாழ்மொழி'' என்ற பாடலில் பெண்ணின்மேல் தவறான ஆசை கூடாதென்றும், ''எல்லாவற்றிக்கு மேலான இனிமையுடையவன் இடை மருதீசன்'' என்றும், ''பிறவி நீங்கப் பிதற்றுமின் பித்தராய்'' என்றும், ''நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே'' என்றும், ''பொக்கம் பேசிப் பொழுது கழியாதே'' என்றும்' ''காலம் வந்து கடை முடியா முனம் நீலகண்டனை நின்று நினைமினே'' என்றும் ''மாடு(பொன்) தேடி மயக்கினில்'' வீழாதீர் என்றும். கங்கை, காவிரி, குமரித்துறைகளாடினபோதும் எங்கும் ஈசன் என்னாதவர்க்கு பாவநாசம் இல்லையென்றும், ''கோடி தீர்த்தம் ஆடினாலும் அரனுக்கன்பில்லையேல் ஓடு நீரை ஓட்டைக் குடத்தில் மூடி வைத்த மூர்க்கனை யொக்கும்'' என்றும் இன்னோரன்ன பிற அறிவுரைகளை மக்களுக்கு எடுத்தியம்பியுள்ளனர் எங்கள் அப்பெருமான்.

அப்பர் சுவாமிகள் அருளிய

''கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடையானுளன் நாமுளோம்
எற்றுக்கோ நமனால் முனிவுண்பதே''

என்ற பாடலுடன் திருமூலர் பாடிய

''புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அது கண்டருள் புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம் மிறை யீசனை
கண்ணறியாமல் நழுவுகின்றாரே''

என்ற பாசுரத்தையும், திருநாவுக்கரசர் பாடிய

''தத்துவந்தலை கண்டறிவாரிலைத்
தத்துவந்தலை கண்டவர் கண்டிலர்
தத்துவந்தலை நின்றவர்க் கல்லது
தத்துவனலன் தண் புகலூரனே''

என்பதோடு திருமந்திரப் பாடலான

''தத்துவ ஞானந் தலைப்பட்டவர்கட்கே
தத்துவ ஞானந் தலைப்படலாய் நிற்குந்
தத்துவ ஞானத்துத் தானவனாகவே
தத்துவ ஞானந் தந்தான் தொடங்குமே''

என்பதையும் ஒப்ப நோக்கி மகிழத்தக்கது.

''ஒழுகு மாடம்'', உருளும் போதறி வொண்ணு உலகத்திர்'', ''உரை தளர்ந் துடலார்'', ''பொத்தல் மண் சுவர் பொல்லாக்குரம்பை'' ''ஓட்டை மாடத்தில் ஒன்பது வாசல்'', ''இன்றுளார் நாளையில்லை,'', ''நடலை வாழ்வு'' என்பவற்றுள் யாக்கை நிலையாமை யையும், ''இளைய காலம எம்மானை அடைகிலா...நும்முடல் வளையுங்காலம்'', ''அழகியோம் இளையோம் எனும் ஆசையால் ஒழுகி ஆவி உடல்விடு முன்னமே'', ''இளமை கைவிட்ட கறலு மூப்பினர் வளமை போய்ப் பிணியோடு வருதலால்'' என்பன போன்ற குறிப்புக் களால் இளமை நிலையாமையைப் பற்றியும், ''மாட்டை (பொன்னை)த்தேடி மகிழ்ந்து நீர் நும்முளே நாட்டுப் பொய்யெலாம் கூறிடும் நாணிலீர்'' என்பதில் செல்வ நிலையாமை பற்றியும் கூறியருளியிருக்கின்ருர்.

சிவபரத்துவத்தை ''மூவராய் முதலபய் நின்ற மூர்த்தியே'', ''பொங்கி நின்றெழுந்த கடல் நஞ்சினைப் பங்கி உண்டதோர் தெய்வமுண்டோ சொலாய்'', ''நூறு கோடி பிரமர், ஆறு கோடி நாரணர். கங்கை மணல் எண்ணி லிந்திரர் அழிந்தனர். ஈறு இல்லாதவன் ஈசன் ஒருவனே'' என்றெல்லாம் நிலைநாட்டுகிருர்.

இறைவன் திருக்குணங்களை வாயாரப் புகழ்கின்ருர். ''நீதியை நிறைவை'' (Justice & Perfection) ''நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்'', ''கள்ளமுள்ள மனத்தவர் காண்கிலார்'' என்றெல்லாம் கூறியருளியுள்ளார்.

இனி வாக்கின் மன்னர் ஐந்தெழுத்தைப் பற்றிக் கூறியிருப்பது கண்டு மகிழத்தக்கது. ஐந்தாந் திருமுறையிலுள்ள 100 பதிகங்களில் நடுவேயுள்ள 51-ஆம் பதிகத்தில், 11 பாடல் களில் 6-ஆம் பாடலான நடுப் பாடலில் நடுநாயகமாக ''மறவாது சிவாய வென்றெண்ணினுர்'' என்று கூறப்பெற்றிருக்கிறது. இப்படியமைந்த திருவருளுக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய வல்லோம். ''நெஞ்சம் என்பதோர்'' என்று தொடங்கும் பாடலில் ''நான் துஞ்சம் போழ்து நின்னுமத் திருவெழுத்து அஞ்சும் தோன்ற அருளுமையாறரே'', வல்லவாறு சிவாய நமவென்று தொழ வினைப்பகை வீடுமே'', என்றும்,

''நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே''

என்றும் கூறியிருப்பனவற்றை நாம் மகா மந்திரமாகக்கொண்டு ஒழுகுவோமாக.

★★

தட்சண கைலாசம் என்று சொல்லப்படும் தலங்கள்

1. திருக்காளத்தி
2. திருச்சிராப்பள்ளி
3. திருக்கோணமலை.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய ஆறும் திருமுறை

''திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள் 312. அவற்றில் 3066 திருப்பாடல்கள் உள்ளன. 4, 5, 6 திருமுறைகளாக ஆன்றோர் வகுத்துள்ளனர். 4, 5 திருமுறைகளைப்பற்றி முன்னர் கண்டோம், ஆறும் திருமுறையைப்பற்றி இப்போது சிந்திப் போம். இத்திருமுறையில் 99 பதிகங்கள் இருக்கின்றன; 981 திருப்பாசுரங்கள் உள்ளன. இவையனைத்தும் தாண்டகம் என்னும் செய்யுள் வகையில் குறுந்தொகைக்குப் பின், இறைவன் அருட்குணங்களையும் நெஞ்சிற்கும் அன்பிற்கும் விரித்துரைத்தற்கேற்ற யாப்பமைதியுடையது திருத்தாண்டகம். அது தொல்காப்பியச் செய்யுளியலின்படி எண் சீரான் வந்த கௌரச்சக வொரு போகு எனப்படும். 20 எழுத்து என்னும் வரையறைத் தாண்டி 20க்கு மேற்பட்ட எழுத்துக்கள் மிக்கு வருதலின் தாண்டகம் என்னும் பெயருடையதாயிற்று. தண்டகம் என்ற வடமொழிச் செய்யுளின் விகற்பமென்று கூறுவர். அது பொருந்தாதென்று பல காரணங்களைக் காட்டி நிறுவியுள்ளனர் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. வெள்ளைவாரணனார் அவர்கள்.

தாண்டக வகைக்கு மூல இலக்கியம் அப்பர்சுவாமிகளின் திருத்தாண்டகமே. அது அப்பெருமானுக்கே உரிய சொல் நடையின் சிறப்பியல்பினை விளக்கும் நிலையில் அமைந்துள்ளது. ஆகவே அவரை, ''தாண்டக வேந்தர்'', ''தாண்டகச் சதுரர்'' என்ற சிறப்புப் பெயர் களால் அழைக்கின்றனர். திருமங்கையாழ்வாரும் 30 திருநெடுந்தாண்டகம், 20 திருக்குறுந் தாண்டகம் இவைகளை அருளியுள்ளனர். அப்பர் சுவாமிகள் ''பொன்னானாய் மணியானாய்ப் போகமானாய் பூமி மேல் புகழ்தக்க பொருளே'' என்று கூறியிருப்பதுடன் திருமங்கை யாழ்வார் அருளிய ''பொன்னானாய் பொழிலேழும் காவல் பூண்ட புகழானாய்'' என்பதை ஒப்ப நோக்கி மகிழத்தக்கது அளவியல் தாண்டகம், சந்தத் தாண்டகம், தாண்டகச் சந்தம், சமசந்தத் தாண்டகம் எனப் பலவகைகளுண்டு. அதன் விரிவை யாப் பருங்கலக் காரிகை, யாப்பருங்கலவிருத்தி ஆகிய நூல்களில் கண்டு கொள்க.

வாகீசப் பெருந்தகையார் அருளிய தொண்ணூற்றொன்பது தாண்டகப் பதிகங்களுள் பெரிய திருத்தாண்டகம், புக்கதிருத்தாண்டகம், போற்றித்திருத்தாண்டகம், திருவடித் திருத் தாண்டகம், பலவகைத் திருத்தாண்டகம், நின்ற திருத்தாண்டகம், அடைவுத்திருத் தாண்ட கம், ஏழைத் திருத்தாண்டகம், மறுமாற்றுத் திருத்தாண்டகம், க்ஷேத்திரக் கோவைத் திருத் தாண்டகம், தனித்திருத் தாண்டகம், அடையாளத்திருத்தாண்டகம், காப்புத்திருத்தாண்டகம், வினாத்திருத் தாண்டகம் என்னும் பெயர்கள் புனைந்த சில திருப்பதிகங்கள் விளங்குகின்றன. இவை ஒவ்வோர் காரணம் பற்றி எழுந்தன. காரணங்கள் விரிப்பின் பெருகும். இத் திருமுறை ''அரியானை அந்தணர் தம் சிந்தையானை'' என வரும் கோயில் பெரிய திருத்

தாண்டகத்தில் தொடங்கி ''எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனே'' என்று வரும் திருப்புகலூர்த் திருத்தாண்டகத்துடன் நிறைவு பெறுகிறது.

எங்கள் சேக்கிழார் பெருமான்,

''மண்முதலாம் உலகேத்தமன்னு திருத்தாண்டகத்தைப்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅரசு அமர்ந்திருந்தார்'',

என்று சிறப்பித்துக் கூறுகிறார். தாண்டகச் செய்யுள்கள் அத்தனையும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக்குய்க்கும் பெற்றியில் அமைந்துள்ளன. அவை முதிர்ந்த அனுபவமுடைய பெருமானின் திருவாக்கு.

தமிழாளியாரின் வரலாற்றுக்கு அகச்சான்றுகளுடைய சில பாடல்களைக் காண்போம். அவர் சமணருடன் கொன்னே காலங் கழித்ததை ''உறிமுடித்த குண்டிகை தங்கையில் தூக்கி ஊத்தை வாய்ச் சமணர்க்கோர் குண்டாக்கனாய்க், கறிவிரவு நெய்சோறு கையிலுண்டு கண்டார்க்குப் பொல்லாத காட்சியானேன்'' என உளம் நைந்து பாடுகின்றார். அமணர் சூழ லினின்றும் தப்பி வந்ததை ''வெஞ்சொற் சமண் சிறையிலென்னை மீட்டார் வீழிமிழலையே மேவினாரே'' என்றும், ''கையெலாம் நெய் பாயக் கழுத்தே கிட்டக் கால் நிமிர்த்து நின்றுண்ணும் கையர் சொன்ன பொய்யெலாம் மெய்யென்று கருதிப் புக்குப் புள்ளுவரால் அகப்படாதுய்யப் போந்தேன்'' என்றும் ஆற்றாமையுடன் அரற்றுகிறார். சூலை நோய் தந்து ஆட் கொண்டதை ''தீ நோய் களைந்தென்னையாண்டார் தாமே''. பொல்லாஎன் நோய் தீர்த்த புனிதன் தன்னைப் புண்ணியனைப் பூந்துருத்தி கண்டேன் நானே'' எனக் கூறுகிறார். திருநல்லூரில் திருவடிதீக்கை அருளியதை அத்தலப் பாடல்கள் எல்லாவற்றிலும் ''திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே'' என்றும், திருவையாற்றுப் பதிகப் பாசுரங்களில் ''பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே'' என்றும் குறிப்பிட்டருளி யிருக்கின்றார்.

வாக்கின் மன்னரின் பாடல்களில் முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோல் போற்றியமைத்திருப்பதையும், அவர் திருவாக்குகளைப் பின்னோர் ஆட்சியில் கொண்டிருப்ப தையும் சில எடுத்துக் காட்டுகளால் தெரிந்து கொள்ளலாம். ''மற்றாருந்தனக்கொப்பாரில் லாதானை'' என்பதுடன் 'தனக்குவமையில்லாதான்'' என்ற குறட்பாவுடனும், ''காட்கிக் கெளியானுமாங் கண்ணுங் கருகாவூரெந்தைதானே'' என்பதோடு ''காட்சிக்கெளரியன கடுஞ் சொல்லனல்லன்'' என்ற குறளுடனும், ''வேண்டாமை வேண்டுவது மில்லான் தன்னை'' என்றதுடன் ''வேண்டுதல் வேண்டாமை இலான்'' என்ற குறளுடனும், ''அளியானை அண்ணிக்கும் ஆன்பால் தன்னை வான்பயிரை அப்பயிரின் வாட்டந்தீர்க்கும் துளியானை'' என்பதோடு ''விசும்பிற்றுளி வீழினல்லால பசும்புல் தலை காண்பரிது'' என்ற குறட் செய் யுளுடனும் நோக்கியின்புறற்பாலது, இன்னும் ''உரையார் பொருளுக்கு'' என்று தொடங்கும் பாடலில் ''புதியனவுமாய் மிகவும் பழையான் தன்னை'' என்பதை ''முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே'' என்ற திருவாசகத்

தொடரோடும், ''கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி'' என்பதை ''கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை'' என்ற திருவிசைப்பா பகுதியோடும் ஒப்பக் கண்டு மகிழும் பான்மையது. சொல்வேந்தரின் ''மண்ணதனில் ஐந்தை, மாநீரில் நான்கை, வயங்கு எரியில் மூன்றை மாருதத்து இரண்டை, விண்ணதனிலொன்றை'' என்ற பாடற்பகுதியுடன்

''பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடைநான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடைமூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடையிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடையொன்றாய் விளைந்தாய் போற்றி''

என்ற திருவாசகப் பாடலோடு ஒற்றுமை நயங்கண்டுணரற் பாலது இன்னும் ''எங்கெழி லென்ஞாயிறு எளியோமல்லோம்'' என்பதும் 'இங்கு இப்பரிசு எமக்கு எங்கோன் நல்குதியேல் எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோரெம்பாவாய்'' என்பதும் இவ்விருபேரடியார்களின் திருவாக்கு.

ஆளுடைய அரசர் அகப்பொருட்டுறைப் பாடல்களை அழகாக அருளியுள்ளார் நீறுபூசி மாலைசூடி. வீணை ஏந்தி வந்த ஒருவரை, தலைவி உமது ஊர் யாதென்று கேட்க, ''நொந்தார் போல் வந்தெனது இல்லேபுக்கு நுடங்கேரிடைமடவாய் நம்மூர் கேட்கில், அந்தாமரை மலர்மேல் அளிவண்டி யாழ்செய் ஆமாத்தூர் என்றடிகள் போயினரே'' என்று வருவது காண்க. மற்றும் ஒரு தலைவி கூற்றாய் அமைந்தது. ''தம்மூர் பாசூர் என்று சொல்லி நின்றார், நனிபள்ளியில் இன்று தங்கிவிட்டு நள்ளாற்றுக்கு நாளை போவோம் என்றார், ஒரு இடத்தையும் நிலையாகச் சொல்லாமல் கைவீசிக்கொண்டு மாடவீதி வலம்புரம் போய்ப் புகுந்தார்'' என்பது. தமிழ்ப் பேரறிஞர் கா. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் ''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்'' என்ற திருவாரூர்த் திருத்தாண்டகச் செய்யுட் குறிப்புப் பொருளும் திருக்குறளில் ''கடவுள் வாழ்த்து'' என்னும் முதலதிகாரத்தின் நுட்பப் பொருளும் ஒத்திருப்பதை விளக்கிக் காட்டியுள்ளனர். ''நாமம் கேட்டாள்'' என்பதற்கு ''ஆதி பகவன்'' என்பதும், ''வண்ணம்'' என்பதற்கு ''வாலறிவன்'' என்பதும், ''ஆரூர்'' என்பதற்கு (இருதய ஆகாசமத்தி) ''மலர்மிசை'' என்பதும், ''பிச்சியானாள்'' என்பதற்கு ''வேண்டுதல் வேண்டாமை'' என்பதும், ''அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்'' என்பதற்கு ''இருள்சேர் இருவினை'' (பிறவி, ஆணவமலம்) என்பதும், ''அகன்றாள்'' என்பதற்கு ஐம்பொறி வாயில்பட்ட நிலையிலா வொழுக்கம் என்பதும். ''தன்னை மறந்தாள்'' என்பதற்கு ''மனக்கவலை நீங்கல்'' என்பதும், 'தன் நாமம் கெட்டாள்'' என்பதற்கு ''பிறவாழி நீந்தலரிது'' என்பதும், ''தலைப்பட்டாள்'' என்பதற்கு ''எண்குணத்தான் தாளை வணங்காத்தலை'' என்பதும், ''தலைவன் தாளே'' என்பதற்கு ''பிறவிப் பெருங்கடல் நீந்துவர்'' என்பதும் முதலிய ஒற்றுமை காட்டி நிறுவியுள்ளார்.

வாகீசமுனிவர் இறைவன் திருவுருவைப் பலபடப் பாராட்டிப் பேசியுள்ளார் ''பிசைந்த திருநீற்றினர்'', ''கொடு கொட்டி தாளமுடையார்'', ''வடிவேறு திரிசூலம் தோன்றும்'' ''சச்சரியின் பாணியான்'', ''நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற நெடுந்தூணைப் பாதாளக்

கருவை'', ''பொன்னனைய திருமேனி'', ''நீராவியான நிழலே'' ''மாலை எழுந்தமதியே''. காலை முளைத்த கதிரே'' என்பன போன்றவை பல. கடவுளின் அட்டமூர்த்தத்தை ''பார் இலங்கு புனல், அனல், கால், பரமாகாசம், பரிதி, மதி, சுருதியுமாய்ப் பரந்தார் போலும்', என்றும், ''இருநிலனாய்த், தீயாகி, நீருமாகி, இயமானனாய், எறியுங் காற்றுமாகி, அருநிலைய திங்களாய், ஞாயிறாகி ஆகாசமாய் அட்டமூர்த்தியாகி' என்றும் கூறியருளியுள்ளார்.

சிவபெருமானின் பேரருட் குணங்களைப் பலவாறு புகழ்ந்து மகிழ்கிறார் எங்கள் திருவாமூர்த் தோன்றலார். கல்லாதார் காட்சிக்கரியவன்; கற்றார் இடும்பை களைபவன்; கூம்பித் தொழு வார் தங்குற்றே வலைக்குறிக் கொண்டிருக்கும் குழகன்; ஆரொருவர் உள்குவர் உள்ளத் துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளுடையவன்; வேண்டுவார் வேண்டுவதே ஈவான்; மறவாதார் மனத்து என்றும் மன்னுவான்; ஏரிநிறைந்தனைய செல்வன்; தன்னைப் பணியுகந்த அடியார்கட்கினியான்; ஏத்தாதார் மனத்தகத்துள் இருளானவன்; வஞ்சகர்பாலணுகாத மைந்தன்; செல்கதிக்கு வழிகாட்டும் சிவன்; பித்தராம் அடியார்க்கு முத்திகாட்டும் ஏணி; இடர்க் கடலுள் சுழிக்கப்பட்டு இங்கு இளைக்கின்றவரை அக்கரைக்கே ஏறவாங்கும் தோணி; சலங்கெடுத்துத் தயாமூல தன்மமென்னும் தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் நலங்கொடுக்கும் நம்பி இவைபோன்றவை எண்ணிலா கூறலாம். விரிவஞ்சி விடுக்கின்றனம்.

அப்பர் பெருமான் நெஞ்சறிவுறுத்தலாகக் கூறும் சிலவற்றைக் காண்போம். ''எழுது கொடியிடையார் ஏழைமென்தோள் இளையார்கள் நம்மை இகழா முன்னம் பழுதுபட நினை யேல் பாவி நெஞ்சே பண்டுதான் என்னோடு பகைதானுண்டோ'', ''பாவங்கள் போக, பரகதிக்குச் செல்ல, சூழ்வினைகள் வீழ்க்க வேண்டுமாயின் சொல்லுகேன் கேள் நெஞ்சே துஞ்சா வண்ணம் உற்றவரும் உறுதுணையும் நீயேயென்றும் உன்னையல்லால் ஒரு தெய்வம் உள்கேனென்றும் .. பொழிலாரூராவென்றே போற்றுநில்லே'', ''தினைத்தனையோர் பொறை யிலா உயிர்போங் கூட்டைப் பொருளென்று மிகவுன்னி மதியாலிந்த அனைத்துலகும் ஆளலாம் என்று பேசும் ஆங்காரம் தவிர் நெஞ்சே'', ''பொருந்தாத உடலகத்திற் புக்க ஆவி போமாறறிந்தறிந்தே புலைவாழ்வுன்னி இருந்தாங்கு இடர்ப்பட நீ வேண்டா நெஞ்சே'' என்பன சில எடுத்துக்காட்டுகள். ஆலயத் தொண்டும் அரனடிக்கன்பு செய்தலும் எவ்வா றமைய வேண்டும் என்பதை ''நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே'' என்ற திருப்பா சுரத்தில் விளக்கியுள்ளார்.

திருவடி என்றால் இறைவன் திருவருளைப் பெறுதல் என்றுதான் பொருள். திருவடி முத்தி என்பது அப்பர் பெருமான் பாடல்களிலேதான் சிறந்து விளங்குகிறது திருவதிகைவீரட்டானத் திருவடித் திருத்தாண்டகத்தில் காணலாம். ''அரவணையன் சிந்தித்தரற்றும் அடி'', ''கணக்கு வழக்கைக் கடந்த அடி'', பெரும்பித்தர் கூடிப் பிதற்றும் அடி'', '''பரவுவார் பாவம் பறைக்கும் அடி'', மருந்தாய்ப் பிணி தீர்க்கவல்ல அடி'', ''உருவென்று உணரப்படாத அடி'' என்பவை அவற்றுள் சில. திருப்புகலூரில் கடைசியாக உழவாரத் திருத்தொண்டு செய்துகொண்டு வரும்பொழுது தம்மை இறைவன் திரு வடிக்கீழ் இருத்திடும் என்ற உணர்ச்சி தோன்றியதும் 'எண்ணுகேன் எனச்சொல்லி எண்ணு கேனே'' என்று தொடங்கும் திருப்பதிகத்தில் ''பூம்புகலூர் மேவிய புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்'' என்று பாடி சிவபெருமான் சேவடிக்கீழ் இனிதமர்ந்தார்.

திருமுறைத் தேன்

பூ. சாம்பசிவம், எம். ஏ.,

'திரு' என்ற சொல்லின் பொருள் யாது? செல்வம் என்பர் சிலர்; கண்டாரால் விரும்பப்படும் அழகு என்பர் வேறு சிலர்; அத்தகு 'தன்மை நோக்கம்' என்பர் பேராசிரியர். ஈண்டு, திரு என்பது மெய்ப் பொருளாகிய அருட்செல்வத்தையே குறிக்கும் சிறப்புடைத்து. இத்திருவினை அருளும் நூல்கள், திருமுறைகள் என அழைக்கப் பெறுகின்றன. 'முறை' எனில், நிரலே ஒழுங்குபடுத்தப் பெற்ற பொருட்கோவை என்ப. அருட்பனுவல்கள் முறையோடு தொடுக்கப்பெற்றதே திருமுறை; தமிழ்மறை ஆகும்.

திருமுறைகள் பன்னிரண்டாகும் அவ்வாறு பொதுவகையான் அழைக்கப் பெறினும் 'திருமுறை' என்று சிறப்பிக்கப் பெற்றது, அப்பர் பெருமான் அருளிய அருட்பாடல்களே. ஏனைய தேவாரங்கள்--சம்பந்தர், சுந்தரர் பதிகங்கள்—திருக்கடைக்காப்பு, திருமொழி என்று தாம் அழைக்கப்பெறும். திருநாவுக்கரசரின் திருப்பதிகங்கள் 4, 5, 6 - ஆக 3 திருமுறைகளில் அடங்கும். இவற்றுள்ளும் நாலாந்திருமுறையே, 'திருமுறை' எனப்பட்டது. 5 - ஆம் திருமுறை, திருக்குறுந்தொகை. 6 - ஆவது, திருத்தாண்டகம். எனவே திருமுறை என்று சிறப்பிக்கப்பெறுவது நான்காம் திருமுறையேயாகும் என்பது தெளிவு.

திருமுறை, தேன் என இனிப்பது; தெவிட்டாதது; சிறிது உண்ணினும் இனிக்கும் செந்தேன். அப்பரின் செந்தமிழ்த் திருமுறைத்தேன், உண்ணுந்தோறும் இனிப்பது; உள்ளந் தெளிவிப்பது; உயிர்க்கு மருந்தாவது; சிந்திப்பரியது; சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவது; முத்தி கொடுப்பது; மொய்த்து இருண்டு பந்தித்துநின்ற பழவினை தீர்ப்பது; ஐயாறன் அடித்தலமாய் நமக்கென்றே கிடைத்தது! அந்நான்காம் திருமுறையைச் சிறிதே பருகி, அருட்சுவையை உணர்வோம்.

நாவேந்தர் யார்? தோணிபுரப் பிள்ளையாரால் 'அப்பரே' என்றழைக்கப்பெற்ற மருள் நீக்கி யாராவர். 'அலகில் கலைத்துறை தழைப்ப அவதாரம் செய்தவர்; அருந்தவத்தோர் நெறி வாழ வந்தவர்; ஒளிவிளங்குகதிர். இத்தகைமை கண்டன்றோ வள்ளற் பெருமானும், சொற்கோ முதலிய நால்வர் தோன்றிலரேல், 'நீறு எங்கே? மாமறை நூல் தான் எங்கே? எந்தைபிரான் ஐந்தெழுத்து எங்கே? என்று தம் 'சிவாநந்தமாலை'யில் செப்பலுற்றார்!

நம் நாவேந்தரின் நாலாந்திருமுறையானது அவர்தம் பட்டறிவுப் புதையலாகும். மரபுரிமையாம் திருநெறிய தமிழ்நெறி—சிவநெறி மறந்து, நெறியலா நெறியில் மயங்கியிருந்தவாற்றை — அமண்புக்கிருந்த அடைவினை, உணர்ந்துணர்ந்து கசிந்துருகிப் பாடும் பான்மையினை இத்திருமுறையில் பரக்கக் காணலாம்.

'மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும் திருவடிவும், மதுரவாக்கின்
சேர்வாரும் திருவாயில் தீந்தமிழின்மாலைகளும், செம்பொன்தாளே
சார்பான திருமனமும், உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப்பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச்செல்வார்'.

என்று தெய்வச் சேக்கிழார் பெருமானால் செந்நெறி வாழ்க்கை முழுத் திருவுருவப் படம் தீட்டப் பெற்றவர். இவற்றிற்கும் மேலாகப் பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும் கண்ணுதற் பெருமானாலேயே,

'பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளம் பதிகத்தொடை
நாவுக்கரசு என்று உலகேழினும் பாடியபான்மையினால்
நின்னுமம் நயப்புற மன்னுக'

என்று நற்பெயரும்

உலகப்புகழும் அருளப்பெற்றவர்; அவரே வாகீசர். அவர் உணர்ந்தோதியவாறு 'கருவாய்க் கிடந்துன்கழலே நினையுங் கருத்துடையேன், உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன்' என்றும், 'நலந்தீங்கினும்' உன்னை மறந்தறியேன்' என்றும் முன்னுணர்வு இருந்தமையால் தாம் மாற்றுச் சமயம் புக்கழுந்தியிருந்தும் தாய்ச்சமயம் திரும்பி வந்து ஆழ்ந்தார்; தம் திருவாய் பொலிய 'சிவாயநம' என்று நீறு அணிந்தார்; தம்பிரான் திருவருளால் உரைத் தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு பெற்றார். 'கூற்றாயினவாறு' என்றெடுத்துக் குறையிரந்து பாடினார். அமண்சூலை நோய் நீங்கத் தமிழ்ச் சிவநெறி மீண்டார். புரட்சிக் குரல் எழுப்பினார் நம் பாவேந்தர்.

'அஞ்சுவது யாதொன்றுமில்லை; அஞ்ச வருவதுமில்லை' என்று ஆர்த்தார்; கொல்யானை அவரை வணங்கியது. நஞ்சு, அமுதாயது; கல், தெப்பமாயிற்று; நீற்றறை, ஈசன் இணையடி நிழலாயிற்று. அருளிச் செயல்கள், அவரைச் சிவநெறிக்கு அப்பராக்கின. யாவும் சிவன் செயல், சொல்—என்றே பாடினார். அம்மையப்பர் காட்சி—ஆண்மை பெண்மை ஒருங் கிணைந்த சிவக்காட்சி—ஆம் கயிலாயக் காட்சியை ஐயாற்றிலேயே காணும் தனித்தகைமை, முழுமை, தலைமை பெற்றார் நம் தமிழ் நாவலர்.

அப்பர் தாமே 'பூசெய்' புரிதலைப் போற்றினார்; சலம் பூவொடு தூபம் மறந்தாரில்லை; நகமெலாம் தேயக் கையால் நாண்மலர் தூவித் தொழுதார்; முகமெலாம் கண்ணீர் மல்க முன்பணிந்து பரவினார். 'மன்னுயிர்த் தொண்டே மகேசன் தொண்டு' என்று உழவாரம் கரத்தில் தாங்கி, நிலமிசை நீடு பணி புரிந்தார்; சரியைத் தொண்டாற்றினார். இத்தனிச் சிறப்பு நோக்கியன்றோ,

'எண்ணிய எண்ணியாங் கெய்தும் எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்'

என்று உறுதிமொழிகின்றது, குறள் மொழி.

துறக்கப்படாத உடலைத் துறப்பதாம்; அது வெந்தூதுவரோடு இறப்பதாம்; இறந்தால் இருவிசும்பு ஏறுவதாம்; ஏறிய பின் மீண்டும் பிறப்பதாம்; பிறந்தால் ....? பிறையணிவார் சடையப்பிஞ்ஞகன் பேர் மறப்பன் கொலோ? என்று உள்ளம் கிடந்து மறுகிடுகிறதாம்.

ஆக, உடலைத் துறப்பதற்கும், இறப்பதற்கும், விண்ணகம் ஏறுவதற்கும், மீண்டும் பிறப்பதற்கும் வருந்தவில்லை; அஞ்சவில்லை அப்பர். பின் பிறந்துவிட்டால் அவன் பெயர் மறந்துவிடுமோ என்று தான் அலமறுகின்றார். பிறவியின் பயன், பெருமானை மறவாது போற்றுதலே என்பதன்றோ இதன் குறிப்பு! அதனால் தானே 'புழுவாய்ப் பிறக்கினும்' என்றெடுக்கும் சிறப்பு இவரைச் சார்ந்தது.

'கூற்றம் கோவாய்க் குமைப்பதன் முன், என் மேல் பூவார் அடிச்சுவடு பொறித்துவை, என்று புலம்புகிறார்; மூவிலைச் சூலம் பொறிக்குமாறு தம் தலைமேல் தாள் வைத்தவரிடம் விண்ணப்பிக்கிறார்; தம் மீது இடபம் பொறித்து ஏன்று கொள்ளவும் வேண்டினார்; திருவடி நீறுபூசிக் காத்தருளப் பணிந்தார். இந் நாலாந் திருமுறையாம் கருத்துக் கருவூலத்தில் எத்துணை உவமைகள்! உருவகங்கள்!

காம்பிலாமூழை, பாம்பின் வாய்த்தேரை, கொத்தைக்கு மூங்கை வழி காட்டுதல், எரிநீரிலாடும் ஆமை; பூவினுக்கு அருங்கலம், இல்லக விளக்கு, மனமெனும் தோணி—இன்னோரன்ன அணிகள் பலவாம். இத்துடன் நகைச் சுவையும் காட்டினார் நாமன்னர்.

'கங்கை சடையுட் கரந்தாய் அக்கள்ளத்தை மெள்ள உமை
நங்கை யறியிற் பொல்லாது கண்டாய் எங்கள் நாயகனே'.

என நகை ததும்ப நவில்கிறார்.

சமநிலைச் சமுதாயம் காணத்துடிக்கும் அப்பர்தம் உள்ளத்தை

'இரப்பவர்க்கு ஈயவைத்தார் ஈபவர்க்கு அருளும்வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்'

என்ற வரிகள் தெள்ளிதின் விளக்கும்.

நான்காம் திருமுறை வரலாற்றுக் களஞ்சியமாகவும் விளங்குகிறது.

'சிலந்தியு மானைக்காவில் திருநிழற் பந்தல் செய்து
... ... கோச்செங்கணானுமாக
... ... சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித்திட்டார்'

என்று கோச்செங்கட் சோழரையும்

'பிழைத்ததன் தாதைதாளைப் பெருங்கொடு மழுவால்வீசக்
குழைத்ததோ ரமுதமீந்தார்'

என்று சண்டீசநாயனாரையும்

'வாட்கொண்ட நோக்கி மனைவியொடு மங்கோர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தைஉரைக்குமன்றோ'

என்று அமர்நீதி நாயனாரையும்

'அடித்தொண்டன் நந்திஎன்பானுளன் ஆரூரமுதினுக்கு'

என்று நமிநந்தியடிகளையும்

'அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி
குஞ்சிப் பூ வாய்நின்ற சேவடியாய்'

என்று அப்பூதியடிகளையும் குறிப்பிடும் வாய்மைகள் வரலாற்றறிஞர்க்கு விருந்தாகும்.

மேலும் இத்திருமுறை, புராணச் செய்திகளின் பெட்டகமாகவும் திகழ்கின்றது. திருப்பதிகங்களின் இறுதியில் இராவணனைக் குறிப்பது, பார்த்தனுக்குப் பாசுபதம் அருளியது, சாத்தனை மகனு வைத்தது, யானை உரித்தது, திரிபுரம் நோக்கிச் சிரித்தது, தக்கன் வேள்வி தகர்த்தது, மன்மதனை எரித்தது, அயன் அடி முடி தேடியது, முயலகன் புன்மை ஆற்றியது, மார்கண்டேயர்க்கு அருளியது முதலாய செய்திகளைச் செப்பும் திறம் வியத்தற்குரியது.

ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்' என்று எடுத்துத் தம்மை ஆண்டானைப் பாடுங்கால், அமண் குகையினின்று சிவநெறி மீளச் சூலை தந்து தடுத்தாளச் செய்தது, தம் தமக்கை யாரின் பேரன்புதானே என்று நினைவுகூர்ந்தமையால், உடனே 'உடன் தோன்றினராய்' என்று தொடுக்கின்றார். திருவதிகையில், திரு, வதிகையாம் திலகவதியாரைப்பற்றிய இக்குறிப்பு நினைந்து நினைந்து இன்புறுதற்குரித்து.

'கடவுளைக் காட்ட முடியுமா?' மீசை முறுக்குகின்றார். சிலர் கடவுளைக் காண முடியுமா? என்று எள்ளுகின்றார் சிலர். கடவுள் எதிரில் வரமாட்டானு? என்று ஏங்குகின்றார் பக்தர் பலர். விடைவேண்டுமா? அப்பர் தருகிறார். யாரைக்காணவேண்டும். என்று துடிக்கின்றோம்? சிவனை. அவன் யார்? சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான்! அவன் உள்ளமும் செம்மையானது. அத்தகு செய்யவன், செப்பம் உடையவன்- ஆட்கொண்டு அருள மாட்டானு? இடையறாப் பேரன்பு பூண்டு, நெஞ்சார உருகி, நாவாரப் பவன் எனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாள் அழைத்தால் அவன் எதிர்ப்படமாட்டானு? நம் பக்திச் சிறப்புக்காக இல்லாவிடினும் 'இவன் எனைப்பன்னாள் அழைப்பு ஒழியான்' என்றாயினும் இரங்கி நம்முன் வந்து நிற்கமாட்டானு? என்று அழைத்துக் கண்டவர் விண்டுளார். காணுங்கள்

'சிவனெனும் நாமம் தனக்கே உடையசெம் மேனியெம்மான்
அவனெனை யாட்கொண்டு அளித்திடுமாகில், அவன்தனையான்
பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்துபன் னாள் அழைத்தால்
இவனெனைப் பன்னாள் அழைப்பு ஒழியான் என்று எதிர்ப்படுமே'

கண்டு கொண்டோம்! கண்டும் என் செய்வது? எப்போதும்போல, அவனை மறந்தே இருப்போம்; ஆனுல் அவனுக்கு இனிதானவர் போல-நெருக்கமானவர், உரிமையானவர் போல-இயங்குவோம்; பேசி மகிழ்வோம். எப்போதாவது உள்ளத்தில் நினைத்திருக்கின்றோமா என்று நம்நெஞ்சே நம்மைச் சுட்டால், நம்மை அவ்வாறு நினைந்துருகச் செய்கின்றானு என்று அவன்மீதே பழி போட்டு விடுவோம். அவனைமறந்து மாறான அனைத்தையும் நாடி அலைய நலிவித்துவிட்டானே என்றும் நாம் நடத்தும் நாடகத்தை அவன் மீது ஏற்றி அமைதி காண்போம். இத்தகைய வித்தைகளில் நம்மை ஒத்தவர் யார் உளர்?

'நின்னைப் போதும் நினைய வொட்டாய் ! நீ நினையப்புகில்
பின்னைஅப் போதே மறப்பித்துப் பேர்த்தொன்று நாடுவித்தி
உன்னைப் போதும் மறந்திட்டு உனக்கு இனிதா விருக்கும்
என்னைஒப் பார்உளரோ சொல்லுவாழி இறையவனே'

பிறர்பழியையும் தம்பழியாகக் கொண்டு கையற்று ஏங்குமாற்றினை ஒவ்வோர் எழுத்திலும் இதயம் பதித்துணரலாம்

மணிவாசகரின் கனிவும் கருத்தும் பலவிடங்களில் பாய்ந்தோடும்.

'மேலும் அறிந்திலன் நான்முகன் மேற்சென்று கீழிடந்து
மாலும் அறிந்திலன் — — — — — '

என்ற வரிகள்

'திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை'
'சோதிமணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தன்மை'
'பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்'

என்ற திருவாசக வரிகளுடனும்,

'திருவளர் தாமரை சீர்வளர் செங்கழுநீர் கொணெய்தல்'

என்ற பாடல் திருக்கோவையார் முதற்பாட்டுடனும் ஒப்பு நோக்கத் தக்கன.

இவ்வாற்றான் அப்பர் அடிகளின் நாலாந்திருமுறைத்தேன்' 'மானிடப் பிறவிதானும் வகுத்தது மனம் வாக்கு காயம், ஆனிடத்தைந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றே' என்ற சிவஞான சித்தியார் வழி செலுத்தி நம்மை உய்விக்கும் அருமருந்தாகும்; அமிழ்தமாகும். அப்பர் திருமுறை ஓதுவோர்,

'நிதியரா குவர்சீர்மை யுடையராகுவர் வாய்மை
நெறியரா குவர்பாவம் வெறியரா குவர்சால
மதியரா குவரீசன் அடியரா குவர்வான
முடைரா குவர்பாரின் மனிதரா னவர்தாமே'.

★

சப்த விடங்கத் தலங்கள்.

1. திருவாரூர் — வீதிவிடங்கர் — அசபா நடனம்
2. திருநள்ளாறு — நகரவிடங்கர் — உன்மத்த நடனம்
3. திருநாகைக் காரோணம் — சுந்தர விடங்கர் — வீசிநடனம்
4. திருக்காறுயில் — ஆதிவிடங்கர் — குக்குட நடனம்
5. திருக்கோளிலி — அவனிவிடங்கர் — பிருங்க நடனம்
6. திருவாய்மூர் — நீலவிடங்கர் — கமல நடனம்
7. திருமறைக்காடு — புவனிவிடங்கர் — ஹம்ஸபாத நடனம்

சுந்தரர் அருளிய ஏழாம் திருமுறை

புலவர். யாழ் சுந்தரம், பி. ஏ., பி டி.

சைவத் திருமுறை பன்னிரண்டனுள் ஏழிசையும் இன்றமிழும் சிறக்கும் ஏழாம் திருமுறையைப் பாடியருளியவர் நம்பியாரூரர். தம்பிரான் தோழரான நம்பியாரூரர் இறைவன் மாட்டு நட்பாம் கிழமைபூண்டு அருளிய இத்திருமுறை அளவிற் சுருங்கியதாயினும் பெருமையில் விரிந்தது. அந்தமில் புகழ் ஆலால சுந்தரர் பாடிய செந்தமிழ்ப் பனுவல் பாடுந்தோறும் பாடுந்தோறும் நாவினிக்கும்; உள்ளம் நைந்துருகும்; கல்மணமும் கரைந்து இறைமணம் ஓங்கும். இறைவனைப் "பித்தா" என்றழைத்த சுந்தரர் நம்மை அவர்தம் பனுவலால் ஆண்டவன் மாட்டு பித்தாக்குகின்றார். சைவமெய்த் திருவின் கோலம் செந்தமிழ் நாட்டில் எல்லாம் சீர்பெற்றுத் திகழச் சுந்தரர் சொற்றமிழால் சுடர்த்திங்கட் சடையானை, செஞ்சடை வாணனை, பொன்னார் மேனியனை, அடியார்க்கு எளிவந்த பிரானை ஆடும் தில்லைக் கூத்தனை, எல்லையிலா இன்பத்து இடுவானைப் பாடினார். பன்னு தமிழ்ப் பாமாலை பாடி, பரமன் தாள் பற்றிய சுந்தரர் திருவடியைப் பரவுவோம்.

நாவலர் கோனாகிய சுந்தரர் பாடியருளிய நற்றமிழ்ப் பாடல்கள் பல்லாயிரமாயினும் இன்று 1026 பைம்பூண்மணி ஒக்கும் பாமணிகளே கிடைத்துள்ளன. நற்றவப் பேறுய்ப் பெற்ற ஒரு நூறு பதிகங்களில் பண்டைத் தமிழிசையின் பண்கள் பல அமைந்து மிளிர்கின்றன. இசைப்பாவல்ல இன்னிசை வாணர்கள் பாடவல்ல பண்ணமைப்பினைக் கீழே காண்போம்.

எண்	பண்	பதிகம்	பாடல்கள்
1	இந்தளம்	12	122
2	தக்கராகம்	4	44
3	நட்டராகம்	14	143
4	கொல்லி	7	73
5	கொல்லிக் கௌவாணம்	9	95
6	பழம்பஞ்சுரம்	7	72
7	தக்கேசி	17	169
8	காந்தாரம்	5	52
9	பியந்தைக் காந்தாரம்	1	10
10	காந்தார பாஞ்சமம்	1	11
11	நட்டபாடை	4	40
12	நட்டராகம்	1	10
13	புறநீர்மை	3	30
14	சீகாமரம்	4	41
15	குறிஞ்சி	4	41
16	கைசிகம்	1	10
17	செந்துருத்தி	1	11
18	பஞ்சமம்	5	52
		100	1026

சுந்தரர் காலத்துத் திகழ்ந்த் நாயன்மார்கள்.

(1) சடையனுர் (2) இசைஞானியார் (3) ஏயர்கோன் கலிக்காமர் (4) விறன்மிண்டர் (5) கோட்புலி நாயனுர் (6) சேரமான் பெருமாள் நாயனுர் (7) பெருமிழலைக்குறும்பர். (8) சோமாசி மாற நாயனுர்

ஏத்தாது இருந்தறியாச் சுந்தரர் தம் செந்தமிழ்ப் **பதிகத்துள் துதித்துப் போற்றும் நாயன்மார்கள்.**

1) நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் (2) ஒரு நாவில் உரை செய்ய ஒண்ணு திருநாவுக்கரசர் (3) ஒப்பில்லாத் தன்னன்பால் கண்ணப்பிய கண்ணப்பர் (4) தந்தைதாள் துண்டமிட்டு இறைவன்தாள் பற்றிய சண்டேசுர நாயனுர் (5) கோச்செங்கட் சோழ நாயனுர் 6) அருந்தமிழால் இரும்பிணி நீங்கிய ஏயர்கோன் கலிக்காம நாயனுர் (7) புகழ்நீடு புகழ்த்துணையார் (8) ஆறணிந்த சடையார்க்கு விளக்கெரித்த கணம்புல்லர் (9) தீயின் மஞ்சனம் செய்தருளி எழுந்த திருநாளைப் போவார். (10) நானிலத்தில் நற்சூதர் எனும் பெயர் பெற்ற மூர்க்க நாயனுர் (11) ஆதியார் தம்மை நாளுங்கல் எறிந்து அணுகப் பெற்ற சாக்கியர் (12) வாளரவு அணிந்தார் பாத மலர் பரவும் நரசிங்கமுனையரையர் (13) போர் விளைத்துப் புகழ் விளைத்த கோட்புலியார்.

பண்ணூர் இன்றமிழின் பரமாய பரஞ்சுடரைத் தண்ணூர் தமிழால் பாடிய சுந்தரர் தடுத்தாட்கொள்ளப்பட்ட பேறுடையவர். புத்தூரில் திருமணக் கோலத்துடன் நம்பியரூரர் நிற்கின்ருர். இதனைச் சேக்கிழார் ''கண்களெண் ணிலாத வேண்டும் காளையைக் காண வென்பார் பெண்களில் உயர நோற்ருள் சடங்கவி பேதை யென்பார்'' என்று குறிப்பிடுவார். அதுபோழ்து, அயனும் மாலும் அடிமுடி காணப்பெரு அருமறைப் பொருளாய், அறிவினுக்கு அறிவாய்த் திகழும் ஆடுமரசு, ஆளுடைய நம்பியை ஆட்கொள்ள ஆவணம் காட்டி வந்தார். நம்பியரூரர் இதனை வல்வழக்கு என்றும், வாழ்விக்க வந்த வரந்தருவானை, பெரும்பற்றப் புலியூரானைப் பித்தன் என்றும் கூறினர். பித்தனுயினும், பேயனுயினும் வித்தகம் பேச வேண்டாம்; பணி செய்ய வேண்டும் என்ருர் பனிமதிசூடிய பரமன். சூழநின்ருர், ''திருமறை முனிவரே நீரெங்குளீர் செப்பும் என்ருர்.'' ஒருருவம், ஒருநாமம் ஒன்றுமில்லா மன்றுளாடி, தன்னை வெண்ணெய் நல்லூரினன் என்று நவின்ருர். கிழிந்த படியோலைக்கு, ''மூலஓலை காட்டி நீயடிமை ஆதல் சாதிப்பன்'' என்று கூறித் தண்டு முன்தாங்கிச் சென்று நாவலூர் நம்பியை வழிநடத்திச் சென்ருன் தொண்டரைப் பெரிதும் உகக்கும் தூய சோதியான். ''வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு வழிவழித் தொண்டு செய்வோம்'' என்று எழுதிய ஓலையின் மூலத்தை உலகவர்க்குக் காட்டி, நம்பியாரூரரை விண்ணவரும் மண்ணவரும் ஆர்ப்ப ஆட்கொண்டான் கண்ணுதற் பெருமான்.

ஆலந்தான் உகந்த பெருமான் நம்பியாரூரரின் அருந்தமிழில் மயங்கிக் கள்ளுண்ட வண்டானுன் என்பதை,

'' .... அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க வற்சனை பாட்டே யாகும் ஆதலான் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு கென்ருர் தூமறை பாடும் வாயார்'' என்று குன்றை

வளர் கொழுந்து குறிப்பிடுவார், வன்றொண்டர், வேதியர் வடிவில் வந்து வாதிலே வென்று என்னை ஆட்கொண்ட நின்னை, ''என்சொல்லிப் பாடுவேன்'' என்றார். தொண்ட ராண்ட வள்ளல்,

''முன்பெனைப் பித்த னென்றே மொழிந்தனை யாதலாலே
என்பெயர் பித்த னென்றே பாடுவாய்'', என்றார்.

வன்றொண்டர், ''பித்தா! பிறைசூடி'' என்று பாடி அத்தனுக்கு ஆளாயினர். அவரால் பாடப்பெற்ற தலங்கள் 114 என்றும், அவற்றுள் 31 தலங்களுக்குப் பாடப்பெற்ற பதிகங்கள் யானை உண்ட கரும்பென, கால வெள்ளத்தில் கரைந்தன என்றும் கூறுவர். அவரால் நிகழ்த்தப் பெற்ற அற்புதங்கள் பலப்பல. இவையெல்லாம் ஏழாம் திருமுறை யால் நனி விளங்கும். தம்பிரான் தோழரான நம்பியாரூரர், செந்தமிழ் சிறக்க, சைவம் தழைக்க அருளிச் செய்த சொற்றமிழின் திறமெல்லாம் உணர்ந்து செந்தமிழ்ச் சொக்கன் ஆலவாய் அண்ணல் திருவடிப் பேற்றைப் போற்றுவோம்.

''நற்றவா உன்னை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே''.

திருச்சிற்றம்பலம்.

★★

இதிஹாசம்

இதன் தாதுப்பொருள் ''இவ்வாறு இருந்தது'' என்பது. இதிகாசம் இரண்டு. அவை வால்மீகி எழுதிய இராமாயணமும், வியாஸர் எழுதிய மஹா பாரதமும் ஆகும் வேதாச்சாரத்தைப் பின்பற்றிய ஜனசமுதாயவளர்ச்சியையும், நாகரிகத்தையும் அக்காலத்து ஆண்ட அரசர்கள் கதைகளோடு அமைத்துச் சித்தரிப்பது இதிஹாசம்.

இதுவரை கூறிவந்த வேதம், ஆகமம், புராணம், இதிஹாசம் என்பன வற்றிற்குத் தாரதம்மியம் கூறவேண்டுமானால் வேதாகமங்களை — பிரபு சம்ஹிதை என்று கூறலாம். அதாவது யஜமானனின் ஆணை. அதனை ஏன் என்று கேட்க அதிகாரம் இல்லை, அப்படியே பின்பற்றத் தக்கன.

புராணங்கள் ஸ்நேகிதர் கூறும் புத்திமதி போன்று சமயத்தில் நம் குறைகளை எடுத்துக் கூறிக் கண்டித்தும் நமக்கு உதவியும் நம் நலனைக் கூறும் நிலையில் இருப்பன. இதிஹாசம் என்பவை ''காந்தா ஸம் ஹிதை'' என்று கூறலாம். நமது மனைவி நம்மிடம் அன்போடு ஆதரவு காட்டிக் கூறும் புத்திமதி போன்று அமைந்தவை.

இவ்வாறு நம் புராதன நூல்கள் நம் சமயத்தையும், சமூகத்தையும் இன்றும் மேம்பட நிறுத்தி நமது கலாசாரம், ஆத்ம விகாஸம், முதலியன வற்றை காப்பாற்றி வருகின்றன.

தோழமை நெறி

நல்லிசைப் புலவர் வி. சா. குருசாமி தேசிகர் M. A., தருமபுரம்.

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்கு உடனாகி
மாழை யொண்கண் பரவையைத்தந்து ஆண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே''. —சுந்தரர்

சமயாசாரியர் நால்வருள் திருஞானசம்பந்தர், மகன்மை நெறியாலும், திருநாவுக்கரசர் தொண்டு நெறியாலும், சுந்தரர் தோழமை நெறியாலும், மணிவாசகர் மாணவநெறியாலும் இறைவன்பால் பக்தி செலுத்தினர். இந்நால்வர் பெருமக்களுள் சுந்தரர் மேற்கொண்ட தோழமைநெறியை அவர் வரலாற்றைக் கொண்டும், பாடல்களைக் கொண்டும் காண்போம்.

ஓலை காட்டி ஆண்டவர் :

இறைவன் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட்கொள்ள எழுந்தருளியபோதிலிருந்தே, அவரோடு விளையாடும் அருள் விளையாட்டுக்களைச் செய்யத் தொடங்கிவிடுகின்றார். சுந்தரர் தம்மைப் பித்தனென்று வசை மொழியுமாறு நடந்து கொண்டும், தம் கையில் இருந்த படியோலையைப் பிடுங்கிக் கிழித்தெறியுமாறு செய்வித்து மூல ஓலை ஒன்றுள்ளது என்று சுந்தரரை அச்சுறுத்தியும், திருவெண்ணெய்நல்லூர் அவையில் வல்வழக்கிட்டு ஆட்கொண்டும், இறைவன் சுந்தரரோடு செய்தருளிய அருள் விளையாடல்களை தடுத்தாட்கொண்ட புராணத்தில் சேக்கிழார் தெளிவாகக் கூறுகின்றார்.

தம்பிரான் தோழர் :

திருவதிகைச் சித்த வட மடத்தில் சுந்தரர் தங்கியிருந்தபோது முதியவராய் வந்து அவர் முடியில் தம் திருவடிகளைச் சூட்டியருளிய வரலாறு சுந்தரர்பால் இறைவன் கொண்டிருந்த பேரருட்டிறத்தைப் பெரிதும் விளக்கும் நிகழ்ச்சியாகும். மேலும் திருவாரூரில் தியாகேசப் பெருமான் சுந்தரரை விளித்துத் தோழராக நம்மை உனக்குத் தந்தோம் என்றருளியதிலிருந்து சுந்தரர், பெருமானிடம் தோழமை உரிமையோடு பழகவும் பக்தி செய்யவும் முற்படுகிறார். இவ்வுரிமையை இறைவன் சுந்தரருக்கு அளித்ததுமுதல் சுந்தரருக்குத் தம்பிரான் தோழர் என்ற பெயரும் ஏற்படுகிறது.

இறைவனின் இரண்டு தோழர்கள் :

சிவபிரானுக்குப் பழைமையாக உள்ள தோழர் குபேரன். குபேரன் மிக்க செல்வமுடையவர். அளகாபுரியின் தலைவர். குபேரனைத் தோழராக உடையவர் என்ற பொருளில் ''தனதன் நற்றோழா'' என்று பெருமானைத் திருவிசைப்பா ஆசிரியர் விளிப்பதைக் காணலாம்.

தனதன்-குபேரன். பெருமான் செல்வத்திற்கு ஒருவரைத் தோழராகக் கொண்டிருந்தது போலக் கல்விக்குச் சுந்தரரைத் தோழராகத் தேர்ந்து கொண்டுள்ளார் என்று அருளிச் செய்கிருர் நால்வர் நான்மணிமாலையில் சிவப்பிரகாச சுவாமிகள்.

திருமுதுகுன்றத்தில் இறைவன் அளித்த பன்னீராயிரம் பசும்பொன்னைச் சுந்தரர் மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுத்த அற்புதச்செய்தியும், திருவொற்றியூரில் சுந்தரர் சங்கிலியாரை மணம்புரியும் வரலாற்று நிகழ்ச்சியும் பரவையாரின் ஊடல் தீர்க்க இறைவனைச் சுந்தரர் தூதனுப்பிய நிகழ்ச்சியும், இறைவன்பால் சுந்தரர் கொண்டிருந்த தோழமை நெறியை நன்கு புலப்படுத்துவதாகும்.

உங்களுக்கு ஆட்செய்ய மாட்டோம் :

சுந்தரர் இறைவனிடம் தோழமை உரிமையோடு அசதியாடும் ஒரு பாடலைக் காண்போம். திருஓணகாந்தன் தளி என்ற தலத்திற்குச் சுந்தரர் செல்கின்ருர். அத்தலத்து இறைவனை விளித்து ''பெருமானே உமக்கோ, உம்குடும்பத்தைச் சேர்ந்தவர்க்கோ நாங்கள் இனி அடிமை செய்ய மாட்டோம்'' என்கின்ருர். ஏனென்ருல் என்ெருரு கேள்வியை எழுப்பிக் கொண்டு பாடலைத் தொடங்குகின்ருர்.

''திங்கள் தங்கு சடையின் மேலோர் திரைகள் வந்து புரள வீசும்
கங்கையாளேல் வாய்திறவாள் கணபதியேல் வயிறுதாரி
அங்கை வேலோன் குமரன்பிள்ளை தேவியார் கோற்றட்டியாளார்
உங்களுக்கு ஆட்செய்ய மாட்டோம் ஓணகாந்தன் தளியுளீரே''

என்பது அப்பாடல். இறைவனே! அடியார்கள் பலரும் வந்து உம்மைப் பன்முறை வாழ்த்திஞல் வாய்திறந்து இல்லையென்ருே உண்டென்ருே கூருமல் இருக்கின்றீர். உம்முடைய குடும்பத்தவர் அனைவருமே இப்படித்தான் உள்ளனர். உம்திருமுடியில் திங்களோடு விளங்கும் கங்கை, உமையம்மைக்கு அஞ்சி வாய்திறவாமல் இருக்கின்ருள். உம்முடைய மூத்த பிள்ளை யாகிய கணபதியோ வயிறு ஒன்றையே முதன்மையாகக் கொண்டுள்ளார். இளைய பிள்ளை யாகிய முருகனே சிறுபிள்ளை; விளையாட்டொன்றையே செய்யும் இயல்பினர். உம் தேவியாராகிய உமையம்மையோ உம்மை யொழித்துத் தாம் தனியே சென்று அடியவரை ஆள்வாரல்லர். இப்படி விளங்கும் உம்முடைய குடும்பத்திற்கு அடிமையாக, அடியவர்கள் யாரும் விரும்பவில்லை. ஆகவே உங்களுக்கு ஆட்செய்ய மாட்டோம் என்று மறுக்கின்ருர்.

இப்பாடல் புகழாப் புகழ்ச்சி என்னும் அணிவகையைச் சார்ந்தது.

''பழிப்பது போலும் பான்மையின் மேன்மை
புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி''.

என்பது தண்டியலங்காரம். சுந்தரர் இறைவனை விளித்து உரையாடும் இப்பாடலில் அவர்தம் தோழமை உரிமை நன்கு புலப்படக் காணலாம். இப்பாடலில் உமையம்மையைப் பற்றிக் கூறும் ''தேவியார் கோற்றட்டி ஆளார்'' என்ற சொற்ருெடருக்கு வேறுவேறு பொருள்கள் கூறப்படுகின்றன. கோற்றட்டி என்பதனைக் கொற்றட்டி என்பதன் திரிபு எனக் கொண்டு உணவு கொண்டு வந்து தருகின்றவள் என்றும், கோல்தட்டி என்று பிரித்து வீணையை

மீட்டுகின்றவள் என்றும், கோன்தட்டி என்று கொண்டு சிவபெருமானுடைய பேச்சுக்கு மாருக நடவாதவள் என்றும், தம்முடைய இரண்டு குழந்தைகளையும் கோலினுல் அடித்து நன்முறையில் வளர்க்காதவள் என்றும் உரைகள் கூறுவர். கோன்தட்டி ஆளார் எனக் கொண்டு அடியவர்களைச் சிவபெருமானேடு உடன் சென்று ஆட்கொள்ளுவதே தவிரத் தமிய ராய்ச் சென்று ஆளாதவர் என்று கூறும் உரையே சிறந்ததாகும்.

தொண்டர் பெறும் பயன் யாது ?

இத்திருப்பதிகத்தின் பிறிதோர் திருப்பாடல். வாரமாகித் திருவடிக்குப் பணிசெய் தொண்டர் பெறும் பயன் யாது? என ஒரு கேள்வியை எழுப்பி, சிவபிரான், ஊரும் உடமைகளும் இல்லாதவர். அவரிடம் விலைமதிப்புடைய பொருள்கள் எதுவும் இல்லை. அவரிடம் பக்தி செய்து என்ன பயனை அடையப்போகிருேம் என்று கூறும் பாடலும் பழிப்பது போலப் புகழ்புலப்படுத்தும் பாடலாகும்.

''வாரமாகித் திருவடிக்குப் பணிசெய்தொண்டர் பெறுவதென்னே
ஆரம்பாம்பு வாழ்வது ஆரூர், ஒற்றியூரேல் உம்மதன்று
தாரமாகக் கங்கையாளைச் சடையில் வைத்த அடிகேள் உந்தம்
ஊரும் காடு, உம்முடையும் தோலே ஓணகாந்தன் தளியுளீரே''

இத்திருப்பாடலில் ஆரூர் என்பது வினுவாயமைந்து உம்முடைய ஊரன்று, என்ற பொருளி னும், ஒற்றியூர் என்பது ஒற்றியாக (அடமானமாக) வைத்த ஊரென்றும், பொருள் தரப் பாடப்பட்டுள்ளது. இத்திருப்பாடலும் சுந்தரர், பெருமானிடம் உரிமையோடு விளையாடும் முறையிலமைந்த பாடலாக விளங்கிடக் காணலாம்.

சங்கிலியார் திருமணம்:- திருக்கயிலையில் சுந்தரரால் விரும்பப்பட்ட இருவருள் கமலினி திருவாரூரில் பரவையாராகத் தோன்றி சுந்தரரை மணந்தார். அநிந்ததை தொண்டை நாட்டிலே ஞாயிறு என்ற ஊரில் தோன்றி சங்கிலியார் என்ற பெயரோடு திருவொற்றி யூர் திருக்கோயிலில் மலர் தொடுத்துத் திருப்பணி புரிந்து வாழ்ந்து வருகின்ருர். சங்கிலி யாரைக் கண்ட சுந்தரர் அவரைத் தமக்குத் திருமணம் செய்விக்குமாறு இறைவனை வேண்டுகிருர். பெருமான் சங்கிலியார் கனவில் தோன்றிச் சுந்தரரை மணம் புரிந்து கொள்ளுமாறு கூறினுர். சுந்தரரை அடைந்து ''உன்னைப் பிரியேன்'' என்று நம் சந்நிதியில் சபதம் செய்து தந்தால் சங்கிலியை நீ மணம் புரிந்து கொள்ளலாம் எனச் சுந்தரரிடம் தெரிவித்தார். சுந்தரர் இச் சபதத்தினுல் தமது தலயாத்திரை தடையாகுமே என்று கருதி இறைவனை நோக்கி. ''நான் சபதம் செய்து தரும்போது மகிழமரத்தடியில் இருக்குமாறு கேட்டுக் கொண்டார். இறைவன் அதற்கிசைந்து சங்கிலியாரிடம் இதனைத் தெரிவித்து மகிழ மரத்தடியில் சபதம் செய்து தருமாறு சுந்தரரைக் கேட்கும்படித் திருவிளையாடல் புரிகிருர்.

உளோம் போகீர்:-

சங்கிலியாரை மணந்து வாழ்ந்த சுந்தரர் இளவேனிற் காலத்தே திருவாரூர்த் தியாகேசப் பெருமானுக்கு நிகழும் திருவிழா நினைவு மேலிட்டு திருவொற்றியூரைக் கடந்து

திருவாரூர் புறப்படுகிறார். சுந்தரர் சத்தியம் பிழைத்த காரணத்தினால் இரண்டு கண்களை இழந்த நிலையில் தலயாத்திரையை விடாமல் திருவெண்பாக்கத்தை யடைந்து அத்தலத்து இறைவரை நோக்கி ''கோயிலில் உள்ளாயா?'' என்று கேட்க இறைவன் ''ஊன்றுகோல் ஒன்றை அருளி உளோம் போகீர்'' என்று கூறும் நிகழ்ச்சியிலும் தோழமை காரணமான உரையாடல் நன்கு புலப்படுகிறது,

''பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென் கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளாயோ வென்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம் போகீர் என்றானே''

காஞ்சிபுரத்தில் இடக்கண் பெற்ற சுந்தரர் திருவாரூரை அடைந்த போது தமக்கு வலக் கண் அருளுமாறு வேண்டிப் பாடும் பதிகத்திலும் ''ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால் வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே'' என்று கூறும் பாடலும், அவ்வாறே சுந்தரர் இறைவனைத் தோழமை உரிமையோடு உரையாடும் நிலையில் பாடப் பெற்றதாகும்.

''விற்றுக் கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பியாட்-பட்டேன்
குற்றமொன்றும் செய்ததில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகள் என்கண் கொண்டீர் நீரேபழிபட்டீர்
மற்றைக் கண்தான் தாராதொழிந்தால் வாழ்ந்து போதிரே''

என்ற பாடலும் அப்போது பாடியருளியதாகும்.

தோழமைத்தூது: சங்கிலியாரை மணந்தமை கேட்டு ஊடிய பரவையாரின் கோபத்தைத் தணிக்கச் சுந்தரர் தம் தோழராகிய இறைவனைப் பரவையார்பால் இருமுறை தூதனுப்பு கிறார். இறைவன் தூதனுகித் தமக்குத் தொண்டு செய்த பெருங் கருணையைப் போற்றி,

''அடியேற்கு எளிவந்த தூதனைத் தன்னைத் தோழமை அருளித் தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும் தூதனை'' என்று அருளிச் செய்கின்றார்.

தம் அடியவருக்குத் தன்னைத் தோழனாகத் தந்து அவரோடு விளையாடும் இறைவர் தம் அருள் விளையாட்டு ''**சகமார்க்கம்**'' எனப்படும் தோழமை நெறிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

★★

தேவாரம் பெற்ற கோயிலுக்குள் தேவாரம் பெற்ற கோயில்

1. திருவாரூர் அரநெறி — திருவாரூர்
2. திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம் — திருப்புகலூர்
3. மீயச்சூர் இளங்கோயில் — மீயச்சூர்

மாணிக்கவாசகர் அருளிய எட்டாம் திருமுறை

திரு. எம். ஆர். யாழ்கீதசுந்தரம் பிள்ளை, திருவாதவூர் தல ஓதுவார்.

திருவாசகம் பன்னிருதிருமுறையில் எட்டாம் திருமுறையாகும். எட்டாம் திருமுறை திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இருஅருணூல்களையும் குறிக்கும். தமிழில் எட்டின் வடிவம் 'அ'. இரண்டின்வடிவு 'உ', 'அ', 'உ' என்பது ஓங்கார வடிவங்கள் ஆகும். இதனுல் பெறும் குறிப்பு யாதெனின் திருவாசகம் முழுமையும் ஓங்காரப் பொருள் விளக்கமாகும் என்பதே. இதற்கு ஆதாரமாக திருவாசகத்தில் உள்ள கீழ்க்கண்ட பாடல் உள்ளது.

''கட்டு அறுத்து, எனை ஆண்டு, கண் ஆர, நீறு
இட்ட அன்பரொடு, யாவரும் காணவே,
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை-
எட்டினேடு இரண்டும் அறியேனையே.''

முழுமுதற் கடவுளாம் சிவபெருமானது கணநாதர்களுள் தலையானவர் திருநந்தி தேவர். அவரே ஓங்கார வடிவம் என்பது மரபு. அந்நந்தியம் பெருமானே மணிவாசகப் பெருமாணுக வந்து ஓங்காரப் பொருளை உலகிற்கு உணர்த்தினர் என்பதும் மரபு. இதற்கு ஆதாரமாகக் கீழ்வரும் திருத்தாண்டகப் பாடலைக் காண்க.

குராமலரோ டரமதியம் சடைமேற் கொண்டார்.
குடமுழநந் தீசனைவா சகனுக் கொண்டார்
சிராமலைதஞ் சேர்விடமாத் திருந்தக் கொண்டார்
தென்றனெடுந் தேரோனைப் பொன்றக் கொண்டார்
பராபரனென் பதுதமது பேராக் கொண்டார்
பருப்பதங் கைக்கொண்டார் பயங்கள் பண்ணி
இராவணனென் றவனைப்பே ரியம்பக் கொண்டார்
இடருறுநோய் தீர்த்தென்னை யாட்கொண்டாரே.

மற்றமற்ற சமயங்களைப்போல் அல்லாமல் உடலோம்பலை உயிரோம்புதற்கு உறுதுணையாகக் கொள்வது சைவ சமயம். 'ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டு' 'உண்டுடுத்து' இருக்க வேண்டும் என்பது திருவாசகக் கொள்கை. உயிரோம்புதற்கு உணவு தேவை. அவ்வுணவு நால்வகை யாகும். அவை உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன. அமுதை உண்கிறோம்; கரும்பைத்தின்கிறோம்; பாலைப் பருகுகின்றோம்; தேனை நக்குகின்றோம். உயிரோம்புதல் கடவுளின் தனிக்கருணையினுலேயேயாம் என்னும் தத்துவத்தை உணர்த்து

வதற்காக இறைவனை 'பழச்சுவை'யாகவும், கோதிலா அமுதாகவும் (உண்பன) 'கன்னலொடு நெய்' 'கன்னல் கனிநேர்'' ஞானக்கரும்பின் தெளிவு' (தின்பன) 'கறந்தபால்' 'செழுந்தண் பாற்கடல்' (பருகுவன), 'சுவைதருகோற்றேன், ''கருணைவான்தேன்' 'நாடற்கரியநலத்தை நந்தாத்தேன்' ஆனந்தத்தேன்' (நக்குவன) மணிவாசகர் காண்கின்றார்.

கரைகாணாத் தமிழ் நூற்கடலைப் பலவாறாகப் பிரிக்கலாம். என்றாலும் அறுவகையாகப் பார்ப்பது மரபு. அவை நீதிநூல், பத்திநூல், இலக்கணநூல், புராணநூல் உரைநூல் தத்துவநூல் என்பனவாகும். இப்பெரும் பிரிவின் தலையாய நூற்களாகக் கருதப்பெறும் நூற்களைப் பற்றிய பாடல் பின்வருமாறு.

'வள்ளுவர் நூல் **அன்பர் திருவாசகந்** தொல்காப்பியமே
தெள்ளுபரிமேலழகர் செய்தவுரை-ஒள்ளிய சீர்த்
தொண்டர் புராணந் தொகை சித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந்தரம்.'

இதனால்தான் திருவாசகத்தைச் சிகாமந்திரம் (மந்திரத்துள் உயர்ந்தது) சிவானுபவச் செல்வம் என்று பெரியோர் பலவாறாகப் போற்றுவர். சிவானந்த அனுபவம் மொழிக்கு அப்பாற்பட்டு பொறிபுலன்களாற் அறியப்படுவது. திருவாசகம் சிவானுபவமாதலால்தான் பிறமொழி பிறமத அறிஞர்களான, டாக்டர் ஜி. யு போப், வில்சன் உட், டாக்டர் ரோஸ்ட், சூலின் வில்சன், கௌடி எட்டி ஆகியோர் திருவாசகப் பாடல்களால் தம்வசமிழந்தனர்.

திருவாசகத்தினைப்போலவே திருக்கோவையாரும் உயர்ந்த பத்திப்பனுவலாகும். திருவாசகத்தினையே அகப்பொருள் நூல் என்று ஒருவர் கூறியுள்ளார். சிவபுராணம் திருவாசகத்திற்கு தற்சிறப்புப்பாயிரம். திருச்சதகம் நூல் நுதலியபொருள்; நீத்தல் விண்ணப்பம் பிரிவுத்துன்பம்; மேல்வருவன காதற் பாவனை என்பது அவர்தரும் குறிப்பு. இவ்வாறு மணிவாசகரது அருணூல்களைப் பலர் பலபடியாகக் கூறுவர் என்பதை உணர்ந்து பாடிய பாடல் கீழ்க்கண்டவாறு:-

ஆரணங்கா ணென்பரந்தணர் யோகியராக மத்தின்
காரணங்கா ணென்பர்காமுகர் காமநன்னூல தென்ப
ரேரணங்கா ணென்ப ரெண்ணெழுத்தன்பரின்புல வோர்
சீரணங்காய சிற்றம்பலக்கோவையைச் செப்பிடினே.

தமிழ் மொழியின் முதல் உலா (ஆதியுலா) கடவுளைப் பாடுவது போன்று முதல் கோவையும் (திருக்கோவையார்) கடவுளையே பாடுகின்றது. கோவையாரின் சிறப்பைக் கூறும் பாடல்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

வருவாசகத்தினின் முற்றுணர்ந்தோனைவண் தில்லை மன்னைத்
திருவாதவூர்ச் சிவபாத்தியன் செய் திருச்சிற்றம்பலப்
பொருளார்தரு திருக்கோவை கண்டேயு மற்றப்பொருளைத்
தெருளாத வுள்ளத்தவர் கவிபாடிச் சிரிப்பிப்பரே.

- நம்பியாண்டார் நம்பி

உருவாருந் தமிழ்ச்சங்கத் தடம்பொய்கைத் தோன்றி
யுயர்ந்தோங்கு மெய்ஞ்ஞான வொளியையுடைத் தாகி
மருவாருங் கிளவியிதழ் நானூறுகி
மதுப் பொருள்வாய் மதிப்புலவர் வண்டாயுண்ண
தருவாரும் புலியூரி னுலகுய்யக் குளிப்போன்
றடங்கருணை யெனுமிரவி தன்கதிரா லலருந்
திருவாதவூராளி திருச்சிற்றம் பலவன்
திருவடித்தாமரைச் சாத்தும் திருவளர் தாமரையே.

- அபியுக்தர்

திருவாசகம் திருக்கோவையார் ஆகிய இவ்விரு அருணூல்களும் சிவசக்தியின் சொல்லாலயமாகும். திருவாசகம் சுவாமி கோயில். திருக்கோவையார் அம்மன் கோயில் சிவபுராணம் திருவாசகக் கோயிலின் (இராசகோபுரம்) நுழைவாயிலாகும். இது எல்லை யில்லாத பெருமையுடைய ஆகமப்பொருளாகும். இதனை ஓதும் பெருமையினைக் கீழ்க்கண்ட பாடல் விளக்கும்.

'திருத்தகு சிவபுராண சிரவண விசேடத்தாலே
உருத்தகு பாவநீங்கும் புண்ணிய மொருங்கு மேவும்
மருத்தகு பத்தி வாய்க்கு மாதேவனருளுண்டாகும்
கருத்தகு தீமையெல்லாங் கழன்று மேற்கதியுண்டாமால்'.

முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாம் சிவபெருமானது காலங்கடந்த பழமையையும், அருவ நிலையையும் காலங்கடந்த தமிழால் விளக்கவந்த மணிவாசகப் பெருமான் தாம் அருளும் திருவாசகப் பாடல் தொகையையும் குறிக்கும் வண்ணம் 'வாழ்க' என்ற மங்கலச் சொல்லை அறுமுறை பெய்தும் 'வெல்க' வென்னும் வெற்றிச் சொல்லை ஐந்து முறைகூறியும் 'போற்றி' என்னும் மந்திரச்சொல்லை எண்முறை வழுத்தியும் உள்ள பாங்கு புலவர்க்கேயன்றி மற்றவர்க்கும் இன்பம் பயப்பதாகும். நுழைவாயிலைக் கடந்த பின்வரும் மகாமண்டபமாக கீர்த்தித் திரு அகவல் உள்ளது. இதில் இறைவன் தன் அடியார் களுக்கு அருள் புரிந்த வரலாறுகளையெல்லாம் எடுத்தோதுகின்றது. மகாமண்டபத்துக்கு அடுத்து வரும் அர்த்த மண்டபமாக திருவண்டப்பகுதியுள்ளது. இப்பகுதியில் இறைவன் பெரியதிற் பெரியனாகவும் சிறியதில் சிறியனாகவும் நிற்கும் அருட்செயல் கூறப்படுகின்றது கருவறையாக உள்ளது போற்றித் திருஅகவலாகும். இதில் இறைவனது இயல்புகளைக் கோவையாக வைத்துப் போற்றுகின்றார். தொடர்ந்து தொடர் நிலைச் செய்யுளாக நூறு பாடல்களைக் கொண்ட 'சதகம்' பாடினார். இது நூற்றுக்கால் மண்டபமாகத் திகழ்கின்றது. மற்றும் இருபது பாடல்கள், பதிகங்கள் கொண்ட பலவகைத் தொகை நிலைச் செய்யுட்களால் பாமாலைகள் புனைந்தருளினார். இப்பாமாலைகள் சில மகளிர் விளையாடல் பாடல்கள் போல் அமைந்துள்ளன. ஒரு சில பதிகங்களில் தாமே இறைவனிடம் நேராகவும் விண்ணப்பிக் கின்றார்.

கோயில் என்ருலே சுவாமிகோயில், அம்மன்கோயில் எனப்படுவது போன்று திருவாசகம் என்ருலே திருவாசகமும் திருக்கோவையாருமாகும். இதனை வலியுறுத்தும் பாடல் கீழ்க்கண்டவாறு:

தேவர்குறளும் திருநான்மறை முடிபும்
மூவர்தமிழும் முனிமொழியும்—கோவைத்
திருவாசகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவாசக மென்றுணர்.

இறைவனது திருக்கரத்தினுல் எழுதப் பெற்ற பெருமையுடையதாகலின் திருக்கோவையாரும் காரணவகைபற்றித் திருவாசகம் எனலாம். அதுகுறித்துத் தான் 'கோவைத் திருவாசகம்' என மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. அகப்பொருள் இலக்கணத்திற்குப் பேரிலக்கியமாக அமைந்துள்ள திருக்கோவையார் சக்தியின் வடிவமாகும்.

இங்ஙனம் சிவசத்தியின் வடிவமாக அமைந்துள்ளது மணிவாசகம்.

மணிவாசகர் இறைவன் தமக்கு அருள்புரிந்த நிலையையும் திருவருட்செயல்களையும் பலவாறு கூறினுலும், மதுரை நகரில் இறைவன் நிகழ்த்திய லீலாவினேதங்களை மிகவும் சிறப்பித்துள்ளார்.

கீர்த்தித்திருஅகவலில்,

'அரியொடு பிரமற் களவறி யொண்ணுன்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டு கொண்டருள அழகுறு திருவடி
பாண்டியன் தனக்குப் பரிமாவிற்
றீண்டு கனக மிசையப் பெரு அ
தாண்டான் ... ...
'மதுரைப் பெருநன் மா நகரிருந்து
குதிரைச் சேவகனுகிய கொள்கையும்
ஆங்கது தன்னில் அடியவட்காகப்
பாங்காய் மண் சுமந் தருளிய பரிசும்'
'வாதவூரதனில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்'

போற்றித்திரு அகவலில்,

'ஆடகமதுரை அரசேபோற்றி
கூடலிலங்கு குருமணி போற்றி,

திரு அம்மானையில்,

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்து ஈசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலி மதுரை
மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன் மேனி-பாடுதுங்காண் அம்மானாய்!

திருப்பூவல்லியில்,

'திண்போர் விடையான், சிவபுரத்தார் போர் ஏறு
மண்பால், மதுரையில் பிட்டு அமுது செய்தருளி
தண்டாலே பாண்டியன்-தன்னைப்பணி கொண்ட
புண் பாடல் பாடி நாம்-பூவல்லி கொய்யாமோ!

திருவார்த்தையில்.

''அம் கணன், எங்கள் அமரர் பெருமான், அடியார்க்கு அமுதன் அவனிவந்த எங்கள் பிரான், இரும்பாசம் தீர இகபரம் ஆயது ஓர் இன்பம் எய்த சங்கம் கவர்ந்து, வண்சாத்தினோடும் சதுரன் பெருந்துறைஆளி அன்று மங்கையர் மல்கு மதுரை சேர்ந்தவகையறிவார் எம்பிரான் ஆவாரே''

ஆனந்தமாலையில்,

நரியைக்குதிரைப் பரியாக்கி ஞால மெல்லாம்
நிகழ்வித்து
பெரிய தென்னன் மதுரை யெல்லாம்
பிச்சது ஏற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே! அவிநாசியப்பா! பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதி! செய்வது ஒன்றும்
அறியேனே.

திருக்கோவையாரில்.

சிறை வான் புனல் தில்லைச் சிற்றம் பலத்தும் என்
சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்
தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ? அன்றி ஏழிசைச் சூழல்
புக்கோ?
இறைவா தடவரைத் தோட்கென் கொ லாம்
புகுந்தெய்தியதே;

இத்தகு பெருமை பல பூண்ட திருவாசக நூல் தமிழர் கைகளில் திகழ வேண்டும். தினமும் திருவாசகத்தை முறையோடு ஓதவேண்டும். அதனால் இறைவன் 'வேண்டுவார் வேண்டுவதை ஈவான்'!

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாம் திருமுறை – திருவிசைப்பா

கவிஞர் வி. துரைசாமி, துணைப் பேராசிரியர், மதுரைக் கல்லூரி.

சைவசமயந் தந்த பக்தித் தமிழ்க்கருநூலங்களைத் திருமுறைகள் என்று முன்னோர் சாற்றினர். நம்பியாண்டார் நம்பி மூலமாக இத்திருமுறைகளைக் கண்டுபிடித்து முறைப் படுத்தியவன் முதலாம் இராசராசன் என்ற சோழப் பேரரசன் என்பது யாவருமறிந்ததே. இவன் எடுப்பித்த தஞ்சை இராசராசேச்சுரப் பெருங்கோயிலில் பணிவிடையின் பொருட்டு நியமிக்கப்பட்டிருந்த தளிச்சேரிப் பெண்களில் சிலரது பெயர்கள், ஒன்பதாந்திருமுறையில் சில பதிகங்களில் வரும் 'நீறணி பவளக் குன்றம்', 'எடுத்த பாதம்' 'மழலைச் சிலம்பு' என்பன போன்ற சொற்களைக் கொண்டிருப்பதாக அறியப் படுதலின் முதலாம் இராசராசன் காலத்திலேயே ஒன்பதாம் திருமுறை சிறப்புற்றிருந்ததென்று அறியப்படுகிறது.

இத்திருமுறையில் திருமாளிகைத் தேவர் முதல் சேதிராயர் என்பவர் முடிய ஒன்பது பேர் இயற்றிய திருவிசைப்பாவும், சேந்தனர் என்பவர் இயற்றிய திருப்பல்லாண்டும் இடம் பெற்றுள்ளன.

இவற்றால் பாடப்பட்ட தலங்கள்:- கங்கை கொண்ட சோளேச்சரம், தஞ்சை இராச ராசேச்சரம், திருக்கலந்தை ஆதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருச் சாட்டியக்குடி, திருப்பூவணம், திருமுகத்தலை, திருவாரூர், திருவாவடுதுறை, திருவிடைக்கழி' திருவிடைமருதூர், திருவீழிமிழலை, திரைலோக்கிய சுந்தரம், தில்லை என்பனவாகும்.

இத்திருமுறையிலுள்ள பதிகங்கள், ஆதித்தசோழன் காலமுதல் கங்கைகொண்ட சோழன் காலம் முடிய இவ்வரசர்களின் இடைப்பட்ட காலத்தே இயற்றப்பட்டன. சேந்தனர் பாடிய திருவிசைப்பாவில் திருவிடைக்கழி முருகப்பெருமான் மீது பாடிய பதிகமொன்று அமைந் திருப்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். மூவர் தேவாரம் போன்று திருவிசைப்பாப் பாடல் களும் பண்ணமைதி பெற்று அம்முறைப்படி ஓதப்பட்டு வந்தன வென்பது இதன் தனிச் சிறப்பாகும்.

திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா

திருமாளிகைத் தேவர் போகர் என்னும் சித்தருடைய மாணக்கருள் ஒருவர் என்பர். இவர் திருவாவடுதுறையில் வாழ்ந்து வந்தவர். நாரசிங்கன் என்னும் கொடிய அரசனை வெல்லும்பொருட்டு ஸ்ரீ கோமுத்தீசுவரர் கோயில் மதில் மேலிருந்த இடபங்களை இவர் ஒருருவாக்கி அனுப்பினரென்பர். திருவாவடுதுறை மடத்தில் இவருக்குக் கோயில் உள்ளது. ஆலயத்தில் உச்சிக்கால பூசை ஆனதும் ஆதிசைவர் இங்கே வந்து பூசையைமுடித்தபின்னர் தான் மடத்தில் பகல் போசனம் நடைபெறுவது வழக்கம். இவர் காலம் 10--11 நூற்றாண்டா கும்.

இவரது திருவிசைப்பா தில்லைப்பெருமான் மீது பாடப்பட்டதாக நான்கு பதிகங்கள் காணப்படுகின்றன. முதற் பதிகத்தின் முதற் பாசுரம் (பண்-பஞ்சமம்) கற்பாருளத்தைக் கசிவிப்பதைக் காணலாம்.

''ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே''

சேந்தனர் திருவிசைப்பா

சேந்தனர், பட்டினத்து அடிகளின் உதவியாளர் என்று கூறும் வழக்கொன்றுள்ளது. இவரைச் சோழன் சிறையிட்டபோது திருவெண்காடர்,

''செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்த னிட்ட
கைத்தளை நீக்கி யென் முன் காட்டுவெண் காட்டு ளானே''

என்று பாடியதாகக் கூறுவர். இதனால் இவர் நாங்கூரினர் என்று தெரிகிறது. திருவிசைப்பாப் பாடிய சேந்தனர் இவரின் வேறானவரென்று கூறுவாருமுண்டு. ஸ்ரீ சிவஞான சுவாமிகள் இயற்றிய ஒரு பாடலால் இவர் ஒரு சமயம் தில்லைப் பெருமானுக்குத் தவிட்டை அமுதாக நிவேதனஞ் செய்தாரென்றும் அரிய செய்தி புலனாகிறது. ஒன்பதாந் திருமுறையில் திருப் பல்லாண்டும் இவர் பாடியதேயாகும்.

திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி ஆகிய தலங்கள் மீது திருவிசைப் பாவும், தில்லைக்குத் திருப்பல்லாண்டும் சேந்தனர் பாடியனவாகும். சாந்தையூரைச் சார்ந்த அந்தணர் ஆயிரவர் திருவாவடுதுறையீசனை வழிபட்டு பூசித்தனர் என்ற செய்தி இவர் பாசுரங்களால் அறியப்படுகிறது.

''பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப் புகழாளர் ஆயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணிசெய் சீர்மிகு காவிரிக் கரைமேய
ஐயா திருவா வடுதுறை யமுதே யென்றுன்னை யழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக்கொன்றருளா தொழிவது மாதிமையே''

திருப்பல்லண்டில்,

''மிண்டுமனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட் செய்ம்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்லதோ ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்றுமென்று முள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே''

என்ற பாசுரம் தொண்டின் சிறப்பை வலியுறுத்துகின்றது.

கருவூர்த்தேவர் திருவிசைப்பா

இவர் சோழநாட்டிலுள்ள கருவூரைச் சேர்ந்தவரென்றும், சித்தருள் ஒருவரென்றும் கூறுகின்றனர். இவரைப்பற்றிய கர்ணபரம்பரைச் செய்தியொன்று பின்வருமாறு:-

முதலாம் இராசராசன் தஞ்சையில் பெருங்கோயிலெடுப்பித்துப் பெருவுடையாரைப் பிரதிட்டை செய்யும்போது அஷ்டபந்தன மருந்து இளகியதால் சிவலிங்கம் ஆவுடையாரோடு பொருந்தவில்லை யென்பது கண்ட மன்னன் மிக வருந்தினுன். அமைச்சர் கருவூர்த் தேவரை யழைக்க, அவர்வந்து கண்டு, தன் வாய்த் தம்பலத்தை யுமிழ, மருந்து இறுகிற்றென்றும் கூறுவர். இவர் கங்கை கொண்ட சோளேச்சரத்திற்கும் திருவிசைப்பா இயற்றியுள்ளதால் இராசராசன் மகன் கங்கை கொண்ட சோழன் காலத்திலும் வாழ்ந்திருத்தல் வேண்டும். இவரது திருவுருவம் தஞ்சைப் பெருங்கோயிலிலும், கருவூர் ஆனிலைத் திருக்கோயிலிலும், காணப்படுகின்றது.

''நீலமே கண்டம்; பவளமே திருவாய்;
நித்தில நிரைத்திலங் கினவே
போலுமே முறுவல்; நிறையவா னந்தம்
பொழியுமே திருமுகம்; ஒருவர்
கோலமே யச்சோ அழகிதே யென்று
குழைவரே கண்டவர்; உண்டது
ஆலமே யாகில் அவரிடங் களந்தை
அணிதிக ழாதித்தேச் சரமே''

இறைவனின் திருக்கோலத்தில் ஈடுபடுத்துகின்ற இப்பாசுரம் திருக்களந்தை ஆதித்தேச்சுரப் பெருமான் மீது பாடப்பட்டது. கங்கைகொண்ட சோளேச்சரத் திருவிசைப்பாவில் ஓர் பாடல் கருவூராரது பக்தியைச் சிறப்பிக்கின்றது.

''தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றுயிரங் கூறிட்
டத்தில்அங் கொருகூறு உன்கண்வைத் தவருக்
கமருல களிக்குநின் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலஞ் சென்னி மேல்வைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே''

பூந்துருத்தி காட நம்பி

இவர் முதலாம் இராசராசன் காலத்தே வாழ்ந்து வந்த அடியாராவர். இராசராசனது 35ம் ஆட்சியாண்டில் அமைந்த சாசனம் ஒன்றில், நம்பி காட நம்பி ஆத்ரேய கோத்திரத்தினராகிய அடியார் என்ற குறிப்பு காணப்படுகிறது. காடவர்கோன் என்றும் இவர்குறிக்கப் படுதலால் பல்லவர்வகையினராக இவர் கருதப்படுவதற்கும் இடமுண்டு.

கண்டராதித்தர்

இவர் சோழமன்னர் மரபினராவர். இவரது திருவிசைப் பாவில் திருக்கடைக் காப்புச் செய்யுளில்,

''சீரான் மல்குதில்லைச் செம்பொ னம்பலத் தாடிதன்னைக்
காரார் சோலைக் கோழிவேந்தன் தஞ்சையர் கோன் கலந்த
ஆரா வின்சொற் கண்டரா தித்தன்''

என்ற குறிப்புக் காணப்படுவதால் இச்செய்தி உறுதிப்படுகின்றது. இவரது தந்தை முதலாம் பராந்தகன் ஆவன். தன்தந்தை தில்லைச் சிற்றலம்பத்திற்குப் பொன்வேய்ந்த செய்தியைத் தம் பாடலில் இவர் குறிப்பிடுகின்ருர். சாசனக் குறிப்பொன்றில் இவர், ''சிவஞான கண்டராதித்தர்'' எனக் குறிக்கப் படுவதால் இவரது சிவபக்திச் சிறப்பு விளங்கும்.

கண்டராதித்தர் இளமையிலேயே சிவபதமெய்தினுர். இவரது தேவியார் செம்பியன் மாதேவி நீண்டகாலம் வாழ்ந்திருந்து பல சிவாலயத் திருப்பணிகளைப் புரிந்தனர் என்பது சாசனங்கள் காட்டும் செய்தியாகும். கணவரும் மனைவியும் சேர்ந்து சிவபெருமானை வணங்கும் கோலத்தில் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. முதலாம் இராசராசன் செம்பியன் மாதேவியாருருவைப் பிரதிட்டை செய்து வணங்கினுன்.

வேணுட்டடிகள்

இவர் கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் ஒன்ருன வேணுட்டினர். தற்போதைய தென்திருவாங்கூர்ப் பகுதியே வேணுடென்பர். அடிகள் என்ற அடையால் இவர் துறவியோ வென ஐயுற இடமுண்டு.

திருவாலியமுதனுர்

இவரது பெயரைக் கொண்டு இவர் சோழநாட்டிலுள்ள திருவாலி என்னும் ஊரினர் என அறிகிரும். இவரது பெயர் அமுதனுர் என்பதும், அந்தணர் என்பதும், மயிலையர் மன்னன் என்பதும் பின்வரும் இவரது குறிப்புக்களால் காணக் கிடைக்கின்றன.

''வரைசெய் மாமதில் மயிலையர் மன்னவன், மறைவல திருவாலி......''
''தூய நான்மறையான் அமுத வாலிசொன்ன தமிழ்மாலை''
''அறைசெந்நெல் வான்கரும்பின் அணியாலைகள் சூழ்மயிலை, மறைவல வாலி''

என்பன இவரது பாசுரங்களில் வரும் அடிகளாகும், அமுதன் என்னும் பெயர் ஓரிடத்து மட்டும் காணப்படுகிறது.

புருடோத்தம நம்பி

இவரது திருவிசைப்பாவின் திருக்கடைக் காப்புச் செய்யுளில், ''மாசிலா மறை பல வோது நாவன், வண்புருடோத்தமன்'' என்னும் அடியால் இவரும் அந்தண மரபினரென அறியப்படுகிருர், இவரைப் பற்றிய வேறு செய்திகள் ஒன்றும் கிடைத்தில.

சேதிராயர்

இவர் மலையமான்களின் பரம்பரையினராக இருக்கக் கூடும், அறுபத்து மூவரில் ஒருவரான மெய்ப்பொருள் நாயனுர் சேதிநாட்டரசரென்பது ஈண்டு கருதத் தக்கது. இவர் தம்மை,

''ஏயுமா றெழிற் சேதிபர் கோன் தில்லை
நாய னுரை நயந்துரை செய்தன''

எனக் கூறிக் கொள்வதால் இவர் அரசரென்பது புலப்படுகின்றது. இவரது காலம் முதலியன அறியக் கூடவில்லை.

அரிய சொற்றெடர்களும் பண்ணமைதியும் கொண்ட திருவிசைப்பா-திருப்பல்லாண்டு எனும் பக்திப் பாசுரங்கள் ஒன்பதாம் திருமுறையாகச் சைவவுலகத்தில் பெருமதிப்புற்று விளங்குகின்றன. இவற்றை மக்களிடையே நன்கு பரவச்செய்து தமிழின்பமும், சிவனருட் செல்வமும் பெற்று மக்கள் நன்மையடையத் தொண்டாற்றுவது மிகவும் இன்றியமையாத தாகும். திருமுறைகளைப் பரப்புவதற்கென்றே தோற்றுவிக்கப்பட்ட மதுரைப் பன்னிரு திருமுறை மன்றம் இத்தொண்டினை அயராது இயற்றிப் பெருமையுற எல்லாம் வல்ல சொக்கரின் திருவடிகளை இறைஞ்சுகிறேன்.


★★

நாயன்மார்கள் பெயர், குலம், ஊர், திருநட்சத்திரம்

சித்திரை:- தில்லை வாழ் அந்தணர் — ஆண்டு முதல்நாள்
மங்கையர்க்கரசியார் — அரசர் — மதுரை — ரோகிணி
விறன் மிண்டர் — வேளாளர் — செங்குன்றூர் — திருவாதிரை
இசை ஞானியார் — ஆதிசைவர் — திருநாவலூர் — சித்திரை
திருக்குறிப்புத் தொண்டர் — ஏகாலியர் — காஞ்சிபுரம் — சுவாதி
திருநாவுக்கரசர் — வேளாளர் — திருவாமூர் — சதயம்
சிறுத்தொண்டர் — மா மாத்திரர் — செங்காட்டங்குடி — பரணி

வைகாசி:- சோமாசிமாறர் — அந்தணர் — திருவம்பர் — ஆயில்யம்
நமிநந்தியடிகள் — அந்தணர் — ஏமப்பேறூர் — பூசம்
திருஞானசம்பந்தர் — அந்தணர் — சீகாழி — மூலம்
முருகநாயனுர் — அந்தணர் — திருப்புகலூர் — மூலம்
திருநீல நக்கநாயனுர் — அந்தணர் — சாத்தமங்கை — மூலம்
திருநீலகண்ட
யாழ்ப்பாணர் — பாணர் — எருக்கத்தம்புலியூர் — மூலம்
கழற்சிங்கநாயனுர் — அரசர் — ... ... — பரணி

ஆனி:- ஏயர்கோன்கலிக்காமர் - வேளாளர் - திருப்பெருமங்கை-ரேவதி
அமர்நீதி நாயனுர் — வணிகர் — பழையாறை — பூரம்



17-12-73-இருபதாம் ஆண்டுத் திருமுறைப் பெருவிழாவில்
"அருள்மொழி அரசு" திருமுருக கிருபானந்தவாரியார்
சுவாமிகள் விரிவுரையாற்றல்.



12-12-1973-இருபதாம் ஆண்டுத் திருமுறைப் பெருவிழாவில் சிவதீட்சை
பெற்ற அன்பர்களுடன் ஆடூர். சிவஸ்ரீ. வைத்தியநாத சிவாசாரியார்.

ஒன்பதாம் திருமுறை திருப்பல்லாண்டின் மாட்சி

செ. வைத்தியலிங்கன், எம். ஏ., எம். லிட்.,
தமிழ் விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

உலகத்திலே நன்னெறி தழைத்திடத்தானும் ஆடல் புரிந்து கொண்டு பிறரையும் ஆட்டுவித்துக்கொண்டிருக்கும் தில்லைச் சிற்றம்பலவனைப் பல்லாண்டு அருளோச்சி வாழுமாறு மனங்குளிர வாழ்த்திப் பாடுகின்ருர் சேந்தனுர். நந்தனுர் அவதரித்த குலத்தில் தோன்றிய சேந்தனுர் தம் பக்தியீடுபாட்டினுல் ஆடல்வல்லானுக்கே அவிழுணவைக் — களியமுதினை ஊட்டிய அருளாளர். அவரது சைவங்கனிந்த திருவுள்ளத்தினையும், பிற அருளாளர்களின் பாசுரங்களிலே கொண்ட ஈடுபாட்டினையும் திருப்பல்லாண்டில் கண்டு இன்புறலாம்.

காலத்திற்கும் இடத்திற்கும் அப்பாற்பட்டு, ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாக நிற்கும் பரம்பொருளைச்சின்னுள் பல்பிணிச்சிற்றறிவுடைய மருள்மக்கள் பல்லாண்டு கூறி வாழ்த்தி நிற்கத் தகுதியுண்டா என வினவலாம். வானவர்கள் தாம் வாழ இறைவனை வாழ்த்துவது போல, நாமும் நாம் வாழ வாழ்த்துகின்ருேம். இவ்வாறு இறைவனுக்குப் பல்லாண்டு கூறும் பழக்கம் தேவார ஆசிரியர் காலத்திலேயே இருந்து வந்ததை அப்பரடிகள்

'நாடிக் காணமாட்டாத் தழலாய நம்பானைப்
பாடுவார் பணிவார் பல்லாண்டிசை
கூறு பத்தர்கள் சித்தத்துள்புக்குத்
தேடிக் கண்டு கொண்டேன் திருவாரூர் அம்மானே' (4-20-10)

என இயம்புதலால் அறியலாம். என்ருலும், பல்லாண்டிசையானது பதிக அளவில் வடிவம் பெற்றுப் போற்றப் பெறுவது பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டிற்குப் பிறகே எனக் கருதலாம்.

சைவத்திருக்கோயில்களில் **'பஞ்சபுராணம்'** பாடுதலை ஒரு மரபாகக் கொண்டுள்ளனர். அப்பஞ்சபுராணத்துள் 8250 பாசுரங்களடங்கிய **மூவர் தேவாரத்துள்** ஒன்றும், 656 பாசுரங்களடங்கிய **திருவாசகத்துள்** ஒன்றும் 288 பாடல்கள் கொண்ட **திருவிசைப்பாவுள்** ஒன்றும், 13 பாடல்கள் கொண்ட **திருப்பல்லாண்டுள்** ஒன்றும், 4286 செய்யுட்கள் கொண்ட **பெரிய புராணத்துள்** ஒன்றுமாக ஐந்தே அமைகின்றன. இதனுல் திருப்பல்லாண்டின் தனிப்பெரும் மாட்சி புலனுகும்.

வைணவத் திருப்பல்லாண்டுடன் ஒப்பீடு:

திருமாலடியவராகிய பெரியாழ்வார், திருமால் பேரழகுடன் திருவீதியுலாப் போதலைக் காண்கிருர்; கண்ணேறு படாதிருக்க அவர்மீது திருப்பல்லாண்டு பாடி மனநிறைவு கொள்கி

கிருர். அந்தத் திருப்பல்லாண்டானது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதலாயிரத் தொடக்கத்திலேயே சிறப்பிடம் பெறுகின்றது.

சைவ அடியவராகிய சேந்தனுர் அருளிய திருப்பல்லாண்டு தில்லையம்பலவனின் திருத் தேரோட்டத்திற்குக் காரணமாகிறது; அஃதாவது, திருவாதிரைத் திருவிழாத் தொடர்பாக ஓடவேண்டிய தேர் தடைப்பட்டு நிற்க, இதன் தெய்வ நல ஆற்றலால் ஓட்டப்பெறுகின்றது.

இந்தத் திருப்பல்லாண்டு சைவத் திருமுறைகளுள் ஒன்பதாந் திருமுறையுள் திருவிசைப்பாவுடன் இணைந்த பெருமை கொண்டு, சைவமெய்யன்பர்களால் பயிலப்பெறுகின்றது.

இறைவனின் அருள்வெள்ளம் எங்கும் பரந்தோடினுலும் அதனைப் பயன் படுத்துகின்ற ஆகூழும் நல்லுள்ளமும் பக்தி வாய்ப்புடைய சிலருக்கே கிட்டும், இதனையுணர்ந்து கொண்ட பெரியாழ்வார்,

‘ஏடு நிலத்தி லிடுவதன் முன்னம்வந் தெங்கள் குழாம் புகுந்து
கூடும் மனமுடை யீர்கள் வரம்பொழி வந்தொல்லைக் கூடுமினோ
நாடும் நகரமும் நன்கறிய நமோநா ராய ணுயவென்று
பாடு மனமுடைப் பத்தருள் ளீர் வந்து பல்லாண்டு கூறுமினே (4)

எனப் பிறரைப் பார்த்து ஆர்வமுற அழைத்தலைக் காணலாம்.

சைவச் சேந்தனுர் இதே பாங்குடன் பிறரைப் பார்த்துக் கூறுகையில், ஈசன் திறத்திலே உள்ளமுருகாதவர்கள் ஒதுங்கி விடுமாறும், அன்பினைப் புலப்படுத்தி ஆட்செய்ய விரும்பும் அடியவர்கள் திருவருளை மொண்டு கொள்ள விரைந்து வருமாறும் கூறுகின்ருர்; இதனை.

மிண்டு மனத்தவர் போமின்கள்
 மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
 ஈசற் காட் செய்மின் குழாம்புகுந்து;
அண்டங் கடந்த பொருள்அள
 வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
 என்றே பல்லாண்டு கூறுதுமே (2)

என வரும் பாடலால் அறியலாம்.

இறைவனிடம் தொழும்பு பூண்டு திருத்தொண்டியற்ற நினைக்கும் அருளாளர்கள் தாம் வழிவழிவந்த அடியவர்களென்று உணர்ந்து கூறிக் கொள்வதிலே தனி நாட்டங்கொண்டிருப்பார்கள்.

பெரியாழ்வார் இதனை மனத்துட் கொண்டு பாடுகையில்,

‘எந்தைதந் தைதந்தை தந்தைதம் மூத்தப்ப னேழ்படிகால் தொடங்கி
வந்து வழிவழி யாட்செய்கின் ருேம்திரு வோணத் திருவிழவில்’ (6)

என்றும்,

'... ... குடிகுடி யாட் செய்கின்றோம்' (7)

என்றும்,

'... .... நானு முனக்குப் பழவடியேன்' (11)

என்றுங் கூறித் தம் அடிமைத்திறத்தினைப் புலப்படுத்துகின்றார்.

சேந்தனாரும் இவ்வண்ணமே தம் கொத்தடிமைத் திறத்தினைப் புலப்படுத்திக் காட்டக்,

'கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து (2)

என்றும்,

'மழவிடை யாற்கு வழிவழி ஆளாய்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடிஅம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே (11)

என்றுங் கூறிச் செல்லுதலால் உணரலாம்.

அருளாளர்கள் பல்லாண்டு பாடுகையிலே தத்தம் வழிபடு கடவுளரின் சீர்த்தியை யெல்லாம் தொகுத்துரைத்து இன்பங் காண்பார்கள்; அவ் வேளையில் தத்தம் உலகியல் பந்தங்களையறுத்து நிற்கவும், இப்பிறவியை நீக்கிநிற்கவும் இறைவனது திருவருளை யவாவி நிற்பார்கள்.

பெரியாழ்வார் இவ்வண்ணமெண்ணிப் பாடுகையில்,

'அந்தியம் போதி லரியுரு வாகி யரியை யழித்தவனை
பந்தனை தீரப்பல் லாண்டுபல் லாயிரத் தாண்டென்று பாடுதுமே' (6)

என்றும்,

'பண்டைக் குலத்தைத் தவிர்ந்துபல் லாண்டுபல் லாயிரத் தாண்டென்மினே' (5)

என்றும் பாடி நிற்கிறார்.

சேந்தனார் பாடுகையில்,

'அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்
தாண்டு கொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேயென்று
பல்லாண்டு கூறுதுமே', (13)

என்றும்,

'பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே' (1)

என்றும் பாடி மனங்களிக்கிறார்.

இவ்வாறு பெரியாழ்வாருள்ளத்திலும் சேந்தனாருள்ளத்திலும் திருப்பல்லாண்டைப் பொறுத்த வரையிலும் பெரிதும் ஒற்றுமை நலத்தினைக் கண்டு மகிழலாம்.

திருப்பல்லாண்டில் திருமுறைத் தாக்கம்

சைவப் பேரருட் சான்றோர்கள் தம் செந்நெறியநுபவத்தைப் பாசுரங்கள் வழிப் பெரிதும் வெளிப்படுத்தியுள்ளார்கள். அந்தப் பாசுர நெறியைப்-பதிகநெறியை-நன்குணர்ந்து கடைப்பிடித்தவரே சேந்தனுர் எனப்பலருக்கும் எண்ணத் தோன்றும்,

பொதுவாகச் சைவவுலகிலே சுந்தரருக்கு இறைவனிடம் தோழமைநெறியிற் சென்ற தாலும் திருத்தொண்டத் தொகை பாடியருளியதாலும் தனிச் சிறப்பு உண்டு. பெரிய புராண நாயன்மார்களுள் இவருக்கென ஒரு காப்பிய நாயகத் தன்மையும் பிற்காலத்தில் சேக்கிழாரால் வழங்கப்பெறுகின்றது. அத்தகைய சுந்தரரைத் திருப்பல்லாண்டியற்றிய சேந்தனுர் மிகவும் நினைவு கூர்கிருர்.

பித்தா பிறைசூடி ...' எனத் தொடங்கும் சுந்தரர் அருள்வாக்கினை நினைவிற்கொண்டு' தாம் பாடுகின்ற திருப்பல்லாண்டின் முதற் பாசுரத்தில் இறைவனைப் பித்தனுகவே கொண்டு சேந்தனுர்,

'பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே'

என இயம்பியருளுகிருர்.

சுந்தரரை நினைக்கும் போதெல்லாம் இறைவனுக்கடைக்கலப்பட்ட அவருடைய வழி வழியடிமைத்திறமே பசுமையாகத் தோற்றுகிறது; 'ஏழேழ் படிகால் எமையாண்ட பெம்மான்' என்றெல்லாம் பாடியருளும் சுந்தரர் திருவாக்கு நினைவிற்கு வருகிறது. இவ்வநுபவங்களைக் கோடிட்டுக் காட்டுவதே போலச் சேந்தனுர்,

'விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே (11)

என இயம்பிச் செல்லுதல் ஊன்றி நோக்கத்தக்கது.

மாணிக்கவாசகரின் திருவாக்கினையும் சேந்தனுர் பொன்னே போற் போற்றிப் பல இடங்களிலும் கூறுகிருர்.

வாசகர் தம்மை 'நாய்' என்று இறைவன் முன் கூறிக் கொள்ளுதலைத் திருவாசகத்தில் பல இடங்களிலும் காணலாம்.

இதனை தம்மிடத்தும் போற்றிக் கூற நினைக்கிருர் சேந்தனுர். மேலும் மணிவாசகர் தம் தந்தை தாய் சுற்றமென்ற பந்தத்தினை மாற்றியருளிய இறைவன் திறத்தினை.

'எந்தை யெந்தாய் சுற்றம் முற்றுமெல்லாம் என்னுடைய
பந்த மறுத் தென்னை யாண்டு கொண்ட பாண்டிப் பிரான்'

எனத் திருவாசகத்தில் திருப்பூவல்லிப் பாசுரத்திலே கூறி நிற்பதை நினைவு கூர்கிறார் சேந்தனார். இவ்வெண்ணங்களை இயைத்து,

'எந்தை எந்தாய் சுற்றமுற்றும்
 எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன்சீர்
 அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
 எனைப்புகுந் தாண்டுகொண்டு..........'

என்று பாடிச் செல்கிறார். ஈண்டுச் 'சீரடியார்' என்று வருவது மணிவாசகரைக் குறிக்கவே யென்பர் சைவச் சான்றோர்.

பண்டும் இன்றும் எனறுமுள்ள பரம்பொருளாகிய இறைவன் வேதசிவாகமப் பொருளை நன்கு ஆராய்ந்துணர்ந்த தூய மனத் தொண்டர்தம் உள்ளத்தினையே கோயிலாகக் கொண்டவன். அத்தகைய தூயவுள்ளங் கொண்ட சிவத்தொண்டர்களை யழைத்துச், சிறு தெய்வ வழிபாடு புரியாமல் சிவபரம்பொருளையே குறித்துப் பல்லாண்டு பாடுமாறு விண்ணப்பிக்கின்றார் சேந்தனார். இதனைச்,

சொல்லாண்ட சுருதிப் பொருள்
 சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்!
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
 தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
 மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
 தானுக்கே பல்லாண்டு கூறுதுமே (4)

என இயம்பிக் காட்டுதலால் உணரலாம். இப்பாசுரத்தில் வரும் முதலடி மணிவாசகர் வாக்கினையும் அப்பரடிகள் வாக்கினையும் அருமையாக நினைவு கூர்வதுபோல அமைந்துள்ளது.

இறைவன் திருவடிக் கண் சித்தத்தைப் பதித்துப் பாசுரங்களைச் சொற்பொருளுணர்ந்து சொல்லவல்லவர்கள் எல்லோரும் போற்றுமாறு பணிவுடையராய்ச் சிவன் திருவடிக் கீழ் இன்புற்றிருப்பார்; இதனை மணிவாசகர்,

'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து' *(93-95)*

எனச் சிவபுராணத்துள் கூறிக் காட்டுகிறார்.

இறைவனுடைய பொருள்சேர் புகழ்ப் பாசுரங்களைச் சொற்பொருள் நுட்பமறிந்து தியானிப்போரே மனவிருள் நீங்கப் பெற்றவர்; அவரே சிவனடிக் கீழ் இன்புற்றிருக்குந் தகுதி பெற்றவர் என்ற குறிப்புடன் அப்பரடிகள்,

சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதவர் மனத்திருளை வாங்கா தானை (6-67-2)

எனக் கூறிச் செல்கிறார். இவ்வாறான கருத்தோட்டத்துடன்

'சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத்தொ ண்டருள்ளீர்'

எனவருஞ் சேந்தனார் வாக்கினைப் பார்க்கையில் நம் சிந்தனைப் பறவை ஆன்மீக வானத்தில் சிறகடித்து வட்டமிடுவதை யுணரலாம்.

'சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா
றார் பெறுவார் அச்சோவே' (648)

எனும் மணிவாசகர் திருவாக்கானது சேந்தனாருள்ளத்தைக் கிளர்ந் தெழச் செய்து,

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்' ( )

என மனமார வாயாரப் பாடவைக்கிறது.

திருப்பல்லாண்டின் நுட்பக் குறிப்பு

நினைப்பிற்கும் சொல்லுக்கும் செயலுக்கும் எட்டாத நித்தியப் பொருளை வரையறைக் குட்பட்ட மக்கள் கருதவோ பேசவோ பல்லாண்டு பாடி வாழ்த்தவோ இயலுமா எனக் கேள்வியெழலாம். உளங்குளிர்ந்த போதெல்லாம் உவந்து வந்து வாழ்த்திப் பாடுதல் அடியார்க்குப் பொருத்தமே. எனவே, கடவுள் வாழ்த்து என்றும், போற்றியென்றும், பல்லாண்டு என்றும் பாடுதல் அடியவர்க்கு இயல்பாயிற்றெனலாம்.

புவனியெல்லாம் பொலிவுடன் விளங்கவேண்டுமென்றால் புவனியிலே மண் நீர் தீ காற்று வான் சூரியன் சந்திரன் உயிர் ஆகிய எட்டுவடிவமாகவும்-அட்ட மூர்த்தியாகவும்- விளங்குகின்ற பரம்பொருள் பொலிவுடன் இருத்தல் வேண்டுமல்லவா? இவ்வாறு ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கிறார்சேந்தனார். தியானமில்லாது வீணே கழித்த தம்மைத்தடுத்தாட்கொண்டு நல்வழிப் படுத்தியதாலும், சிவனடியார்களை மலமகற்றிக் கோதாட்டி-நன்னெறிப் படுத்துவதாலும் ஒரு சிறந்த ஞானாசாரியனாக விளங்குகிறான் பரமன் என உணர்ந்து நிற்கிறார்; திருக்கூட்ட மாகக் கூடிப்பல்லாண்டிசைக்கப் பல்லோரையும் அழைக்கிறார். இதனை,

'நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து

அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே (3)

எனவரும் பாசுரத்தால் தெளிவுறுத்துகிறார். இதனை நாயகப் பாசுரமாகவே கருதலாம்.

மேலும், திருப்பல்லாண்டிலே திருமாலுக்குச் சக்கரம் அளித்தது; உபமன்னியுவுக்குப் பாற்கடல் ஈந்தது; சண்டேசுவரருக்குப் பொற்கோயில், போனகம், மணிமுடி, தாமம், தொண்டர்க்கு நாயகம் என ஐவகைப் பரிசுதந்தது ஆகிய புராணச் செய்திகளையெல்லாம் தக்காங்குக் குறிப்பிட்டுச் செல்கிறார் சேந்தனார்.

இவ்வாறான சிறப்புடைய திருப்பல்லாண்டு தென்தமிழ் நாட்டிலும் கடல்கடந்த அயல்நாடுகளிலும் வாழ்க்கையுடன் இயைத்துப் போற்றப்பட்டது. அயல்மொழி பேசும் சீயத்தார் தம் வாழ்வின் மேன்மைக்குத் திருப்பல்லாண்டின் உச்சரிப்பைக் கேட்டுத் தம் மொழியெழுத்து வடிவத்தில் எழுதிக்கொண்டு பாடி வந்திருக்கின்றனர். 'மன்னுக தில்லை' எனத்தொடங்கும் திருப்பல்லாண்டுப் பாசுரத்தினைச் சீயமன்னர் தம் முடிசூட்டும் விழாவில் பாடி மகிழ்ந்ததாக வரலாற்றால் அறிகிறோம். பல்லாண்டு பாடுவதையே இன்றும் 'லாண்டு பாடுதல்' என வழங்குகின்றனர்.

இத்தகைய முறையில் அயலாரும் போற்றிப்பயன் கொள்ளுமாறு அமைந்த திருப் பல்லாண்டினைச்-சைவசமய வாழ்வமுதத்தினைப்-போற்றி நாம் பயன்கொள்ள வேண்டாவா? நம் வாழ்க்கைத்தேரினைப் பரம்பொருள்நோக்கிச் செலுத்தத்திருப் பல்லாண்டு பாடி மகிழ் வோம். வாழிய திருமுறைச் செல்வம்!

★★

நாயன்மார்கள் பெயர், குலம், ஊர், திருநட்சத்திரம்

ஆடி:-
கலியநாயனார் — செக்கார் — திருவொற்றியூர் — கேட்டை
கோட்புலியார் — வேளாளர் — திருநாட்டியத்தான்குடி — கேட்டை
மூர்த்திநாயனார் — வணிகர் — மதுரை — கார்த்திகை
புகழ்ச்சோழர் — அரசர் — உறையூர் — கார்த்திகை
கூற்றுவநாயனார் — அரசர் — களந்தை — திருவாதிரை
பெருமிழலைக்குறும்பர் — ... ... — பெருமிழலை — சித்திரை
சுந்தரமூர்த்திசுவாமிகள் - ஆதிசைவர் - திருநாவலூர் - சுவாதி
கழறிற்றறிவார் — அரசர் — கொடுங்கோளூர் — சுவாதி

ஆவணி:-
செருத்துணைநாயனார் — வேளாளர் — தஞ்சை — பூசம்
அதிபத்தர் — நுளையர் — நாகப்பட்டினம் — ஆயில்யம்
புகழ்த்துணையார் — ஆதிசைவர் — செருவிலிபுத்தூர் — ஆயில்யம்
இளையான்குடிமாறர் — வேளாளர் — இளையாங்குடி — மகம்
குலச்சிறையார் — மந்திரி — மணமேற்குடி — அனுஷம்
குங்கிலியக்கலயர் — அந்தணர் — திருக்கடவூர் — மூலம்

திருமூலர் அருளிய பத்தாம் திருமுறை

மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர்,
திருக்குறள் ஆராய்ச்சி, மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்.

மந்திரம் மனத்தை உயர்த்தி மனிதர்களைத் தெய்வமாக்குவது. உயிர்க்குயிராக இருக்கும் இறைவனை, ஒளிப்பொருளாகக் காட்டவல்லது. நிறைமொழிமாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிகளே மந்திரங்கள். நமது திருமூலர் செந்தமிழில் திருமந்திரங்களைச் செய்தருளினர். செந்தமிழும் மந்திரமொழியாகக் கூடும் என்பதனைப் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னமே பாரறியச் செய்த பண்பு இவருக்கே உரியது. சுத்தாத்துவித சித்தாந்தச் செந்நெறி ஸ்ரீ கண்ட தேவரில் தொடங்கி நந்தி வழியாக இந்நாள் வரை இடையீடின்றி இயங்கி வருவதை எல்லோரும் இனிது அறிவர். நந்தி மரபில் வந்த பெருமானே திருமூலதேவர்,

''திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம்;
திருமந்திரமே சிவமாம்—அருமந்த
புந்திக்கு ளேநினைந்து போற்றுமடி யார்தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான்''

இதன்மூலம் முத்திக்கு வித்து திருமூலர் திருமந்திரம் என்பது போதரும்.

''தந்திரம் ஒன்பது, சார்வு மூவாயிரம்
சுந்தரன் ஆகமச் சொன்மொழிந்தானே''

என்பதால் இப்பத்தாம் திருமுறை ஒன்பது தந்திரங்களாக மூவாயிரம் பாடல்கள் கொண்டு திருமந்திர மாலையாக விளங்குகின்றது.

பாயிரத்தில் விநாயகர் காப்புடன் நூல் தொடங்கி, கடவுள் வாழ்த்தாக 50 பாடல்கள் உள்ளன. வேதச்சிறப்பு, ஆகமச்சிறப்பு குருபரம்பரை, திருமூலர் வரலாறு அவையடக்கம், திருமந்திரத் தொகைச் சிறப்பு, குருமட வரலாறு, மும்மூர்த்திகளின் முறைமை முதலியன பாயிரத்துள் விளங்குகின்றன.

முதல் தந்திரத்தில், உபதேசப்பகுதி முதலில் அமைந்துள்ளது,

''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றின்
பதியினைப் போற் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே''

இது போன்ற அரிய உபதேசங்கள் பல பொதிந்துள்ளன. யாக்கை 'நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை, கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன் மனை நயவாமை, நல்குரவு, அக்கினிகாரியம், அந்தணரொழுக்கம், அரசாட்சி முறை

வானச்சிறப்பு, தானச்சிறப்பு, அறம் செய்வான்திறம், அறஞ்செயான்திறன், அன்புடைமை அன்பு செய்வாரை அறிவன் சிவன், கல்வி, கேள்வி கேட்டமைதல், கல்லாமை, நடுவுநிலைமை கள்ளுண்ணுமை முதலிய 24 பகுதிகளாக இத்தந்திரம் அமைந்துள்ளது.

இரண்டாம் தந்திரம் அகத்தியம், பதிவலியில் வீரட்டம், இலிங்கபுராணம், தக்கன் வேள்வி, பிரளயம், சக்கரப்பறே, எலும்பும் கபாலமும், முதலிய 25 அதிகாரங்களை உடையது. அடிமுடிதேடல் என்னும் அதிகாரம் ஆணவத்தின் வயப்பட்டு அரி பிரமனுதியர் தாமே தலைவர் எனத்தருக்குற அவர்களிடையே இறைவன் அனற் பிழம்பாய் நின்று, அளக்கவும் அணுகவும் ஒண்ணுமையை அறிவுறுத்தி, ஆட்கொண்டமையை அறிவிக்கிறது. பாத்திரம், அபாத்திரம் என்ற இரண்டு அதிகாரங்களும், உடன்பாடு, எதிர்மறை வகைகளால், ஏற்றற்குரியார் சிவஞானிகளே என்பதனைத் தெளிவித்து வற்புறுத்துகின்றன. சிவ நிந்தை, குருநிந்தை, மகேச்வர நிந்தை முதலியன சிந்தை தெளியா மதிமயங்கிகள் அடையும் அல்லல்களை அறிவிக்கின்றன.

திருமந்திரம் யோக வழிநின்று சிவ ஞானம் எய்துவார்க்கு அனுபவசாதனநூல். சித்தாந்தக் கருத்துகளுக்குச் செந்தமிழில் தாயகமும் இதுவே. மூன்றும் தந்திரம் யோகதந்திரம். யோகம், சிவயோகம் விளைவிக்கும் ஞான ஏர் உழவனுடைய சிறந்த வேலைகளில் மிகச் சிறந்த ஒன்ருகிய மடைமாற்றிப் பாய்ச்சும் அலுவல். ஞானஏர் உழவன் காட்டாறுபோல தன்னிச்சையில் பாய்ந்துகொண்டிருக்கின்ற மூச்சுக்காற்றை அணைகட்டி, வழியோடு அளந்து பாய்ச்சி வடிகட்டாவிடின் விளைகின்ற தீமைகள் பல. ஆதலின் மடைகட்டுதலின் வழிவகைகளை வகுப்பது இத்தந்திரம். யோகம் என்ற சொல்லுக்குச்சேர்த்தல் என்பது பொருள். இத்தந்திரம் வீராகமத்தின் பிழிவாக உள்ளது. இதனுள் அட்டாங்க யோகம் முதலாகிய 21 அதிகாரங்களும் 335 திருமந்திரப் பாடல்களும் உள்ளன.

நான்காம் தந்திரமே திருமந்திரம் என்னும் பெயருக்குக் காரணமாக உயிர்நாடியாக விளங்குவது. இதில் சிவம் முதலான பலவேறு கடவுளர்க்குரிய மந்திரங்களும் யந்திரங்களும் உபாசிக்கும் முறையும் பயனும் உணர்த்தப் பெறுகின்றன. மந்திரங்கள் புகழ்ச்சியாகவோ, நிகழ்ச்சியாகவோ, நெகிழ்ச்சியாகவோ இன்றி, எழுத்துக்கெழுத்து ஆழ்ந்த அனுபவப் பொருள் உடையதாக இருப்பது. திருவைந்தெழுத்து முதலியன என்றும் மந்திரங்களே. அவற்றின் நுட்பத்தை உணர்த்துவது இத்தந்திரம்.

''செம்பு பொன்னுகம் சிவாய நமவென்னில்
செம் பொன்னுகத் திரண்டது சிற்பரம்
செம்பு பொன்னுகும் ஸ்ரீயும் கிரீயுமெனச்
செம்பு பொன்னுன திருவம் பலமே''

'சிவாயநம' எனத் திருவைந் தெழுத்தை ஓதினுல் செம்பு பொன்னுகும். அவ்வண்ணம் செம்பு பொன்னுகத் திரண்டு ஒன்ருனதே சிற்பரமாம். அங்ஙனமே ஸ்ரீயும் கிரீம் என்று சொல்லச் செம்பு பொன்னுகும். செம்பு பொன்னுன நிலையே திருவம்பலமாம். இவ்வாறு மந்திரப் பொருளும் விளக்கமும் காட்டப் பெறுகின்றன. பதின்மூன்று அதிகாரங்களையுடையது இத்தந்திரம். 535 பாடல்கள் இதில் உள்ளன.

இனி, ஐந்தாம் தந்திரத்தில் தத்துவக் கலையை, சமயபேதங்களை, அவற்றின் இலக்கணங்களை விளக்குகின்றார். இது 20 அதிகாரங்களை உடையது 154 கலிவிருத்தங்களால் ஆகியது. முதல் அதிகாரம் சுத்தசைவம். சைவமே கடுமை. அதிலும் சுத்த சைவமா! அது மனிதனால் மேற்கொள்ளத்தக்க எளிமையிலிருக்குமா? என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால், திருமந்திரத்தில் சுத்தசைவம் என்ன சொல்கின்றது தெரியுமா? பெரியபுரட்சியைச் சொல்லுகிறது. சீர்திருத்தத்தைத் தெரிவிக்கிறது. மகனே! சடங்குகளிலே இல்லை சைவம். சம்பிரதாயங்களிலே இல்லை சைவம், தலைவனையும், தன்னையும் தடையையும் அறிந்து, தடையின் நீங்கித்தான்தலைவனைச் சார்ந்து வாழ்வதே சைவம். சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய நால்வகை நெறிகளையும் இவைபற்றி ஒழுகினார். அடையும் பயன்களையும் இத்தந்திரம் விளக்குகின்றது.

ஆறும் தந்திரம் சிவகுரு தரிசனம் முதலாக பக்குவன் ஈறாக 14 அதிகாரங்களை உடையது. சிவகுருநாதன் தெரிவித்தாலன்றி சிவயோக சிவஞான நெறிகள் தாமே உணரும் தரத்தன அல்ல என்பதை உணர்த்துவது இவ்வதிகாரம். இறுதிப்பாசுரத்தில் சிவகுருவைத் தரிசித்தே அதனால் கருக்கொண்ட ஈசனைக் கண்டு கொண்டேனே எனக்கூறுதல் ஆழ்ந்து அனுபவித்தற்குரியது. துறவு என்னும் அதிகாரத்தில்சூடுண்டவன் நெருப்பை விட்டது போலன்றி விருப்புவெறுப்பு அற்றநிலையில் மனபரிபாகத்தால் தாமே விளைவதாகிய உண்மைத் துறவை உணர்த்துகிறார். தவவேடம் என்னும் பகுதியில், உண்மைத் தவத்துக்குரிய வேடங்கள் விபூதி, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து உச்சரிப்பு, குண்டலம் முதலாகிய பத்தினைப் பற்றிக் கூறப்பெற்றுள்ளது. இத்தந்திரத்தில் 131 பாடல்கள் உள்ளன

சைவம் சொல்கிறது ''நீதாழ்; உயரலாம்'' என்று; எப்படித்தாழவேண்டும் என்று வழியும் சொல்கிறது, அகங்காரம் அடங்கித்தாழ்தலே தியானயோக மென்பதுயோக சூடாமணியின் கருத்து. ''தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது'' என்பது சிவஞானசித்தி. உயிரைச் சார்ந்துள்ள முனைப்பு அடங்க யோகச் சார்பு இன்றியமையாதது. யோகம் ஆதார யோகம் என்றும் நிராதார யோகம் என்றும் இரு வகைப்படும். ஆதாரயோகம், மூலாதாரம் முதல் பிரமரந்திரம் வரை உள்ளுக்குள்ளே பற்றி எழும்பும் யோகம். நிராதாரயோகம் உச்சிக்கு மேலே பன்னிரண்டங்குலம் வரை பற்றுமற் பற்றிநிற்கும் ஞான யோகம். ஆதாரத்தைப் பற்றியே நிராதாரத்துச் செல்லமுடியும். ஆதலால் ஆறாதாரம் முதல் இதோபதேசம் ஈறான 38அதிகாரங்கள் இத்தந்திரத்தில் அமைந்துள்ளன.

எட்டாம் தந்திரம் 43 அதிகாரங்களை உடையது. இத்தந்திரத்துள்

''அடியா ரடியார் அடியார்க் கடிமைக்
கடியனாய் நல்கிட் டடிமையும் பூண்டேன்
அடியா ரருளால் அவனடி கூட
அடியான் இவனென் றடிமைகொண் டானே''

இப்பாடலின் மூலம் அடியவர்களுக்கு அடிமை செய்வதால் ஆண்டவன் நம்மை அடிமை கொள்வான் என்பது உணர்த்தப் பெறுகின்றது.

ஒன்பதாம் தந்திரம் குருமடதரிசனம் முதலாக சர்வவியாபி ஈறுக 22 அதிகாரங்களை உடையது. சூக்கும பஞ்சாட்சரம் என்னும் அதிகாரத்தில் 'சிவசிவ' எனத்தொடங்கும் எல்லாராலும் பயிலப்படும் பாடல் அமைந்துள்ளது. திருக்கூத்து தரிசனத்தில் சிவானந்தக் கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக்கூத்து, அற்புதக்கூத்து முதலியன விளக்கப் பெறுகின்றன.

திருமந்திரம் அனுபவ ஞானத் திருநூல். திருஞான சம்பந்த சுவாமிகளின் திருவுள்ளத்தையும் கவர்ந்த பெருநூல். நம் செந்தமிழ் சிறக்க எழுந்த ஒருநூல். மக்களை நல்வழிப் படுத்துகின்ற யோகநூல். தமிழ் மக்கள் அனைவருமே நன்குணர்ந்து ஒழுக உயர்வளிக்கும் ஒருதனிநூல். இந்நூலை அன்புடன் ஓதி உணர்ந்து தெளிதல் நம்மனைவரின் கடமை.

★

நாயன்மார்கள் பெயர், குலம், ஊர், திருநட்சத்திரம்

புரட்டாசி:- நரசிங்கமுனையரையர் — சதயம் — அரசர் —
உருத்திரபசுபதியார் — அந்தணர் — திருத்தலையூர் — அசுவதி
திருநாளைப் போவார் — புலையர் — ஆதனூர் — ரோகினி
ஏனாதிநாதர் — சான்றார் — எயினனூர் — உத்ராடம்

ஐப்பசி:- திருமுல நாயனார் — இடையர் — சாத்தனூர் — அசுவதி
நெடுமாறர் — அரசர் — மதுரை — பரணி
இடங்கழி நாயனார் – அரசர் – கொடும்பாளூர் – கார்த்திகை
சத்தி நாயனார் – வேளாளர் – வரிஞ்சியூர் – பூசம்
பூசலார் நாயனார் – அந்தணர் – திருநின்றவூர் – அனுஷம்
ஐயடிகள் காடவர் கோன் – அரசர் – காஞ்புரம் – மூலம்

கார்த்திகை:- கணம் புல்லர் – ... ... – இருக்குவேளூர் – கார்த்திகை
மெய்ப்பொருள் நாயனார்–அரசர்–திருக்கோவலூர்–உத்திரம்
ஆனாயர் – இடையர் – மங்கலவூர் –அஸ்தம்
மூர்க்க நாயனார் – வேளாளர் – திருவேற்காடு – மூலம்
சிறப்புலி நாயனார் – அந்தணர் – திருஆக்கூர் – பூராடம்

மார்கழி:- சடைய நாயனார் – ஆதிசைவர் – திருநாவலூர் – திருவாதிரை
இயற்பகை நாயனார்–வணிகர்–காவிரிப்பூம்பட்டினம்–உத்திரம்
மானக்கஞ்சாற நாயனார் – வேளாளர் – கஞ்சாறூர் – சுவாதி
சாக்கிய நாயனார் – வேளாளர் – திருசங்கமங்கை – பூராடம்
வாயிலார் நாயனார் – வேளாளர் – திருமயிலாப்பூர் – ரேவதி

தை:- கண்ணப்பர் – வேடர் – உடுப்பூர் – மிருகசீரிடம்
அரிவாட்டாயர் – வேளாளர் – கணமங்கலம் – திருவாதிரை
சண்டேசுரர் – அந்தணர் – திருசேய்ஞலூர் – உத்திரம்
திருநீலகண்டர் – குயவர் – சிதம்பரம் – விசாகம்
அப்பூதியடிகள் – அந்தணர் – திங்களூர் – சதயம்
கலிக்கம்ப நாயனார் – வணிகர் – திருப்பெண்ணாகடம் – ரேவதி

மாசி:- எறிபத்த நாயனார் – ... – கருவூர் – அஸ்தம்
காரி நாயனார் – ... ... – திருக்கடவூர் – பூராடம்
கோட்செங்கட் சோழர் – அரசர் – களந்தை – சதயம்

பங்குனி – காரைக்காலம்மையார் வணிகர் – காரைக்கால் – சுவாதி
தண்டியடிகள் – ... ... – திருவாரூர் – சதயம்
நேச நாயனார் – சாலியர் – காம்பீலி – ரோகினி
கணநாதர் – அந்தணர் – சீர்காழி – திருவாதிரை
முனையடுவார் – வேளாளர் – திருநீடுர் – பூசம்
தொகையடியார் – எண்பர் – ஆண்டுநிறைவுநாள்.

அண்டமுற நிமிர்ந்தாடும் சிவபிரானின் திருநடங்கண்டு ஆனந்தம் கொண்டு பாடும் பேறு வேறு யாரும் பெருத பேறன்ருே? இவரைத் தவிரக் கைலேகண்ட நாயன்மார், வேறு யாருமில்லே என்பதையுமுளங் கொளல் வேண்டும். மேலும் தம் திருப்பாடல்களே இசையமைத்துப் பாடிய இசைவல்லுநாரகவும் அம்மையார் விளங்குகின்ருர் என்பதும், 'ஆலங்காட்டடிகளேக் காரைக்காற்பேய் செப்பிய செந்தமிழ்பத்தும் வல்லவர்கள் சிவகதி சேர்ந்தின்பம் எய்துவரே' என அப்பதிகப்பயனே அவரே கூறிப் பிறர்க்கும் சிவகதி வகுத்துள்ளார் என்பதும் நோக்கின் காரைக்காலம்மையார்க்கு இணையவரேயாதல் தெளிவு.

அம்மையே எனச் சிவபிரான் அழைத்தது எக்கருத்தால்?

காரைக்காலம்மையார் கைலேமலேயில் எற்புடம்போடு தலேயினுல் நடந்து வருவதை யறிந்த உமையம்மையார், தலேயால் நடந்து வரும் எற்புடம்பினேக் காட்டி அவர் அன்பினே வியந்தபோது சிவபிரான் 'வருமிவர் நம்மைப் பேணும், அம்மைகாண்' என்று கூறி, இந்தப் பேயுடம்பும் நம்மை வேண்டிப் பெற்றதுவே என விளக்குகின்ருர். காரைக்காலம்மையார் அருகில் வந்தணைந்தது நோக்கி 'அம்மையே' என்னும் ஒரு செம்மை மொழி அருளிச் செய்த போது'அப்பா' என்று அம்மையார் விளித்து அப்பெருமான்ன் பங்கயச் செம்பொற்பாதம் பணிந்து எழுந்தார் எனச் சேக்கிழார் கூறுகின்ருர்.

''அம்மையப்பரேயுலகுக்கு அம்மையப்பர் என்றறிக' என்ற ஆன்ருேர் வாக்கின்படி சிவபிரானும் உமையம்மையும் எல்லோர்க்கும் அம்மையப்பர் என்பது பொதுவான உண்மை யாகும். தலேயால் நடந்து வரும் காரைக்காலம்மையாரைக் கண்டவுடன் வியப்புற்ற உமையம்மையை நோக்கி, 'வருமிவர் நம்மைப் பேணும் அம்மைகாண்' எனத் தாயுமிலி தந்தையிலியாகிய சிவபிரான் தனக்குத் தாய் முறையினள் என்னும் கருத்தால் விளித்தாரா? அல்லது உலகத்தோர் தம்மகளே அன்பு பற்றி 'அம்மா' அழைக்கும் வழக்கத்தைப் பின்பற்றி அழைத்தாரா? என்பது இங்கு ஆராயப்படவேண்டும். சிவர் முன்னேக்கருத்தையே மேற் கொள்வர். ஆனுல், அம்மையே எனச் சிவபிரான் அழைத்தவுடன் அம்மையார் 'அப்பா' என்று விளித்து பாதம் பணிந்ததாகச் சேச்கிழார் கூறியுள்ளார். இதை நோக்கும்போது சிவபிரான் அம்மா எனத் தம்மை விளித்தது தம்மை அன்புறு மகளாகக் கொண்ட கருத்தினுல்தான் என்ற குறிப்பினேயுணர்ந்தே காரைக்காலம்மையார் அப்பா' என அழைத்து வணங்கினுர் என்பதே பொருத்தமான கருத்தாகும். திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகத்தில் ஒவ்வொரு திருப்பாட்டிலும் ''எங்களப்பனிடம் திருவாலங்காடே. அப்பனிடம் திருவாலங் காடே எனப் பத்துமுறைப் பாடியதோடு திருக்கடைக்காப்பிலும் 'அப்பனே யணிதிரு ஆலங்காட்டுள் அடிகளேச் செடிதலேச் காரைக்காற்பேய் செப்பிய செந்தமிழ்'' என்று கூறி யுள்ளதும் காணலாம். சிவபிரான் ஒருமுறை 'அம்மையே' என விளித்ததன் குறிப்பு உணர்ந்து பதினெரு முறை அப்பன் என்ற முறைப் பெயரைப் பதிகத்தில் வழங்கியுள்ளார். இதையூன்றி நோக்கினுல் சிவபிரான் புனிதவதியாரை மகளாகக் கருதியே 'அம்மையே' என விளித்தார் என்பது தெளிவாகின்றது. மேலும் உமையம்மை வியந்தபோது 'வருமிவர் நம்மைப் பேணும் அம்மைகாண்'' என்று சிவபிரான் கூறியதிலும் இக்கருத்தேயுளது. 'தந்தைதாய்ப் பேண், என்ற நீதிமொழியில் மக்களாகவுள்ளவர்கள் தந்தையையும் தாயையும்

போற்றுதல் வேண்டும் என்ற நீதி பேசப்படுகின்றது. புனிதவதியைச் சிறந்த மகளாகத் தம்மைப் போற்றும் மகளாகக் கொண்டமையால்தான் உமையம்மையை நோக்கி, என்னையும் நின்னையும் தந்தை தாயாகக் கருதிப் போற்றும் இயல்புடைய புதல்வி என்ற பொருள் விளங்க வேண்டியே ''வருமிவள் நம்மைப் பேணும் அம்மைகாண்'' என்றார்; என்பதையும் உடன் கூட்டிச் சிந்தித்தல் வேண்டும்.

திருஞானசம்பந்தர்க்கு அம்மையும் அப்பனும் சேர்ந்து ஞானப்பாலூட்டி அழுகை தீர்த்த அன்புறு செயலைப் பாராட்டிச் சேக்கிழார் கூறியது இங்குச் சிந்திக்கத் தக்க சிறப்புடையதாகும்.

> ''யாவர்க்குந் தந்தைதாய் எனுமிவர் இப்படியளித்தார்
> ஆவதனால் ஆளுடைய பிள்ளையார் ஆய்'' (69 திருஞான சம்ப)

என்பது காணலாம். யாவர்க்கும் தந்தைதாய் எனப்படும் சிவபிரானும் உமையம்மையும் ஞானசம்பந்தரிடத்தில் சிறப்பன்பு காட்டி இவ்வாறு நடந்து கொண்டமையால் இவர் ஆளுடைய பிள்ளையார்' எனப்பெயர்பெற்றார் என்பது கருத்து. காரைக்காலம்மையாரிடம் சிறப்பன்பு காட்டித் தம் புதல்வி என்ற கருத்தால் 'அம்மையே யெனச் சிவபிரான் விளித்தார் என்பதையும், அவர் கருத்தறிந்து காரைக்கால் அம்மையார் அப்பெருமானை எங்களப்பன் எனத் தம் பதிகத்தில் பதினொரு முறை கூறியுள்ளதையும் நோக்கித் தெளியலாம்.

காரைக்காலம்மையார் காலம்

காரைக்காலம்மையார் வாழ்ந்த காலம் யாது என ஆராயின் அது ஞானசம்பந்தர்க்கு முற்பட்ட காலம் என்று துணிந்து கூறலாம். திருஞானசம்பந்தர் தொண்டை நாட்டுத் தலங்களைப் பாடி வணங்கிச் செல்லும் போது திருவாலங்காட்டிற்குச் செல்லாமல் காரைக்காலம்மையார் தலையால் நடந்து சென்று வணங்கிய திருவாலங்காட்டினை நாம் காலால் நடந்து சென்று காணுதல் தகாது என்ற கருத்தால் அருகிலுள்ள ஓரூரில் தங்கி உறங்கும் பொழுது திருவாலங்காட்டிறைவன் அவர் கனவில் தோன்றி 'எம்மைப் பாட மறந்தீரோ என வினவி மறையத் திருஞானசம்பந்தர் அந்நள்ளிரவில் துயிலெழுந்து ''துஞ்சவருவார்'' என்று தொடங்கிப் பதிகம் பாடிய நிகழ்ச்சியைச் சேக்கிழார் விரிவாகச் சொல்கின்றார்.

''இம்மையிலே புவியிலுளோர் யாருங்காண, வேழுலகும் போற்றிசைப்ப, எம்மையாளும் அம்மை திருத்தலையாலே நடந்து போற்றும் அம்மையப்பர் திருவாலங்காடாமென்று, தம்மையுடையவர் மூதூர் மிதிக்க வஞ்சிச் சண்பைவரு சிகாமணியார் சாரச் சென்றார், செம்மை நெறி வழுவாத பதியின் மாடோர் செழும்பதியில் அன்றிரவு பள்ளி சேர்ந்தார்'' எனத் திருஞானசம்பந்தர் திருவாலங்காட்டை மிதிக்க அஞ்சி அருகிலுள்ள ஊரில் பள்ளி கொண்ட நிகழ்ச்சியைக் கூறியுள்ளார். இதனல், திருஞானசம்பந்தர் காலத்திற்கு மிக முற்பட்ட காலத்தில் காரைக்காலம்மையார் திருவாலங்காட்டை வணங்கி வாழ்ந்தார் என்பது புலனாகின்றது.

திருஞான சம்பந்தர், திருச்செங்காட்டங்குடிச் சிறுத்தொண்டரோடு நண்பு பூண்டு, 'செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டர்' எனத் தம் திருப்பாட்டில் வைத்துப் பாடியுள்ளார். எனவே சிறுத்தொண்டர் காலமும் திருஞான சம்பந்தர் காலமும் ஒன்று என்று தெளியலாம். சிறுத்தொண்டர், பரஞ்சோதி என்ற பெயரோடு வடபுலத்து வாதாபி என்ற நகரை அழித்து வெற்றி பூண்டு வந்தவர் என்பது பெரிய புராணத்தால் அறிகிறோம். வடபுலத்து வாதாபி அழிந்த காலம் கி. பி. 642 என்று கூறுவர் வரலாற்று ஆசிரியர். எனவே, திருஞான சம்பந்தர் காலமும் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலமும் எனத் தெரியலாம். ஏழாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்து வாழ்ந்த திருஞானசம்பந்தர், திருவாலங் காட்டை மிதிக்க அஞ்சி இம்மையிலே புவியிலுளோர் யாருங்காண ஏழுலகமும் போற் றிசைப்ப எம்மையாளும் அம்மை திருத்தலையாலே நடந்து போற்றும் அம்மையப்பர் திருவாலங்காடாம் என்று போற்ற வேண்டுமாயின் அவர்க்குப் பல்லாண்டுகட்கு முன்னர் வாழ்ந்தவர் நம் காரைக்காலம்மையார் என்பது தெளிவு. எவ்வளவு காலம் முற்பட்டவர் என அறிதியிட்டுக் கூற இயலாது போயினும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனக் கொள்ளலாம்.

கண்ணகியும் காரைக்காலம்மையாரும்

சோழநாட்டுப் புகார் நகரத்து வணிக மகளாகிய கண்ணகி கணவனோடு மதுரைக்குச் சென்று கணவனை இழந்து பாண்டியனோடு வழக்குரைத்துத் தன் கணவன் கள்வனல்லன் என்பதை நிலைநாட்டித் தன் கணவனுக்குத் தீங்கிழைத்த மதுரையை யெரியூட்டி விட்டு சேரநாட்டு நெடுவேள் குன்றத்து வேங்கை மரநிழலில் தெய்வ வடிவில் வந்த கணவனோடு கூடித் தெய்வமாய் விண்ணுலகம் சென்றாள். சேரன் செங்குட்டுவன் முதலிய அரசர்களால் கோயில் கட்டி வழிபாடு செய்யப்பட்டாள். இது கி.பி மூன்றும் நூற்றாண்டில் நிகழ்ந்தது என்பர்.

ஐந்தாம் நூற்றாண்டில் சோழ நாட்டுக் காரைக்காலில் பிறந்து சிறந்த வணிக மகளாகிய காரைக்காலம்மையார் காரைக்காலிலிருந்து பாண்டிநாடு சென்று தம் கணவனோடு வாழ விரும்பியும் அவன் தெய்வம் எனத் தன்னை மதித்து வணங்கியவுடன் தசையுடல் நீத்து என்புருவமாகிய பேய்வடிவத்தை இறைவன் அருளால் பெற்று என்றும் நிலைபேறு டைய புது வகையான நூல்களைப் பாடி கயிலை கண்டு வணங்கிச் சிவனருளால் என்றும் நிலைபேறுடையராய்த் தொண்டை நாட்டுத் திருவாலங்காட்டில் தெய்வநிலை பெற்று வாழ்கின்றார். சிவன்கோயில்களில் எல்லாம் நாயன்மார்களில் ஒருவராய் வைத்து வழிபடப்படுகின்றார்.

சோழநாட்டில், புகார், காரைக்கால், என்ற இடத்தாலும் மூன்றும் நூற்றாண்டு ஐந்தாம் நூற்றாண்டு என்ற காலத்தாலும் அடுத்து அடுத்து வாழ்ந்த கண்ணகியும் காரைக் கால் அம்மையாரும் வணிக குல மகளிராவர். அவ்விருவரும் சோழ நாட்டிலிருந்து பாண்டி நாடு செல்கின்றனர். கணவரைப் பிரிகின்றனர். அறக் கற்புடைய கண்ணகி மறக் கற்பு டையவளாக மாறுகின்றாள். ஆறிய கற்புச் சீரிய கற்பாக மாறுகின்றது. ஒரு முலையிழந்த திருமா பத்தினியாய் வடிவம் மாறி மதுரை நகரைத் தீயூட்டுகின்றாள். பின்பு சேரநாட்டு நெடுவேள் குன்றில் தெய்வவடிவம் பெற்றுக் கணவனோடு விண்ணுலகம் புகுகின்றார்.

இவ்விருவரும் பிறந்தது சோழநாடு. கணவரைப் பிரிந்ததும் உருவம் மாறுபட்டதும் பாண்டி நாட்டில். கண்ணகி கற்பின்மேன்மையால் தெய்வ வடிவம் பெற்றது சேரநாட்டு நெடுவேள் குன்றம். காரைக்ககாலம்மையார் பத்திச் சிறப்பால் தெய்வ வடிவம் பெற்று நிலைபெற்றது தொண்டை நாட்டுத் திருவாலங்காட்டில் என்று ஒப்பு நோக்கும் போது வியப்பு விஞ்சுகின்றதன்றோ?

காரைக்காலம்மையார் நூல்கள் சிறப்பு நோக்கு

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டும் சிவபிரான் அண்டமுற நிமிர்ந்தாடுகின்ற திருவாலங்காட்டைப் பற்றிக் கூறுகின்றன. அந்தக்காட்டில் வாழும் பேய்களின் இயல்பையே பெரும்பாலும் நமக்குக் காட்டுகின்றார். ஒரு பெண் பேயைப் பற்றிச் சொல்கின்றார். அப்பெண் பேயின் கொங்கைகள் சுருங்கித் தளர்ந்து கிடக்கின்றனவாம்: உடம்பில் நரம்புகள் எழுந்து தோன்றுகின்றனவாம். ஆழமான கண்களையும் வெண்பற்களையும் குழிந்த வயிற்றினையும் சிவந்த தலைமயிரினையும் கொண்டுள்ளதாம். பற்களில் முன்பற்கள் இரண்டு நீண்டு விகாரமாகக் காட்சி தருகின்றதாம். பாதங்களின் மேற்பகுதியாகிய பரடு உயர்ந்தும் கணைக்கால் மிக நீண்டும் உள்ளனவாம். இப்படிப்பட்ட பெண் பேய் தங்கி அலறிக்கொண்டு பசியோடு வாடுகின்ற காட்டில்தான் சிவபிரான் தன் தாழ்சடை எட்டுத் திசையிலும் எட்டு மாறு வீசிக்கொண்டு உடம்பு குளிர்ந்து அனலில் ஆடுகின்றானாம்.

இன்னும் ஒரு தாய்ப் பேயையும் குட்டிப் பேயையும் நமக்குக் காட்டுகின்றார். வெண்மையாக நெகிழ்ச்சியாகவுள்ள கொழுப்பினை விழுங்கியிட்டு வெண்தலை மாலையைத் தன் மார்பில் விரவுமாறு பூட்டிக்கொண்டு ஒரு பெண் பேய் ஒரு பிள்ளையைப் பெற்றது. தன் பெண் பிள்ளைக்குக் காளி என்று பேரிட்டது. சீராக வளர்ந்தது. அப்பிள்ளைப் பேயின் உடம்பிலுள்ள புழுதியைத் துடைத்துவிட்டுத் தன் முலைப்பால் கொடுத்துவிட்டு எங்கோ போய் விடுகின்றது. போன தாயின் வரவினைக் காணமல் அந்தப் பிள்ளைப்பேய் அழுகின்றது; தாயைக் காணாத் துயரத்தில் அழுதுகொண்டே மெல்ல உறங்கிவிடுகின்றதாம். அப்படிப்பட்ட புறங்காட்டில்தான் அப்பன் ஆடுகின்றானாம் (5).

அவன் ஆடும்போது துத்தம் கைக்கிளை விளரி தாரம் உழை இளி, குரல் என்ற எழுவகையான ஓசையோடு கூடிய பண் பொருந்துமாறு பாடுகின்றானாம். அப்பாடலுக்கு ஏற்பச் சச்சரி, கொக்கரை, தக்கை, தகுணிதம் துந்துபி தாளம் வீணை மத்தளம் கரடிகை வன்கையிலேந்திய மெல்லிய தோலாலாகிய உடுக்கை, குடமுழா, மொந்தை என்ற வாத்தியங்களை வாசித்துக்கொண்டு இத்தனை வகையான ஒலிகள் கலந்தொலிக்கும் ஒலிகளோடே அப்பன் ஆலங்காட்டில் ஆடுகின்றானாம். (9) இப் பாடலில் எழுவகையான இசைக் கூறுகளையும் சச்சரி முதலிய வாத்திய வகைகளையும் அடைமொழி பெரும்பாலும் இன்றிக் கூறியுள்ள அழகினைக் காணலாம். எழுவகை இசைக் கூறுகளில் குரல் இங்கு வெளிப்படக் கூறிற்றிலராயினும் ஓசை என்ற பொதுச் சொல்லால் குறித்தார் எனக் கொள்ளலாம். அந்தக் காட்டில் மூங்கில்கள் ஓங்கி வளர்ந்துள்ளவாம், அம்மூங்கிலிலிருந்து முத்து உதிர்கின்றனவாம். மூங்கில் வெடிக்கும் ஓசையைக் கொண்டுள்ள சுடலையில் வலிகுறைந்து ஓய்ந்துபோன உருவினையுடையவும் எண்ணெய் பூசாமல் பறந்துகிடக்கின்ற கூந்தலினையுடையவும் உணவின்றி அலறு

கின்ற பெரிய வாயினை உடையனவுமான பேய்கள் ஒன்றுகூடிப் பிணங்களை மாற்றி அங்கு வருவோரை வருத்துகின்ற பெரிய காட்டில் ஆண்டவன் ஆட மலையான் மகளாகிய பார்வதி தேவியும் மருண்டு அந்நடனத்தை நோக்குகின்றுளாம். (2-8) இத்தகைய ஆடலைப் பற்றிய பாடல்கள் பத்தினையும் பாடி ஆட நம் பாவம் நாசம் ஆகும் என்று உறுதிகூறுகின்றார்.

இரட்டை மணி மாலை

பிறவாமை வேண்டிய அம்மையார் இங்குப் பிறவாமல் காக்கும் பிரானைப் பேசுகின்றார். முதலிலே, நாம் வணங்கும் தலைவன் சிவபிரானே! அவனல்லது வேறு தெய்வம் இல்லை என்ற தெளிவு பிறக்கவேண்டும். பிற தெய்வத்தை நினைக்கக் கூசுதல் வேண்டும். அச்சிவபிரானை மனத்தகத்துக் கொண்டு யோகத்தில் அமர வேண்டும், பின்பு அவனைப் பற்றியே பிறர் உணரப் பேசுதல் வேண்டும். இவ்வாறு மனத்தாலும் வாக்காலும் மறவாது வாழ்கின்றவரை மண்ணுலகத்தில் என்றும் பிறவாமல் காக்கின்றவன் என்கின்றார். மண்ணில் பிறவாமல் காக்கும் பிரான் என்றமையால் தன்னடிக்கீழ்வைக்கும் பிரான் என்பது அருத்தாபத்தியால் புலப்படுத்தினார். (2)

அம்மையார் இறைவனை ஒரு கேள்வி கேட்கின்றார். சடைமுடியில் வைத்த கங்கையாற்றில் ஆடிவிட்டு ஆறுத அனலிலும் ஆடி, அவ்வனலில் வெந்த நீற்றினையும் பூசிக்கொண்டு நெய்யிலும் ஆடுகின்ற நீ, இராவணன் கையால் எடுக்க முயன்றபோது நின் அடிவிரலால் அவன் இருபது தோள்களையும் பத்துத் தலைகளையும் முரித்தது ஏன்? என்பது அவ்வினா. இங்கு ‘ஆறாடி, ஆறாஅனலாடி, அவ்வனலின் நீறாடி, நெய்யாடி நீ. என்று ஆடி என்ற சொல்லை நான்கு முறைகூறிச் சொற்பின் வருநிலை யணிபடப்பாடியுள்ளமை காணலாம். ஆடுகின்ற நீ அரக்கன் தோள்களையும் தலைகளையும் முரிக்க வேண்டுமா? எனத்திறம்பட வினவியுள்ளார்

அற்புதத் திருவந்தாதி

கணவன் தன்னைக் கண்டு தெய்வமென அஞ்சி விலகியதை அறிந்ததும் காரைக்காலம்மையார் என்புருவாய பேயுருவம் வேண்டிப் பெற்றதும் பாடியது அற்புதத்திருவந்தாதி என்பது சேக்கிழார் கருத்தாகும். முதற்பாடலிலே அம்மையார் தாம் இளமையிலேயே சிவன்பால், காதல் வைத்திருந்ததை விளக்குகின்றார். பரமதத்தன்பால் வாழ்ந்த வாழ்வு பற்றி நினைக்கவில்லை அம்மையார், அது நீரில் எழுத்துப்போல விரைந்து முடிந்த வாழ்வாதலின் அதனை அடியோடு மறந்து பேசுகின்றார். இவ்வுலகில் பெண்ணாகப் பிறந்து, மொழி கற்றுக்கொண்ட - பேசக் கற்றுக்கொண்ட பின்பு இளமைக்காலம் எல்லாம் நீலகண்டத்துப் பெருமானே நின்பால் காதல் சிறந்து நின் சேவடியே புகலிடம் என நினைந்து சேர்ந்தேன். அப்படிச் சேர்ந்த என் பிறவித்துன்பத்தை என்றைக்குத் தீர்ப்பது என, இறைவனை முன்னிலைப் படுத்தி முதற் பாடலிலே வினவுகின்றார்.

தன்னைநம்பிச் சரணடைந்தோர் இடரைத் தீர்த்துப்பழகியவன் சிவபிரான்; என்பது புலப்பட, அவன் நீலகண்டனாய் வானோர் இடர்தீர்த்த வரலாற்றினைக் குறிப்பிடுகின்றார். திருபாற்கடல் கடைந்தபோது அமுதம் எழுந்தபோது, கடைகயிறாகிய வாசுகி என்னும்

பாம்பின் விடமும் கலந்து வானவர்களை அஞ்சிஓடச் செய்தது. அப்போது திருமால் முதலான தேவர்கள் செஞ்சடைக் கடவுளாகிய சிவபிரானை அடைக்கலம் புகுந்து வேண்டிக்கொண்டார்கள். அமுதொடு கலந்த நஞ்சினைத்தம் தெய்வத்தன்மையால் எலுமிச்சம்பழமளவு திரளச் செய்து அதனை அருந்தி கண்டத்தில் விளங்கச் செய்தார். சிவபிரான் பேரருளால் நஞ்சு நீங்கிய பின்பு தேவர்கள் அமுதினையுண்டு மகிழ்ந்து சிவபிரானே நம் கடவுள் எனக்கொண்டு போற்றினர்கள். அப்படித் தன்னையடைந்த வானோர் இடர்தீர்த்த சிவபிரான் தன்னைச் சரண்புகுந்த எனது இடர்தீர்த்திலனே என்னும் கருத்தால்,

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ் ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!
எஞ் ஞான்று தீர்ப்ப திடர்''

எனத்தம் நெஞ்சக்குமுறல் தோன்றப் பாடுகின்றார். இவ்வாறு இறைவனை முன்னிலைப் படுத்திப் பாடிய அம்மையார் தம் உறுதியான அன்பை உலகுக்கு உணர்த்து கின்றார்.

இடர்களையா ரேனும் எமக் கிரங்கா ரேனும்
படரும் நெறி பணியா ரேனும்—சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு.

என்பது காணலாம். நாமெல்லாம் இறைவனைப் போற்றுவது, நம்மிடரைக் களையவேண்டும் இறைவன்—நமக்கு இரங்கவேண்டும், முத்திக்கு நெறி இது என நமக்குச் சொல்லவேண்டும் என்ற கருத்தால் தான். ஆனால் அம்மையார் அன்பு அவ்வெல்லையைக் கடந்து நிற்கின்றது. பயன் கருதாத பேரன்பாகத் திகழ்கின்றது. மேற்கூறிய மூன்றுவகையாலும் அவர் உதவா விட்டாலும் அன்பு அறாது என் நெஞ்சு. என்னெஞ்சு அவர்க்குரியது என்கின்றார். இறைவன் தன் ஒளியுருவில் இழிந்த என்புகளை அணிந்து கொண்டுள்ளார். இது எதைகாட்டுகின்றது இழிந்தோரையும் பெருமைப்படுத்திப் பாதுகாப்பேன் என்பதை யன்றோ உணர்த்துகின்றது. வெப்பமுள்ள தீயில் நின்றாடுதல் எதை விளக்குகின்றது? எத்தகைய கொடிய உள்ளத்திலும் விளங்கி உயிர்களை உணர்த்துபவன் என்பதை யன்றோ உணர்த்துகின்றது. அப்படிப்பட்ட எம்மானார்க்கு என்னெஞ்சு அன்பறாது. அவர்க்கே உரியதாகும் என முழுவதுமாகப் புகல் புகுகின்றார். நமக்கும் நிட்காமிய வழிபாட்டை யறிவிக்கின்றார்.

யானே தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன்.

என்ற அடிகள் எவ்வளவு பெருமை யுடையன? இவ்வுலகில் எத்தனையோ இன்பங்களை வேண்டி மக்கள் அலையா நிற்க என்னெஞ்சம் அவ்வின்பங்களை—நிலையில்லாத இன்பங்களை விரும்பாது பிறப்பு அறுத்தல் ஒன்றையே விரும்பினமையால் என்னெஞ்சமே நன்னெஞ்சம், அத்தகைய நெஞ்சு வாய்க்கப் பெற்ற யானே தவமுடையேன் என்பது நம்முள்ளங்களை யெல்லகம் உருக்கும் உரையன்றோ?

காலனையும் வென்றோம் கருநாகங் கைகழன்றோம்
மேலை யிருவினையும் வேரறுத்தோம்—கோல
அரனார் அவிந்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தமே சார்ந்து

என்ற பாடல் எமனை வெல்லும் ஆற்றலையும் கடுநரகத்தில் இடர்ப்படோம் என்ற நம்பிக்கையையும் இருவினைகளையும் வேரறுத்தோம் என்ற துணிவினையும் நமக்குத் தருகின்றதன்றோ? காரைக்காலம்மையாரின் இந்த அற்புதத்திரு அந்தாதியைப் படிப்போர்,


''ஆராத அன்பினோடுஅண்ணலைச் சென்றேத்துவார், பேராத
காதல் பிறந்து''.

என்பது அம்மையார் நமக்கு அளித்த நம்பிக்கைவாக்காகும். அவர் வாக்கின்படி நாம் பேராத காதல் பிறந்து ஆராத அன்பினோடு அண்ணலைச் சென்று ஏத்துவோமாக. காரைக்காலம்மையார் பேயாக இருந்து நூல்கள் செய்தது போலப் புறநானூற்றில் பதினோராவது பாடலாகிய அரிமயிர்த்திரண் முன்கை என்று தொடங்கும் அரிய பாடலைப் பேய்மகள் இளவெயினி பாடியுள்ளார் என்பதும் இங்கு நினையலாம்.


★★

காசிக்கு சமானமாகச் சொல்லப்படும் தலங்கள்.

1. திருவெண்காடு
2. திருவையாறு
3. திருமயிலாடுதுறை (மாயூரம்)
4. திருவிடைமருதூர்
5. திருச்சாய்க்காடு
6. திருவாஞ்சியம்



16-6-1976 திருஞான சம்பந்தர் குருபூசை விழாவில் ''சிவதர்ம சீலர்'' பட்டம் பெற்ற திரு. RM. முத்துபழநியப்பச் செட்டியாரவர்களுக்கும் ''பொற்கிழிப்பரிசு'' பெற்ற திரு. ஆ. ஆனந்தராசன், M.A ,B.T., அவர்களுக்கும் நடைபெற்ற பாராட்டு. பாராட்டு வழங்கியோர் : திரு. M.A. முருகேசன், B.A.B.L., திரு. A.K. சுப்பிரமணியபிள்ளை, M.A.,



16-6-1976 அன்று திருமுறைப் பெட்டகத்தை வித்யா பீடத்தில் எழுந்தருளச் செய்தபோது வித்யாபீடத் திருப்பணி செய்த திரு. RM. முத்துப்பழநியப்பச் செட்டியாரவர்களுடன் அன்பர்கள்.

பதினோராம் திருமுறை—
பா நலங்கள்

பண்டித, வித்துவான் அ. கி. செல்வக்கணபதி, பி. லிட்.

கலை நலமும் கவி நலமும்

நனி நாகரிகமுடைய மக்கள் பயிலும் ஓவியம் இசை போன்ற நுண்கலைகள் உயர்ந்த நோக்கும் சிறந்த பயனும் தருவனவாகும். இவை கண், காது முதலிய பொறிகளால் இன்பம் தருவன. நுண்மாண் நுழைபுலம் மிக்க ஆன்ற விந்தடங்கிய சான்றோர்கள் யாத்த கவிகளோ பொறிபுலன்கள் தரும் சுவையோடு அமையாமல் அறிவு துணையாகத் தூய கருத்தின்பம் பயப்பனவாகும். பொறிபுலன் உதவும் சுவைகள் உணர்வோடு கூடி உள்ளம் குளிர்வித்து உவகையூட்டும் தன்மையன. இச்சுவை நுகர்வின்பம் அகத்தளவே அமைந்து விடுவனவாகும். ஆனால், கவிக்கலையோ ஆய்தொறும் ஆய்தொறும் தூய அறிவின்பம் அளித்துத் தன்னிலை மறந்து பேரின்பம் அளிப்பதாகும். கலை இன்பமோ கவின் தரு நலத்துடன் சுயமையும் நல்கும் பெற்றியது. அகங்களிக்கும் கலைச்சுவை போலவே கவிதரும் அறிவின்பமும் விழுமமும் (துன்பம்) விழுப்பமும் (மேன்மை) தருவதுமுண்டு. காமக்கனி வளர்த்து மனமாசு படுத்தும் கவிகள் சான்றோரால் வெறுக்கப்படுவனவாகும், தீ தொரீஇ நன்றின்பால் உய்க்கும் செய்யுள்கள் நன்மக்களாற் பொன்னேபோல் போற்றப்படும்.

அறவாணரும் அருளாளரும்

தனக்கென வாழாப் பிறர்க்கு ரியாளராக வாழும் புலமைத் திருவினர் அறமுரைத்த லொன்றே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தனர், இப்புலனழுக்கற்ற சான்றோர் உவகை முதலான ஒன்பான் சுவைகளையும் பெய்து மனங்கனிய மகிழ்வூட்டவும் செய்வர். ஆயினும் அறநெறி பிறழாக் காட்சியையே அமைப்பர். மக்கட் பண்பு மணக்கக் கடவுட் காதல் கனிவிக்கும் அருட்புலவரோ அறத்துறை காட்டும் புலவரினும் தனிப்பெருஞ் சிறப்புடையவராய்த் திகழ்வர்.

திருமுறைச் சிறப்பியல்பு

சிந்தைக்கின்பம் தரும் திருமுறைகள் பன்னிரண்டும் கற்றோர் போற்றும் கவினமுதப் பேராழியாகும். தேவார திருவாசகம் முதலிய தேனமுதக் கவிகளைத் தித்திக்கப் பாடிய திருமுறைப் புலவரனைவரும் சிவநெறிச் செம்மல்களாய்த் திகழ்ந்த அருட் பெரும் புலவர் களாவர்.

அருளமுதப் பாட்டளித்த ஆளுடைய பிள்ளையாரின் தேவாரம் முதலாகத் திருத் தொண்டர் புராணம் ஈறுகச் சைவத் திருமுறைகள் எனப் போற்றப் பெறும் சிறப்புப் பெற்றன. திருமுறை என்ற தொடரை

''எல்லையில் விளக்கெரிப்பவர் திருமுறை எழுதுவோர்
வாசிப்பர் (திருத்தொண்டர் புராணம்) எனத் தெய்வச் சேக்கிழார்
பெருமான் எடுத்தாண்ட சிறப்பாலும்; திருக்கழு மலத்தில்
திருத்தொண்டீச்சுர நாயனர் கோயிலின் வடக்குப்பக்கச்
சுவர்க் கல்வெட்டில்,

'திருமுறைத் தேவாரச் செல்வன் திருமடம்' ஒன்று இருந்ததைக் குறிப்பிட்ட செய்தியாலும் திருமுறை என்ற சொல்வழக்குப் பண்டுமுதல் இருந்து வந்ததை நனி விளக்கும்,

சிறப்புப் பெற்ற திருமுறை

இப்பன்னிரு திருமுறைகளுள்ளும் தனிச்சிறப்புடையது பதினேராந் திருமுறையென அறிஞர் பாராட்டுவர்.

(1) திருவாலவாயுடையார் *(2)* காரைக்காலம்மையார் *(3)* ஐயடிகள் காடவர்கோன் *(4)* சேரமான் பெருமாள் நாயனர் (5) நக்கீரதேவர் (6) கல்லாடனர் (7) கபிலதேவர் (8) பரணதேவர் *(9)* இளம்பெருமானடிகள் *(10)* அதிராவடிகள் (11) பட்டினத்துப்பிள்ளையார் (12) நம்பியாண்டார்நம்பி என்ற பன்னிரு அருட்செல்வர்களால் நாற்பத்தொரு நூல்களாக அமைந்திலங்கும் சிறப்புப் பெற்றது. *1388* மாமலர்களால் சிவமணங்கமழ விளங்குவது. சிவபெருமானுகிய திருவாலவாயுடையாரின் திருமுகப் பாசுரத்தை முதற்கண் அமைந்ததொன்றே இத்திருமுறையின் தனிச்சிறப்பிற்குப் போதிய சான்ருகும். மற்றும் கடைச்சங்கப் புலவர்களாகிய நக்கீரர், கல்லாடனர், கபிலர், பரணர் போன்ற அறநெறிச் சான்ருேரின் பாடல்கள் அருள் மணத்தைத் தந்து கொண்டிருப்பதும் பிறிதுமொரு சான்ருகும்,

(நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படையைத் தவிர ஏனையோர் பாடல்கள் சங்கத் தொகை நூல்களுள் காணப் பெருமைக்குப் பாநல ஒப்புமையின்மை காரணமோ என ஆராய்ச்சியாளர் ஐயுறுவர்) இத்திருமுறை ஏனைத்திருமுறைகளைப் போலச் சிவபெருமானை மட்டும் குறிப்பிட்டுப் பாடாமல் ஆண்டவர், அடியார். விநாயகர், முருகன் முதலியோரைப் பற்றியும் தனித்தனி நூல்களாக அமையப்பெற்ற சிறப்புப் பெற்று விளங்குவது தனிச் சான்ருகும்.

பாசுரத்தின் பாநலம்

ஆலவாய்ச் சொக்கர் யாழ்பயில் பாணபத்திரருக்கு உதவுதற்காகச் சேரமான் பெருமாள் நாயனருக்கு எழுதிய திருமுகமே (சீட்டுக்கவி) திருமுகப் பாசுரமாக அமைந்துள்ளது.

''பண்பால் யாழ்பயில் பாணபத்திரன் தன்போல்
என்பால் அன்பன்''

என்ற தொடரின் பொருட்செறிவை நினைந்து இன்புறற் பாலதாம். வியப்பான விளையாடல்களை அடியார்களிடத்தில் வந்து புரிவதில் இறைவனுக்கு அளவற்ற இன்பம் போலும். அடியவரும் இறைவனேடு இரண்டறக் கலந்து உறைவதில் உலப்பிலா இன்பம் போலும்.

ஆண்டவனே அடியார் மாட்டு அன்புகொண்டு சீட்டுக்கவி எழுதித் ''தன்போல் என்பால் அன்பன்'' என்று இருவரது உள்ளக் கிடக்கையையும் உலகுக் குணர்த்தி உயர் பெறுந் தோழமை பெற்ருன். இறைவனின் அருட்செயல் இருந்த வாறென்னே! தொண்டர்தம் பெருமையும் சொல்லற்கும் எளிதோ!

காரைக்காலம்மையாரின் கவிநலம்

அங்கங் குளிர்ந்தனல் ஆடும் அப்பன் 'அம்மையே' என்றழைக்கும் சிறப்புப் பெற்ற காரைக்காலம்மையாரின் மூத்த திருப்பதிகம் முழுவதும் இறைவனின் திருநடனக் காட்சியைக் கூறியிருப்பினும், கூத்தாடுமிடம் 'சுடுகாடு' என்பதை உணர்த்துவார் போல் சுடலைக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டுதல் அம்மையாரின் அருள் நலத்தோடு அறிவுப் புலமை யையும் எடுத்துக்காட்டும்.

''எட்டி இலவம் ஈகை சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழகன் ஆடுமே'' (மூத்ததிருப்பதிகம்-1)

என்ற மூத்த திருப்பதிகப் பாடலில் சுடலைக் காட்சி நம் மனக்கண்முன் தெரிகின்றதன்றே! இவ்வாறே திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்திலும் கூத்தாட்டைக் குழைவித்துப் பாடு கிருர். இவைபோல் திருவிரட்டை மணிமாலையிலும், அற்புதத் திருவந்தாதியிலும் அரனை அன்பெனும் போர்வையால் போர்த்திய காட்சி தனி நெஞ்சில் உள்ளடைத்து விம்மித முறும் தனிக்காட்சியாகின்றது.

ஐயடிகள் காடவர்கோனின் அறிவு நலம்

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய ஐயடிகள் காடவர்கோன் வடமொழி யிலும் தென்மொழியிலும் தேர்ந்த புலமை பெற்றவர். கி. பி. 550-575ல் காஞ்சியை ஆண்ட மூன்ரும் நரசிம்மவர்மனே இவராவர் என ஆராய்ச்சியாளர் கூறுவர். 24 பாடல்களைக் கொண்ட 'சேத்திர வெண்பா' இவரால் பாடப் பெற்று இத்திரு முறையில் இடம் பெற்றது. இவர் நெஞ்சை முன்னிலைப் படுத்திக் கூறும் பாடல்கள் படித்துச் சுவைத்து இன்புறத் தக்கதாய் உள்ளன.

''உய்யும் மருந்திதனை உண்மின் எனஉற்ருர்
கையைப் பிடித்தெதிரே காட்டியக்காற்—பைய
எழுந்திருமி யான்வேண்டேன் என்னுமுன் நெஞ்சே
செழுந்திரும யானமே சேர்''—(சேத்திர-24)

என்ற பாடல் நிலையாமையை உணர்த்தும் மெய்ப் பாட்டுக் காட்சி நம்மெய்யை மெய்யாகவே சிலிர்க்க வைக்கின்றதன்றே!

சேரமான் பெருமாள் நாயனுரின் செய்யுளின்பம்

இச்சேரர் திருவாளர் பாடிய பொன்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, திருக்கைலாய ஞான உலா என்ற மூன்று சுவைதரு நூல்களிலும் கலைநலமும் கற்பனைநலமும் செறிந்துமிடைந்து கழிபேரின்பம் பயப்பனவாகும். ஈசனின் திருவுருவக் காட்சியைப் பொன் வண்ணத் தந்தாதியில் கூறும் சொல்லின்பம் நாவூறும் நலமுடைத்தது.

''பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்''

என்ற இவ்வந்தாதியின் முதற்பாடலைக் கற்ருேர் மனம் கவின்பேரின்பமுறும்.

இறைவனே திருமுகம் தீட்டுதற்குரிய அன்பராய் விளங்கிய சேரமான் யமகம் மடக்கு, சிலேடை போன்ற அணிநலன்களையும் பாடவல்லார் என்பதை இவ்வந்தாதியில் படித்தின் புறலாம்.

''பண்டங்கள் வந்து பலிதா என்ருன்பக லோற்கிடென்றேன்
அண்டங் கடந்தவன் அன்னம் என்ருன் அயன் ஊர்தி என்றேன்
கொண்டிங் குனையம்பெய் என்ருன் கொடித்தேர் அநங்கன் என்றேன்
உண்டிங் கமைந்ததென் ருற்கது சொல்ல வுணர்வுற்றதே''

(பொன்வண்ண-33)

இறைவனைத் தலைவனுகவும் தன்னைத் தலைவியாகவும் அமைத்துப்பாடும் மரபுபற்றிப்படைத்த நாயனுரின் பாடல் நயம் படித்து இன்புறற்குரியது. (பல்+இதா) பலிதா—சோறுதா; அன்னம்—சோறு அயன்வாகனம்; ஐயம்+பெய்=சந்தேகம் சொல்; ஐ+அம்பு+எய்=ஐந்து மலர்களை எய்தல்) இரட்டுற மொழிதல் பொருளை உணர்ந்து இன்புறற்பாலது.

நக்கீரரின் நர நலன்

கருத்துரிமைப் புலமை அறம்காத்த நக்கீரர் பாடிய நூல்கள் பத்து இத்திருமுறையில் இடம் பெற்றுள்ளன, கைலை பாதி காளத்திபாதி; திருவீங்கோய்மலை எழுபது; திருவலஞ்சுழி மும்மணிக்கோவை; திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவபாணி; கோபப்பிரசாதம்; கார் எட்டு, போற்றித்திருக்கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை, திருக்கண்ணப்பதேவர் திருமறம் ஆகிய நூல்களுள் திருமுருகாற்றுப்படையைத்தவிர ஏனைய சங்கநூல்களுள் சேர்க்கப்படாமைக் குரிய காரணம் புலப்படவில்லை.

நாவீறு பெற்ற நற்றமிழ்ப்புலவரான நக்கீரர் கடைச்சங்கப் புலவராவார். முருகப் பெருமான் அடியார்களுள் தலைசிறந்த தவத்திருவினர். இவர்படைத்த திருமுருகாற்றுப் படை, சங்கத் தொகை நூல்களுள்வைத்துப் போற்றப்படுகிறது. திருமுருகாற்றுப்படை ஒரு ஞான இலக்கியத் திருமறை. அது அருள் பழுத்த துறைத்தீந் தமிழின் கடவுட் பழம்பாடல்; அரும்பெறல் மரபிற் பெரும் பெயர் முருகனைப் பற்றிக் கூறும் அருட்பாடல்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே முருகவழிபாடு இருந்து வந்ததை இத்தொடர் சுட்டி விளக்குகிறது. அரும்பெறல் மரபென்பது பெறுதற்குரிய சிறப்புடைய மரபு எனக் கருதற் பாலது. திருமுருகாற்றுப்படை சாத்திரம், தத்துவம், இலக்கியம், இலக்கணம், அருள் கலந்த ஒரு சொற்களஞ்சியமாகும். ''பலர்புகழ் ஞாயிறு'' கடற்கண் தோன்றுங்காட்சி; முகிற்காட்சி, கமஞ்சூல் மாமழையின்காட்சி பாட்டிற்கேற்ற பாநலம் தந்து இன்புறுத்தும். இக்கவிச்சுவை கற்போர்க்குக் கற்பனை நலம் காட்டி நிற்கிறது. நூல்முழுதுமே இத்தகைய பாநலங்கள் பரந்து விரிந்து மிளிர்கின்றன. நூலறிபுலவராகிய நக்கீரர் பலர்புகழ் நன்மொழிப் புலவரேறுகத் திகழ்ந்தவர். அவர்தம் புலனறிவு மன்னுபிர்க்கின்பம் தரும் பெற்றியது.

ஈங்கோய் எழுபதின் இயற்கை நலம்

உணர்ச்சியால் நிரம்பிய உள்ளம் உண்மை காண்பதில்லை. அறிவற்ற அந்த உணர்ச்சி அன்பிலே பிறந்து அருளோடு தவழ்ந்து வருமாயின் இன்பச்சுவை மிகுவிக்கும். காட்டு விலங்குகள் கூட இவ்வுணர்ச்சி வயப்பட்டு விடுகின்றன. இக்காட்சியை எழில்குலுங்க நக்கீரர் ஈங்கோய் மலையில் காட்டுகிறுர்.

மயங்கிய களிறும் சிரித்த முல்லையும்

ஈங்கோய் மலைக்காடுகளில் காட்டுப் பன்றிகள் கோரை முதலிய கிழங்குகளைக் கிண்டு கின்றன. வாய்வைத்துத் தோண்டும் இடமெல்லாம் செந்நிறப்பவளமணிகளே வெளிப் படுகின்றன. இவை கதிரவன் ஒளியால் தீப்பிடித்து எரிவது போலக் காட்சி தருகின்றன. அங்கு வந்த யானைக் கூட்டம் இப்பொய்த் தோற்றத்தைக் கண்டு தீயென மயங்கி அஞ்சி ஓடி ஒளிகின்றன. அங்கு இயற்கையாகவே பூத்துக்குலுங்கும் முல்லைப்பூக்கள் அஞ்சி ஓடும் யானைக் கூட்டத்தைப்பார்த்துச் சிரிப்பதாக ஓவியம் தீட்டுகிறுர் நக்கீரர். நமது தீவினைகளைப் போக்கும் இறைவன் எழுந்தருளிய ஈங்கோய்மலை சுவை நலம் தரும் இயற்கைவளம் உடைய தாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறுர்.

ஏனம் இளைத்த இனபவள மாமணிகள்
கானல் எரிபரப்பக் கண்டஞ்சி—யானை
இனமிரிய முல்லைநகும் ஈங்கோயே நம்மேல்
வினையிரியச் செற்றுகந்தான் வெற்பு

என்பது அப்பாட்டு. இத்தகைய பாடல்கள் பலவற்றுள் தத்துவக் கருத்தை இயற்கை நலத்தோடு காட்டும் அழகு படித்தின்புறற்குரியது.

கல்லாடனுரின் கவி நலம்

'கல்லாடம் கற்றவரிடம் சொல்லாடாதே' என்ற முதுமொழிக் கிணங்க சொல் நலம் பெற்ற கல்லாடனுர் 'திருக்கண்ணப்ப தேவரின் திருமறம்' பற்றிப் பாடிக் கண்ணப்பரின் வரலாற்றை 38வரிகளடங்கிய இணைக் குறளாசிரியப் பாவால் வடித்துக் காட்டுகிறுர்.

கபிலதேவரின் கவின் நலம்

செஞ்சொற்புலவராம் கபிலர் மூத்தநாயனுர் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான்திருவந்தாதி ஆகிய நூல்கள்மூலம் விநாயகர், சிவன் ஆகியோரை முறையே பாடிப்பரவும் பாடல்களின் கவிச்சுவை கற்ருேர்மெச்சும் பொற் புடைத்து.

பரணரின் பாநலம்

தீயான மேனியனை, செம்பவளக் குன்றுனை சிவபெருமான்திருவந்தாதிமூலம் தெளிவுற விளக்கும் காட்சி தத்துவப் பொருட்கோர் எடுத்துக்காட்டாகும்.

இளம் பெருமானடிகள் இன்கவி நலம்

தித்திக்கும் முப்பது பாடல் மூலம் சிவபெருமான் திருமும்மணிக்கோவை பாடி திருவருட் செயலை வியக்கிருர்.

அதிராவடிகள் அருள் நலம்

மூத்தபிள்ளையார் திருமும்மணிக் கோவை மூலம் மூலப்பொருளாம் விநாயகரின் தத்து வத்தை அருள் நலம் கனிய எடுத்துரைக்கிருர்.

பட்டினத்துப் பிள்ளையாரின் பாநலம்

துறவுநலம் சான்ற இச்சான்ருேர் பாடிய கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும் மணிக் கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்ப முடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது, என்ற ஐந்து பிரபந்தங்கள் இத்திருமுறையில் இடம்பெற் றுள்ளன.

இவற்றில் ஒன்ருகிய ஒருபா ஒருபஃது பத்து அகவற்பாக்களைத் தன்னகத்தே கொண்டு அந்தாதித் தொடையால் அமைந்து இருநிலம் எனத்தொடங்கி மண்டலித்து விளங்குகிறது. இதில் ஆருவதுபாட்டு இறைவன் திருக்கோலத்தில் காணும் பொருள்களுக்குத் தத்துவப்பொருள் தரப்பட்டுள்ள நலம் படித்து இன்புறற்பாலது.

இந்நூல் வழங்கும் எட்டாவது பாட்டு உடம்பைக் கடலாக உருவகம் செய்கிறது,

''நிலத்திடைப் பொறையாய் அவாவினில் நீண்டு
சொலத்தகு பெருமை தூரா ஆக்கை.
மெய்வளி ஐயொடு பித்தொன் ருக.
... .

நரையெனும் நுரையே நாடொறும் வெளுப்ப
கூடிய குருதி நீரினுள் நிறைந்து
திரையுடைத் தோலே செழுந்திரை யாக
மூடிய இருமல் ஓசையின் முழங்கி
… … …. … … … … … … … …. … …
ஓங்குகடல் உடுத்த ஒற்றியூ ரோயே'' என்பது பாடல்.

(இதில் யாக்கை-கடல்; வளி ஐயொடு பித்து-காற்று நரை-நுரை; தோல்-அலை; குருதி-நீர்; இருமல்-ஓசை; சுடுபசிவெகுளி-சுறவினம்; ஊன்-தடி; எலும்பு-திடல்;)

இத்தகைய் உடலுள் அகப்பட்டு அலமந்தவர், சிவபெருமானின் அருளைப் பெறின் சிவனின் பாதமாகிய நாவாயைப் பற்றிச் சிந்தையாகிய கூம்பினை நிறுத்தி, ஆர்வமாகிய பாயை விரித்து நிறை என்னும் காற்றைப் பிணித்து, சுற்றமாகிய தொடர்க் கயிறு அறுத்து, சோதிச் சுடராகிய விளக்கு ஏற்றி, உணர்ச்சியாகிய துடுப்பைத் துழாவி நீள் கரை அடைவார் என்று உருவகப்படுத்திய அழகு ஆய்ந்தின்புற்றற்குரியது.

நம்பியாண்டார் நம்பிகளின் நாநலம்

பதினோராந் திருமுறையைத் தொகுத்த இப்பெருந் திருவினர். தேவாரம் முதலிய திருமுறைகள் வெளிக் கொணர முயன்றவர். திருத்தொண்டர் புராணத்தைத் தெய்வச் சேக்கிழார் பாடத்திருத்தொண்டர் திருவந்தாதி பாடித் தந்தவர், திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை; கோயில் திருப்பண்ணியர் விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திவருந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை, திருநாவுக்கரசு தேவர் திருவேகாதச மாலை முதலிய பத்து நூல்களும் பாடி இத்திருமுறையோடு இணைத்துத் தொகுத்த செஞ்சொற்புலவர். இவர் பாநலத்தை ஆய்தொறும் ஆய்தொறும் தனிப்பேரின்பம் நல்குவனவாம். அடியார்களின் வரலாற்றைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பெற்றியுள்ளது.

''விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்; விரும்பிநல்
விளக்குத்தூபம் விதியினல் இடவல்லார்க்கு; கரும்பினில் கட்டிபோல்வார்''

என்று அப்பர் தேவாரம் கூறுமாற்போல் திருவிளக்குத் தொண்டு செய்த கலிய நாயனுர் பெருமையை விளக்கும் பாடலொன்று இப்பெருந்தகையார் பாட்டிற்கோர் எடுத்துக் காட்டாகும். ''கம்பக் கரிக்கும் சிலந்திக்கும் நல்கிய கண்ணுதலோன் உம்பர்க்கு நாதற் கொளிவிளக் கேற்றற் குடல் இலனய் கும்பத் தைலம்விற் றுஞ்செக் குழன்றுகொல் கூலியினல் நம்பற் கெரித்த கலிஒற்றி மாநகர்ச் சக்கிரியே'' என்பது அப்பாட்டு.

ஆளுடைய பிள்ளையார் திருத்தொகைமூலம் திருஞானசம்பந்தர் வரலாற்றைச் செவ்விதின் விளக்குகிறுர்.

தொகுத்து முடித்தல்

பதினேராந்திருமுறை பக்திச் சுவைநனி சொட்டச் சொட்ட பாடப்பெற்ற பன்னூற்றொகையாகும். இத்திருமுறையைத் தொகுத்த நம்பியாண்டாரின் செயற்கரிய செயலை எண்ணி இறும்பூதெய்துதற்குரியது. இத்திருமுறையைப் பக்தியுடன் பயில்வார்க்கு எங்கும் இன்பம் பயப்பதைக் காணலாம். இன்பம் விளையும் இடமேயன்றி துன்பந்தரும் இடத்திலும் கூட இன்புறுத்தும் நிகழ்ச்சிச் சுவைகளைக் காணலாம். இத்திருமுறையில் சிவமணமே எங்கும் முகிழ்த்து இன்புறுத்துகிறது. அவ்வின்பமும் தோன்றிமறையும் இன்பமன்று; என்றும் நிலைத்த பேரின்பம் பெருவெள்ளமாய்த் திகழ்வது என்றும் பெருக்கெடுக்கும் இன்பப் பேராறு என்பது தெய்வச் சேக்கிழார் பெருமான் கண்ட முடிவு.

''என்றும் இன்பம் பெருகும் இயல்பினுல்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்.

என்ற செய்யுளின் பாநலத்தின் சுவை கண்டு திருமுறைகளைக் கற்றுத் தென்னுடைய சிவனைப் போற்றிப் பராவுவோமாக!

வாழ்க பன்னிரு திருமுறை!

வளர்க நம்பியாண்டார் புகழ்!!

★★

பஞ்ச பூத தலங்கள்

1. திருவாரூர், காஞ்சிபுரம் — பிருதிவி
2. திருவானைக்கா — அப்பு
3. திருவண்ணுமலை — தேயு
4. திருக்காளத்தி — வாயு
5. சிதம்பரம் — ஆகாசம்

பன்னிரண்டாம் திருமுறை–
சேக்கிழார் திருமொழிச்சுவை

மகாவித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார்

திருச்சிற்றம்பலம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

முன்னுரை:

சேக்கிழார் நாயனுர் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணம் திருத்தொண்டர்களது வரலாற்றை விரித்துணர்த்தும் முகத்தால் எவ்விடத்தும் இறைவனது திருவருட் சிறப்பே தோன்ற நிற்பது என்பதும், அதனுல் பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடுதலையே அது நுதலி எழுந்தது என்பதும் யாவராலும் நன்கறியப்பட்டவை எனினும், அது வெறும் வரலாற்று நூலாகாது, செய்யுளின்பம் பலவும் அமைய இனிய செந்தமிழ்க் காப்பியமாகவே செய்யப்பட்டது என்பதும் பலரும் உடன்பட்டுக் கொள்வதே.

சுவை வகை

காப்பியங்களில் உணரப்படும் சுவை, 'சொற்சுவை, பொருட்சுவை, என இரண்டு. அவற்றுள் சொற்சுவை யாவன சொற்கள் தமக்கு உறுப்பாகிய எழுத்து வகையாலும், தாம் பொருள்களை நயம்பட உணர்த்துதல் வகையாலும் அமையும் அணிவகைகளாம்; பொருட்சுவையைத் தொல்காப்பியர், 'மெய்ப்பாடு' என வைத்து 'தலையாய மெய்ப் பாடுகள் எட்டு' என்ருர். வடநூலார் அவ்வெட்டுடன், 'நடுவுநிலை' அல்லது 'சமநிலை' என்பது ஒன்று கூட்டி, 'ஒன்பான் சுவை' (நவரசம்) என்றனர். மற்றும் காப்பியத்திற்கென்றே அமைந்த பதினெட்டுவகை வருணனைகளையும், 'காப்பியச்சுவை' என்றே கொள்ளுதல் வேண்டும். இவ் வனைத்துச் சுவைகளையும் சேக்கிழார் தமது புராணத்துள் தோற்றுவிக்கும் இடங்களில் அவற்றைப் பத்திச் சுவையோடு பொருந்தியே தோன்றச் செய்தலைச் சில எடுத்துக்காட்டுகளில் வைத்துக் காண்பதே இங்கு நாம் எடுத்துக் கொண்ட பொருள். சேக்கிழாரது செய்யுளின் சுவை இத்தகையதாய் இருத்தல் பற்றியே மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அவரது செய்யுளை ''தெய்வம் மணக்கும் செய்யுளெலாம்'' எனக் கூறிப் புகழ்ந்தார்கள்.

செய்யுள் நடை

புலவர்களுள் சிலரது செய்யுள் நடை, ஒவ்வா நிலத்தில் வண்டி யுருண்டாற்போல, 'கட பட' என வன்மையானதாய் இருக்கும். சிலரது செய்யுள் நடை அவ்வாறின்றி,

இழுமென இழிதரும் அருவியோசை போல மென்மையானதாய் இருக்கும். சேக்கிழாரது செய்யுள் நடை அவருக்கென்றே தனிமையில் அமைந்த இனிய ஒரு செம்பாகமான நடையே. அந்நடையானே அவர் தோற்றுவிக்கும் சுவைகளை அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சிறிதே சுவைக்க முயல்வோம்.

அணிந்துரை:

பொருள்களை அணிந்துரைக்குமிடத்துப் பெரும்பான்மையும் உயர்வு நவிற்சியாகக் கூறுதலே பிற்காலப் புலவரது மரபாயிற்று. முற்காலத்தவராகிய சங்கப் புலவரது மரபு அவ்வாறின்றித் தன்மை நவிற்சியாகக் கூறுதலாகவே இருந்தது. சேக்கிழாரது அணிந்துரைகளும் தன்மை நவிற்சியாகவே இருத்தலைக் காணலாம்.

காப்பியங்களில் முதற் பகுதியாக அமைவன, 'நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு' என்பன. அம்முறையில் சேக்கிழார் தமது புராணத் தொடக்கத்தில் சோழ நாட்டுச் சிறப்பையும், திருவாரூர்ச் சிறப்பையும் கூறியுள்ளார். அவற்றுள் நாட்டுச் சிறப்பிற் காணப்படும் ஒரு பாடல்கீழ் வருவது.

மேகமுங் களிறு மெங்கும்; வேதமும் கிடையு மெங்கும்;
யாகமுஞ் சடங்கு மெங்கும்; இன்பமும் மகிழ்வு மெங்கும்;
யோகமும் தவமு மெங்கும்; ஊசலும் மறுகு மெங்கும்;
போகமும் பொலிவு மெங்கும்; புண்ணிய முனிவ ரெங்கும்.

இதனுள், 'சோழநாட்டில் மாடமாளிகைகளின் மேலும், கோபுரங்களின் மேலும், சோலைகளின் மேலும் மேகங்கள் தவழ்கின்றன' எனவும், 'சாலைகளிலும்' சோலைகளிலும் களிறுகள் திரிகின்றன' எனவும், 'மக்கள் யாவரும் துன்பம் என்பதையே அறியாது இன்ப வாழ்க்கை வாழ்ந்து மனநிறைவுள்ளவர்களாயுள்ளனர்' எனவும், 'துணைமையர் பலரும் கூடிக் களித்து ஆடை அணிகலங்களால் பொலிவு பெற்று விளங்குகின்றனர்' எனவும் கூறுமுகத்தால் அந்நாட்டின் செல்வ மிகுதியைப் புலப்படுத்திச் செல்வம் பற்றிப் பிறக்கும் உவகைச் சுவை தோற்றுவிக்கப்பட்டதாயினும், அச்சுவை தனியே தோற்றுவிக்கப்படாமல், 'எங்கும் வேத முழக்கமும் வேள்விகளும், அவற்றை ஒட்டிய பல சடங்குகளும், யோகமும், ஏனைச் சரியையும் கிரியையுமாகிய தவங்களும், பொதுத் தன்மத்திலும், சிவதன்மத்திலும் தலைநிற்கின்ற முனிவர்களும் நிரம்பியிருத்தலாகிய சிறப்பினையும் உடையது சோழநாடு' என இடையிடையே வேத நெறி சைவ நெறிகளின் மிகுதியையும் கூறிப் பத்திச் சுவை உடன் தோன்றவே கூறப்பட்டது. இதனால், சோழ வளநாடு சோறுடைத்ததால் மட்டுமன்று; 'பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்'' என்பதிற் குறிக்கப்பட்ட சோறாகிய முத்திப் பெரும் பயனையும் உடைத்ததாதல் கூறப்பட்டதாம். மேகத்தையும், களிற்றையும் இணைத்துக் கூறியதில் அவ்விரண்டிற்கும் வேறுபாடு தோன்றாத ஐய அதிசயம் குறிப்பால் தோற்றுவிக்கப்பட்டதாம்.

மேற்கூறிய பாடலை அடுத்து வரும் பாடல் இது:

பண்டரு விபஞ்சி யெங்கும்; பாதசெம் பஞ்சி யெங்கும்;
வண்டறை குழல்க ளெங்கும்; வளரிசைக் குழல்க ளெங்கும்;
தொண்டர்தம் இருக்கை யெங்கும்; சொல்லுவ திருக்கை யெங்கும்;
தண்டலை பலவு மெங்கும்; தாதகி பலவு மெங்கும்.

இதனுள் 'சொற்பின் வருநிலை' என்னும் சொற்சுவை மிகுதியாகத் தோற்றுவிக்கப் பட்டது, விபஞ்சி, யாழ் அல்லது வீணை. 'ஆடவரும் மகளிரும் எங்கும் வீணையை இனிமையாக வாசித்துப் பொழுது போக்குகின்றார்கள்; மாதர்கள் யாவரும் காலில் செம்பஞ்சுக் குழம்பை யூட்டி அழகு செய்து கொள்கின்றார்கள்; அவர்களது கூந்தலில் இயற்கையாலும் செயற்கை யாலும் உள்ள நறுமணத்தை விரும்பி வண்டுகள் முரன்று மொய்க்கின்றன. இசைக் கருவிகளுட் சிறந்த குழல் எங்கும் வாசிக்கப்படுகின்றது; எவ்விடத்திலும் குளிர்ந்த சோலைகள் பல நிரம்பியுள்ளன. அவற்றில் அந்நாட்டு அரசரது அடையாளப் பூவைக் கொண்டுள்ள ஆத்தி மரங்களும், சுனிகளும் சிறந்த கனியைத் தருவனவாகிய பலாமரங்களும் நெருங்கி நிற்கும்' எனக் கூறியவாற்றால். சோழநாட்டின் வளமே கூறப்பட்டது. ஆயினும், அவ்வளம் பொருள் வளம் மாத்திரமாய் ஒழியாது அருள் வளமாயும் விளங்குமாறு, சரியை முதலிய வற்றின் நிற்கும் அடியவர்கள் தங்கும் இடமாகிய திருமடங்களும், வேதம் ஓதியும், வேள்வி வேட்டும் நிற்கின்ற அந்தணர் இல்லங்களும் எங்கும் காணப்படுகின்றன' என்பதை இடை வைத்துக் கூறியவாற்றால், இச்செய்யுள் தெய்வ மணம் கமழ்வதாயுள்ளது.

இனி அப்பாடலை ஒன்று இடையிட்டுத் தொடர்ந்து ஒரு பாடல் காணப்படுகின்றது. அது வருமாறு:-

வீதிகள் விழவி னார்ப்பும் விரும்பினர் விருந்தி னார்ப்பும்;
சாதிகள் நெறியின் தப்பா; தனயரு மனையின் தப்பா;
நீதிய புள்ளும் மாவும்; நிலத்திருப் புள்ளும் மாவும்;
ஓதிய எழுத்தாம் அஞ்சும்; உறுபிணி வரத்தாம் அஞ்சும்.

இதனுள்ளும் சொற்சுவை ததும்பக் காண்கின்றோம். 'வீதிகள் எங்கும் மங்கல விழாக் களின் ஆரவாரம் மிகுந்துள்ளன' என்பது செல்வ வளத்தைக்காட்டுவதாம். ஆயினும் விரும்பி வந்த விருந்தினரை (புதியவரை)ச் சேய்மையில் கண்டபொழுதே முகனமர்ந்து நோக்கியும், அந்நோக்கின் வழி அவர் அணுகி வந்தபொழுது ஈரம் அளை இப்படி றிலவாகிய இனிய சொல்லைச் சொல்லியும், பின்பு அவர் அச்சொல்லின் வழி இல்லம்புக்கு இருந்த பின் அவர் விரும்புமா றெல்லாம் உண்டி முதலியவற்றாற் புறந்தந்தும் அவரை ஆர்த்துக் கொள்ளுதல் (அன்பால் பிணித்துக் கொள்ளுதல்) எங்கும் உள்ளன என்பது, 'செல்வத்துப் பயனே ஈதல்' என்னும் அறவாழ்க்கை நலத்தையே உணர்த்துவதாம். 'சாதி' என்பது, தொழில் பற்றியே வருவதாதலின் ''அவை நெறியின் தப்பா'' என்பது, பார்ப்பார் வேதம் ஓதுதலை ஒரோர்கால் ஒழியினும் ஒழுக்கத்தை ஒரு ஞான்றும் ஒழியார்' எனவும், 'அரசர் முறை செய்து குடிகளை நன்கு காப்பாற்றி, 'மக்கட்கு இறை' என்று புகழப்படும் தன்மையில் நீங்கார்' எனவும் வணிகர் கொள்வதூஉம் மிகைகொளாமல் கொடுப்பதூஉம் குறைகொடாமல் பிறவும் தம்போற் பேணிச் செய்வர்' எனவும், 'இவ்வாற்றால் இல்வாழ்க்கைத் துணைவியர் யாவரும் தமக்கு நன்கல மாகிய நன்மக்கட் பேற்றை அடைவதில் தவறார்' எனவும், இவையெல்லாம் பெரியவல்ல; அந்நாட்டில் பருந்து, கழுகு, கூகை, காகம், மயில் முதலிய பறவைகளும், புலி, கரடி, அரிமா, பூனை முதலிய விலங்குகளும்,

''இன்னு எனத்தான் உணர்ந்தவை துன்னுமை
வேண்டும் பிறன்கண் செயல்''

என்னும் நீதியை உடையனவாய்த் தம் பகையுயிர்கட்கு நலிவு செய்தல் இல்லையாகிய வியப்பினையும் உடையது சோழநாடு; இன்ன பல நலங்களால் 'மா' என்னும் திருமகள் சோழ நாட்டிற்றானே இருக்க விரும்புவள்' எனவும் கூறியவற்றால், 'அறம், நீதி, என்பவற்றால் வட நூலார் கூறும் சாந்தச் சுவை ஒருவாறு தோற்றுவிக்கப்பட்டது.

இவை அனைத்திற்கும் மணிமுடியாக ஈற்றடியில் பத்திச் சுவை கனிந்து நிற்கின்றது. அஃதாவது அருள் நெறி நின்று மந்திரங்களை ஓதுவார் பலராலும் இன்றியமையாது ஓதப்படுவன திருவைந்தெழுத்து மந்திரமே. அதனால், உயிர்ப்பிணியாகிய பிறவிநோயேயன்றி, உடற்பிணியாகிய பலவகைநோய்களும் அந்நாட்டுட்புக அஞ்சுமாம். ஆகவே, திருத்தொண்டர் புராணத்தின் நாட்டுச் சிறப்பை உணர்ந்து இன்புறுகிறவர்கள், அதனுள் இந்த ஓர் அடியையன்றோ உயிர்நாடியாக உணர்ந்து இன்புற்றுப் பயனடைதல் வேண்டும்! இன்னும் அவரது பாடலில்,

''வேத வேதியர் வேள்வியே தீயென;
மாத ரோதி மலரே பிணியன;
காதல் வீதி விலக்கே கவலைய;
சூத மாதவி யேபுறஞ் சூழ்வன''

என்றாற்போலும் சொற்சுவையோடுங் கூடிய பொருட்சுவை மிக்க பாடல்களும் பல.

திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் தொண்டை நாட்டு நானிலங்களின் சிறப்பைப் புகழ்ந்துரைக்குமிடங்களில் அந்நிலங்கள் தாம் தம் இயல்பாற் சிறந்து விளங்குதலை மட்டும் கூறிப்போகாது அவை ஆங்காங்குப் பல சிவ தலங்களைக் கொண்டுள்ள சிறப்பையே அவற்றின் சிறப்புகள் பலவற்றினும் தலையாய சிறப்பாகக் கூறியது, சேக்கிழார்க்கேயுள்ள தனிச் சிறப்பாதலும் பலர் அறிந்தது. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், ''தெய்வம் மணக்கும் செய்யுளெலாம் எனக் கூறியது சிறப்பாக இது பற்றியேயாம்.

மற்றும் மாதவச் சிவஞான யோகிகள் இது பற்றியே;

''திருத்தொண்டை நன்னாட்டு நானிலத்தைத் திணைவளனுக்கு தெரித்துக் காட்ட
மருத்தொண்டை வாய்ச்சியர்சூழ் குன்றைநகர் குலக்கவியே வல்லான்''

என்றார். மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களும், 'சேக்கிழாரது தொண்டை நாட்டு வருணனை, நாட்டு வருணனை செய்யும் புலவர் பலர்க்கும் முற்காட்டாய் அமைந்தது என்றார்.

காஞ்சி நகர வருணனையில், 'அங்குள்ள மாளிகைகள் சந்திரகாந்தக் கற்களால் இழைக்கப்பட்டிருத்தலின், மாலைக் காலத்தில் செவ்வானத்தின் இடையே தோன்றுகின்ற இளம்பிறையின் ஒளியால் அச்சந்திரகாந்தக்கல் நீரைச் சிந்துதல், சிவபெருமானது சடை

முடியையும், பிறையையுங் கண்ட அன்பர்கள் நெஞ்சுருகி அன்புக் கண்ணீர் சிந்துதலேயே ஒத்திருக்கின்றது' என்றார். வருணனைகளைப் பத்திச் சுவையோடு அவர் தோன்றச் செய்தற்கு இதனினும் சிறந்த சான்று வேண்டுமோ!

மின்பொலிபன் மணிமிடைந்த தவள மாட
மிசைப்பயில் சந்திரகாந்தம் விசும்பின் மீது
பொன்புரையுஞ் செக்கர்நிறப் பொழுது தோன்றும்
புனிற்றுமதி கண்டுருகிப் பொழிந்த நீரால்
வன்புலியி னுரியாடைத் திருவே கம்பர்
வளர்சடையும் இளமதியும் கண்டு கும்பிட்
டன்புருகி மெய்பொழியக் கண்ணீர் வாரும்
அடியவரும் அனையவுள அலகி லாத.

இவ்வாறே மேற்குறித்த சோழ நாட்டுச் சிறப்பில், 'வயல்களிலெல்லாம் நெற்பயிர்கள் அனைத்தும் கதிர்களை யீன்று தலைவணங்கி நிற்றல், சிவனடியார்கள் தம்மிற் கூடிய காலத்து இருசாராரும் ஒருவரை யொருவர் தலையால் வணங்குதல் போன்றுள்ளது' என்றார். இதனால், சிவனடியார்கள் ஒருவரையொருவர் உயர்வு தாழ்வு கருதாமை கூறப்பட்டது.

''பத்தியின் பால ராகிப் பரமனுக் காளா மன்பர்
தத்தமிற் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தி யின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம்''

என்பது அப்பாடல். பத்தி நிலையை அடைந்த அடியவர்கள் தலையால் வணங்கி, பத்திமிக முதிரப் பெற்ற சீரடியாரான பின்பு நிலத்தில் வீழ்ந்து பணியும் நிலையுடையராதலை, முன்பு கதிர்த் தலை வணங்குகின்ற பயிர்கள் முற்றி முதிர்ந்தபின் அடியோடு கீழே வீழ்ந்து நிற்றல் காட்டுகின்றதாம்.

காப்பிய அமைப்பில் சேக்கிழார் முதற்கண் நாட்டுச் சிறப்புக் கூறியபின் நகரச் சிறப்பை 'மனுநீதி கண்ட புராணம்' என வைத்துத் திருவாரூர்ச் சிறப்பைக் கூறினார். அதனுள்ளும் பத்திச் சுவையே மிகுந்து காணப்படுகின்றது.

''படர்ந்த பேரொளிப் பன்மணி வீதி, பார்
இடந்த ஏனமும் அன்னமும் காண்கிலார்
தொடர்ந்து கொண்டவன் றொண்டர்க்குத் தூதுபோய்
நடந்த செந்தா மரையடி நாறுமால்.''

''உள்ளும் ஆர்உரு காதவர் ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளு மோசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்''.

என்னும் பாடல்கள் காணத் தக்கன.

செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய பொங்கு மலர்ப் பாதம் பூதலத்தே தோயுமாறு இறைவன் சுந்தரர்க்குத் தூது நடந்தமையால், தாமரை மலரினும் மிக்கு அருள்மணம் கமழும் அப்பாதத்தின் மணத்தினைத் திருவாரூர் வீதிகள் இன்றும் கொண்டிருக்கின்றவாம்.

நகரத்தை விட்டுச் சிறிது புறத்தே செல்வோமாயின் சோலைகளில் தேவாரத் திருப்பதிகங்களைக் கிளிகள் பண்ணோடு பாட, அதனை நாகணவாய்ப் பறவைகள் மனம் ஒருங்கிக் கேட்கும் காட்சி காணப்படுமாம்; 'அக்காட்சி யாருடைய மனத்தைத்தான் உருகச் செய்யாது' என்கிறார் சேக்கிழார்.

இனித்தடுத்தாட் கொண்ட புராணத்தில் கங்குற் காலத்து இருள் வருணனை நிலவு வருணனைகள் பின்வருமாறு அமைந்திருத்தல் அறிந்து இன்புறத் தக்கது.

பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்,
வஞ்ச மாக்கள்தம் வல்வினையும், அரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான்.
தோற்று மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே
சாற்று மின்பமுந் தண்மையுந் தந்துபோய்
ஆற்ற அண்ட மேலாம்பரந் தண்ணல்வெண்
ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா.

நிலவினது தன்மையைக் கூறும் முகத்தால் சிவபிரானது திருவெண்ணீறு உயிர்கட்குத் தூய இன்பத்தையும், அப்பெருமானது குளிர்ந்த திருவருளையும் தருதல் குறிக்கப்பட்டது.

காப்பியக் கவிஞர்கள் தங்கள் காப்பியங்களில் காப்பியத்துட் கூறற்பாலனவாகிய வருணனைகளை எங்கேனும் கூறியே செல்வர். அம்முறையில் சேக்கிழார் கூறியுள்ள வருணனைகள் பலவற்றையும் இங்கு எடுத்துக் காட்டுதல் இயலாது. ஆயினும் சிறப்புடைய ஒன்று இங்கு நினைப்பிக்கத் தக்கது.

காப்பியங்களில், பருவம் எய்தியமகளிரைத் தலைமுதல் கால் முடிய நன்கு வருணிக்கும் வருணனை எங்கேனும் கூறப்படும். அவ்வாறு வருணித்தற்குத் திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் தேர்ந்து கொண்ட இடம் மிக அருமையுடையது. அஃதாவது, மயிலாப்பூரில் '*சிவநேசர்*' என்னும் வணிகர் மகள் '*பூம்பாவை*' என்பாள் ஞானசம்பந்தருக்கென்று அவரால்

உறுதி செய்யப்பட்டிருந்தவள் பாம்பு கடித்து இறக்க, அவளை எரிப்படுத்தபின் எடுத்து ஒரு குடத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த எலும்பு பின் ஞானசம்பந்தரது பாடலால் உயிர் பெற்றெழுந்த வரலாற்றைக் கூறுமிடமே அவ்விடம். அவள் உயிர்பெற்றெழுந்த பொழுது **பன்னீராட்டைப் பருவத்தளாய்** எழுந்தாள். அவளைச் சேக்கிழார் மிக அழகாக முடிமுதல் அடிகாறும் வருணித்துள்ள வருணனை படித்து மகிழதற்குரியது.

மகளிரை இங்ஙனம் வருணிக்குமிடங்களில் புலவர்கள் காமச் சுவையையே கரையிறந்து பெருகத் தோற்றுவிப்பார்கள். வருணிக்கப்பட்ட மகளைக் கண்ட ஆடவர்கள் தம் உயிர் உடலைவிட்டுப் போகும் நிலையில் ஊசலாடுகின்றவராயினர் என்றும், இஃதென்ன பார்வை யாலே உயிரை வாங்கிக்கொள்கின்ற கூற்றமோ; இவளை ஏன் இங்ஙனம் வெளிவரவிட்டார்கள்; விட்டவர்கட்குச் சிறிதும் கருணையில்லையோ என்றாற்போல் ஆடவர்பலரும் பல பிதற்றுரைகளைக் கூறித் துன்புற்றனர் என்றும் கூறுவார்கள். ஆயினும், சேக்கிழார் இந்த ஓர் இடர்ப் பாடான இடத்திலும் காமச் சுவைக்குச் சிறிதும் இடம் இல்லாது பத்திச் சுவையே முழுதுமாக முடித்தார்.

அரவு தீண்டி யிறந்த மகளை ஞானசம்பந்தர் தமது அருட்பாடலால் மறுப்பிறப்பாகப் படைத்து எழச்செய்தார். எழுந்த அவளோ அழகுக்கே ஓர் அழகாய் விளங்கினள். அவளை அவள்தன் தந்தையார் ஞானசம்பந்தருக்கே உரியவளாக உறுதி செய்திருந்தார். அவள் பன்னீராட்டைப் பிராயத்தாள். ஞானசம்பந்தர் அதுபொழுது பதினாறாட்டைப் பிராயத்தவள். அவளது அழகில் ஞானசம்பந்தர் தம் உள்ளத்தைச் செலுத்துதலில் தவறோ அல்லது தடை யோ ஏதேனும் உண்டோ! இல்லை. ஆயினும் ஞானசம்பந்தர் தம்முன் உயிர்த்தெழுந்த பூம்பாவையை அழகுமிக்க ஒருபெண்ணாக நோக்கவில்லையாம், தம்மை ஈராட்டைக் குழவிப் பிராயத்திலே பாலளித்து ஆண்ட இறைவனது அருட்பெருக்கின் உருவமாகவே நோக்கினராம். என்னே அதிசயம்!

சுந்தன், உபசுந்தன் என்னும் அசுரர் இருவரைச் சூழ்ச்சியால் அழிக்க வேண்டி அழகிலே மிகச்சிறந்த வளாகிய 'திலோத்தமை' என்னும் ஒரு பெண்ணைப் பிரமன் படைத் தானும். ஆயினும் படைத்த உடனே அசுரர்களுக்கு முன்னே அவனே அவளது அழகில் மயங்கி அவளைப் பற்ற முயன்றானும். அதுபொழுது அவள், 'ஆ! இஃது உமக்கு அடாது' என்று சொல்லி ஓடப்பிரமனும் அவளை விடாது தொடர, அவள் சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்தாளாம். பிரமன் எத்தனை ஆண்டுசென்ற முதியோன்! முத்தியை அடையும் நேர் வாயில் ஞானம் எனக் கூறிமுடிக்க, திருமுறைகள், 'முத்தியைத் தலைப்பட்டபின் முத்தியின்' நுகர்ச்சி மெய்ப்பொருள் மாட்டு எல்லையின்றி மீதூரும் அன்பானே உளதாவது' எனக் கூறலானும் 'அவை சிறப்பிற் சிறப்பாய நூலாம்' என்பது உணர்க.

இது பற்றியே திருமுறை நெறி, 'திருநெறி' என வேறு வைத்துக் கூறப்படுகின்றது.

இனி, வருணாச்சிரமங்களின் மட்டுமன்றிச் சிவாகமங்கள் வீட்டிற்கு வாயில் 'ஞானம்' என்னும் அளவே கூறி முடித்தலானும், ஞானத்தால் வீட்டினைத் தலைப்படுதல் உணராத வன்றி அவ்வின்பத்தை நுகர்தல் கூடாமையாலும், அவ்வின்ப நுகர்ச்சி பத்தி' எனப்படும்

அன்பானே உளதாம் ஆகலானும், அதனையே முடிந்த சாதனமாகத் திருமுறைகள் கூற லானும், சிவாகமங்கள் உலகத்தில் அறநெறி பிழையாதிருக்க நாள்தோறும் வேதங்களை இடையருது ஓதி, அதிற்சொல்லப்பட்ட அறநெறி ஒழுங்கிற்கு ஏற்பவே உயிர்களைப் படைப் பவன், அவனது நிலையே இது என்ருல், ஏனையோரது நிலை என்னுகும்! இவற்றையெல்லாம் சேக்கிழார் பூம்பாவை உயிர்பெற்றெழுந்த நிகழ்ச்சியைக் கூறுமிடத்தில் நம்முன் படம் பிடித்துக் காட்டுகின்ருர். அவரது அழகிய அரிய சொல்லோவியம் இது.

எண்ணில் ஆண் டெய்தும் வேதாப் படைத்தவ ளெழிலின் வண்ணம்
நண்ணும்நான் முகத்தாற் கண்டான்; அவளினும் நல்லார் தம்பால்
புண்ணியப் பதினு ருண்டு பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிர முகத்தாற் கண்டார்.

இத்தகைய அருள் வடிவாகிய சொல்லோவியத்தைச் சேக்கிழாரல்லது பிறர் யாரே எழுத வல்லார்!

இந்நிகழ்ச்சியை இவ்வாறு திருவருள் நிகழ்ச்சியின் மணிமுடியாகக் கூறி முடிப்பதற்கு முன்னே அதற்கேற்ற திருவருட் சூழ்நிலையையே சேக்கிழார் தோற்றுவித்து அமைத்த முறையையும் சிறிது நோக்கல் வேண்டுவதே.

எலும்பு பெண்ணுகி எழுந்து அழகினுக்கு அணியாய் நின்றபொழுது அங்குக் கூடி யிருந்த பல திறத்து மக்களது மருட்கை யுணர்வைச் சேக்கிழார் வகை வகையாக வடித்துக் கூறினுர்.

ஆங்கனம் எழுந்து நின்ற அணங்கினை நோக்கு வார்கள்
'ஈங்கிது காணீர்' என்னு அற்புதம் எய்தும் வேலைப்
பாங்குசூழ் தொண்டரானோர் 'அரகர' என்னப் பார்மேல்
ஓங்கிய ஓசை உம்பர் நாட்டினை யுற்ற தன்றே.
தேவரும் முனிவர் தாமும் திருவருட் சிறப்பு நோக்கிப்
பூவரு விரைகொள் மாரி பொழிந்தனர்; ஒழிந்த மண்ணேர்
யாவரும், ''இருந்த வண்ணம் எம்பிரான் கருணை' என்றே
மேவிய கைகள் உச்சி மேற்குவித் திறைஞ்சி வீழ்ந்தார்.
அங்கவள் உருவங் காண்பார் அதிசயம் மிகவும் எய்திப்
பங்கமுற் றூரே போன்ருர் பரசம யத்தி னுள்ளார்;
'எங்குள செய்கை தான்மற் றென்செய்த வாறி' தென்று
சங்கையா முணர்வு கொள்ளும் சமணர்தள் ளாடி வீழ்ந்தார்.

இவ்வாறு எங்கும் பத்தி வெள்ளம் பரந்து நோக்கும்படியான திருவருட் சீர்ப் பெருங்காப்பியமாகிய சேக்கிழாரது திருத்தொண்டர் புராணத்துக்கு நிகரான செந்தமிழ்ப் பொருட்டொடர் நிலைச் செய்யுள் வேறுளதோ! இல்லை என்பது திண்ணமாகவும், அதனினுஞ் சிறந்தனவாகச் சில செய்யுட்களை நாம் சுவைக்கப் புகுவோமாயின் அதற்குச் சேழக்கிழாரோ அல்லது அவரது திருத்தொண்டர் புராணமோ பொறுப்பாதல் எங்ஙனம்?

பன்னிரண்டாம் திருமுறை

திரு. அ. உத்தண்டராம பிள்ளை, I. A. S.,
ஓய்வுபெற்ற அறநிலையத்துறை ஆணையர்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. தில்லையில் கண்டெடுக்கப் பெற்ற மூவர் தேவாரப்பதிகங்கள் நம்பியாண்டார் நம்பியால் 7 திருமுறைகளாக வகுத்தமைக்கப் பெற்றன என்றும் பின்னர் சமயச்சான்றோரால் திருவாசகம் 8-ம் திருமுறையாகவும் திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பா, சேந்தனர் அருளிய திருப்பல்லாண்டு பாடல்கள் 9ம் திருமுறையாகவும், திருமூலர் அருளிய திருமந்திரமாலை 10ம் திருமுறையாகவும் மதுரை பாணபத்திரர்க்காகச் சேரமானுக்குத் திருவாலவாயுடையாராகிய சிவபெருமான் அருளிய திருமுகப்பாசுரத்தோடு காரைக்காலம்மையார், நக்கீரர், கபிலர், பரணர், கல்லாடர் நம்பியாண்டார் நம்பி முதலிய பன்னிருவர் அருளிய நாற்பது பிரபந்தங்களும் 11ம் திருமுறையாகவும் சேக்கிழார் பெருமான் இயற்றிய திருத்தொண்டர் புராணம் 12ம் திருமுறையாகவும் தொகுக்கப்பெற்றன என்பது வரலாற்று ஆசிரியர்கள் ஆராய்ந்து கண்ட முடிவாகும்.

சிவனைப் பற்றிய புராணம் சிவ புராணம். விஷ்ணுவைப் பற்றிய புராணம் விஷ்ணு புராணம். ஆனல் திருத்தொண்டர்புராணம் பெரிய புராணம் (மாக்கதை) எனப்புகழ் பெற்றுள்ளது. சேக்கிழார் பெருமான் காலம்முதற் குலோத்துங்க சோழன் ஆண்ட கி. பி. பதினேராம்—பன்னிரண்டாம் நூற்றுண்டு. இடம் தில்லை சிவனடியார்கள், 'கோயில்' எனச் சிறப்பித்துப் போற்றும் திருத்தலம். தில்லையே தேவாரப் பதிகங்களைக் கண்டெடுத்துத் திருமுறை வகுக்கப்பெற்ற தலம். பெரிய புராணம் பாடுவதற்கு ஆதாரமாகக்கொண்ட நூல்கள் சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி 'புந்தியாரப் புகன்ற திருத்தொண்டர் திருவந்தாதி'—திருத்தொண்டத் தொகை பாடச் சிவபெருமானல் அடியெடுத்துக் கொடுக்கப்பெற்ற முதற்சொல் 'தில்லை'. முதல் 11 திருமுறைகளுடன் 12ம் திருமுறையும் சேர்க்கப்பெற்ற தலம் தில்லையாக அமைந்தது திருவருட்செயலே.

தொண்டசீர் பரவுவார் எனப்புகழ் பெற்ற சேக்கிழார் பெருமான் தில்லையம்பல வாணனை அடியெடித்தருளுமாறு இறைஞ்சியபோது 'உலகெலாம்' என்ற அருள்நாத ஒலி எழுந்தது. பெரிய புராணத்தின் இம்முதல் செய்யுளின் முதல் சொல்லே 'நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்' என்ற ஈற்றடியின் இறுதிச் சொல்லாகவும் அமைந்தது. நடுவில் 356 ,

454, 906, 1130, 1641, 1772, 2119, 2546, 2742, 3247, 4012, 4226, 4273 பாடல்களிலும் உலகெலாம்' என்ற சொல் உள்ளது. 220ம் பாடலில் சுந்தரர் 'பித்தா பிறைசூடி எனப் பெரிதாம் திருப்பதிகம் இத்தரணி முதலாம் **உலகெல்லாம்** உய எடுத்தார்' என்றும் 1453ம் பாடலில் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரை முதன் முதல் சந்தித்தபோது 'அப்பரே' என அரசும் 'அடியேன்' என்றலும் 'எம்பெருமக்களும் இயைந்த கூட்டத்தில் அரனடியார் இன்பம் எய்தி, உம்பர்களும் போற்றிசைப்ப சிவப்பெருகும் ஒலி நிறைந்தார் '**உலகெல்லாம்**' என்றும் பாடியுள்ளார். முதற்செய்யுளிலேயே எளிய இனிய மெல்லோசை நயம் நன்கு புலனுகக் காண்கிறோம். முதலடியிலே இறைவன் அருமை பெருமை உணர்த்தப் பெறுகிறது. 2வது அடி வல்லோசையேதும் இன்றி இறைவனுடைய கருணையையே குறிப்பதாக உள்ளது நிலவும் நீறும் தண்மையைச் குறிப்பன. 3ம் அடியில் உள்ள 'சோதியன்' என்ற சொல் ஞானத்தையும் 'ஆடுவான்' என்ற சொல் ஐந்தொழிலேயும் குறிப்பன. 'மலர் சிலம்படி' என்ற சொற்றொடரில் உலகத்தோற்றத்திற் கேதுவாய் விரியும் ஓங்காரமாகிய அருள்நாதஒலி குறிக்கப்பெற்றுள்ளது.

'செயற்கரிய செய்வர் பெரியர்' என்பது வள்ளுவர் வாக்கு. அடியார்கள் செயற்கரும் அரிய செய்கை செய்த பெரியர். இயற்பகை நாயனுர் வரலாற்றில் தன் கற்பிற்சிறந்த மனைவியையே அடியார்க்குத் தந்து, எதிர்த்து வந்த உறவினரையும் கொன்று வழியனுப்பிய நாயனுரை விளித்து 'செயற்கரும் செயற்கை செய்த தீரனே ஓலம்' என்ருன் 'மயக்கறு மறை ஓலிட்டு மாலயன் தேடா நின்ற' சிவபெருமானே. இத்தகைய பெரியர் புராணமே பெரிய புராணம் என வழங்கப் பெறுகிறது.

சுந்தரர் காப்பியத்தலைவராதலால் அவருடைய பெற்ருேர் சடையரும் இசைஞானி யாரும், ஏனைய அடியார் கூட்டத்தில் சேர்க்கப் பெற்றுள்ளனர். நம்பியாண்டார் நம்பியும் அவர்களைச் சேர்த்தே 63 நாயனுர்களாகக் கொண்டுள்ளார். 'என்னவனும் அரனடியே அடைந்திட்ட சடையன் இசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன் அன்னவனும் ஆரூரன்' என்று சுந்தரர் தம் பெற்ருேரை அறிமுகம் செய்துள்ளாரே யன்றி அவர்களையும் அடியார் குழாத்திற் சேர்க்கும் கருத்துடன் பாடியதாகத் தெரியவில்லை. 'அறுபது பேர் தனித்திருப்பேர் திருக்கூட்டம் ஒன்பதாக அறுபத் தொன்பதரனடியார் கதை' என்பது சேக்கிழார் புராணம். சம்பந்தர், அப்பர் சண்டீசர், கண்ணப்பர், கோச்செங்கட்சோழன் பெற்ருேரும் பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ளனர். அக்காலத்தில் நாட்டில் பரவிருந்த சமண சமயத்தை நீக்கி மீண்டும் சைவம் தழைத்தோங்க இறையருளை வேண்டித் தவம் செய்து 3 ஆண்டில்உமாதேவியரால் ஞானப் பால் ஊட்டப் பெற்று ஓதாதுணர்ந்து சைவ சமய நெறியை நிலை நிறுத்திய சம்பந்தரைப் பெற்றெடுக்கும் பேறு பெற்ற சிவபாத இருதயரும் பகவதியாரும் சுந்தரர் பெற்ருேருக்கு ஒத்த புகழினர் அன்ருே! திலகவதியார் நாவுக்கரசரின் தந்தையார் 'மிக்க மனையறம் புரிந்து விருந்தளிக்கும் மேன்மையினுர், புகழனுரும் அவர் 'உயிர் நீப்பச் சுற்றமுடன் மக்களையும் துகளாகவே நீத்துக் கற்பு வழுவாமல்' கணவருடன் உயிர் நீத்த மாதினியாரும் சிறந்த அடியார்களன்ருே! சண்டீசரைப் பெற்ற எச்சதத்தனும் பவித்திரையாரும் கண்ணப்பரின் பெற்ருேரான நாகனும் தத்தையும் தவப்புதல்வரை உலகுக்கு ஈந்த பெருமைக்குரியரன்ருே! சோழ வேந்தர் சுபதேவரின் பட்டத்தரசி 'ஒண்ணிழையார் கமலவதி மாதேவி செக்கர்

நெடுஞ்சடைக் கூத்தரிடம் வரம்வேண்டி வயிற்றிலணி மகவாய் வந்தடைந்த பசுங்குழவி 'ஒரு நாழிகை கழித்துப் பிறக்குமேல் உழையார் புவனமொரு மூன்றும் அளிக்குமெனக் கேட்டதும் ஆர்த்தெடுத்துத் தூக்குமெனக் உற்ற செயல் மற்றது முற்றி' உரிய காலம் வந்ததும் கட்டவிழ்க்கப் பெற்றவுடன் சிவந்த கண்களுடன் தோன்றிய மகனைக் கண்குளிரக் கண்டு 'என் கோச்செங்கணுனே' என்று கூறிக்கொண்டே தன் உயிரைத் தியாகம் செய்த உத்தமியின் பெருமைக்கு ஈடு இணை உண்டோ? முற்பிறவியில் சிலந்தியாயிருந்து இறைத் தொண்டுசெய்த நினைவுடன் ஆலயங்கள் பல அமைத்துக் கோச்செங்கட் சோழன் தனிச்சிறப் புடன் செங்கோலோச்சிய வரலாறு அப்பர், திருமங்கையாழ்வார் முதலிய சான்றோர் பாடல்களில் இடம் பெற்றுள்ளது. இவர் ஒருவரே முற்பிறவி யறிந்து பிறந்தார் எனப் போற்று கின்றார் சேக்கிழார். சுந்தரருக்கு கயிலையில் இருந்த நிலையையும் கமலினி அனிந்திதை தொடர்பையும் இறைவனே நினைப்பூட்டித் தடுத்தாட் கொண்டான். அப்பரைப் பற்றிய முற்பிறவியைத் திலகவதியாருக்கு இறைவன் உணர்த்தினர்.

முற்றும் துறந்த பரமஞானி பட்டினத்தடிகளைக் கவர்ந்த அடியார்கள் மூவர். மனைவி சொன்ன சூளால் இளவயதிலேயே புலன்களையடக்கி அயலறியா வகை வாழ்ந்து இறைவனுலேயே உலகினருக்கு அறிமுகம் செய்யப் பெற்ற பெருமைக்குரியவர் திருநீலகண்ட நாயனர். தன் ஒரே மகனைத் தன் மனைவி பிடிக்கத் தான் வாளால் அரிந்து கறி சமைத்துக் கொடுக்க முற்பட்ட சிறுத்தொண்டர் தியாகம் மகத்தானது. மகன் சீராளனும் தாதி சந்தன நங்கையும் அச் செயற்கரிய செய்கையில் கொண்ட பங்கும் இணையற்றது. அவர்கள் எல்லை யில்லா அன்பினை முற்றும் அருந்திய இறைவன் சீராள தேவர் உடலைத் தீண்டாமலேயே மீண்டும் உயிருடன் அளித்தார். கண்ணப்பனெப்பதோர் அன்பின்மையைச் சிவகோசரியார் மூலமாக உலகுக்கு உணர்த்தினர் குடுமிநாதர். 'கண்ணப்பர் அன்பினைக் காளத்தியப்பர் அறிவார். காளத்தியப்பரைக் கண்ணப்பர் தாமறிவார்' என்பது திருக்களிற்றுப்படியார் கூற்று. சிவகோசரியார் ஆகம முறை வழுவா நெறியினர். இறைவன் அவரை மறைந் திருந்து காணச் சொன்னபோதும் என்றும் போல் திருமுகலிப்புனல் மூழ்கி முறைப்படி பூசித்துப்பின் ஒளிந்திருந்து கண்ணப்பரின் ஒப்பற்ற அன்பினைக் காணும் பேறுபெற்றார். கண்ணப்பர் நெறி அன்பு நெறி பக்திநெறி. சிவகோசரியார் நெறி ஆகம நெறி. அறிவு நெறி. இரு நெறிகளும் முத்தியளிப்பவையே. பக்தி நெறி கடுமையானது. எளிதில் முத்தி யளிக்கவல்லது. அவ்வாறே திருநீலநக்கர் நெறி அறிவு நெறி ஆகம நெறி. அவர் மனைவி யார் அன்பினுல் உந்தப் பெற்றுச் சிவலிங்கத்தின் மேல் விழுந்த சிலந்தியை ஊதித்துமிந்தார். அவரைச் சினந்து ஒதுக்கிய நீலநக்கர் கனவில் சிவலிங்கத்தில் அம்மையார் ஊதித்துமிந்த இடம் தவிர மற்ற இடங்களில் கொப்புளங்களைக் காட்டி அம்மையாரின் அன்பின் திறத்தை இறைவனே உணர்த்தினர்.

மும்மையாலுலகாண்டமூர்த்தி நாயனர் வணிகர். சந்தனம் அரைத்துக் கொடுத்துத் திருக்கோயிலில் தொண்டு புரிந்தவருக்குச் சந்தனக்கட்டை கிட்டாமல் செய்தனர் சமணர். கையாலேயே அரைத்து உதிரம் கொட்டியபோது இறையருளால் அரச பதவிக்கு ஆள் தேர்ந்தெடுக்க அனுப்பப்பட்ட யானை இவருக்கு மாலை சூட்ட சடைமுடி திருநீறு கண்டிகை

யுடனேயே அரசு ஏற்றுச் சைவநெறி தழைக்கச் செய்தார். சிவ வேடத்தில் வந்த தூர்த்த ருக்கும் ஆதிரை நாள் இரட்டிப்புப் பொன் கொடுத்தார் நரசிங்கமுனையரையர். சிவவேடம் தரித்து வந்து வஞ்சனையால் கொலை புரிந்த முத்திநாதனைத் தன் மெய்க்காப்பாளன் தத்தனைக் கொண்டு ஊர் எல்லை தாண்டிச் செல்ல உதவிய மெய்ப்பொருள் நாயனாரை 'வெல்லுமா மிக வல்லவர்' என்று போற்றுகின்றார் சுந்தரர். அதுபோலவே வஞ்சகமாக திருநீற்றை மறைத்து வந்து மற்போரிட்ட அதிசூரன் என்ற கயவன் தோல்வியுறுந் தறுவாயில் திரு நீற்றைக் காட்டினவுடன் தன் வெற்றியைக் கைவிட்டு நிராயுதபாணியைக் கொன்ற குற்றம் சிவவேடதாரியைச் சாராதிருக்கப் பெயரளவில் ஆயுதம் தாங்கி நின்று உயிர்நீத்து 'பொற் றொடியார் பாகனார் பொன்னம்பலமடைந்தார்' எம்பெருமான் ஏனாதிநாதர் என்று போற்றி யுள்ளார் சேக்கிழார். உவர்மண் பொதி சுமந்து வந்த வண்ணான் மேனியில் மழையினால் உவர் கரைந்து மேனி வெளுத்த வடிவு கண்டு அடியார் என மயங்கி யானையினின்றும் இறங்கித் தொழக் கண்ட வண்ணான் சிந்தை கலங்கி வணங்கி 'அடியேன் அடி வண்ணான்' என்றலும் 'அடிச்சேரன் அடியேன். திருநீற்றின் வார வேடம் நினைப்பித்தீர். வருந்தாதேகும்' என மொழிந்த சேரமானின் திருநீற்றுப்பற்றை என் என்பது? பாண்டியன் நெடுமாறன் வெப்பு நோயினைத் தீர்த்தது 'மன்னுமந்திரமும் மருந்துமாய' திருநீறன்றோ!

ஈசன் அருளாமையால் சமண்புகுந்து பின் திலகவதியார் வேண்டுதற்கிணங்கவும் முன் செய்த தவப் பயனாலும் சூலநோயின் மூலம் ஆட்கொள்ளப் பெற்று திருநாவுக்கரசர் மீண்டும் சைவ சமயம் திரும்பச் செய்தது திலகவதியாரளித்த திருநீறன்றோ? 'வேய்ங்குழலின் உள்ளுறை அஞ்செழுத்தாக ஒழுகியெழ மதுரவொலி வையந்தன்னையும் நிறைத்து வானந்தன் வயமாக் கிப் பொற்பொதுவில் நடம்புரியும் ஐயன் தன் திருச்செவியினருகணையப் பெருகியது' ஆனாயர் இசைக் குழலோசை. அடியார்கள் பூசும் நீறுபோலும் உள்ளும் புனிதர்கள் 'மன்னுயிர்கட்கெல்லாம் தூய்மையே சாற்றுமின்பமும் தண்மையும் தந்து போய் அண்ட மெல்லாம் பரந்தண்ணல் வெண்ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா' என்பார் சேக்கிழார்.

மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாத பொது நெறி ஒழுக்கம் எனப்படும். உயிருக்கு உறுதிபயப்பது சமய அறநெறி என்பது பெரியபுராணத்தின் அடிப்படைக் கருத்து. அடியார் சிவ ஒழுக்கம் சிவதன்மம் எள்றும் அது மெல்வினை வல்வினை என இரு வகைப்படும், என்றும் கூறும் திருக்களிற்றுப் படியார் என்னும் சைவசித்தாந்த நூல். உலகத்தார் அனைவரும் செய்யத்தக்க இறைவழிபாடும் அடியார்க்குச் செய்யும் தொண்டும் மெல்வினையாகும். வல் வினை என்பது பெரும்பாலோர் ஆற்றுதற்கரிய சிறந்த அற ஒழுக்கம். வயிரவ வேடங் கொண்டு வந்து பிள்ளைக்கறி கேட்ட பெருமானுக்குச் சிறுத்தொண்டரும் அவர் மனைவியாரும் தாதி சந்தன நங்கையாரும் சீராள தேவரும் மனமுவந்து அவர் கேட்டவாறே செய்த கொடுவினை வல்வினையாம். அடியவரின் அன்பை முற்றும் பருகிய பெருமான் தேவியோடும் முருகனோடும் காட்சியளித்துச் சீராளனையும் திரும்பக் கொடுத்தருளினார். பிள்ளைக்கனிய முதைத் தீண்டவேயில்லை. இறைவனுக்காகக் கொண்டு சென்ற செந்நெல்லரிசி, செங்கீரை மாவடு முதலியவற்றைப் பசி மயக்கத்தால் வயலில் சிந்தியதால் வருந்தித் தன் ஊட்டி

யையே அரிந்த அரிவாட்ட நாயனுர் செயலும் சிவபூசைக்குரிய நெல்லைப் பஞ்சம் காரணமாக உண்ட சுற்றத்தாரனைவரையும் (அவ்வாறுண்ட தாயின் பாலையருந்திய சிசுவையும்) கொன்ற கோட்புலிநாயனுர் செயலும் அடியாரைக் குறைகூறுபவர் நாக்கை அறுத்த சத்தி நாயனுர் செயலும், அடியார்க்குக் குறித்த வேளையில் கோவணத்தையுலர்த்திக் கொடுக்க முடியாதவாறு மழை பெய்ததால் கல்லிலே முட்டப்போன திருக்குறிப்புத் தொண்ட நாயனுர் செயலும் தியாகேசரைப் பரவையாரிடம் தூது அனுப்பிய சுந்தரரால் தன் வயிற்று நோய் நீங்குவதை விரும்பாமல் தன் உயிரையே மாய்த்துக் கொள்ளத் துணிந்த ஏயர்கோன் கலிக்காமர் செயலும் சிவாராதனைக்காக வைத்திருந்த பாலை உதைத்துச் சிந்திய தந்தையின் காலையே துண்டித்துச் சண்டீசப் பதம் பெற்ற விசாரசருமர் செயலும் வல்வினை யாம். சிவகாமி யாண்டார் என்பார் ஆலயத்துக்கு எடுத்துக் சென்ற பூக்கூடையைப் பறித்துச் சிதறிய யானையையும் பாகன் முதலியோரையும் கொன்ற எறிபத்தர் செயலும் அவர் வாளை வாங்கித் தன்னையே மாய்த்துக் கொள்ளத் துணிந்ததோடன்றித் தன் படை களால் கொல்லப்பட்ட பகைவர் பிணங்களில் ஒரு சடைமுடிதாங்கிய அடியார் தலையைக் கண்டு நடுங்கி அதை எடுத்து வலம் வந்து தன் உயிரை மாய்த்துக் கொண்ட புகழ்ச் சோழர் செயலும் மணமகளாதற்குரிய தன் மகள் கூந்தலையரிந்து அடியவர் பஞ்சவடிக்காக உதவிய மானக் கஞ்சாறர் செயலும், மனம் ஒப்பி கூந்தலை ஈந்த மணமகள் செயலும், தன்னைக் கணவன் ஒதுக்கியதும் தன் வனப்பை எல்லாம் உதறிப் பேய்வடிவம் கொண்ட காரைக்காலம்மையார் செயலும் அடியார் திருக்கூட்டத்தில் தன் வீட்டு முன்னுள் பணியாளனைக் கண்டு கலிக் கம்பரின் மனைவியார் நீர் வார்க்கத் தயங்கியபோது அவள் கரத்தையே துண்டித்த கலிக் கம்பர் செயலும், திருவாரூர் கோயிலில் பூமாலை கட்டும் மண்டபத்தில் கீழே கிடந்த பூவை எடுத்து மோந்த அரசியாரின் மூக்கைச் செருத்துணையார் அரிந்த செயலும் அந்தப் பூவை எடுத்த கையையும் வெட்டிய கழற்சிங்க மன்னர் செயலும், திருவிளக்குத் தொண்டு செய்ய முடியாமற்போனபோது தன் மனைவியையே விற்க முற்பட்டும் பயன்பெருமல் தன் இரத் தத்தையே எண்ணெயாக ஊற்றத்துணிந்த கலியநாயனுர் செயலும் கணம்புல் கிடைக்காத தால் தன் தலைமயிரையே எரிக்கத் துணிந்த கணம்புல்ல நாயனுர் செயலும் வல்வினையேயாகும்.

தொகையடியார் எல்லாம் மெல்வினையாளர். இளையான்குடி மாறர், அமர்நீதியார் குங்கிலியக்கலயர், ஆனுயர், முருகர், உருத்திரபசுபதியார், புகழ்த்துணையார், திருமூலர், சோமாசிமாறர், சிறப்புலியார், சேரமான், திருநாளைப் போவார், கணநாதர், கூற்றுவர் பெருமிழலைக் குறும்பர், நரசிங்க முனையரையர், நெடுமாறர், கோச்செங்கட்சோழர் தண்டி யடிகள் நமிநந்தியடிகள், அப்பூதியடிகள், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நேசர், மங்கையர்க்கர சியார், அதிபத்தர், இடங்கழியார், காரியார், சாக்கிய நாயனுர், திருநீலநக்கர், பூசலார், வாயிலார் முதலியோரும் மெல்வினையாளரே.

அடியாரை வழிபடாமல் ஒதுங்கிச் சென்ற சுந்தரரைக் கண்டு அவ்வாறு சென்ற சுந்தரருக் கும் புறகு அவனை வலிய ஆட்கொண்ட சிவனுக்கும் புறகு என்று விறன்மிண்டர் செய்த முழக்க மன்றே திருத்தொண்டத்தொகை தோன்றக் காரணமாயிற்று. 'ஞாலமுய்ய நாமுய்ய நம்பி சைவநன்னெறியின் சீலமுய்ய (எழுந்த) திருத்தொண்டத் தொகை, ஈசனடியார் பெருமையினை எல்லா உயிருந்தொழ எடுத்துக் தேசமுய்ய (பணித்த) திருத்தொண்டத் தொகை, 'சுந்தரத்

திருத்தொண்டத்தொகை', (ஈசன்) அருளினல் சொற்ற மெய்த் திருத்தொண்டத்தொகை தென்தமிழ்ப் பயனுயுள்ள திருத்தொண்டத்தொகை', 'மாதவம்செய்த தென்திசைவாழ்ந்திடத் (தந்த) தீதிலாத் திருத்தொண்டத் தொகை' 'மூலமான திருத்தொண்டத்தொகை' எனப் பலவாறு போற்றப் பெற்ற திருத்தொண்டத் தொகைக்கு மூலகாரணரே விறன்மிண்டரன்றோ.

அடியார்களுள் சிலர் தம்மரபுக் கேற்ற தொண்டினைச் செய்து பேறு பெற்றனர். 'அளவிலா மரபின் வாழ்க்கை மட்கலம் அமுதுக்காக்கி .. அடியார்க்கென்றும் ... ஓடளித் தொழுகினர் திருநீலகண்டர் என்னும் குயவனர். 'வருபிறப்பின் வழிவந்த அறம்புரி கொள்கையர் நத்தனர். 'தம் மறம் புரி மரபினில் தரும் பெருந் தொண்டு மெய்ம்மையே புரிந்தனர் மீனவர் அதிபத்தர். 'வருமரபில் உள்ளோர்பால் எண்ணெய் மாறிக் கொணர்ந்து. திருவிளக்குப்பணி செய்தவர் கலியர் என்னும் செக்கார். 'உடையொடு நல்ல கீளும் ஒப்பில் கோவணமும் நெய்து அளித்தவர், நேசர் என்னும் சாலியர். தாயர் என்னும் வேளாளர் செந்நெல்லரிசி, செங்கீரை, மாவடு ஈசன் ஆராதனைக்கு அளிந்தனர். ஆனயர் பசுக்களை மேய்க்கும் இடையர், ஐந்தெழுத்தைப் புல்லாங்குழலில் அமைத்து வாசித்தார். இளையான்குடி மாறர் வேளாளர், வறுமை நிலையிலும் அடியவர்க்கு அமுதளித்தவர். உருத்திர பசுபதியார் என்னும் அந்தணர், ஸ்ரீருத்திரமந்திரம் செபித்தவர். குங்கிலிக்கலயர் குங்கிலியப்பணி செய்தனர். கோச்செங்கட்சோழர் முற்பிறவியில் சிவபூசை செய்த நினைவால் ஆலயங்கள் பல கட்டினர். அந்தணர் சோமாசி மாறர் வேள்வி செய்தனர். திருக்குறிப்புத் தொண்டர் ஏகாலியர் அடியார்க்குத் துணி வெளுத்துக் கொடுத்தனர். புகழ்த்துணையார் ஆதிசைவர், சிவபூசை செய்தார். முனையடுவார் கூலிக்குப் போர் செய்து சிவனடியாரை வழிபட்டார். மூர்க்கர் சூதாட்டத்தாற் கிடைத்த பொருள் கொண்டு அடியாரை வழிபட்டார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழ்த் தொண்டு புரிந்தனர்.

பூசலார் மனதினுலேயே கோயில்கட்டிக் கும்பாபிடேகமும் செய்த போது அத்திருக் கோயிலுக்கு காடவர்கோன் கட்டிய பெருங்கோயில் நிகராகாதென்று சிவபெருமான் அறிவுறுத்திய நிகழ்ச்சி மனத்தூய்மையின் மாட்சியைக் காட்டுகின்றது. வாயிலார் நாயனர் மானச ஞானபூசை செய்தவர். குலச்சிறையாரும் மங்கையர்க் கரசியாரும் அரசனுக்கு ஆற்ற வேண்டிய பணிகளைச் சிறிதும் வழுவாமல் செய்து கொண்டு திருஞானசம்பந்தர் துணை கொண்டு அரசனைச் சமண சமயத்திலிருந்தும் மீட்டு நாட்டில் சைவநெறியை நிலை நிறுத்தினர். அப்பர் சுவாமிகள் சமணசமயத்தைச் சார்ந்திருந்த அரசனல் பல்வேறு துன்பங்களுக்கு ஆளான போதிலும் இறையருளால் அவற்றை ஏற்று 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்ற முழக்கத்தோடு இன்புற்றிருந்த நிலைகண்டு அரசனும் மக்களும் சமணத்தை விட்டு சைவநெறி கடைப்பிடித்து வாழும் நிலையை உருவாக்கினர். சேரமான் பெருமான் சுந்தரர் தோழமை யுடன் சேரநாட்டில் சைவம் தழைத்தோங்கச் செய்தார். தமிழ்நாடெங்கும் சைவ நன்னெறி மீண்டும் நிலை பெறுத்தப் பெற்றது.

இல்லற வாழ்க்கையில் இருந்து திருத்தொண்டு புரிந்த அடியார்களின் மனைவியர் ஆற்றிய தொண்டு தனிச்சிறப்பு வாய்ந்தது. திருநீலகண்டரின் மனைவியார் 'அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாமை வாழ்ந்தார்' ஆதலால் இறைவனே தன் திருவிளையாடலால்

உலகத்துக்கு அவர்கள் துறவுவாழ்க்கையை விளக்கியிராவிடின் ஒருவரும் அதனை அறிதல் இயலாது. இயற்பகையார் உலக இயற்கைக்கு மாறுகத் தன் மனைவியையே அடியாருக்குக் கொடுக்க இசைந்ததும் அக்கற்புமிக்க பெண்மணி முதலில் கலங்கினுலும் உடனே தெளிவு பெற்று 'என்னுயிர்க் கொரு நாத நீர் உரைத்தது ஒன்றை நான் செய்யும் அத்தனையல்லால் உரிமை வேறுளதோ எனக்கு' என்றனள் திருவினும் பெரியாள். சுற்றத்தார் தாக்கியபோது 'இறைவனே, அஞ்சவேண்டா' என்று சொல்லி அடியாரைத் தன் கணவனைப்போலவே தானும் இறைவனுகவே கருதினுர் அத் திரு மடந்தை. இறுதியில் இறைவரும் விடைபாகராகக் காட்சி கொடுத்தருளி 'நண்ணிய மனைவியோடும் நம்முடன் போதுகென்ருர்'. இளையான்குடி மாறரின் மனைவியார் கணவரைச் செந்நெல்முளை வாரிக்கொண்டு வரச்செய்து குறும்பயிர் கொண்டு பலவிதக்கறியமுதாக்க வீட்டுக் கூரையினையும் பயன்படுத்தித் தம் கணவருடன் ஒத்துழைத்து அடியார்க்கு அமுதளிக்கும் தொண்டில்தன் அளப்பிலாஆர்வத்தை உணர்த்தினுர். அமர்நீதியாரின் மனைவியாரும் குங்கிலிக்கலயர் மனைவியாரும் அடியார் தொண்டுக்குத் துணை நின்றனர். அரிவாட்டநாயனுர் மனைவியும் பசியால் வருந்திய காலத்தும் கணவருடன் ஆனைந்தும் ஏந்திச் சென்ருர். அப்பூதியடிகள் மனைவியார் மகன் பாம்பு தீண்டியிறந்த போதும் அப்பருக்கு அமுது செய்விக்கும் தொண்டினைத் தட்டின்றி இயற்ற முற்பட்டது அரியதோர் தியாகமன்ருே? ஏயர்கோன் கலிக்காமர் மனைவியார் மணமகள் கோலத்திலும் தன்கூந்தலை அடியவர் பஞ்சவடிக்குக் கொடுத்ததும் கணவன் உயிர் நீத்த நிலையிலும் விருந்தினராக வந்த சுந்தரரை முறைப்படி வரவேற்றதும் செயற்கருஞ் செயல்களல்லவா? திருநீலநக்கர் மனைவியின் அன்பும், சிறுத்தொண்டர் மனைவி திருவெண்காட்டுநங்கையார், தாதி சந்தன நங்கையார் தொண்டின் சிறப்பும் காரைக்காலம்மையார், மங்கையர்கரசியார் தொண்டும் பரவையார் சங்கிலியார் தொண்டும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. சடங்கவியார் புதல்வியின் திருமணம் தடுக்கப் பெற்று சுந்தரர் இறைவனுல் ஆட்கொள்ளப் பெற்ற பின் அப்பெண்மணி கன்னியாகவே வாழ்ந்ததும், திருஞான சம்பந்தரால் எலும்புகளினின்றும் உயிர்ப்பிக்கப் பெற்ற பூம்பாவையும் கன்னியாகவே வாழ்ந்ததும் திலகவதியாருக்கு மணவாளனுக நிச்சயிக்கப் பெற்ற கலிப்பகையார் திருமணத்துக்கு முன்பே போரில் வீரமரணம் அடைந்ததால் மணம் செய்துகொள்ளாமலேயே கன்னியாகவே திருவதிகைக் கோயிலில் தொண்டுசெய்து வாழ்ந்து தம்பியார் அப்பரைச் சமணத்தினின்றும் மீட்டுச் சைவ நெறியில் ஈடுபடுத்திய செயற்கருஞ் செய்கையும் அம்மங்கையரின் தெய்வக்கற்பின் மாண்பினைப் புலப்படுத்துகின்றன.

சாக்கிய நாயனுர் சாக்கிய மதத்தில் தோன்றியவர். சாக்கியராய் இருந்து கொண்டே பல்வேறு சமயங்களையும் ஆராய்ந்து

'செய்வினையும் செய்வானும் அதன் பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக் கொண்டே
இவ்வியல்பு சைநெறி யல்ல வற்றுக் கில்லைஎன உய்வகையால்
பொருள் சிவனென் றருளாலே யுணர்ந்தறிந்தார்'

என்று சேக்கிழார் சாக்கியர் வாயிலாகச் சைவநெறியின் தனிச்சிறப்பை விளக்கியுள்ளார். 'கருத்தின் பயனும் எழுத்தஞ்சும் வேதப்பயனும் சைவமும்' என்ருர் சண்டீசர் புராணத்தில்

'வேத உள்ளுறையாவன விரிபுனல் வேணிநாதர் தம்மையும் அடியாரையும் நயந்துபாதம் அர்ச்சனை புரிவதும் பணிவதும்' என்றார் நீலநக்கர் புராணத்தில் 'காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீணாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்' என்று சாக்கியநாயனார் புராணத்தில் இறைவன் அருவுருவத் திருமேனியை விளக்கியுள்ளார்.

சரியை, கிரியைத் திருத்தொண்டு பல அடியார்கள் இயற்றியமை பெரிய புராணத்துள் வெளிப்படையாகக் கூறப்பெற்றுள்ளது. சிவயோகத்தினியல்பைப் பெருமிழலைக் குறும்பர் வரலாற்றில் விளக்கியுள்ளார். மறுநாள் சுந்தரர் கயிலை செல்வதை யோகசக்தியால் அறிந்து முதல்நாளே இறைவனடி சேர்ந்த குறும்பரின் யோகநிலை எத்துணை பெருமை வாய்ந்தது? சம்பந்தர், அப்பர், சுந்தரர், திருமூலர், காரைக்காலம்மையார் போன்ற மெய்ஞ்ஞானியரின் வரலாற்றில் ஞானநெறி நன்கு விளக்கப்பெற்றுள்ளது. மூக்கரணங் களாலும் அடியார்கள் தொண்டாற்றியதை

'ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப் போதுக்காக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்த அஞ்செழுத்துக்காக்கித்
தாங்கு கைத்தொழிலின் செய்கை தம்பிரானடியார்க்காக'

என்று நேசநாயனார் புராணத்தில் குறித்துள்ளார் அடியார் ஒருபோதும் இறைவனை மறவாத இயல்பினர் என்பதை

'நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலுமறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்',

என்றும் 'எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னிய சீர்ச்சங்கரன் தாள் மறவாமை பொருள்' என்றும் விளக்கியுள்ளார்.

''கூடும் அன்பினில் கும்பிடவேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'

என்று அடியார்களின் அன்பின் திறத்தை தெளிவுபடுத்தியுள்ளார். 'ஒருவனே தேவன்' என்ற கருத்தைப் பலவிடங்களில் விளக்கியுள்ளார்.

'உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்' 'அலகில் சோதியன்' 'சான்றும் ஒருவனை' 'உணர்வினால் உணரவொண்ணா ஒருவர்' 'ஏகநாயகர்' 'ஓங்கு பூங்கோயிலுள்ளாரொருவர்' 'எல்லையில்லவர்' 'அந்தமில்லவர்' 'ஈறில்லாதவர்' 'முடிவில் பரம் பொருள்' 'ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகியவர்' 'மூவாத முழு முதலார்' 'மூவருக்கு அறியரும் பொருளாகிய மூலத்தேவர்' 'யாவர்க்கு முன்னவன்' 'ஆணையாஞ்சிவம்' 'எல்லாந் தான் வைத்து வாங்க வல்லான்' 'எம்பிரான் சிவனே 'எல்லாப் பொருளும்' 'மெய்ப்பொருளானார்' 'வானாகி நிலனாகி அனலும் ஆகி மாருதமாயிருசுடராய் நீருமாகி ஊனாகி உயிராகி

உணர்வுமாகி உலகங்கள் அனைத்துமாகி உலகுக்கப்பால் ஆனுத வடிவாகி நின்ருர்' என்றெல்லாம் இறைத்தத்துவத்தை விளக்கியுள்ளார். திருத்தொண்டு என்பதில் உலகில் உள்ள எல்லாநெறிகளும் அடங்கும்; அப்பாலும் அடிச்சார்ந்தார் என்றும் தொகையடியார் திருக்கூட்டத்துள் எல்லா நாடுகளிலும் திருத்தொண்டியற்றி இறையடியடைந்தாரும் முக்காலத்திலும் சேரும் பான்மையர் எல்லோரும் அடங்குவர். ஆதலால் பெரியபுராணம் உலகுக்கே ஒரு பொது நூலாக அமைந்துள்ளது.

தேவார ஆசிரியர் எனவும் மூவர் முதலிகள் எனவும் சமயகுரவர் எனவும் போற்றப் பெறும் மூவரில் சுந்தரர் எம்பெருமானுக்குக் கயிலையில் அணுக்கத் தொண்டராயிருந்த ஆலாலசுந்தரர் எனவும் திருநாவுக்கரசர் முற்பிறப்பில் தவமுனிவராயிருந்தவரெனவும் தெளிவாகக் கூறப் பெற்றுள்ளது. திருஞானசம்பந்தப் பெருமான் மூன்றும் ஆண்டிலேயே தோணியப்பர் திருவருளால் உமாதேவியார் திருமுலைப்பால் பொற்கிண்ணத்தில் ஊட்டப் பெற்று எல்லாக் கலைஞானமும், உணர்வரியா மெய்ஞ்ஞானமும் திருப்பெருகு சிவஞானமும் ஓதாதுணர்ந்து பதினுருவது ஆண்டுக்குள் பதினுருபிரம் பதிகங்கள் பாடித் திருமண நாளன்று உடனிருந்த எல்லா அடியாரோடும் சோதியிற் கலந்து இறைவனுடன் ஒன்ருகக் கலந்த ஒப்பற்ற பெருந்தகையார். அவரை முருகனவதாரம் என்றே போற்றுகிருர் அருணகிரிநாதர். ஆனுல் திருத்தொண்டத் தொகையிலோ நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியிலோ சேக்கிழார் பெரிய புராணத்திலோ அத்தகைய குறிப்பொன்றுமில்லை. அருணகிரிநாதரே முருகன் 'பிறவான் இறவான்' என்கிருர். சம்பந்தப் பெருமானே திருத்துருத்தித் தேவாரத்தில்

''திருந்தடி மறக்கு மாறிலாத என்னை மையல் செய்து இம் மண்ணின் மேல்
பிறக்குமாறு காட்டினுய்' என்றும்

திருவாலவாயில்

''பாலனுய தொண்டு செய்து பண்டுமின்று முன்னையே
நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலும்
சீலமாய சிந்தையிற்றேர்வதில்லை தேவரே' என்றும்

கூறுவதால் முற்பிறவியிலேயே பாசத் தொடர்பினை அறவே நீக்கியவரென்பது புலப்படும். ''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க பூதபரம்பரை பொலிய'ச் சிவபெருமானுல் அனுப்பப்பெற்ற அவதார புருடர் எனவும் உமாதேவியாரினுல் ஞானப்பால் கொடுக்கப் பெற்ற தனிப்பெருமை பெற்றதால் தெய்வாம்சம் பெற்றவர் எனவும் கொள்ளலாம். வினைப் பயனுலன்றி இறையருளால் உலகம் உய்யும் பொருட்டு அவதரித்த புண்ணிய சீலர். சராசரங்கள் எல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார்' இந்த மாநிலத்தின் இருள் நீங்கிட வந்த வைதீக சிகாமணி' 'திருத்தொண்டின் உண்மை நோக்கி இருள் கெட மண்ணில் வந்தார்' 'வையமெல்லாமுய்ய வருமறைச் சிறுவர்' 'மணணெலாம் உய்யவந்த வள்ளலார்' 'மறையனைத்தும் ஒருவடிவாமென நிறைமதிப்பிள்ளை' 'ஒரு பிறப்பும் எய்தாமையுடையார்'

என்றெல்லாம் புகழப்பெற்ற புதிய செந்தமிழ்ப்பழமறை மொழிந்த பூசுரனர் திருஞான சம்பந்தர். சைவ சமய அடிப்படையில் இறைவன் பிறப்பிலி. பிறவாயாக்கைப் பெரியோன்.

மூவர் பெயரும் மந்திரமாகவே அமைந்தது. பாண்டியன் செவியினூடு ஞானசம்பந்தர் எனும் நாம மந்திரம் செல்ல அயர்வு அகன்றது திருநாவுக்கரசர் நாமம் 'ஏத்தி எம்பொருளும் நாளும் அவ்வருந்தவர் பொற்ருளே என வுணர்ந்தடைந்தார்' அப்பூதியடிகள். நம்பியாரூரர் நாமம் நவின்ற நலத்தாலே ஆளும்படியால் அணிமாதி சித்தியினை அணைந்தனர் பெருமிழலைக் குறும்பனர். கணநாதர் திருஞானசம்பந்தரை வழிபட்டுச் சரியைத் தொண்டருக்குப் பயிற்சியளித்தார். ஞானசம்பந்தர், நாவுக்கரசர், நம்பியாரூரர் என்னும் திருநாமங்கள் ஐந்தெழுத்தாலான மந்திரங்களாகக் கருதற்குரியன.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் சம்பந்தர் தேவாரம் முதல் மூன்று திருமுறைகள் அப்பர் தேவாரம் நான்கு ஐந்து ஆறும் திருமுறைகள். சுந்தரர் தேவாரம் ஏழாம் திருமுறை. பொய்யடிமையில்லாத புலவராக அல்லது அப்பாலும் அடிச்சார்ந்தார்போன்ற தொகையடியாரில் ஒருவராகக் கருதத்தக்க மணிவாசகர் அருளிய திருவாசகம் திருக்கோவையார் எட்டாம் திருமுறை. அப்பாலும் அடிச்சார்ந்தார் அல்லது இதரத் தொகையடியாரில் சேர்க்கத்தக்க திருமாளிகைத் தேவர், சேந்தனர் முதலியவர்கள் அருளிய திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறை. திருமூலர் அருளிய மூவாயிரம் பாடல்கள் அடங்கிய திருமந்திரமாலை பத்தாம் திருமுறை. திருவாலவாயுடையாரின் திருமுகப் பாசுரத்தோடு காரைக்காலம்மையார், ஐயடிகள். சேரமான் பெருமாள் முதலானோர் அருளிய பாடல்கள் பதினோராம் திருமுறை. திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறை.

சைவ சித்தாந்த சாத்திர நூல்களுள் சிறந்த செந்தமிழ் நூல் சிவஞானபோதம். பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டது. பன்னிரண்டாம் சூத்திரத்தில் சிவன் முத்தர்கள் மலநீக்கம் பெற்று அடியார் திருக்கூட்டத்துடன் இணக்கம் உடையவராய்ச் சிவ வேடத்தையும் சிவன் கோவிலையும் வழிபடும் நியமம் உடையவர் என்று விளக்கப் பெற்றுள்ளது. ஈசன் பால் உள்ள அன்புடைமை ஈசன் அடியவரிடம் காட்டப்பெறும் அன்பின் அளவு பற்றியறியப்படும். 'நடமாடும் கோயில் நம்பர்க் கொன்றீயில் படமாடுங் கோயில் பகவற்கதாமே என்பது திருமந்திரம். அடியாரது இயல்பும் பெருமையும் பெரிய புராணத்தில் நன்கு விளக்கப் பெற்றுள்ளன. சிவாலயத்தைச் சிவனென வழிபடும் இயல்புடைய சிவஞானச் செல்வர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், காரைக்காலம்மையார், சேரமான், ஐயடிகள் முதலியோர் பதி தோறும் சென்று பாடிப் பரவியதும் இறைவன் அவர்கட்கு அருள்புரிந்ததும் பெரிய புராணத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஞானிகளும் சரியை கிரியை யோகமாகிய தொழில்களைச் செய்து மக்களுக்கு வழிகாட்டிகளாகத் திகழ்தல் வேண்டும் என்பது சைவ சமயக் கொள்கை.

உண்மையடியார்கள் ஏற்றத்தாழ்வு மனப்பான்மையைக் கடந்த பண்பாளர். அக்காலத்தில் குலங்களில் உயர்வு தாழ்வு மக்களிடையே காணப்பெற்றது திருநாளைப்போவார் புராணத்திலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அக்கினியில் புகுந்து தூய உடம்புடன் நந்தனர் சோதியில் கலந்தார் என்பது வரலாறு. அப்பூதியடிகள் அந்தணராயினும் நாவரசராகிய

வேளாளரையே குருவாகக் கொண்டு வழிபட்டார். உடனிருந்து உணவருந்தினர். திருநீல கண்ட யாழ்ப்பாணர் மனைவியுடன் இரவில் தங்குவதற்கு திருநீலநக்கர் வீட்டுக்குள் வேதிகையின் பக்கத்திலேயே இடம் கொடுக்கச் சம்பந்தர் ஏற்பாடு செய்தார். வேதிகையிருந்த அக்கினி வலஞ்சுழித்து முன்னிலும் பிரகாசித்து விளங்கியதாம். பாணர் சம்பந்தருடன் சோதியிற் கலந்து பேறும் பெற்றூர் சுந்தரர் பரவையாராகிய கணிகையர் குலப்பெண்மணியையும் சங்கிலியார் என்ற வேளாள மடந்தையையும் மணம் செய்துகொண்டார். சம்பந்தருக்கு வைசியப் பெண் பூம்பாவையைத் திருமணம் செய்து கொடுக்க அவள் தந்தை முன்வந்தபோது அவள் தம்மால் புத்துயிர் பெற்ற காரணத்தாலேயே தகாது என்று மறுத்தார். 'கங்கை வார்சடைக்கரந்தார்க்கன்பராகில் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே' என்பது அப்பர் பெருமான் அருள்வாக்கு.

'தருஞானலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழும் தருஞ்செல்வி மணஞ்செயிரம்' என்று தமிழ் மொழியின் மேன்மையையும் தெய்வத் தன்மையையும் தண்மையும் நறுமணமும் பொருந்திய மலர்மாலை போன்று செந்தமிழ்ப் பாமாலையும் கற்றூர்க்கு உவகையளிக்கவல்லது என்று தமிழின் தனிச்சிறப்பை விளக்கியுள்ளார். 'சால் பாய மும்மைத் தமிழ்' என்னும் 'அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை' வென்றது எனவும் புகழ்ந்துள்ளார். இறைவனைத் 'தலைச் சங்கப் புலவனுர்' என்று போற்றியுள்ளார்.

பழையாறை வடதளியில் சமணர் சிவலிங்கத்தை மறைத்துப் பள்ளியமைத்த செய்கையை எதிர்த்து மீண்டும் வழிபாடு செய்யும் பொருட்டு நாவரசர் உண்ணுவிரதம் இருந்து அரசன் உதவியால் வெற்றி பெற்றதும் கயிலை நோக்கிச் சென்றபோது உடல் தேய்ந்த போதும் விடாது செல்ல முற்பட்டபோது இறையருளால் திருவையாற்றில் கயிலைக் காட்சி பெற்றதும் சமணர் ஏவலால் பல்லவ அரசன் அளித்த கொடுந் தண்டனைகளை எல்லாம் அஞ்சாது எதிர்த்துப் போராடி இறையருளால் வெற்றி பெற்றதும் நாவரசரின் தியாகத்தையும் பக்தியையும் நன்கு விளக்குகின்றன. திருவீழிதுழலையில் மக்கள் பஞ்சத்தால் வாடிய போது அங்கு சென்ற சம்பந்தரும் அப்பரும் அங்கேயே தங்கி இறையருளால் பொற்காசு பெற்று உணவளித்துப் பஞ்சம் நீங்கிய பின்னரே அங்கிருந்து சென்றனர். 'நடமாடுங் கோயில்' களாகிய அன்பர்களுக்குச் செயும் தொண்டே 'படமாடுங் கோயில் பகவர்க்கு'ச் செய்யும் உண்மையான வழிபாடு என்பதனை உணர்த்தினர். பாம்பு தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பித்து அவனுடன் வந்த பெண்ணின் திருமணத்தையும் நடத்தியருளிய சம்பந்தரின் கருணையும் திருவாசியில் முயலகன் நோயால் வருந்திய மழவன் மகளைக் குணப்படுத்தியதும் செங்குன்றூரில் நிலவிய சுரநோயைத் தீர்த்தருளியதும் சீவர்கன் தொண்டே சிவத்தொண்டு என்ற உண்மையை விளக்குகிளறன. அவிநாசியில் முதலையுண்ட பாலனைப் பெற்றோேர்க்கு மீட்டுக்கொடுத்து அவர்கள் துயர் தீர்த்த சுந்தரரும் துன்பம் கண்டவிடத்து அதைப் போக்கி இன்பமளிப்பதே கடமையாகக் கொண்ட பண்பினைப் புலப்படுத்தினர். இத்தகைய நிகழ்ச்சிகள் பல உள்ளன.

தன்னலமின்றி பொதுநலம் பேணும் கருத்துடன் இயற்பகையாரின் மனைவியை மீட்கப் போய் உயிர்நீத்த சுற்றத்தாரும், ஊரார் பசுக்களின் பாலைப் பயன்படுத்திய விசாரசருமருக்கு இடையூறு விளைவித்து உயிர்நீத்த எச்சதத்தரும், பஞ்சத்தால் வாடி வேறு வழியின்றி வழிபாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நெல்லைப்பின் கொடுக்கும் எண்ணத்துடன் பயன்

படுத்திக் கொல்லப்பட்ட கோட்புலியாரின் சுற்றத்தாரும் சுவர்க்கம் பெற்று மறுபிறவி களில் நல்வாழ்வு பெறும் வாய்ப்பும் பெற்றனர்.

பெரிய புராணத்தில் அடியார்களின் மெய்ப்பாடுகளில் ஒன்பது விதச் சுவைகளும் காணப் பெறுகின்றன. இறைவனின் எண்குணங்களும் விளக்கப் பெற்றுள்ளன. இயற்கைக் காட்சி களின் வருணனை திருமடந்தையர் வனப்பின் வருணனை ஒலிகளின் நயம் ஒளியின் சிறப்பு முத்து பிறக்குமிடங்கள் அவற்றின் தன்மை முதலியன பற்றி விளக்கமான பாடல்கள் உள்ளன. விரிக்கிற் பெருகும்.

அடியார்களின் அவதாரத் தலங்களுள் நேசர்பிறந்த காம்பீலி இருக்குமிடம் தெரிய வில்லை. சேதுப்பிள்ளையவர்கள் 'காம்பீலி' என்பது திருக்காம்புலியூர் என்றார். திருச்சியரு கேயுள்ள இவ்வூரில் சிவாலயமில்லை. வேறுகுறிகளுமில்லை மாயூரத்தைச் சார்ந்த கூறை நாட்டி லுள்ள சிவாலயத்தில் நெசவாளர் நேசர் திருவுருவம் அமைத்துள்ளனர். இருக்குவேளூர் இருக்குமிடமும் தெரியவில்லை கணம்புல்லர் திருவிளக்குத் தொண்டு புரிந்த தில்லைப்புலீச் சுரத்தில் இவர் திருவுருவம் உள்ளது. கொள்ளிடக்கரையிலுள்ள ஆதனூரில் சிவாலயமில்லை ஐயனார் கோவில் உள்ளது நந்தனாருக்காக விலகிய நந்தியுள்ள திருப்புன்கூரில் அவர் திருவுருவம் அமைக்கப் பெற்றுள்ளது சாத்தனூரிலும் சிவாலயமில்லை ஐயனார் கோவில் உள்ளது. திருமூலர் சந்நிதி திருவாவடுதுறை ஆலயத்தில் உள்ளது. திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமான் சுந்தரர் திருவுருவங்கள் உள்ளன. உடுப்பூர் ஆந்திர மாநிலத்தில் உள்ளது கண்ணப்பர் திருவுருவம் திருக்காளத்தியப்பர் கருவறையில் உள்ளது. கேரள மாநிலத்திலுள்ள செங்குன்றூர் பகவதி கோயிலில் விறன்மிண்டர் திருவுருவமில்லை. அவர் தொண்டு செய்த திருவாரூரில் உள்ளது. கணமங்கலம் என்ற ஊர் இப்போதில்லை தண்டலை நீணெறி (தண்டலைச்சேரி) யில் அரிவாட்டநாயனார் திருவுருவம் உள்ளது கஞ்சாறூர் இருக்கு மிடம் தெரியவில்லை மாயூரம் அருகேயுள்ள ஆனதாண்டவபுரத்தில் மானக் கஞ்சாறர் திருவுருவம் உள்ளது. ஏனைய நாயன்மார்களின் அவதாரத்தலங்களில் அவர்கள் திரு வுருவங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. கழற்சிங்கர் திருவுருவம் திருவாரூர் அறநெறி ஆலயத்தில் அமைக்கப் பெற்றுள்ளது.

பெரிய புராணம் உணர்த்துவது அன்புநெறி அறநெறி 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்' என்பது வள்ளுவர் வாக்கு மக்கள் உள்ளத்திலுள்ள அறியாமையாகிய இருளைப்போக்கி ஞானமாகிய ஒளியை நல்கும் கதிரவனாகத்திகழ்வது பெரியபுராணம் என விளங்கும் திருத்தொண்டர் புராணம்

'மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப் புறவிருள் போக்குகின்ற,
செங்கதிரவன் போல், நீக்கும் திருத்தொண்டர்புராணம்

என்பது தொண்டர்சீர் பரவுவார் தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமான் அருள்மொழி.

அண்மையில் உலகப்புகழ்பெற்று வாழ்ந்த ஞானச்செல்வர் பகவான் இரமண மகரிஷி விரும்பிப் படித்த நூல் பெரியபுராணம் 'திருத்தொண்டர்களின் வரலாறுகளைக் கற்றதன் பயனுகவே தன் வாழ்கையில் பெறற்கரிய திருப்பம் ஏற்பட்டதென்று அவரே கூறியுள்ளார் உயிர்க்கு உறுதி பெற விரும்புவோர் அனைவரும் கற்கவேண்டிய நூல் பெரியபுராணம் சிறுவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் சித்திரங்களுடன் திருத்தொண்டர் வரலாறுகளைத் தொகுத்துத் திருக்கோயில்களும் மடங்களும் ஏனைய அற நிலையங்களும் செல்வம் படைத் தவர்களும் நாடெங்கும் பரப்ப வேண்டும்.

ஆழ்வார்களின் அவதார நாட்கள் வைணவர்களால் சிறப்பாகக் கொண்டாடப் பெறு கின்றன. நாயன்மார்களின் அவதாரநாட்களைக் குறிக்கும் குறிப்பேடு மதுரை சைவ சித்தாந்த சபை (106 A திண்டுக்கல் ரோடு, மதுரை 1)யினரால் வைகை அச்சகம் மதுரை 1 ல் அச்சிட்டு வெளியிடப் பெற்றுள்ளது. குருபூசைத் தினங்களுடன் அவதார நாட்களையும் சிறப்பாகக் கொண்டாடினுல் திருத்தொண்டர்களை ஆண்டுக்கு இருமுறையாகிலும் வழிபடும் பேறு கிட்டு மன்றே! நாயன்மார் அவதார நாட்களைக் காட்டும் குறிப்பேடு இத்துடன் இணைக்கப் பெற்றுள்ளது.

''தில்லை வாழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம் போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழாரடி போற்றி''.

'வைய நீடுக மா மழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான் தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே'
'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'

''வாழ்க சீரடியாரெல்லாம்'

★★

பன்னிரு திருமுறை ஓதும் கால அட்டவணை

திரு. தி. சு. கோவிந்தசாமி

பன்னிரு திருமுறைகளை தினமும் ஓதி ஆண்டுக்கொரு முறை முடித்து வரவேண்டும் என்பதை வலியுறுத்தி இதழாசிரியர் திரு. க. கலியாணம் ஏம். ஏ., டிப். எக்கான் அவர்கள் ''சித்தாந்தம்'' பங்குனி மீ இதழில் எழுதி இருந்தார்கள். அது வரவேற்கத்தக்கது.

கயப்பாக்கம் திரு. சதாசிவ செட்டியார், சிவக் கவிமணி திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார், திரு. தருமலிங்க முதலியார், (எல். அக்) போன்ற பலரும் ஆண்டுக்கொரு முறையாக பன்னிரு திருமுறைகளையும் ஓதும் நியமம் பூண்டு இருந்தார்கள்.

இஞ்ஞான்றும் தேவகோட்டை சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் போன்ற பலரும் பாராயணம் செய்து வருகின்றனர். ஸ்ரீ தேசிகர் தினமும் சித்தாந்த சாத்திர பாராயணமும் வைத்துள் ளார். இவர்களைப் பின்பற்றி ஒவ்வொருவரும் சித்திரைத் திங்கள் 1ஆம் தேதி முதல் பாரா யணம் தொடங்குவார்களாக.

திருமுறை ஓதத் தொடங்கும் தமிழ்த் தேதி

1 ஆம் திருமுறை தேவாரம்	சித்திரை 1 ஆம் தேதி
2 ஆம் திருமுறை தேவாரம்	வைகாசி 1 ஆம் தேதி
3 ஆம் திருமுறை தேவாரம்	ஆனி 1 ஆம் தேதி
4 ஆம் திருமுறை தேவாரம்	ஆடி 1 ஆம் தேதி
5 ஆம் திருமுறை தேவாரம்	ஆவணி 1 ஆம் தேதி
6 ஆம் திருமுறை தேவாரம்	ஆவணி 20 ஆம் தேதி
7 ஆம் திருமுறை தேவாரம்	புரட்டாசி 20 ஆம் தேதி
8 ஆம் திருமுறை திருவாசகம்	ஐப்பசி 5 ஆம் தேதி
திருக்கோவையார்	ஐப்பசி 15 ஆம் தேதி
9 ஆம் திருமுறை திருவிசைப்பா	ஐப்பசி 25 ஆம் தேதி

10 ஆம் திருமுறை	திருமந்திரம்	கார்த்திகை 5 ஆம் தேதி
11 ஆம் திருமுறை		மார்கழி 1 ஆம் தேதி
12 ஆம் திருமுறை	பெரிய புராணம்	தை 1 ஆம் தேதி

குறிப்பு:- [தினமும் சராசரி 5 பதிகங்கள் ஓதல் வேண்டும். தொடங்கும் தினம் அநுசரித்து முன் உள்ள பாடல்களை ஓதி முடித்தல் வேண்டும். இவைகளில் தக்கேசி, திருத் தாண்டகம் பெரிய பண்முறைப் பாடல்களானால் தினமும் 3 பதிகங்கள் ஓதல் வேண்டும். திருக்குறுந்தொகை, திருமந்திரப் பாடல்கள் தினமும் 80 பாடல்கள் ஓதவேண்டும். இப்படிப் பாராயணம் செய்யின் ஆண்டுக்கொரு முறை ஓதப்பெறும்.

பெரிய புராணத்தில், பாராயணம் செய்யுங்கால் இன்னின்ன இடங்களில் நிறுத்த வேண்டும் என்ற குறிப்புக்கள் உள. விரிவஞ்சி எழுதவில்லை.

திருவெம்பாவைக் காலத்தில் திருவாதிரை ஈருகப் பத்துநாள் திருமுறைகளைக் காப்பிட்டு வைத்து விட்டுத் திருவெம்பாவைப் பதிகம் மட்டுமே ஓதுதல் மரபு.

திருவெம்பாவைக் காலமல்லாத காலத்தில் திருவெம்பாவை ஓதுதல் ஏற்படின் ''ஏலோரெம்பாவாய்'' என்பதை மானசீகமாக ஓதல் வேண்டுமென ஆன்ரோர் கூறுவர்.

பஞ்ச சபைகள்

1. திருவாலங்காடு — இரத்தின சபை
2. சிதம்பரம் — கனக சபை (பொன்னம்பலம்)
3. மதுரை — இரஜத சபை (வெள்ளியம்பலம்)
4. திருநெல்வேலி — தாமிர சபை
5. திருக்குற்ருலம் — சித்திர சபை

திருப்புகழில் திருமுறைக் கருத்துக்கள்

திருப்புகழ் தவமணி சிவஸ்ரீ K. V. தியாகராஜ ஐயர்,
செயலாளர், ஸ்ரீ திருப்புகழ் சபை, தெற்காடி வீதி, மதுரை

பதினைந்தாவது நூற்றுண்டில் அவதாரம் செய்தவர் ஸ்ரீ அருணகிரிநாதர். பதினாறு யிரம் சந்தம் நிறைந்த திருப்புகழ் பாடல்கள், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு முதலான இறைவன் பொருள்சேர் புனிதப் புகழ்ப் பாடல்களை பாடியருளினர்.

ஞானசம்பந்தப் பெருமானை முருகனாகவே பாவித்து திருப்புகழ் பாடல்களில் பாடும் சிறப்பியல்பு கொண்ட அருணகிரி நாதர் ஞானசம்பந்தப் பெருந்தகையார் சிவபெருமான் மீது பதினாறுயிரம் தேவாரப்பாடல்களை பாடியருளியது போன்று, தாமும் முருகப்பெருமான் மீது பதினாறுயிரம் திருப்புகழ் பாடல்களை முருகப்பெருமானின் திருவருள் கொண்டு பாடி அருளியவர் என்பதனைக் கீழ்க்கண்ட கயிலைமலைத் திருப்புகழ் பாடலால் அறிந்துகொள்ள லாம்.

பூமியதனிற் ப்ரபுவான
புகலியில்வித் தகர்போல
அமிர்தகவித் தொடை பாட
அடிமைதனக் கருள்வாயே;
சமரிலெதிர்த் தசுர்மாளத்
தனியயில்விட் டருள்வோனே
நமசிவயப் பொருளானே
* ரசதகிரிப் பெருமானே.

திருப்புகழ் பாடல்களில், தேவார, திருவாசக மற்றும் திருமுறைக் கருத்துக்களை, கையாண்டு பல பாடியுள்ள அருணகிரிநாதரது திருமுறைகளில்ஈடுபாடுடைய ஆர்வத்தைக் கீழ்க்கண்ட சில திருப்புகழ் பாடல்களில் கண்டு, பண்புடையசிந்தை நிறைந்த அன்பர்கள் இன்புறலாம்.

---

* ரசதகிரி — வெள்ளியங்கிரி.

திருப்புகழ் பாடல்	திருப்புகழ் பாடலின் கருத்தமைந்ததும் ஒற்றுமையுமுள்ள திருமுறைகளின் அடிகளும்
''அந்தகனும் எனையடர்ந்து வருகையினில்'' ''திருச்செந்தூர் திருபுகழ்'' ''தந்தபசிதனை என்று தொடங்கும் திருப்புகழ்	அந்தணாளனுன் அடைக்கலம் சுந்தரர்: திருப்புன்கூர் தேவாரம்;
''விந்ததினூறி வந்தது காயம் வெந்தது கோடி'' (திருச்செந்தூர் திருப்புகழ்)	எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான் சிவபுராணம்: திருசதகம் ''மாணிக்கவாசகர்''
''இதழி பொன் விஞ்சுவீசவிராலிமலை'' ''விராலிமலைத் திருப்புகழ்''	விரைச்சேர் பொன்னிதழ் தர மென் காந்தள் கையேற்கும் மிழலையாமே ''சம்பந்தர் தேவாரம்'' திருவீழிமிழலை;
வண்புகழ் பாரி தாரி யென்றிசை வாதுகூறி வந்தியர் போல வீணிலழியாதே	கொடுக்கிலாதனைப் பாரியேயென்று கூறினும் கொடுப்பாரிலை. ''சுந்தரர் தேவாரம்''
அழுதுலகை வாழ்வித்த கவுணிய குலாதித்த	''வேதநெறி தழைத்தோங்க'' ''பெரிய புராணம்''
அதிர வீசியாடும்வெற்றி விடையிலேறு மீசர்	அதிரவீசியாடுவாய் ''சம்பந்தர் தேவாரம்'' (திருவாலவாய்)
மண்குண மஞ்சு	பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி. ''திருவாசகம்''
எனதாக மனதில் வாழ்குமரன்	(போற்றித் திருவலல்) உடலிடங் கொண்டாய் -''திருவாசகம்'' (கோயிற் றிருப்பதிகம்)
இறைவா எதுதா அதுதா	''வேண்டி நீயாதருள் செய்தாய், யானுமதுவே வேண்டின் ''திருவாசகம்'' (குழைத்த பத்து)
தவநெறியிலொழுகிவிழி பண்படுங் கங்கணஞ் சிந்தியாதோ	''துறையூர்த்தேவா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே ''சுந்தரர் தேவாரம்'' திருத்துறையூர்
உறங்கிவிழிப்பாய பிறந்த பிறப்பு	உறங்கி விழித்தாலொக்கு மிப்பிறவி ''சுந்தரர் தேவாரம்'' (திருவரத்துறை)
கண்ணு ருரித்த என்மன்னு	கன்னு ருரித்தென்ன என்னையும்......... ஆண்டபிரான் திருவாசகம், ''திருத்தெள்ளேணம்''

திருமுறையால் பசு, பதி, பாச உண்மைகள் கூறப்பட்டுள்ளன. சிவபெருமானுக்கு மந்திரம் தூலசரீரம்; ஆன்மா சூக்கும சரீரம். சத்தி அதிசூக்கும சரீரம். திருமுறை மந்திர மாதலின் சிவபெருமான் விசேடமாய்ச் சாந்நித்திய முற்றிருப்பார். திருமுறைப் பாடல்கள் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலைச் செய்தவை. திருமுறைப் பாடலை ஓதினர்க்கு நோய் நீக்கம், செல்வப் பெருக்கம், ஞானப் பெருக்கம் முதலியவற்றை அளித்து உயர்வாழ்வு தரும். திருமுறைப் பாடல்கள் திருவருள் விளக்கம் செய்பவை. தலங்களில் திருமுறை ஓதுவாரை நியமனம் செய்து அதனல்தான் திருமுறை ஓதச்செய்தனர் பண்டை மன்னர்.

திருமுறைப்பாடல்கள் ஆன்மாக்களுக்குப் பிறவிப் பிணி தீர்த்து மோட்சத்தைக் கொடுக்க வல்லன. திருமுறைகள் திருவருளைக் கொடுக்க வல்லன என்பதைத் திருமுறை கண்ட புராணம் கூறும், தேவாரத் திருக்கடைக்காப்புகள் பல. திருமுறைப் பயனை விளக்குவன ஆகும். பன்னிருதிருமுறைகளும் ஓதுபவர் 'ஓதுவார்' எனப்படுவார். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி —'ஓதுவார்' எனச் சம்பந்தர் பாடுவர்.

இத்திருமுறைப் பாடல்கள் பதிநூல்கள் எனப்படும். சிவபெருமான் மற்றவைகளிடத்தே பாலில் நெய்போல் விளங்காது நிற்பினும். திருமுறைகளிடத்துத் தயிரில் நெய் போல விளங்கி நின்றருள்வர். சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் தாவர சங்கமப் பொருளையும், அவற்றிலிருந்து அருள் புரியும் பரசிவனுரையும் அடக்கித் திருமுறை விளங்கு கிறது.

இத்திருமுறைகளை அருளிய நாயன்மார்கள் நட்சத்திர நாட்களில் திருவுருவச் சிலை கட்கும், திருமுறைக்கும் வழிபாடு செய்விக்கவேண்டும். தத்துவங்கடந்த தனிப்பரம் பொருளாகிய இறைவன் தமிழின் நயம் பேசி ஆடுகின்ருன். இறைவனே ஆடுமாகில், நாம் ஆடாதிருப்போமா? பத்தி மேலிட்டால் வெட்கம் போகும். திருமுறைப்பாடல்கள் 'தலை யாரக்கும்பிட வைத்துவிடும். மனமாரப் பாடவைக்கும்.

சோழமன்னர் செய்த அருட்செயலாலும், நம்பியாண்டார்நம்பி செய்த நற்றிறத் தாலும் திருமுறை இன்றும் நம்மிடையே விளங்குகிறது. இத்திருமுறைப் பாடல்கள் பாடாத வீடு—வீடன்று. பாடாத கோயில் கோயில் அன்று. ஒவ்வொருவரும் தனித்தனியே திரு முறை ஓதி 'வாய்பெற்ற' வாய்ப்பை அடையவேண்டும்.

திருமுறை என்ருல் அது மடத்திற்கோ, அல்லது கோயிலுக்கோ சொந்தமென்று பொதுமக்கள் சிலர் எண்ணுகின்றனர். திருமுறை ஒவ்வொருவருக்கும் சொந்தம். உணரும் அறிவுடையவர் அவர் எங்கிருப்பினும் அவர் திருமுறையைக் காத்து வளர்க்கும் கடப் பாட்டிற்கு உரியராவார். அவ்வழியே நாமும் செல்வோமாக.




சிவஸ்ரீ. ஈசான சிவாசாரிய சுவாமிகள்



சிவஸ்ரீ. ம. க. சுந்தரேசபட்டர்



திரு. உ. ராம. சுப. சேவு. மெ. மெ. மெய்யப்ப செட்டியார்



திரு. S. தருமலிங்க முதலியார்



திரு. S. S. சுப்பையாபிள்ளை

பழநி சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார்

தி. சு. கோவிந்தசாமி,
செயலாளர், சைவ சிந்தாந்த சபை, மதுரை.

மான் காட்டி மான்பிடிக்கும் வாய்ப்பை நினைப்பூட்டி
ஊன் காட்டி நம்போ லுருக்காட்டி—வான்காட்ட
வந்த ஈசான சிவமாதேவன் பாதமலர்
சிந்தனையாற் சேருந்திரு * — [தத்புருஷ தேசிகர்]

ஈசான சிவாசாரிய சுவாமிகள் 16-6-1900ல் ஆனித் திருவோண நாளில் சென்னி மலையில் தோன்றினார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தாயார் வமிசபரம்பரையைச் சார்ந் வர்கள். பூர்வம் திருக்கடவூரைச் சேர்ந்து பின்னர் சென்னிமலைக்கு வந்தவர்கள். இவர்கள் இளமையில் தந்தை சிவசுப்பிரமணியக் குருக்களிடம் தமிழும், காவேரி சுப்பிரமணியக் குருக்களிடம் வடமொழியும், நா. கதிரைவேற்பிள்ளையவர்களிடம் சமயக்கருவி நூல்களும் பயின்றார்கள். சென்னிமலையில் ''கலாஞான சங்கம்'' என ஒரு சபை ஏற்படுத்தி ஒரு நூலகமும் வைத்தார்கள். அதில் சமய நூல்களைத் தொகுத்தார்கள்.

பின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் நேர் மாணவரான காசிவாசி செந்திநாதர் ஐயரவர்கள் திருப்பரங்குன்றத்தில் அச்சகம் வைத்து ''நீலகண்ட பாடியத் தமிழ்மொழி பெயர்ப்பு'', ''சிவஞான போத வசனாலங்கார தீபம்'', ''தேவாரம் வேத சாரம், ''சைவ வேதாந்தம்'' ஆகிய நூல்களை வெளியிட்ட சமயம் இவரும் மற்றும் அறுவரும் அவரிடம் சிறிது காலம் பயின்றனர். அப்போது ஐயரவர்கள் இவர்களை ''சப்தரிஷிகள்'' என அழைப் பாராம். நாவலரய்யாவின் வாழ்க்கை வரலாறுகளை ஐயரவர்களிடம் நேரில் கேட்டறிந்து பிற்றை ஞான்று நம்மனோர்க்கு உணர்த்திய பெரியார் இவர்.

தேவகோட்டைச் சிவாகம சங்கத்தில் திரு. பொ. முத்தையா பிள்ளையவர்களிடம் சைவ சித்தாந்த சாத்திர பாடம் கேட்டவர். அதுபோது அங்கு மற்றையோருக்கு வியாகரண பாடமும் நடத்தலாயினர். அதன்பின் இலக்கணம் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமி களிடமும் சைவ சாத்திர நுட்பங்களைக் கேட்டனர்.

பின்னர் ஆகமச் சுவடிகள் தேடும் பொருட்டு வடநாடு சென்றார்கள். காசியிலிருந்து கொண்டு நேபாளம், காஷ்மீர் ஆகிய இடங்களுக்குச் சென்று அபூர்வமான சுவடிகளைச் சேகரித்தார்கள். இவர்கள் காசியில் தங்கியிருந்த காலத்தில் பண்டித மாளவியாவும் இவர் களது சைவசித்தாந்த தத்துவ ஞானத்தை உணர்ந்து உதவிபுரிந்து உள்ளார். ரூ 15,000க்கு மேற்பட்டச் செலவில் ஆகம ஏடுகளைத் தொகுத்து வைத்துள்ளார்கள். இம்மட்டோ: சைவ சமய நூல்கள் பலவற்றையும் சேமித்து வைத்துள்ளார்கள்.

கோர்ட்டிலிருந்த ஒரு ஆகமச்சுவடியைப் பெறப் பல நாட்கள் உண்ணுவிரதம் இருந்தார்கள். மருத்துவர் தனது பரிசோதனையில் உண்ணவில்லை என்று சான்று காட்ட அதன் மீது ஏடுகளைத்தர நீதிபதி உத்தரவு இட்டாராம். அதன் பிறகு ''சுவடியைப் பெற்று உண்ணுவிரதத்தைக் கைவிட்டதாகச் சொல்லுவர்.

1934ஆம் ஆண்டில் பழநியை வாஸஸ்தானமாகக் கொண்டு 1939ல் ஓர் ஆண்டு பழநிக் கோவிலில் சிவாசாரியாராகப் பணியாற்றினுர்கள். காசியில் 12 வருடங்கள் வசித்து ''காசி வாசி'' என்ற பட்டமுடைய இவர்கள் பழநியை வாஸஸ்தானமாகக் கொண்டது என்னையோ எனின் அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழில் ''காசியின் மீறிய பழநியங்கிரி'' —என்று அருளியிருப்பதால் என்பர்.

தருமபுரம், ஆதீனம் 24-வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள் 1914ஆம் ஆண்டில் மெய்கண்டான் சித்தாந்த மாநாட்டை இவர்களது ஆலோசனைகட்கு இணங்கவும், தலைமையிலும் சிறப்புற நடத்தி இவர்களுக்கு ''சைவசித்தாந்த சரபம்'' என்ற பட்டமும் வழங்கினுர்கள். 1954 ஆம் ஆண்டு பன்னிரு திருமுறை மன்றத்து முதலாண்டு விழாவில் கலந்துகொண்டார்கள்.

1958 ஆம் ஆண்டு மதுரைச் சைவசித்தாந்த சபையின் மகாநாட்டில் தலைமை வகித்தும் ஒவ்வோராண்டு வருகை தந்தும் சிறப்பித்தனர்.

குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம், நெல்லை சிவபூசகர் திருக்கூட்டம் போன்ற பல சமய நிறுவனங்களின் விழாக்களில் ஆண்டுதோறும் தலைமை வகித்துச் சமயப் பயிர் தழைக்கச் செய்தனர்.

1960 ஆம் ஆண்டு இவர்களது சஷ்டியப்தபூர்த்தி விழாவைத் தருமையாதீனம் 25ம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் திருக்கடவூரில் வைத்து நடத்தச்செய்து சிறப்புச் செய்தனர், அந்த ஆண்டிலேயே 33 ஓமகுண்டங்கள் அமைத்துச் செய்யப்படும் மகா கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடத்தி வைத்தனர். அஞ்ஞான்று பத்திரிகைகள் இவரது வரலாற்றை வெளியிட்டன

இலங்கைக்கும் கும்பாபிஷேகம், மாநாடு முதலிய நிகழ்ச்சிக்காக சிலமுறை சென்று வந்துள்ளனர். அங்கு ஆறுமுக நாவலரைப் பற்றி அவர் வரலாற்றில் கூறப்படாத செய்திகள் பலவற்றைக் கூறி இலங்கைத் தமிழர்களை ஆச்சரியத்தில் மூழ்கச் செய்தார். அங்கு பிரதமராகவிருந்த டட்லி சேனநாயகாவினுல் பாராட்டப் பெற்ருர்.

கர்ணபரம்பரைச் செய்திகளையும் சைவ அறிஞர் கருத்துக்களையும் தொகுத்து வழங்கும் கருத்து கருவூலமாகத் திகழ்ந்தார்கள். நூல்கள் பலவும், கட்டுரைகள் பலவும், சைவ நூல்

களுக்கு முன்னுரைகள் பலவும் வழங்கி உள்ளார்கள். அவைகளில் இவர்களது நுண்மாண் நுழைபுலத்தை அறியலாம்,

திருவாவடுதுறை, மதுரை, திருப்பனந்தாள் மடாதிபதிகளாலும் கௌரவிக்கப்பெற்ற இவர்கள் பல நிறுவனங்களின்மூலம் மகாமகோபாத்யாய, சிவாகமக்கடல், சிவாகமஞானபாநு முதலிய சிறப்புப் பட்டங்களும் பெற்றிருந்தார்கள்.

நினைத்தல், பேசுதல், செய்தல் இம்மூன்றிலும் பிறழாதவர்கள். இவர்களிடமிருந்த சீரியகுணம், தன் கொள்கையினின்றும் எதன்பொருட்டும் வளைந்துகொடுக்காத இயல்புடைமையாகும்.

''சிவபூசை செய்யும்முன் மற்றொன்றும் செய்யேல்
சிவபூசை செய்தபின் செய்''

என்பதிற்கிணங்க நாடோறும் மகா நைவேத்யடன் சிவபூசையும் அக்கினி காரியமும் செய்தாலன்றி ஒன்றையும் உட்கொள்ளார்கள். நடிப்பின்றி இயல்பாகவே தவறாது பூசை செய்யும் இயல்பினர். தன் குலஸ்வ தர்மத்தினின்றும் பிறழாதவர்.

இருபது ஆண்டுகளில் இருவருக்குச் சேர்ந்த ஐஸ்வர்யத்தைக் குறித்து ''நாம் என்ன செய்துவிட்டோம். எல்லாம் சிவபூஜையின் பயன்''– என்று வியந்து கூறுவார்கள்.

இவர்கள் நூல்களைக் கற்றலோடு நின்றுவிடாமல் தன் வாழ்கையில் கடைப்பிடித்துத் தம்போன்று பலரையும் சைவநெறியில் நிற்கச் செய்தமை அறிந்து இன்புறற்பாலது

சிவபெருமானை வழிபடுவதற்கு யோக்கியதையைப் பிறப்பிக்கும் கிரியையாகிய சமயம், விசேடம், நிருவாணம், அபிடேகம் ஆகிய நான்கு வகைக் தீட்சைகளையும் சிவாகமோக்தமாகச் செய்து வைத்துச் சுமார் 45,000 சீடர்களை உருவாக்கிச் சைவநெறியில் நிற்கச் செய்தனர்,

தீக்ஷைக்குரிய தத்துவ விளக்கங்களைத் திருமுறை மேற்கோளுடன் கூறுவதில் அதிசமர்த்தர். அதில் இவர்கட்கு நிகர் இவர்களே.

இவர்களது இலட்சியம் சிவாகமங்களை பாதுகாத்து அவற்றின் புராதன கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் மக்கள் பெற வேண்டுமென்பதே.

''சாதனையின்றி சிந்தனையாற் பிரயோசனமில்லை'' என்பதும் இவர்களின் கோட்பாடாகும்.

இவர்கட்கு மனைவியாரும், திருநாவுக்கரசு, அருணந்தி, மெய்கண்டான் என்று பெயர் விளங்கும் குமாரர்களும் உள்ளனர்.

இவர்கள் 10-4-1963 இல் சுத்தாத்துவித முக்தியை எய்தினார்கள். இவர்களது இடத்தை நிரப்ப ஒருவருமில்லை என இரங்கற் கூட்டத்தில் பலர் கூறினர்.

சிவஸ்ரீ ம. க. சுந்தரேசபட்டர் அவர்கள்

திரு. S. நயினுக்கண் பட்டர், மன்றத் தலைவர்

தீதிலாத் திருத்தொண்டத் தொகைதர வந்தருளிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதரித்த முப்போதும் திருமேனி தீண்டும் சிறப்புடைய ஆதிசைவக் குலத்தில், துவாத சாந்தத்தலத்தில் ஆகம வித்வானும் சித்தாந்த சைவநெறி பரப்பியவருமான சிவஸ்ரீ. ம. கல்யாணசுந்தரபட்டருக்கு இரண்டாம் மகனாராகத் தோன்றியவர் சிவஸ்ரீ. ம. க. சுந்தரேச பட்டரவர்கள். மதுரைக் கோயில் நிர்வாகஸ்தராக விளங்கியதுடன் இராமநாதபுரம் சமஸ்தான ஆசிருதபட்டராகவும் இருந்தார்கள். திருவாவடுதுறை, தருமபுரம், ஆதீனங்கள் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் இவற்றின் ஆசிருதமாக இருந்து மதுரையில் அம்மடங்களின் சமயப்பணிகளைச் சிறப்புறச் செய்தவர்கள், மன்றத்தின் தோற்றம் முதல் தம் வாழ்நாள் முழுவதும் அதன் தலைவராக விளங்கியவர்கள். தோற்றப்பொலிவும், இசையோடுபாடி சபை களில் எல்லோரையும் கவரும் வண்ணம்பேசும் ஆற்றலும் வாய்க்கப்பெற்றவர்கள். தருமை யாதீனக் கயிலைச் சுப்பிரமணியதேசிகர் அவர்களிடமும், திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளிடமும் பேரீடுபாடுகொண்டவர்கள். ஸ்ரீகாசி மடத்தின் சார்பில் மதுரையில் திருக்குறள் கல்வெட்டு, திருநீற்றுப்பதிகக் கல்வெட்டு, பொற்றாமரை, கடம்பமர வெள்ளிக்கவசம் முதலியன அமைய உறுதுணையாக இருந்தவர்கள், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், கந்த புராணம் முதலியவற்றை ஆண்டுதோறும் மதுரையில் நடத்துவதற்கு முயற்சிசெய்தவர்கள். 1952 ஆம் ஆண்டுமுதல் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளின் மாகேசுவர பூசைத் திருநாளில் சிவம்பெருக்கும் நான்கு ஆவணிமூலவீதிகளிலும் திருமுறை இசை இரவு முழுவதும் நிகழுதற்கும் ஸ்ரீகாசிமடத்தொண்டில் அயராது ஈடுபட்ட வர்கள்.

இவர்களின் சமயப்பணி, லௌகீக சாமர்த்தியம் முதலியவற்றைப் பாராட்டி ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள் ''சிவதர்மபாஸ்கரர்'' என்ற பட்டத்தை அளித்தார்கள். பெரும் கும்பாபிஷேகங்களில் கலந்துகொண்டு பணியாற்றிய இவர்களுக்கு வைத்தீஸ்வரன்கோயில் கும்பாபிஷேகப் பெருவிழாவில் தருமையாதீனத்தார் ''சிவநெறிச் செம்மல்'' என்ற பட்டம் வழங்கினார்கள். மதுரை ஆதீன குரு மகாசந்நிதானம் ''சிவநெறிக் காவலர்'' என்னும் பட்டம் அளித்தார்கள். திருவாதவூர் ஸ்ரீமாணிக்கவாசகர் திருமறை நாதர் கோயில்திருப்பணி, கும்பாபிஷேகம் இவற்றிற்குப் பெரிதும் பாடுபட்டவர்கள். அவ்வூரில் கார்த்திகை கடைசி சோமவாரத்தில் 1008 சங்காபிஷேகமும் திருவாசக விழாவும் நிகழ்வதற்கு தலஓதுவார் திரு. M. R. யாழ்கீத சுந்தரம் பிள்ளை அவர்களுக்குபெருந் துணையாக இருந்த வர்கள்.

இத்தகு புகழுடைய நம் மன்றத் தலைவர் 1978 மே 8-ஆம் தேதி சிவகதி அடைந்தார். அவர்தம் நினைவினை என்றும் போற்றுவோமாக!

வாழிய திருநெறிய தமிழ்!

திரு. S. தருமலிங்க முதலியார்

திரு. D. ஆறுமுகம் பிள்ளை. கோவை

தோற்றம்

சேலத்தில் திருவாளர் R. சண்முக முதலியார், வழக்கறிஞர். அவர்களின் மூத்த புதல்வராவர். இவருக்கு மீனுக்ஷி என்ற தங்கையும், ராஜரத்தினம், முத்துசுகவனம் என்ற தம்பியர் இருவருமாவர்.

கல்வி

Intermediate வரை அரசினர் கல்லூரியிலும், கோயமுத்தூர் விவசாயக் கல்லூரியிலும் பயின்றவர். கல்வி பயின்ற நாட்களில் ஒருவருடங்கூட தவறியதில்லை. ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவல்லவர். அதோடு எல்லா வகையான விளையாட்டுப் போட்டியிலும், கால்பந்தாட்ட போட்டியிலும் வல்லவராய்த் திகழ்ந்ததோடு மட்டுமல்லாமல், மெடல்கள், கேடயங்கள் பல பெற்றுர். தான் விளையாடிய குழுவுக்கும் பரிசு கிடைக்கச் செய்தார். All round Sports Champion ஆகி உரிய விருதுகளும் பெற்றுர்.

C. K. S. ஐயா தொடர்பு

கோவையில் பிரபல வழக்கறிஞரும், தமிழ்ப் பேரறிஞரும், ஒப்பற்ற சைவ சமயப் பேச்சாளருமாக மிகச் செல்வாக்குடன் திகழ்ந்த சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் ஆவர். அவருக்கும், இவருடைய தங்கை மீனுட்சி அம்மைக்கும் 1916ல் சீரும் சிறப்புமாகத் திருமணம் நடைபெற்றது. அதுமுதல், C. K. S. ஐயா அவர்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

திருமணம்

மறுவருடம் திருச்சி ஜில்லா, கரூர் என்ற திருத்தலத்தில் அவதரித்த பங்கஜவல்லி என்ற குலக்கொடியை தனது இல்வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றுர்.

உத்தியோகம்

கோவை அரசாங்க விவசாயக் கல்லூரியில் நெல் ஆராய்ச்சி உதவியாளராகச் (Paddy Research Assistant) சேர்ந்து, பட்டாம்பி, ஆடுதுறை முதலிய இடங்களில் உதவி நெல் நிபுணர் (Assistant Paddy Specialist) ஆகவும், கோவை, மதுரை முதலிய மண்டலங்களில் துணைவேளாண்மை இயக்குநர் ஆகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்றுர்.

சிவபூஜை

C. K. S. ஐயா சிவபூஜாதுரந்தரர். பன்னிரு திருமுறைப் பாராயணம் நாள்தோறும் செய்து ஓராண்டில் முடிக்கும் கடப்பாடுடையவர். அப்பெரியாரை மைத்துனராகப் பெற்றமை பொருட்டு, இவருக்கும் ஐயா போலவே பூஜை செய்யவேண்டும் என்ற ஆசை பெருகியது. இவர்தம் ஆர்வத்தை தூண்டி வளர்த்ததோடு, சிதம்பரம் முத்துக் கற்பகக் குருக்கள் அவர்களிடம் குடும்பத்தோடு அழைத்துச் சென்று 14-1-30 தைப் பூச நன்னுளில் சிவபூஜை

ஏற்கச் செய்தார்கள். மனைவியாரும் விசேட தீட்சை ஏற்றுக்கொண்டார்கள். அங்கேயே ஒரு வாரம் தங்கி அனுஷ்டான சிவபூஜை கிரியைகளை ஐயம் திரிபு அறப் பயின்று சாதகம் செய்து கொண்டு குருவருளும் ஆனந்த கூத்தப் பெருமான் தரிசனப் பேறும் பெற்றனர். தனது இல்லத்தில் பூஜைக்கு என்று ஒரு தனி அறையும், அதில் பூஜா மேடையும் அமைத்து நாடோறும் தவறாது பக்தி சிரத்தையுடன் பூஜை செய்து வந்தார்கள்.

பட்டி விநாயகர் வழிபாடு:

முதலில் பிறந்த ஆண்மகவு சிவபதம் எய்தியது. இரண்டு வருடங்களுக்குப் பின் பிறந்த பெண்மகவுக்கு மரகதாம்பிகை (பேரூர் அம்பிகையின் திருநாமம்) என்னும் பெயரும் சூட்டினர். அதன்பின் ஏழு ஆண்டுகளுக்கு குழந்தைப் பேறின்மையால் C.K.S. ஐயா அவர்கள் திருவுள்ளக் கருத்துப்படி ஒவ்வொரு கிருஷ்ணபட்ச சதுர்த்தியில் பேரூர் பட்டிவிநாயகப் பெருமானுக்கு சந்திரோயதம் ஆனதும் விரிவான முறையில் அபிஷேக அலங்கார ஆராதனை செய்து பிரார்த்தனைபுரிய 21 சதுர்த்திகளில் மற்றோர் பெண் மகவு பிறந்தது. கற்பகவல்லி என்றும் பெயர் சூட்டினர். மூத்தகுமாரத்தியை கோவை பங்கஜா மில்லில் உத்தியோகம் வகிக்கும் திரு. முத்துசாமி முதலியாருக்கும் இளைய குமாரத்தியை திருக்கடவூர் திரு. K. அமிர்தலிங்க முதலியார் அவர்களுக்கும் திருமணம் செய்து வைத்தார்கள். (பின்னவர் மதுரையில் ரயில்வே ஆடிட்டர் உத்தியோகம் வகிப்பவர்)

பன்னிரு திருமுறைப் பாராயணம்

நாளொன்றுக்கு 50 பாடல்களாக ஓராண்டில் பன்னிருதிருமுறைகள் முழுவதையும் பாராயணம் செய்துமுடிப்பார்கள். சிவபூஜை போன்றே பன்னிரு திருமுறைகளையும் சிவபெருமானாகவே பாவித்து பூஜை செய்து, தமது குருமூர்த்தியிடமே பெற்றுக்கொண்டார். பாராயண முதலிலும் முடிவிலும் மலர்தூவி வழிபடுவார். பாராயணம் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க உருகிஉருகிச் செய்வார். மனைவியார் பூஜைக்கும் பாராயணத்திற்கும் உரிய எல்லாம் செய்து கொடுத்து, பாராயணத்தில் கேட்டு, ஈடுபட்டு உருகுவார். ஆத்துமார்த்த மூர்த்தம் திருவாவடுதுறையில் எழுந்தருளியுள்ள ஒப்பிலாமுலையம்மை சமேத மாசிலாமணி ஈசனை ஆவாகனம் செய்து ஆகமவிதிப்படி அகோர சிவாச்சாரியார் பத்ததியில் உள்ளவாறு பூசிப்பதோடு செவ்வாய்க்கிழமை தோறும் வைத்தீஸ்வரன்கோவில் தையல் நாயகி அம்பாள் சமேத ஸ்ரீவைத்திநாதப் பெருமானையும் புற்றுமண்ணால் செய்த சிவலிங்கத்தில் ஆவாகனம் செய்து முன்போலவே பூசித்து இறுதியில் சண்டேசர் பூஜையை மட்டும் பொதுவாகச் செய்து அருள்பெறுவார். மதுரைக்கு மாற்றியது முதல் ஒவ்வொரு திங்கட்கிழமையும் புற்றுமண்ணால் 2 அங்குல உயரமுள்ள இலிங்கத்தில் மீனாக்ஷி அம்மை சமேத சுந்தரேசப்பெருமானை ஆவாகனம் செய்து பூஜைசெய்து திருவாலவாய்த் திருப்பதிகங்களைப் பாராயணம் செய்வார். தல முறை அடங்கன் முறை தேவாரத்தில் உள்ள முறைப்படி சிதம்பரம் முதல் திருநொடித் தான் மலைவரை உள்ள 274 பாடல் பெற்ற திருத்தலங்களில் உள்ள பெருமானை அந்தந்த திருத்தலத்தில் அமைந்த சுவாமி அம்பாள் திருநாமப்படி மேலே கண்டமுறைப்படி ஞாயிற்றுக் கிழமை தோறும் பூஜை செய்து, தமது பன்னிரு திருமுறைப்பாராயணம் தவிர அன்று பூஜை செய்த திருத்தலத்திருப் பதிகங்களில் பாராயணம் செய்வார்கள். ஏராளமான பதிகங்கள்

உள்ள சீர்காழி சிதம்பரம் திருவாரூர் முதலிய திருத்தலப் பெருமானுர்களைப் பூசிக்கும்போது மேற்படிதல மூவர் தேவாரப்பாராயணம் முடிவு பெறும்வரை 4 அல்லது 5 வாரங்களானாலும் அந்த 4,5 வாரங்களிலும் பாராயணம் செய்யப் பெறும் திருத்தலநாதனையே பூசிப்பார்.

மகேஸ்வர பூஜை

தமது இல்லத்தில் நால்வர் குருபூஜை, தன் பூஜை பாராயணம் ஏற்றுக்கொண்ட நாட்கள், சிதம்பரம் திருவாரூர் முதலிய முக்கிய திருத்தல வாராந்திர பூஜை முடிவுறும் ஞாயிற்றுக்கிழமை முதலிய நாட்களிலே கோவையிலும் அருகே உள்ள பதிகளிலும் வசிக்கும் சிவபூஜா துரந்தரர்களையும், தேவார ஓதுவா மூர்த்திகளையும், பூஜையின்றிப் பாராயணம் மட்டும் செய்யும் அடியார்களையும் தமது இல்லத்திற்கு வரவழைத்து, உபசரித்து நாலுவித ஆறுசுவை உண்டி அருத்துவார். துணைவியார் பங்கஜம் அம்மா அவர்கள் இதில் குதூகலமாகப் பங்கேற்பார்கள்.

நல்விழாப் பொலிவு கண்டார்தல்

சிவக்கவிமணி C. K. S ஐயா அவர்களுடனும் தனித்தும் பிரிந்தும் பேரூர் ஆரூர் தில்லை திருவாவடுதுறை முதலிய தலங்களில் பிர்ம்மோற்சவ நாட்களில் குடும்பத்துடன் சென்று தங்கித் திருவிழாப் பொலிவுகளைத் தரிசித்து உருகிப் போற்றி உளங்குளிர வழிபட்டு பயன் பெற்றுத் திரும்புவர்.

சிவக்கவிமணி அவர்களது சமாதும் குருபூஜையும்

தர்மபத்தினி சிவபதம் எய்திய அடுத்த ஆண்டில் சிவக்கவிமணி மதுரை ஆதீன மகா சந்நிதானம் அவர்களிடம் துறவறம் மேற்கொண்டு கோவையில் சிவதருமங்களை செய்து கொண்டு இறுதிவரை சிவபூஜை பாராயணம் செய்து வந்து 24-1-1961ல் ஆனந்த நடேசப் பெருமான் திருவடி நிழலில் இரண்டறக் கலந்தார்கள். இவர் திருமேனியை பேரூருக்கு எடுத்துச்சென்று ஏற்கனவே ஆயத்தமாகத் தயாரித்து வைத்திருந்த சமாது நிலையத்தில் ஆகம முறைப்படி சமாது கோவில் கொண்டருளச் செய்து பத்துநாட்கள் சமாதுக்கு பூஜை செய் வித்து 11ம் நாள் குருபூசையை உள்நாட்டு வெளிநாட்டு அன்பர்கள் தேவார இசை வாணர்கள் ஆதீன பிரதிநிதிகள் பிரமுகர்கள் உறவினர்கள் முன்னிலையிலே மிகச் சிறப்பாகச் செய்து வைத்தார்.

அறப்பணிகள்

அதுமுதல் C. K. S. நடத்திவந்த அரசம்பலவாணர் அறக்கட்டளை முதலிய சிவதர்ம ஸ்தாபன சம்பந்தபட்டவைகளை இவர் தலைமைப் பொறுப்பேற்று திறம்படநடத்தி வந்தார்.

பன்னிருதிருமுறை மன்றத் தோற்றம்

30-8-53ல் தமது இல்லத்தில் சிவத்திரு N. S. சீனிவாசபிள்ளை முதலியோர் உதவியுடன் பன்னிருதிருமுறை மன்றத்தை தோற்றுவித்தார் கோவில் அதிகாரிகள் உரிய இடத்தைதர. தெற்கு ஆடிவீதியில் மன்றத்தை ஸ்தாபித்தார்.. இறுதிவரை மன்றத்தின் துணைத்தலை

வராக இருந்து, தானும் பெரியபுராண விளக்கவுரை யாற்றி, C.K.S. ஐயா நுண்மாண் கருத்துக்களையும் தமது திருமுறை ஆராய்ச்சிக் குறிப்புகளையும் அன்பர்கள் உவக்க உணர்த்தி வந்தார்.

மதுரை திரு ஆலவாய் சைவசித்தாந்த சபையின் துணைத்தலைவராகவும் இருந்து சாத்திரங்களையும் தக்கமுறையில் பரப்பினர்.

தவவாழ்வு

சிவபூஜை பாராயணம் செய்த நேரம்தவிர எஞ்சிய நேரங்களில் பன்னிருதிருமுறை ஆராய்ச்சியும் 63 நாயன்மார் திருத்தொண்டின் திறங்களையும் நினைந்து நினைந்து உருகினர்.

சிவப்பேறு

மதுரை நாகமலை N. G. O. காலனியில் புதுவீட்டில், தமது மருமகன் பூஜைக்கென்று ஓர் அறை அமைத்துத்தர அதில் மகள் மருமகன் வீட்டில் மனைவியுடன் வாழ்ந்து வந்தார். ஜீவன் முக்தநிலையில் தமது மூச்சும் பேச்சும் பன்னிருதிருமுறைகளிலே திகழத்திகழ்ந்து இறுதி நாளன்றும் சிவபூஜை, பன்னிருதிருமுறைப் பாராயணம் செய்து 1972ல் ஐப்பசி பௌர்ணமி நாளில் பேரூர் ஆனந்தநடேசப்பெருமான் குஞ்சித பாத நிழல் எய்தினர்கள்.

Dr. V. Rathinasabapathy,
Vidwan, B. O. L., M. A., ph. D.
READER IN PHILOSOPHY
The Dr. S. Radhakrishnan Institute for
Advanced Study in Philosophy.

UNIVERSITY OF MADRAS
Madras - 600005

30-11-78

மதுரை பன்னிரு திருமுறை மன்ற வெள்ளி விழா

வாழ்த்து

பன்னிரு திருமுறை மன்றத்து வெள்ளிவிழா
பன்னிருகை நன்முருகின் தாளதுவால் — தன்னிகரில்
சீர்மையெலாம் பெற்றிட்டே செல்வன் சிவனடிசேர்
நீர்மையுறும் பான்மையுறு க.

இங்ஙன்,
அன்பின் வை. இரத்தினசபாபதி

சிவபாத சேகரர்

திரு. A. K. சுப்பிரமணியபிள்ளை M.A., I.R.S.
ஓய்வு பெற்ற வருமானவரி அதிகாரி,
மன்றத் துணைத்தலைவர்.

சிவாலயத் திருப்பணியும் திருமுன்றப் பெருந்தொண்டும் தமிழ்ப்பணியும் அறச்செயல் களும் செய்வதில் நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகம் என்றும் முன்னணியில் உள்ளது. அச்சமூகத்தில் தேவகோட்டையில் தோன்றி ''தமிழ்வள்ளல்'' எனப் புலவர்களாலும் ''சிவபாத சேகரர்'' எனச் சிவனடியார்களாலும் அழைக்கப்பெற்ற பெருஞ் செல்வர் நம் உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள். மன்றத்தின் தொடக்க முதல் தம் வாழ்நாள் முழுதும் இதன் வளர்ச்சியில் பேரீடுபாடு கொண்டவர்கள். பழனி சிவஸ்ரீ. ஈசான சிவாசாரியார் அவர்களிடம் தீட்சை பெற்று முறையாகச் சிவபூசை செய்வதில் கண்ணுங் கருத்துமாய் இருந்தார்கள். எப்போதும் புலவர்களுடனும் சிவநேசச் செல்வர்களுடனும் கூடி இருக்கும் இன்பம் பெறுவதில் மகிழ்ந்தார்கள்.

சிவபூசை செய்பவர்களுக்குப் பூசை செய்வதற்கு உரியவற்றை வழங்குவதில் மனம் வைத்தவர்கள். ஒரு மகா சிவராத்திரி நாளில் இவர்கள் சிவனடி சேர்ந்த நிகழ்ச்சியே இவர்களின் சிவபுண்ணிய ஈட்டத்தைக் காட்டப் போதுமானதாகும்.

அவர்தம் நினைவு என்றும் மன்றத்தார் சிந்தையில் நின்று நிலவும்.

வாழிய அவர் தொண்டு.

திரு. S. S. சுப்பையா பிள்ளை

திரு. K. வாலசுப்பிரமணிய பிள்ளை,
மன்றப் பொருளாளர், அவனியாபுரம் நிலக்கிழார்.

திக்கெலாம் புகழும் திருநெல்வேலியில் செல்வராகிய சிவபெருமான் வேணுவன நாதராகக்காந்திமதியம்மையுடன் எழுந்தருளி விளங்குகின்றார். பாடல் பெற்ற அப்பதியில் சைவ வேளாளர் குடும்பத்தில் தோன்றியவர் நம் முன்னாள் பொருளாளர் திரு. S. S. சுப்பையா பிள்ளை அவர்கள். 8-8-1907 ஆம் ஆண்டு பிறந்த இவர்கள் இளமையிலேயே திருமுறைப் பற்றுடையவர்களாக விளங்கி, மதுரைக்கு வந்து நூல் வியாபாரம் செய்து பெருஞ் செல்வம் ஈட்டினார்கள். செல்வத்துப் பயன் ஈதலே என்பதற்கேற்ப மதுரைத் திருப்புகழ் சபையில் ஈடுபாடு கொண்டு சிறந்த சமயப்பணி ஆற்றினார்கள். எளிமை மிகவுடைய இவர்கள் எவற்றையும் எண்ணிச் செய்யும் இயல்பினர். பழமுதிர் சோலை முருகன் கோயிலும், திருவாதவூர் கோயிலில் முருகன் சந்நிதானமும் விளங்கத் திருப்பணி செய்தவர்கள். ஏழை மாணவர்க்கு வேண்டும் உதவி செய்து கல்விப்பணியாற்றியவர்கள். மன்றத்தொடக்கம் முதல் தம் வாழ் நாள் முழுவதும் அதன் பொருளாளராக இருந்து சிறப்பித்தார்கள். திருமுறை ஈடுபாடு டைய தமையனார் திரு. S. S, அருணாசலம் பிள்ளை அவர்களைப் போலவே திருமுறை நெறி பரவச் சிறந்த தொண்டாற்றினார்கள். சண்டேசுவரநாயனார், சேரமான் பெருமாள்நாயனார் தம் குருபூசை விழாக்களைப் பொலிவுறக் கொண்டாடிய புண்ணியமுடையவர். மன்றத்தின் வளர்ச்சிக்குத் தம் உள்ளத்தாலும் உறுபொருளாலும் உதவியவர்கள். மன்றத்தில் வழிபடப் பெறும் திருமுறைநூல்களைத் தம் செலவில் எழுந்தருளச் செய்த சிவபுண்ணியராகிய இவர்கள் ''திருமுறைக் காவலர்'' என்ற பட்டத்தை மதுரை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களால் வழங்கப் பெற்ற பேறு பெற்றவர்கள். 10-5-1964ல் சிவனடி சேர்ந்தார்கள். அவர் தம் அருமை நினைவு மன்றத்தார் நெஞ்சில் என்றும் விளங்கும்.

வாழிய அவர் தம் திருமுறைத் தொண்டு!

பண்ணிசை ஆசான்

A. கதிரேசன் B. A.,
மன்ற மாணவன்,
ஸ்டேட் பாங்க்.

தேவாரமணி திரு. S. சயிலப்ப ஓதுவாமூர்த்திகளை வெள்ளிவிழாக் கொண்டாடும் இந்நேரத்தில் பாராட்டிப் பணிகின்றேன். மன்றம் தோன்றிய காலத்தில் பண்முறையோடு தேவாரங்களை மன்ற உறுப்பினர்களுக்கு ஓதுவித்தவர்கள் இவர்கள். மதுரை ஸ்ரீமீனுட்சி யம்மை ஆலயத்தில் நாற்பதாண்டு களாகத் திருமுறைப்பணி செய்கின்றவர்கள். பண்முறைப் பயிற்சியைப் பாடங் கேட்போர் மனங்கொளப் போதிப்பதில் வல்லவர்கள். என்னுடைய ஆசிரியராகிய மன்றச் செயலாளர் திரு. N. S. சீனிவாசம்பிள்ளை அவர்கள் பண்முறைப் பயிற்சியைப் பெற்றது இவர்களிடம் தான். மன்றத்தின் தலையாய பணியாகக் கருதுவது பண்ணொன்றப் பதிகங்களை அடியார்கள் பாடச் செய்வது தான். அப்படிப்பட்ட முதன்மை யான நோக்கத்தை நிறை வேற்றும்படி முதலில் பண்ணிசை கற்பித்தவர் நம் சயிலப்ப ஓது வாரவர்கள். பல ஆண்டுகள் முறையாக மன்றத்தில் இவர்கள் பண்முறைப் பயிற்சி வகுப்பு நடத்தினுர்கள். பண்முறைகளை எல்லோரும் கற்றுப்பாடலாம். ஆனுல் பிறர்க்குப் பயிற்சி யளிப்பது அரியசெயல். அவ்வரிய செயலைத் தம் தொண்டாகக்கருதி வாழ்கின்ற ''பண்ணிசை ஆசான்'' திரு. சயிலப்ப ஓதுவார் அவர்கள் திருவள்ளுவர் கழகத்தால் ''தேவாரமணி'' எனவும் மதுரை யாதீனத்தால் ''திருமுறை நன்மணி'' எனவும் பாராட்டப் பெற்றவர். இத்தகு பெருமையுடைய ஓதுவா மூர்த்திகளை இவ்வெள்ளி விழாவில் வணங்கி மகிழ்கிறேன்.

நாயகன் பார்வையில் நால்வர்

கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம் M. Com.,
வணிகவியல் விரிவுரையாளர், சௌராஷ்டிராக் கல்லூரி, மதுரை.

இறை வணக்கம்

என்னுள் இருந்தே எனக்குணர்த்தும் எம்பெருமான்
தன்னுட் புகவே தமிழ்செய்வேன்— மன்னுபுகழ்த்
தேவைச் சிலம்பணியைச் சேர்ந்தவனே! என்னுடைய
பாவைத் தமிழ்மணக்கப் பார்.

சொக்கநாதர் வணக்கம்

எல்லோர்க்கும் நீ இறைவன் மதுரை வாழும்
எங்களுக்கு மாப்பிள்ளை உலகு காணக்
கல்லாலின் கீழமர்ந்தாய் எங்க ளுக்குக்
கயற்கண்ணி மணவாளன் ஆகி வந்தாய்
சொல்லாலே உனையளக்க வந்து நின்றேன்
சொல்லுக்குள் நீ இருந்து காட்சி தந்தால்
மெல்லமெல்ல எறும்பாகி உன்சி றப்பாம்
விண்முட்டும் இமயத்தில் ஏறிப் பார்ப்பேன்.

மீனாட்சி வணக்கம்

நாங்களெலாம் தவம்செய்த கார ணத்தால்
நடுவீட்டுத் தெய்வமெனக் கொலு விருந்தாய்
பாங்குடைய பெருமானை வரவ ழைத்துப்
பட்டத்தை அவனுக்கே சூட்டி விட்டாய்
தீங்கறியாத் தமிழுக்கு முத்தம் தந்தாய்
சிறியேனை உன்னடியில் சேர்த்துக் கொண்டாய்
ஓங்காரம் உன்வடிவம் அம்மா! உந்தன்
உயர் அருளால் நாயகனைக் காட்ட வேண்டும்.

முன்னுரை

சைவந் தழைக்கத் தமிழ்தந்த
தவத்தோர் நால்வர் பெருமையினை
வையந் தன்னில். உரை செய்ய
வந்தார் மதுரைச் சொக்கேசர்
பொய்யில் புலவர் பெருமையினைப்
புனிதத் திருவாய் பேசுங்கால்
கையைத் தூக்கிக் கும்பிட்டுக்
காதைத் தீட்டிக் கேட்போமே.

மாமதுரை மக்களுக்காய் அந்த நாளில்
மண் சுமந்தேன் வளைசுமந்தேன் விறகு விற்றேன்.
காமனையே எரித்திருக்கும் கண்ணை மாற்றிக்
கயற்கண்ணி அருள்நங்கை கைப்பி டித்தேன்
தேமதுரத் தமிழ் கேட்டுப் புலவன் ஆனேன்
திருமுறையால் கட்டியதால் இங்கு வந்தேன்
ஓமென்னும் சொல்லிடையே நிற்பேன் உங்கள்
உள்ளத்தில் இடம் தந்தீர் வந்து விட்டேன்

அந்நாளில் பல பேர்கள் எனைய ழைத்தார்
ஆதலினால் சிலம்போசை தாமதிக்கும்
இந்நாளில் யாரழைப்பார் என்றே எண்ணி
இருக்கின்றேன் சொக்கலிங்கம் ஆலவாயில்
கன்னியெனும் மீனாட்சி கோயி லுக்குள்
கவின்மன்றம் அழைத்தமையால் வந்தேன் நல்ல
பொன்வேண்டாம் மணிவேண்டாம் அன்பு போதும்
போவென்று சொன்னாலும் போக மாட்டேன்.

தந்தையென எனைமாற்றி இன்பம் தந்தான்
சம்பந்தன் மழலையிலே மகிழ்ச்சி கொண்டேன்
சொந்தமுடன் தனித்தொண்டன் ஆகி நின்றான்
தூயவனும் நாவரசன். தலைவன் ஆனேன்
விந்தைமிகும் மாணிக்க வாச கன்பால்
மெல்லியலின் இன்பத்தை நானும் கண்டேன்
சுந்தரனைத் தனித்தோழன் ஆகப் பெற்றுத்
தோழமையால் பிழையெல்லாம் பொறுத்துக்
கொண்டேன்.

மதுரையிலே பாண்டியர்க்கு நோவு வந்தால்
மடப்பள்ளிச் சாம்பலது மருந்தாய் மாறும்
கதியான திலகவதி தம்பிக் காகக்
கைப்பிடித்த திருநீறு சூலை தீர்க்கும்
மதியுடைய சிறுபகைவன் முத்த நாதன்
வளர்நீறு மெய்ப்பொருளின் வளத்தைக் காட்டும்.
விதியென்றால் அதைமாற்றும் திருநீ றென்று
வேதங்கள் புராணங்கள் விளக்கிக் காட்டும்.

வெள்ளைத்தாள் தீப்பட்டால் கறுப்பாய் மாறும்
வியன்மரங்கள் தீப்பட்டால் கரிதான் மிஞ்சும்
கள்ளமிலார் தூய்மையெனும் நெருப்புப் பட்டால்
கறுப்பான சாணமது வெள்ளையாகும்.
வெள்ளைநிறப் பொருளாசை கறுத்துப் போகும்
வியன்ஞானச் சாணமதோ வெளுப்பாய் மாறும்
உள்ளத்தால் உயர்ந்தவர்கள் நெஞ்சம் போல
உயர்வெண்மை காட்டுவதே திருநீ ருகும்.

மதில்கட்டத் திருநீறு கூலி யாகும்
மனங்கட்டத் திருநீறு கயிருய் மாறும்
விதிமாற்றத் திருநீறு கைகொ டுக்கும்
வினைத்தூய்மை திருநீற்றுப் பைகொ டுக்கும்
கதியான தவத்தினையும் நீறு காட்டும்
கைப்பட்டால் சிவத்தினையும் நீறு காட்டும்
சதிசெய்தால் திருநீறு தீயாய் மாறும்
தமிழ்பாடும் திருநீறு தாயாய் மாறும்.

இத்தனையும் திருநீற்றுப் பெருமை ஆனுல்
இதையுரைப்பார் யாரென்றே எண்ணும் போதில்
அத்தனையும் திருநீற்றுப் பதிக மாக்கி
அடியவரின் பெருமையெலாம் பாட்டாய் மாற்றிச்
சித்தமெலாம் இன்புறவே செய்து வைத்தான்
திருஞான சம்பந்தன் மகிழ்ச்சி யுற்றேன்
இத்தரையில் திருக்கடைக்காப் பில்லை என்ருல்
இறைவனுக்கும் தனிப்பெருமை இல்லை தானே.

திசையெல்லாம் படைத்தாலும் அவைகள் என்னைத்
தெரியாமல் இருந்திடவே மாயை வைத்தேன்
வசைப்பாட்டில் அகப்பட்டுப் பழக்க மில்லை
வளமான சம்பந்தன் அமுது பெய்யும்
இசைப்பாட்டில் எனையடிமை ஆக்கி விட்டான்
இருகரத்தும் பொற்ருளம் ஏந்த வைத்தேன்
அசையாத சிவத்தினையும் அசைக்கும் ஆற்றல்
அடியார்கள் தமக்கின்றி யார்க்கே உண்டு?

வையையிலே மண்சுமந்தேன் ஆனுல் அந்த
மண்ணுலே குடமொன்றைச் செய்து வைத்துப்
பொய்யறியாச் சிவனேசர் அரவால் மாண்ட
பூம்பாவை அங்கத்தைப் போட்டு வைத்தார்.

கை தொட்டு வெள்ளெலும்பைப் பெண்ணாய் மாற்றக்
கருதவில்லை சம்பந்தன் அதனைச் செய்தான்
செய்யவனாய் அனலேந்தி ஆடு கின்ற
சிவம்கூட மகிழ்வாலே திகைத்துப் போனேன்.

நஞ்சுடைய பாம்பெல்லாம் அள்ளி அள்ளி
நானாக உடம்பெல்லாம் போட்டுக் கொண்டேன்
அஞ்சுகிற நஞ்சினையும் நானே உண்டேன்
அப்பூதி பெற்றமகன் அடியார்க் காக
நஞ்சுடைய அரவாலே இறந்த போதில்
நானொன்றும் செய்யவில்லை அப்பர் அன்றோ
விஞ்சுபுகழ்த் தேவாரப் பாட்டி னாலே
விதிமாற்றிச் சிவனுக்கும் மேன்மை தந்தார்.

கள்ளமிலார் நெஞ்சம்போல் ஆல யங்கள்
கடுகளவும் மாசின்றி இருக்க வேண்டும்
உள்ளம் போல் ஆலயமும் அழுக்குப் பட்டால்
உழவாரப் படைதூக்கித் தூய்மை யாக்கி
வெள்ளம் போல் வந்தகளை அனைத்தும் மாற்றி
வினைத்தூய்மை காட்டியவர் அப்பர் அன்றோ,
அள்ளியள்ளித் தமிழ்தந்தார் அதனா லன்றோ
ஐயாற்றில் கயிலாயக் காட்சி கண்டார்.

அன்போடு தமிழ்சொன்னால் அடிமை யாவேன்
அதனாலே சுந்தரர்க்குத் தூது போனேன்
என்புருகத் தமிழ்சொன்னால் எழுதி வைப்பேன்
இதனால்தான் வாசகத்தை எழுதி வைத்தேன்
கன்மனமும் கரைக்கின்ற வாச கம்போல்
கலியுகத்தில் இனியொன்றைக் காண்ப துண்டோ
மன்னுலகில் நால்வரிசைப் பாட்டி னாலே
மறைந்திருந்த சிவம்கூட வெளியில் தோன்றும்.

என்னுடைய திருவருளால் நால்வர் இங்கே
ஈடில்லாப் பணிசெய்தார் என்று சொன்னால்
மன்னுலகீர்! அதுதவறு வைய கத்தில்
வளர்கின்ற உயிர்க்கெல்லாம் அருளைச் செய்தேன்
என்னுடைய அருள்தன்னை உணரும் ஆற்றல்
இவர்நால்வர்க் கிருந்தமையால் ஏற்றம் பெற்றார்
மன்னுலகில் மற்றவர்கள் பக்கு வத்தால்
வருங்காலப் பிறவிகளில் உணர்ந்து கொள்வார்.

ஆற்றினிலே ஓடிவரும் அருளாம் தண்ணீர்
அள்ளிவைத்த நால்வருக்காய் ஓட வில்லை
ஊற்றெடுத்துப் பொங்கி வரும் தண்ணீர் தன்னை
உணர்வதற்கு நால்வருமே முயற்சி செய்தார்
மாற்றங்கள் உரைக்காமல் நம்பி நின்றார்
மற்றவர்கள் முயற்சியினால் எனையு ணர்ந்தார்
காற்றுப்போல் நான்பொதுவில் ஆடு கின்றேன்
கண்திறந்து பார்த்தவர்கள் கண்டு கொண்டார்,

மரத்துக்கு மின்சாரம் தெரிவ தில்லை
மண்ணுக்குத் தமிழருமை புரிவ தில்லை
கரத்துக்குள் கடவுள் அகப் படுவ தில்லை
கவியன்றிச் சிவங்கட்டக் கயிறும் இல்லை
தரங்காட்டி நின்றவர்கள் காண வில்லை
தனையுயர்த்திப் பேசியவர் காண வில்லை
சிரந்தூக்கி நின்றவர்கள் உணர வில்லை
திருமுறைக்குப் பணிந்தவர்கள் கண்டு கொண்டார்.

அரனரியாய் நான்வந்தேன் சிலபேர் கண்டார்
அல்லாவாய் நான்வந்தேன் சிலபேர் கண்டார்
பரமபிதா வாய் நின்றேன் சிலபேர் கண்டார்
பகுத்தறிவாய் நான்வந்தேன் சிலபேர் கண்டார்
முருகன்எனச் சிலர்சொல்லி வேல்கொ டுத்தார்
முக்கண்ணன் எனச்சிலபேர் சூலம் தந்தார்
இருமுடியில் நெய்த்தேங்காய் சிலபேர் தந்தார்
இவர் அன்பால் கட்டுண்டேன் என்னைத் தந்தேன்.

ஆதலினால் சொல்லுகிறேன். அடியீர்! உங்கள்
அன்புக்குக் கட்டுப்பட் டிருக்கின் றேன்யான்
மாதுடனே இல்வாழ்க்கை வாழ்ந்தால் என்ன!
மனைவெறுத்துத் துறவாகித் திரிந்தால் என்ன!
காதலுடன் தொழுதாலே போதும் உங்கள்
காலடியில் நான்வந்து காத்தி ருப்பேன்
தீதறியாத் திருமுறைக்கு நெஞ்சம் தந்தால்
திருவடியைத் தருகின்றேன் செழித்து வாழ்வீர்.

★

தேவாரத்தில் பண்கள்

ஞா. பத்மநாபன், B. A., L. T.,

பழந்தமிழ் மக்கள் இறைவனை ''ஏழிசையாய் இசைப்பயனுய்''க் கண்டு அகங்குளிர இசையொன்ற உருகிப் பாடி உய்ந்தனர். நல்ல கருத்தாழமுள்ள தெய்வப்பாடல்களை இசையுடன் பாடும் பொழுது நல்ல உணர்ச்சியையும் மெய்ப்பாட்டையும் அடைய முடிகிறது. தேவாரம் மக்களின் மனதை உருக்கி பக்தியைப் பெருக்கும் அருள் வாக்காகும். ஆலயங்களில் தேவாரப்பாடல்களைப் பண்ணுடன் ஓதவும் இசைக்கருவிகளை முழங்கவும் தமிழ் மன்னர்கள் இறையிலியாக பெரும் நிலங்களை அளித்தனர்.

தமிழகத்தில் ஒவ்வொரு நிலத்துக்கும், கலாசார மரபுக்கும், பருவத்துக்கும், நேரத்துக்கும், உணர்ச்சிக்கும் ஏற்றவாறு 103 பண்கள் இருந்தன. இவற்றுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய சமயக் குரவர்கள் இறைவனைப் பரவிப் போற்றியருளிய செழுந் தமிழ்ப் பாடல்களான தேவார திருப்பதிகங்களில் அமைந்த பண்கள் 23 ஆகும். 1200 ஆண்டுகளுக்கு முன்னிருந்த தேவாரப்பதிகங்களும் அவற்றின் பண் அமைதிகளும் கால வெள்ளத்தால் போற்றுவாரற்று அருகிய நிலையில், திருமுறை கண்ட சோழன் அவற்றைத் தொகுத்து முறைப்படுத்தினன். இவ்விசை முறை ஆலயங்களில் ஓதுவா மூர்த்திகளால் இன்றுவரை காப்பாற்றப்பட்டு வருகிறது.

பண் ஆராய்ச்சியில் நமக்கு முதல் முதலாக வழி காட்டியவர்கள் தஞ்சை ஆபிரகாம் பண்டிதரும் இலங்கை அருள்திரு. விபுலானந்த அடிகளுமாவார்கள். நம் கலைக்கருவூலமான பண்முறையை அறிந்து மகிழ்ந்து பயனடைவோமாக. பழங்காலத்திலிருந்த பண்களின் பெயர்களும் இக்காலத்தில் அவைகளுக்கு வழங்கும் பெயர்களும் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

தேவாரப் பண்கள்

பண்ணின் பெயர்	இப்போது வழங்கும் பெயர்	பண்ணின் பெயர்	இப்போது வழங்கும் பெயர்
1. செவ்வழி	யதுகுலகாம்போதி	15. செந்திறம்	மத்யமாவதி
2. தக்கராகம்	காம்போதி	16. தக்கேசி	காம்போதி
3. புறநீர்மை	பூபாளம்	17. கொல்லி	நவரோசு
4. பஞ்சமம்	ஆகிரி	18. இந்தளம்	நாதநாமக்ரியை
5. நட்டபாடை	நாட்டை	19. காந்தாரபஞ்சமம்	கேதாரகௌளம்
6. ஆந்தாளிக்குறிஞ்சி	சாமா	20. கௌசிகம்	பைரவி
7. காந்தாரம்	நவரோசு	21. பியந்தைக்காந்தாரம்	நவரோசு
8. பழம்பஞ்சுரம்	சங்கராபரணம்	22. சீகாமரம்	நாதநாமக்ரியை
9. மேகராகக்குறிஞ்சி	நீலாம்பரி	23. சாதாரி	பந்துவராளி
10 கொல்லிக்கௌவாணம்	நவரோசு	24. திருக்குறுந்தொகை	மாயாமாளவகௌளம்
11. பழந்தக்கராகம்	ஆரபி	25. திருத்தாண்டகம்	அரிகாம்போதி
12. குறிஞ்சி	குறிஞ்சி	26. திருநேரிசை	குந்தலவராளி
13. நட்டராகம்	பந்துவராளி	27. திருவிருத்தம்	—
14: வியாழக்குறிஞ்சி	சௌராஷ்டிரம்	28. யாழ்முரி	—

மன்ற வெள்ளி விழாவில் பட்டம் வழங்கப்பெற்ற அறிஞர்கள்

திருவாளர்கள்

1.	பேராசிரியர் அ. சங்கரநாராயணன்	...	திருநெறிப்பெரும்புலவர்
2.	டாக்டர் சுப. அண்ணாமலை	...	சிவநெறிக்காவலர்
3.	பண்டித மீ. கந்தசாமிப்புலவர்	...	அறநெறிப்பெரும்புலவர்
4.	V. K. தியாகராஜ ஐயர்	...	சந்தத்தமிழ்மணி
5.	கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம்	...	திருமந்திரச் சொல்மணி
6.	கவிஞர் ஆ. ஆனந்தராசன்	...	திருநெறிக் கவிஞர்
7.	புலவர் தா. குருசாமி	...	திருமுறைச்செம்மல்
8.	புலவர் யாழ். சுந்தரம்	...	திருநெறிப்புலவர்
9.	ப. பரமசிவம்	...	தெய்வநெறிச்சீலர்
10.	C. சங்கரன்பிள்ளை	...	திருமுறைத் தொண்டர்மணி
11.	பேராசிரியர் சீனி. சௌமியநாராயணன்	...	தெய்வத்தமிழ்மணி
12.	கவிஞர் வி. துரைசாமி	...	அருள்நெறிக் கவிஞர்
13.	பேராசிரியர், பு. மு. சாந்தமூர்த்தி	...	நன்னெறிப்புலவர்
14.	கு. வே. இராமகோடி	...	செஞ்சொல் மணி
15.	வீ. சோணை	...	செந்தமிழ்ச்செல்வர்
16.	கவிஞர் இராகவன் முத்து	...	சிவநெறிக் கவிஞர்
17.	பொன். அலங்காரபாபு	...	செந்நெறிச்செல்வர்
18.	S. சைலப்ப ஓதுவார்	...	பண்ணிசை ஆசான்
19.	நாதசுரவித்வான், அழகுசுந்தரம்	...	தெய்வீகநாதமணி
20.	V. திருப்பதி.	...	அருளிசைமணி

திருமுறைத் தொண்டர் பட்டம் பெற்றோர் -- 11-12-1978

திருவாளர்கள்.

1. அருணாசல முதலியார்.
2. V. இராமச்சந்திரன் சேர்வை.
3. இராமகிருஷ்ணன்
4. S. சொக்கலிங்கம் பிள்ளை
5. அழகியநம்பி.
6. பத்மாவதி அண்ணியார்
7. மு. இராமசாமி நாடார்
8. A. T. மாதவன்
9. இராஜகோபால்
10. ஞா. பத்மநாபன்
11. அ. சோமசுந்தரம்
12. S. பாண்டிமாதேவி.
13. S. இலட்சுமணன்
14. கந்தசாமி ஓதுவார்
15. முத்திருளப்பன்.
19. புலவர் சு. இலக்குமணப்பெருமாள், M.A.
17. புலவர், கல்யாணசுந்தரம்
18. K. O. S. நாகராஜன்
19. நமசிவாயம்
20. மீனாட்சி நமசிவாயம்
21. A. கந்தசாமி.
22. A. சோமசுந்தரம்
23. முத்தையா
24. A.கதிரேசன்
25. ஆறுமுகம், மேலீசு அச்சகம்
26. நா. ஆறுமுகம்
27. சோமசுந்தர ஓதுவார்
28. S. சோமசுந்தரம்.
29. கு. மணிகண்டன்
30. V. முத்துக்காமாட்சியாபிள்ளை.
31. P. A. திருநாவுக்கரசு
32. N. S. சிவஞானம்.
33. சோமசுந்தரம்
34. கஸ்தூரி அம்மையார்
35. S. சங்கரலிங்கம்

மன்ற விழாக்களில் கலந்துகொண்ட பெருமக்கள்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள்
மதுரையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிகபரமாசாரிய சுவாமிகள்
திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீகாசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள்
திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள்
பழநி சிவஸ்ரீ. ஈசான சிவாச்சாரிய சுவாமிகள்
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்
நாகர்கோயில் மகாவித்வான் திரு. ஆறுமுகநாவலர்
ஸ்ரீமத். சம்பந்தசரணலயத்தம்பிரான் சுவாமிகள் (C. K. சுப்பிரமணிய முதலியார்)
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் (முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்)
ஸ்ரீமத் சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் (தருமையாதீனம்)
ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த தேசிகபரமாசாரிய சுவாமிகள், யாழ்ப்பாணம்
திரு. அ. உத்தண்டராம பிள்ளை I. A. S. (Rtd)
,, K.S. நரசிம்மன் I. A. S. முன்னாள் அறநிலையத்துறை ஆணையர்
,, M. S. சாரங்கபாணி முதலியார் B. A. B. L. ,,
,, T. M. இராமசாமி M. A. முன்னாள் நகரவை ஆணையர்
,, ராணி. அ. சுப்புராம், முன்னாள் நகரவைத்தலைவர்
,, தமிழவேள், P. T. இராஜன்
,, தமிழ்வள்ளல் தேவகோட்டை. உ. ராம. சுப. சேவு. மெ. மெய்யப்பசெட்டியார்
,, R. குஞ்சிதபாதம் I. A. S. (Rtd) மாவட்டக் கலெக்டர்
,, Dr. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், முன்னாள் துணைவேந்தர், மதுரை பல்கலைக்கழகம்
,, முத்துசாமி பிள்ளை I. A. S. (Rtd)
,, கி. இலட்சுமிகாந்தன் பாரதி I. A. S.
,, R. இலட்சுமண ஐயர், B. A. B. L. மாவட்ட நீதிபதி
,, C. R. சிவராமகிருஷ்ண ஐயர் B. A; B. L. துணைநீதிபதி
,, A. சோமசுந்தரம், B. A. B. L., மதுரை மாவட்ட நீதிபதி
,, M. A. முருகேசன் B. A; B. L, கூடுதல் நீதிபதி
,, K. M. S. இலட்சுமண ஐயர், மதுரைக் கோயில் தருமகர்த்தாக் குழுத் தலைவர்,
,, M. V. நல்லமுத்துப்பிள்ளை ,,
,, அ. சிதம்பர முதலியார் M. L. C, ,,
,, லெ. நாராயணன் செட்டியார் ,,
,, N. பொன்னப்பன் ,,
,, அ. சக்கரை சேர்வை B. A., B. L. துணைஆணையர், அறநிலையத்துறை
,, K. ராஜா B. A., B. L. ,, ,,
,, அ. சிதம்பரம் B. A., B. L. ,, ,,
,, P. R. பக்கிரிசங்கர் M. A., B.L. ,, ,,
,, வை. சங்கரன் B. A., B. L. தரும கர்த்தாக் குழுத் தலைவர்

திரு. A. வெங்கடாஜலம் ஐயர் B. A., B. L. உதவி ஆணையர்
,, A. வேங்கடேஸ்வர ஐயர் B. A., B. L. தருமகர்த்தா
,, இராமச் சந்திரப்பத்தர் டிப்டி கலெக்டர்
,, N. சிவநேசன் I. A. S. ,,
,, திருமலையப்பன் ,,
,, T. S. இராமலிங்கம்பிள்ளை, உதவிநீதிபதி
,, வெ. சந்தானம் ஐயர், ''தினமணி'' பொறுப்பாசிரியர்
,, T. H. விவேகானந்தம்பிள்ளை, உதவி ஆணையர்
,, M. பரமசிவம் M. A. நிர்வாக அதிகாரி
,, S. மணவாளன் B. E. பொறியாளர்
,, கருமுத்து. தி. சுந்தரம் செட்டியார், ஆலைஅதிபர்
,, கி. பழநியப்பபிள்ளை, திருவள்ளுவர் கழகம்
,, V. நடராஜன் B.E. மேற்பார்வை பொறியாளர்
திருமதி. Dr. இராதா தியாகராஜன்
திரு. S. ஸ்ரீ பால் I. P. S.
,, T. தோத்தாத்ரி ஐயங்கார் M.A. மதுரைக்கல்லூரி முதல்வர்
,, S. சோமசுந்தரபட்டர், மதுரை
,, T. K. தியாகராஜன், இந்தியன் எக்ஸ்பிரஸ்
,, S. S. அருணாசலம்பிள்ளை, ஆலைஅதிபர், திருநெல்வேலி
,, G. கலியாணம்பிள்ளை M. A. மாயூரம்
,, V. இராமலிங்க முதலியார், சோழவந்தான்
,, A. K. சுப்பிரமணியபிள்ளை M. A. முன்னாள் வருமானவரி அதிகாரி
,, A. V. ஜெயச்சந்திரன் M. A., B. L. அரசாங்கத் தகவல் துறை அதிகாரி
,, S. T. காசிராஜன் M. A. மண்டலப்போக்குவரத்து ஆணையர்
,, M. சூரியராஜ் B. A., B. L. துணை ஆணையர். அறநிலையத்துறை
,, C. S. தீனதயாளன் B.A. B. L. ,,
,, K. சிதம்பரம் B. A. ,,
,, N. S. இராமச்சந்திரன் B. A., B. L. உதவிஆணையர், நிர்வாக அதிகாரி
,, A. திருவேங்கடசாமி ,,
,, Dr. M. D. R. L. ஹனுமந்தன்
,, A. சுப்பிரமணிய பிள்ளை B. A. மாவட்ட ரெவின்யூ அதிகாரி (Retd.)
,, A. சண்முகசுந்தரம் பிள்ளை (டிப்டி கலெக்டர்,) நிர்வாக அதிகாரி
,, கு. பாலசுப்பிரமணியம்
,, C. மாணிக்கவாசகம் பிள்ளை, B. A. கஸ்டம்ஸ் சூப்பிரண்டெண்ட்
,, Dr. C. சீனிவாசன் M. Sc., Phd. மதுரை பல்கலைக் கழகம்
,, கருமுத்து. சு. சொக்கலிங்கம் செட்டியார், சிவகாமி ஆலை அதிபர்
,, L. அழகு சுந்தரம் செட்டியார், மகாலட்சுமி ஆலை.

மன்ற விழாக்களில் கலந்துகொண்ட அறிஞர்கள்

திருவாளர்கள் :

பாலகவி. திரு. வே. இராமநாதன்செட்டியார் (தத்புருஷதேசிகர்)

திரு. வை. மு. சண்முகதேசிகர், நாகை.

திரு. தி. கி. சுந்தரமூர்த்தி, மதுரை.

திரு. இராம. கோவிந்தசாமிப்பிள்ளை. திருவையாறு.

திரு. சிவக்கொழுந்து. பெரியகுளம்.

திரு. மு. சுந்தரேசம்பிள்ளை, பனசை.

திரு. பண்டித. சிவசுப்ரமணிய ஐயர், மதுரை.

எம்பார் விஜயராகவாச்சாரியார்

M. S. P. சண்முகம் M. A., புதுடில்லி.

சுவர்ண வெங்கடேச தீட்சிதர், சிதம்பரம்.

திரு. இராமமூர்த்தி, புதுச்சேரி.

வே. மாணிக்கவாசகம்பிள்ளை. நெல்லை.

இராமச்சந்திரபத்தர் B. A., டிப்டி கலெக்டர்.

அ. இ. ஈஸ்வர மூர்த்தியாபிள்ளை, சங்கரன் கோவில்.

புலவர் தா. குருசாமி.

S. தருமலிங்க முதலியார்

G. சுப்பிரமணியம் பிள்ளை M.A.,B.O.L., அண்ணாமலைப்பல்கலைக்கழகம்

V. G. சீனிவாசன், மதுரை.

K. M. வேங்கடராமையா M. A., B. O. L.,

கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார்

புலவர் க. சேதுராமலிங்கம், ராமேசுவரம்.

புலவர் கா. தெய்வேந்திரன், திருப்பாச்சேத்தி.

ப. பரமசிவம், மதுரை.

M. சமயபுரத்தான், பழநி.

டாக்டர். சுப. அண்ணாமலை M. A., M. Litt., Phd.,

பண்டித ச. சாம்பசிவம் M. A.,

அ. சங்கரநாராயணன் M. A., M. Litt.,

ஆ. ஆனந்தராஜன் M. A., B. T.,

S. பாலச்சந்திரன் M. A., M. Litt.,

கலியபெருமாள் M. A., மாயூரம்.

ஔவை சு. துரைச்சாமிப்பிள்ளை, மதுரை.

தி. வி. அண்ணாச்சாமி சிரௌதிகள்

ஆதிமுருகவேள் M. A., திருச்சி.

பண்டித ஆ. சண்முகவேலன்

பண்டித மீ. கந்தசாமிப் புலவர்

புலவர் தா. ம. வெள்ளைவாரணம், பனசை

ஐயாமணி சிவாச்சாரியார், திருவாடானை.

கண. சிற்சபேசன் M. A.,

புலவர் அருணஜடேசன், மதுரை.

புலவர் கதி. சுந்தரம்

பு. மு. சாந்தமூர்த்தி M. A.,

மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்,

கவிஞர் வி. துரைசாமி

சீனி. சௌமிய நாராயணன் M. A.,

நடேசானந்த சுவாமி

டாக்டர். தமிழண்ணல் M. A., Phd.

கு. வே. ராமகோடி M. A.,

கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம் M. Com.,

புலவர் இரா. காந்திமதி

கோ. சங்கரன் M. A.,

புலவர் கோ. பா. தாமரை.

பண்டித அ. முத்துச்சாமிப்புலவர்

புலவர் நீ. சீ. சுந்தரராமன்

புலவர் அன்பு. கருணையானந்தா

புலவர். யாழ் சுந்தரம். B. A., B. T.,

யாழ். பாலசுந்தரம் B. A., B. L.,

சுகப்பிரமம். இராமசாமிசாஸ்திரிகள்

தி. சுந்தராம்பாள் M. A., விருதுநகர்.

அ. ஞானசம்பந்தமுதலியார். ஈரோடு.

புலவர். சுவர்ணகாளீசுவரன், திருவையாறு.

V. பாலசுப்ரமணியக் குருக்கள், பள்ளத்தூர்

நாராயணசாமி பாகவதர், ஆவுடையார் கோயில்.

டாக்டர் மெ. சுந்தரம் M. A., Phd.,

புலவர். க. கொன்றையாண்டி, ஶ்ரீவில்லிபுத்தூர்.

K. A. ராஜாபிள்ளை.

தொண்டர் கோ. சிவஞானம், திருக்கருகாவூர்

இராஜம்மாள் சுந்தரராஜன், பாவை இசைப் பள்ளி, மதுரை.

சி. சங்கரம் பிள்ளை, மதுரை.

புலவர் மு. பிச்சாண்டி.

புலவர் மு. சதாசிவம்.

புலவர். ம. கா. சிவசுப்பிரமணியம்.
ஏ. கதிரேசன் B A;
K. பாலசுப்பிரமணிய பிள்ளை.
M. S. மாரியப்பன்.
திருவாசகமணி கே. எம். பாலசுப்ரமணியம்.
தவத்திரு. சுந்தர சுவாமிகள், கௌமாரமடம்.
க. அனுசுயா M. A;
ரா. சண்முகசுந்தரம் செட்டியார், திருவதிகை.
பழநி. அரங்கசாமி M. A.. B. O. L.
க. வஜ்ரவேல் முதலியார் B A; L. T.
திருமதி உமையாள் முத்து B. A. B. L.
ராகவன் முத்து B. Sc.
தா. கு. சுப்பிரமணியன் M. A.,
டாக்டர். D. ஆண்டியப்பன் M. A., Phd.
சி. வை. நித்தியானந்த சர்மா, யாழ்ப்பாணம்
C. E. N. ஈசுவர வடிவு அம்மாள், தூத்துக்குடி,
சரசுவதி இராமநாதன் M. A; பள்ளத்தூர்
டாக்டர். சொ. சக்திப்பெருமாள் M. A., Phd. மதுரை.
பொன். அலங்கார பாபு B.Sc.
செல்வியர் ஜெயலெட்சுமி, மகேஸ்வரி.
வ. கோவிந்தராஜன், மதுரை.
புலவர். S. சீனிவாசன்.
K. சங்கர சாஸ்திரி.
புலவர். மு. உலகநாதன், மதுரை.
S. கிருஷ்ண மூர்த்தி. M.A., மதுரை.
புலவர். S. ஆழ்வார் ஐயங்கார்.
புலவர். கரு. மாணிக்கவாசகம், மதுரை.
புலவர். S. பழனியப்பன்.
சித. மீனாட்சி.
க. வெள்ளைவாரணம், அண்ணாமலைப்பல்கலைக் கழகம்.
K. V. தியாகராச அய்யர், திருப்புகழ்சபை.
எம். எஸ். வாசன்.
இராம. பொன்னப்பன் M.A.
வீ. சோணை M.A., B.T.
இரா. சு. சேஷய்யன் B.A.
ஆர். ரெங்கராஜன் M.A., B.T.
எம். வி. துளசிராம் M.A.
கோ. சங்கரராசன் M. A., M. Litt.
ப. சுந்தரேசன், குடந்தை.

ஓதுவாமூர்த்திகள்

திரு. மு. கனகசபைபிள்ளை, சிதம்பரம்.
திரு. சுப்பிரமணிய முதலியார், சிதம்பரம்.
திரு. தருமபுரம் சுவாமிநாதன், சென்னை.
,, திருக்களர் சுந்தரேச தேசிகர்.
,, திருவாவடுதுறை து. சோமசுந்தர தேசிகர்
,. சுப்பையா முதலியார், பழநி.
,, விஸ்வலிங்கம் சபாபதி சகோதரர்கள், திருவாவடுதுறை.
,, திருஞானசம்பந்தம், சீர்காழி
,, திருப்பனந்தாள் முத்துக்கந்தசாமிதேசிகர்
,, S. சயிலப்பஓதுவார், மதுரை.
,, பொன். முத்தையா ஓதுவார், மதுரை.
,, ஈஸ்வரமூர்த்தி ஓதுவார், மதுரை.
,, கனகசபை ஓதுவார், மதுரை.
,, அருணாசல ஓதுவார், மதுரை.
., குமாரசாமி தேசிகர் பழநி.
,, ரத்தின சபாபதி தேசிகர்
,, சொக்கலிங்க ஓதுவார், வைத்தீஸ்வரன் கோயில்.
,, சுப்பையா ஓதுவார், மதுரை.
,. கணேசப் பிள்ளை, சிதம்பரம்.
,, நமச்சிவாய ஓதுவார், திருச்செந்தூர்.
,, தண்டபாணி ஓதுவார்,
,, நாராயண ஓதுவார், காரைக்குடி
,, திருஞானசம்பந்த ஓதுவார், திருப்பரங்குன்றம்.
,, விசுவநாத ஓதுவார், திருப்பரங்குன்றம்.
,, திருஞானசம்பந்தம் ஓதுவார், மதுரை.
,, ரத்தின ஓதுவார், மதுரை.

பிடில்

திரு. வைகுண்டம் ஐயர்
,, வேணுகோபால் செட்டியார்
,, சங்கரநாராயண ஐயர்
,, சுப்புராம்
,, கணபதி

மிருதங்கம்

திரு. தியாகராசன், சின்னமனூர்
,, சுப்பையா
,, குப்பண்ணா
,, சீனியா பிள்ளை

உ
சிவமயம்

தீய எண்ணங்கள் அனைத்தும் உள்ளத்தினின்று அகற்றி விட்டு உள்ளத்தைத் தூய்மைப் படுத்துவது என்பது சிரமமான காரியமாகும்



இறைவன்பால் நெஞ்சைச் செலுத்தியவன் மட்டுமே தீய எண்ணங்களை ஒருவாறு உள்ளத்தினின்று அகற்ற முடியும்.

பிரதிபலனை எதிர்பாராமல் நிரந்தரமான தெய்வ சிந்தனையில் ஈடுபடுவதுதான் மன ஒருமைக்கும், ஒழுக்கத்திற்கும், சீரான வழியாகும் ஷி வழியில் மனதைச் செலுத்துவதற்கு பன்னிரு திருமுறை மன்றம் செவ்வனே பணியாற்றுகிறது. இந்தப் பணி தொடர்ந்து சிறந்து வளர்ந்து ஓங்கவேண்டும் என்ற பிரார்த்தனையை மன்றத்தார் சார்பில் ஆலவாய் அண்ணலின் திருவடியில் சமர்ப்பிக்கின்றேன்.

இப்படிக்கு மன்ற உறுப்பினர்,

M. L. SANKAR,
INDENDING TEXTILES AGENT,
(Maharashtra State)

Madurai, Paramakudi Handloom Sarees

29-A, Krishnapuram 4th Cross St., MADURAI-9.

மதுரையில் பன்னிரு திருமுறைப் பெருவிழா

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் தெற்காடி வீதியில் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் பன்னிரு திருமுறை மன்றத்தின் வெள்ளி விழா திருமுறைப் பெருவிழாவாக சென்ற பன்னிரண்டு நாட்கள் கொண்டாடப் பெற்றது. நவம்பர் 30ம் தேதி காலை மன்றத் தலைவர் திரு. எஸ். நயினுக்கண்பட்டர் வழிபாடுகள் செய்ய, மன்றத்தினர் ஆடி வீதிகளில் திருமுறை ஓதி வலம் வந்தனர். திருமுறை அகண்ட பாரா யணத்தை மன்றப் புரவலர் ராம. முத்துப்பழநியப்பச் செட்டியார் தொடக்கி வைத்தார். மதுரை மாவட்டக் கூடுதல் நீதிபதி திரு. எம். ஏ. முருகேசன் வாழ்த்துரை வழங்கினார். திரு. சைலப்பஓதுவார், திரு. பொன். முத்தையா ஓதுவார் முதலியோர் திருஞானசம்பந்தரின் முதல் பதிகத்தை தொடங்கிப்பாட மன்ற அன்பர்கள் டிசம்பர் 11ம் தேதி முடிய பன்னிரு திருமுறைகளையும் பாராயணம் செய்தனர்.

முதல் நாள் மாலை நான்கு ஆவணி மூல வீதிகளிலும் திருமுறை ஊர்வலம் திரு. அழகுசுந்தரம் நாதசுர இசையுடன் நடைபெற்றது. முதல்நாள் விழா மன்றத்துணைத் தலைவர் திரு. ஏ. கே. சுப்பிரமணியபிள்ளை வரவேற்புரையுடன் தொடங்கிற்று. கோயிலூ ராதீனம் ஸ்ரீலஸ்ரீ இராமநாத ஞான தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தலைமை வகித்து வெள்ளிவிழா மலரை வெளியிட்டு முதல்பிரதியை திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களுக்கு வழங்கினார்கள். அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. கே. சிதம்பரம் திருமுறைப் பாராயண நூலை வெளியிட, கோயில் நிர்வாக அதிகாரி திரு. டி. வேணுகோபால் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார். திரு வாரியார் சுவாமிகள் முதல் திருமுறை பற்றி விரிவுரை ஆற்றினார். தொடர்ந்து நடைபெற்ற விழாக்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திருமுறை பற்றி அண்ணாமலைப்பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம், பல்வேறு கல்லூரிகள் ஆகியவற்றைச் சேர்ந்த பேராசிரியர்கள் பேசினார்கள். ஸ்ரீலஸ்ரீ மதுரை ஆதீனம், தவத்திரு குன்றக்குடி அடிகளார், கோவை தவத்திரு சுந்தரசுவாமிகள், பேரூர் ஆதீனம் சாந்தலிங்க ராமசாமி அடிகள், காஞ்சீபுரம் தொண்டை மண்டல ஆதீனம் சீலத்திரு ஞானப் பிரகாச சுவாமிகள் ஆகிய ஆதீன கர்த்தர்கள் வருகை தந்து மன்றப்பணிகளைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார்கள்.

திருவாளர்கள் வி. பி. ஆர். சங்காராம் துரைராஜ், லெட்சுமி எம். சிங்காரம் செட்டியார், எல். அழகுசுந்தரம் செட்டியார், டாக்டர் எஸ். சண்முகம், அ. சக்கரை சேர்வை, கருமுத்து சு. சொக்கலிங்கம் செட்டியார், மாவட்ட நீதிபதி அ. சோமசுந்தரம்,

முன்னுள் அறநிலையத்துறை ஆணையர் அ. உத்தண்டராமபிள்ளை, சி. எம். வி. கிருஷ்ண மாச்சாரி, ''தினமணி'' பொறுப்பாசிரியர் வெ. சந்தானம், கூடுதல் நீதிபதி எம். ஏ. முருகேசன் ஆகியோர் தலைமை வகித்து மன்றத்தினர் செய்து வரும் தொண்டுகளைப் பாராட்டினர். இறுதி நான்கு நாட்களிலும் யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நால்வர் பெருமக்களைப் பற்றி இசைக்கதை நிகழ்த்தினார்கள். 11 — 12 — 78ம் நாளன்று மன்றத்தில் பல்லாண்டு சமயப்பணி செய்து வரும் அறிஞர் பெரு மக்களாகிய திருவாளர்கள் அ. சங்கரநாராயணன், டாக்டர், சுப. அண்ணாமலை, பண்டித மீ. கந்தசாமிப்புலவர், திருப்புகழ் தியாகராஜ ஐயர், சொ. சொ. மீ. சுந்தரம் முதலிய 20 அறிஞர்கட்கும், 30 தொண்டர்களுக்கும் பட்டமளித்து பாராட்டு வழங்கப்பட்டது. தருமை ஆதீனம், காஞ்சி காமகோடி பீடம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், குடியரசுத் துணைத்தலைவர், மாநில ஆளுநர், அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் ஆகிய பெருமக்கள் விழாவிற்கு ஆசிச் செய்தி அனுப்பினர்.

மன்றப் புரவலர் திரு. ராம. முத்துப்பழநியப்பச் செட்டியார் 25 ஆண்டுகளாக செயலாளராகப் பணியாற்றி வரும் திரு. என். எஸ். சீனிவாச பிள்ளைக்குப் பொன்னாடை அணிவித்து சிறப்பித்தார். மதுரைக் கோயில் ஆதி சைவ சிவாச்சாரியார்கள் சங்கத்தின் சார்பில் திரு. எஸ். சந்திரசேகர பட்டர் வாழ்த்துரை வழங்கினார். துணைச்செயலாளர் திரு. நீ. சீ. சுந்தரராமன் நன்றி கூற வாழ்த்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

மன்ற வெளியீடுகள்

1. ஸ்ரீலஸ்ரீகாசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் வரலாறு
2. முதல் ஆண்டு விழா மலர்.
3. பன்னிரு திருமுறை விளக்கம்.
4. ....
5. திருநீலகண்டப்பதிகம்
6. கோளறு பதிகம் உள்ளிட்ட அல்லல் அகற்றும் அற்புதத்திருமுறைகள்.
7. ....
8. தேவிவழிபாடு.
9. திருநெறியதமிழ் (திருமுறைப் பாராயணத் தொகுப்பு)
10. மீனாட்சியம்மை பஞ்சரத்தினம்
11. திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி
12. திருவாப்பனூர்த் திருப்பதிகம்
13. திருமுறைகளில் திருவண்ணாமலை.
14. அற்புதக்கற்பகம்.
15. திருத்தொண்டத் தொகை
16. திருநாவுக்கரச சிவார்ச்சனை
17. திருஞானசம்பந்த சிவார்ச்சனை
18. மாணிக்கவாசக சிவார்ச்சனை
19. சிவசுந்தர சிவார்ச்சனை
20. திருஞானசம்பந்த சுவாமிகள் பாடல்கள்
21. உருக்குந் தேனடை
22. அப்பர் அருளும் அருமருந்து
23. ஆரூரர் அருந்தமிழ்
24. பதிஞானப்பாடல்கள்
25. திருமுறைத் திருவந்தாதித் தொடை
26. திருநெறிய தமிழ் மாலைகள்
27. வெள்ளிவிழா மலர்